V. Kumara Ruban

வீரகேசரி பிரசுரம்: 74

# பனிமலர்

அ. ஸ. அப்துஸ்ஸமது

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# PANIMALAR

WRITTEN BY: A. S. ABDUS SAMAD
"Anpagam"
Akkaraipattu.

First Edition
DECEMBER 1982

**Price Rs. 10/50**

COPY RIGHTS
RESERVED WITH THE PUBLISHERS

VIRAKESARI PIRASURAM 74

Published by:

VIRAKESARI
P.O. Box: 160, COLOMBO.

**Sole Distributors:**

Express Newspapers (Cey.) Ltd.
185, Grandpass Road, Colombo - 14.

# முன்னீடு

ஒரு நாட்டின் கலை, ஆசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பன அந்நாட்டுக்கே உரிய ஒன்ரு? அல்லது அந் நாட்டில் வாழும் வெவ்வேறு சமூகங்களுக்கும் வெவ்வேருனவையா? இதன் விடை சர்ச்சைக்குரிய ஒன்று. அன்றியும் முஸ்லிம்களுடைய வாழ்வியற் பின்னணியில் சிறுகதைகள், நாவல்கள் படைக்கப்பட வேண்டும் என்னும் கருத்துடைய நான் என்னையே சிக்கலில் ஆழ்த்திக் கொள்ளும் ஒரு வினுவாகவும் இது அமைகிறது.

மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பகைப் புலமாகக் கொண்டு இந்த நாவலை நான் எழுத முற்பட்டபோது இங்கு வாழும் தமிழர் முஸ்லிம்கள் எனும் இரு சமூகத்தின் கலாசாரப் பண்பாட்டு நியமங்களை நான் உன்னிப்பாக நோக்கினேன். உண்மையில் அதனைப் பிரித்தெடுப்பது சிரமமான ஒன்று.

சமய வழிபாடுகள், ஆசார சீலங்கள், நம்பிக்கைகள் என்பன வெவ்வேருக — இருக்கலாம். பண்பாடு, பழக்க வழக்கங்கள, கலைகள் என்னும் போது அது இப்பிரதேசத்திற்கு பொதுவான ஒன்றே. மட்டக்களப்புப் பகுதியில் தமிழரும் முஸ்லிம்களும் அடுத்தடுத்து வாழ்பவர்கள்; ஒரே குடிவழி மரபையுடையவர்கள்; கலை பண்பாடு என்பன வற்றில் அதிகம் வேறுபாடு இல்லாதவர்கள்.

நான் என் வசதிக்காக இந்நாவலில் முஸ்லிம் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கை—முறையினைச் சித்திரிக்க முற்பட்டாலும், கதை மட்டக்களப்பு மீன்வடிவ மாதா கோயிலில் தொடங்கி, உகந்தை முருகன் கோயில் வரை நிகழிடமாக விளங்குவதிலிருந்து, ஒருகலப்புப் பண்பாட்டையும், நம்பிக்கை மரபுகளையுமே நான் சித்திரிப்பதாக அமைகிறது. இது இப்பிரதேசத்து

மக்களிடையே பரந்த நோக்குடைய ஒரு விளக்கத்தைக் கொடுத்து சௌஜன்யமான ஒரு மனப்பான்மையை ஏற்படுத்துமாயின் நான் மிக்க மகிழ்வேன்.

இந்தக் கதையில் நிலப்பிரபுத்துவ மனப்பாங்குக்கும் கல்வி அறிவு வளர்ச்சியினுல் ஏற்பட்ட மனப்பாங்கிற்கும் இடையில் நிகழும் போராட்டத்தினை நான் சித்திரிக்க முயன்றேன்.

முஸ்லிம் சமுதாயம் இப்பொழுதுதான் கல்வி அறிவில் ஓரளவு முன்னேறி வருகிறது. இந்த விழிப்புணர்வின் பயனுக மர்லியா போன்ற கல்லூரி அதிபர்களையும் ஷாபிதீன் போன்ற முற்போக்குவாதிகளையும் அவர்களது இயக்கப் பாட்டினையும் நாம் இங்கு காணலாம்.

இந்த நாவலை வாசிப்பவர்கள் மட்டக்களப்புப் பண்பாடுகளையும், முஸ்லிம்களின் தனித்துவமான ஆசாரங்களையும் நம்பிக்கைகளையும் நிறையக் காணலாம். அது சில இடங்களில் நகைச்சுவையாகவும் அமைந்துள்ளது. எனவே இந்த நாவலில் மட்டக்களப்பு மணக்கிறது; இம் மண்ணின் தேன் இனிக்கிறது; மீன் பாடுகிறது; தயிர் சுவைக்கிறது; என்று நீங்கள் சொன்னுல் அதுவே நான் பெற்ற சிறந்த பரிசிலாகும்.

இது நான் எழுதிய முதல் நாவல். என் முதல் நாவலே பரிசுக்குரியதாக, அதுவும் வீரகேசரியின் கணிப்பில் தகுதி காணப்பட்டதாக தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

வீரகேசரியின் 74 ஆவது நாவல் இது என்னும் பெருஞ் சாதனைக்குச் சூத்திரதாரியாக இருப்பவர் புத்தகப் பகுதி நிர்வாகி திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களாவர். எழுத்தாளர்களின் கற்பனைக்கு உயிர் கொடுத்து அதனைக் கலைவடிவமாக்கி உலவ விட்ட அவருக்கு நாம் எவ்வாறு நன்றி கூறுவது?

அன்பகம், அ. ஸ. அப்துஸ்ஸமது
அக்கரைப்பற்று.

# நாவலாசிரியரைப் பற்றி



ஆசிரியர் அப்துஸ் ஸமது கிழக்கிலங்கையின் தலைசிறந்த படைப்பிலக்கியவாதிகளில் முன்னணியில் நிற்பவர். மண்வாசனையை நாவலில் மணம் வீசச் செய்வதில் வல்லவர்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான அப்துஸ்ஸமது அவர்கள் பல்கலைக்கழக கலைமாணி பட்டத்தையும் பெற்று ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகக் கல்விப் பணியாற்றுகிறார்.

1950ஆம் ஆண்டு 'நூர்ஜகான்' என்னும் தனது சிறுகதை மூலம் இலக்கிய உலகில் அறிமுகமான இவர் தொடர்ச்சியாக இன்றுவரை இந்த வேள்வியில் ஈடுபட்டுள்ளார்.

சென்னை 'மணிவிளக்கு', 'பிறை' போன்ற பத்திரிகைகளில் இவரெழுதிய கட்டுரைகள் வெளிவந்தன. 'சீறு இன்பம்', 'சுலைமான் பங்கிஸ்' போன்ற இவரது ஆக்கங்களை தமிழ்நாடு பதிப்பகங்கள் வெளியிட்டன.

1960இல் இவரது இலக்கியப் பொய்கை வரிசை பாட நூல்கள் வெளிவந்தபின் 1964இல் ஈழத்து முஸ்லிம் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான 'முற்றத்து மல்லிகை' மலர்ந்து மணம் வீசியது. இதன் பின்னே 'இலக்கிய விளக்கத் துணை' யையும், 'இஸ்லாம் வழிகாட்டி' யையும் இவர் வெளியிட்டார்.

1977இல் எழுத்துத்துறை வெள்ளிவிழாக் கண்ட இந்த எழுத்தாளர் 'எனக்கு வயது பதின்மூன்று', 'பிறைப் பூக்கள்' போன்ற 'சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிடுவதில் வெற்றி கண்டார்.

1981 இல் இவரது 'கண்ணீர்ப் புஷ்பங்கள்' தினகரனில் வெளிவந்தது. வானொலியில் இவர் நடாத்தும் 'இலக்கிய மஞ்சரி' நிகழ்ச்சி பயன்பாடுகள் கொண்டதாகும்.

1982 * வீரகேசரி நடாத்திய பிரதேச நாவல் போட்டியில் பரிசு பெற்ற 'பனிமலர்' வெளிவரல்.

வெளியீட்டாளர்.


## அடுத்த வீரகேசரி பிரசுரம்

வீரகேசரி 1978ஆம் ஆண்டு நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலைநாடு மாவட்டத்தில் சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

# "மூட்டத்தினுள்ளே"

(சமூக நாவல்)

க. சதாசிவம்

எழுதியது.

# பனிமலர்

## ( 1 )

பரிசளிப்புவிழா—கஸ்ஸாலி மகளிர் வித்தியாலயம் கோலாகலமாகக் காட்சியளித்தது. மாணவிகள் சீருடை தரித்து வெண்புறுக்கூட்டங்கள் போல, ஆங்காங்கே நின்றனர். தங்கள் குழந்தைகளின் ஆடல்பாடல்களைப் பார்க்கவும், பரிசில்பெறும் பெருமையைக்கண்டு களிக்கவும், ஆண்களும் பெண்களுமாக அந்த மண்டபம் நிரம்பி வழிந்தது.

அதிபர் சித்திமர்லியாவும், ஏனைய ஆசிரியைகளும் வாயு வேகத்தில் இயங்கிக்கொண்டிருந்தனர். விழாவில் சிறப்புச்சொற்பொழிவாற்ற பேராசிரியர் ஷாபிதீன் வந்திருந்தார். பிரதம விருந்தினர் கல்விமா அதிகாரி தணிகாசலம் அவர்களும் வந்துவிட்டார். அனைவரும் மாலைசூட்டி வரவேற்கப்பட்டனர்.

வரிசையாக நின்ற சின்னஞ்சிறு பெண் குழந்தைகள் வரவேற்புக்கீதத்தை அழகுறப்பாடினர். அதன் அழகில் லயித்துவிட்ட பிரமுகர்கள் தங்களுக்குச் சூட்டிய மாலைகளை வரவேற்புக்கீதம் பாடிய அக்குழந்தைகளுக்குச் சூடி மகிழ்ந்தனர். சபையோர் கரகோசம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

அதிபர் சித்திமர்லியா வித்தியாலய அறிக்கையை வாசித்தார். கடந்த ஓராண்டுகால, வித்தியாலயத்தின் சாதனைகள், வெகு கச்சிதமாக எடுத்துக் கூறப்பட்டன. கணீர் கணீர் என மர்லியாவின் குரல், ஒலி பெருக்கிக்கு பொருத்தமாக அமைந்து, வானொலியில் செய்தி அறிக்கை

வாசிப்பதுபோல இருந்தது. தெளிவானநடை, அழகான குரல், அர்த்த புஷ்டியான கருத்துக்கள், சபையோரை அவ்வறிக்கை வெகுவாகக் கவர்ந்தது.

ஷாபிதீன் சிந்தனையில் மூழ்கினன். இந்தப்பரிசளிப்பு விழாவுக்கு சிறப்புச் சொற்பொழிவாளராக மர்லியா தன்னை ஏன் அழைத்தாள்? என்மீது அவளுக்குள்ள காதல் இன்னும் மடியவில்லை என்பதனலா? அல்ல காதல் வேறு, வாழ்க்கை வேறு, முதல் அத்தியாயம் முடிந்துவிட்டது. இரண்டாவது அத்தியாயத்தில் நாம் வகிக்கும் இடங்கள் வெவ்வேறு. நாம் படித்தவர்கள். வாழ்க்கையின் கோலங்களையும் கோணங்களையும் சரியாகப் புரிந்துகொண்டு அது அதற்கேற்ப நாம் நடக்கவேண்டும் என்பதை எனக்கு உணர்த்துமுகமாக அழைத்தாளா? அல்ல. இவ்வளவு பெருமையும் புகழும் மிக்க அதிபர் ஒருவரை, மனைவியாகப் பெறும் பாக்கியத்தை நீ இழந்துவிட்டாயே. அதனை இச்சந்தர்ப்பத்திலாவது உணர்ந்து வருந்து என்று காட்டுவதற்காகவா? இவ்வாறு அவன் சிந்தனைகள் பன்முகமாகத் தொழிற்பட்டன.

முப்பது வயது நிரம்பாத மர்லியா, தன் இளமைக் கட்டழகை இன்னும் இழந்துவிடவில்லை! மிடுக்கான தோற்றம், சுறுசுறுப்பான சுபாவம், அளவோடமைந்த அழகு. அவளில் குறை சொல்லுவதற்கு எதுவும் இல்லை. தங்க நிற சரிகை போட்ட மஞ்சள்நிறசாரி கட்டி அதற்கேற்ற ஜாகெற்றும் அணிந்தவளாக மைக்முன் நின்று அவள் அறிக்கை வாசிக்கும்போது பத்திரிகை நிருபர்கள் கிளிக், கிளிக் என்று படம் எடுத்துக்கொண்டிருந்தனர். அதிபர் அறிக்கை வாசிப்பதைப் படமாக எடுத்து பத்திரிகைக்கு அனுப்ப வேண்டும் என்ற அக்கறையோடுதான் இப்படங்களை அவர்கள் பிடித்தார்கள் என்று நாம் நினைக்க முடியாது. அவளுடைய தோற்றப் பொலிவு ஜெகஜோதியாக விளங்கும் மின்சார ஒளியில் அவ்வளவு அழகாக அமைந்

தது. அழகிய அந்த ஜரிகைக்கரை முன்றானையால் முக்காடிட்டு அவள் நின்ற அடக்க ஒடுக்கமான தோற்றம் அவளை மேகமண்டலத்தில் தவழ்ந்துவரும் தேவகன்னிபோல் காட்டிற்று. அடிக்கடி புன்முறுவல் பூத்த அவளது முகம், வாழ்க்கையில் நான் தோற்றுவிட மாட்டேன் என்று கூறுவது போலிருந்தது.

ஷாபிதீன் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளிவந்த மறுவருடமே, மர்லியா பலாலி ஆசிரியகலாசாலையில் இருந்து வெளியேறினாள். அவன் கலைப்பட்டதாரி. இவள் விஞ்ஞானப்பயிற்சிபெற்றவள். இருவரும் அக்கரைப்பற்று கிராமத்தைச்சேர்ந்தவர்கள். கல்முனை அரபாத் கல்லூரியில் ஷாபிதீன் படிப்பித்தான். மர்லியாவும் அங்கு முதல் நியமனம் பெற்றாள். ஊர்ப்பிள்ளையொன்று தனது சக ஆசிரியையாக கிடைத்ததில் ஷாபிதீனுக்கு பெரும் மகிழ்வு. மர்லியாவை அழைத்துக்கொண்டு அவளுடைய தகப்பன் இஸ்மாயில் ஹாஜியார் வந்திருந்தார். ஷாபிதீனைக்கண்ட இஸ்மாயில் ஹாஜியார் மகன்! தங்கச்சிக்கு இருக்க நல்லொரு இடமா பாக்கணும் தேவையான உதவியை நீயே செய்யணும் வெள்ளிக்கிழமை நீ ஊருக்கு வரும்போது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு வரவேணும்— இப்படி பல வேண்டுகோள்களை விடுத்தார்.

ஷாபிதீனுக்கு பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோல இருந்தது. அன்று இருவருக்கும் தான் இருக்கும் வீட்டிலேயே மதிய போசனமும் அளித்து, வேண்டிய மற்றும் உதவிகளும் செய்தான். ஸாஹிறாவில் படிப்பிக்கும் சக ஆசிரியை ஒருவரின் வீட்டிலேயே மர்லியா தங்கவும் ஏற்பாடு செய்தான்.

மர்லியாவைப்பற்றி ஷாபிதீன் என்ன நினைத்தான். ஷாபிதீனைப் பற்றி மர்லியா என்ன நினைத்தாள்? என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது. ஏனெனில் அவர்கள் இருவரும் எவ்வித விகற்பமும் இன்றியே பழகி வந்தனர். ஒரு

வருக்கொருவர் அன்பா இருந்தனர். ஒருவரைப்பற்றி ஒரு வர் நல்லபிப்பிராயம் கொண்டிருந்தனர். இது ஒரு காத லுக்கோ, அல்ல ஒரு கல்யாணத்திற்கோ போதுமான அளவில் இருந்ததே தவிர அவ்வாருன எவ்வித அர்த்த பாவமும் இன்னும் ஏற்படவில்லை.

பால் பொங்கி வருகையில் தாளி உடைந்த கதையாக இவர்களது உறவில் ஒரு தடைக்கல் விழுந்தது. ஆம்! ஷாபிதீன் சர்வகலாசாலையில் புவியியல்துறை, உதவி விரிவுரையாளனுக எடுபட்டிருந்தான். எதிர்வரும் முதலாம் தேதி அவன் கொழும்புக்கு போயாக வேண்டும். மர்லியாவின் இனிய தொடர்பை அவன் இழப்பது என்பது அவனுக்கு இனம் தெரியாத ஒரு வேதனையாக இருந்தது. அவன் கட்டாத ஒரு மாளிகையில் அவன் குடியிருப்பது போலவும், அதைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது போலவும் அவனுக்கு ஓர் உணர்வு. ஒருவர் மீது ஒருவர் சாதாரணமாகச் செலுத்தும் அன்பைக்கூட பிரிவு காதலாக மாற்றுகிறது அல்லவா?

அன்று ஷாபிதீனுக்கு மாபெரும் பிரிவுபசாரம் ஒன்று கல்லூரியில் நடைபெற்றது. புகழ்மாலைகள், மலர்மாலைகள் எல்லாம் தாராளமாகச் சூட்டப்பட்டன. ஷாபிதீன் மகிழ்வில் மிதந்தான். மர்லியா மகிழ்வா, துயரா என்று கூறமுடியாத ஒரு நிலையில் இருந்தாள். மாணவிகள் வாழ்த்துக் கீதமொன்று பாடினர். என்றும் இனியவாழ்வு பெறுக! நன்றே அறிவு சிறந்து வளர்க...... என்று வரும் பல்லவி அடிகள் மர்லியாவின் இதயத்தில் ஒரு சோககீதமாக—ஒரு அபூர்வ ராகமாக இசைத்துக்கொண்டிருந்தது.

அவர், சர்வகலாசாலை விரிவுரையாளராகப்போகிருர். உயர்ந்த பதவி, உயர்ந்த அந்தஸ்து அதற்கேற்ப இனிய வாழ்வு ஒன்று அவருக்குக் கிடைக்கவே செய்யும். வாழ்வு என்னும்போது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து துய்க்கும் இன்பத்தைத்தானே குறிக்கும்? அந்த இனிய

வாழ்வில் ஷாபிதீனேடு இணையும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கப்போகிறதோ? ''என்றும் இனிய வாழ்வு பெறுக'' என்ற அந்த வாழ்த்தின் தத்துவப்பொருள், அவரையும் என்னையும் இணைப்பதாக இருக்காதா? பாடலை இயற்றிய ஆசிரியர் எங்கள் இருவரையும் நினைத்துத்தான் நாங்கள் இருவரும் இணைந்து வாழும் அர்த்தத்தில் இந்தப்பாட்டை இயற்றியிருக்கலாமல்லவா? கவிஞர்கள் பாடல்களில் அவர்கள் நினைத்துப்பாடும் அர்த்தம் பலித்து விடுவதும் உண்டாம். அதனை 'அறம்படுதல்' என்று சொல்வார்கள். இந்தப் பாட்டும் அவ்வாறு அறம்படுவதாக இருந்தால் நாங்கள் இருவரும் சேர்ந்து என்றும் இனிய வாழ்வு பெறுக...... என்று பொருள் அமையுமல்லவா?

அன்று ஞாயிற்றுக்கிழமை. திங்கட்கிழமை ஷாபிதீன் பிரயாணம் புறப்பட வேண்டியிருந்தது. ஆதலால் உற்ருர் உறவினர், நண்பர்கள் அனைவரையும் சந்தித்து விடைபெற்றுக் கொண்டு வந்தான். மர்லியா வீட்டில் இருப்பாள் அவளிடமும் ஒரு வார்த்தை கூற வேண்டாமா? அவளுடைய வீட்டுக்குப்போனுன்.

ஷாபிதீனைக்கண்ட இஸ்மாயில் ஹாஜியார், ''தம்பி! வாவா! நீ யூனிவசிற்றி கொலிச்சிக்கு போறயாமே மகன்! புள்ள சொல்லிச்சி உன் உம்மா அதிர்ஷ்டம் செஞ்சவ! அவட வகுத்துல நீ பொறந்தது உன் அதிர்ஷ்டம். மகன்! உன்னால இந்த ஊருக்கும் பெருமைதான்! என்று வாழ்த்திஞர்.

மகிழ்ச்சி தாங்கமுடியாத மர்லியா, முன் வராண்டாவுக்கே வந்து வாங்க! வாங்க! என்று வரவேற்ருள். அவள் குரலில் ஒரு குழைவு இருந்தது. மேனி சற்று நடுங்கிற்று. ஒரு பதற்ற நிலையில் தன்னையே மறந்து நின்ருள் மர்லியா. ஷாபிதீன் சோபாவில் உட்கார்ந்தான். மர்லியா நின்றபடியே கதைத்தாள். அவளுடைய தம்பி தேநீரும் கேக்கும் வாழைப்பழமும் கொண்டு வந்து பரிமாறினுன். ட்றேயில்

இருந்த கோழிக்கூட்டு வாழைப்பழம் ஒன்றை எடுத்து உரித்து ஷாபிதீனிடம் நீட்டினுள் மர்லியா. அவளுடைய கை நரம்புத்தளர்ச்சி உள்ளவர்களின் கைபோல் நடுங்கியது. அவள் உரித்துநீட்டிய பழத்தை அவளுடைய கைபடாமல் எப்படி வாங்குவது? ஷாபிதீன் அதனை வாங்க இயலாமல் தயங்கினுன்.

பெண்கள் சில நேரம் ஆண்களை ஒரு குழந்தைப் பிள்ளையைப்போல நினைக்கிருர்கள் அல்லவா? ஷாபிதீன் மர்லியாவைப்பார்த்து கிண்டலாகக்கேட்டான்.

ஏன்?

இல்ல நான் இந்த வாழைப்பழத்தைக்கூட உரித்துத் தின்னத் தெரியாதவனு?

மர்லியாவுக்குத்தான் என்ன செய்தேன் என்பது இப்பொழுதுதான் தெரிந்தது. பழத்தை அப்படியே ட்றேயில் வைத்துவிட்டு சுவர் மூலையோரமாக ஒதுங்கிக்கொண்டாள் நாணத்தோடு.

ஷாபிதீன் அவள் உரித்து வைத்த வாழைப்பழத்தை எடுத்துச் சாப்பிடும்போது, நல்ல இனிப்பாகவும் ருசியாகவுமிருக்குதே, இந்த வாழைப்பழம், கடையில் வாங்கினதா? அல்ல உங்கள் வீட்டுத்தோட்டத்தில் குலைபோட்டதா? என்று கேட்டான்.

அந்த இனிப்பும் ருசியும் அந்தப்பழத்திற்கு எப்படி வந்தது என்பதை மர்லியா புரிந்துகொண்டாள். அவள் விஞ்ஞானம் படித்தவளல்லவா? அவனுடைய கிண்டல் நிறைந்த அக் கேள்வி அவளுக்கு இன்னும் வெட்கத்தைக் கொடுத்தது. அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அவன் மனம் வெற்றியால் களித்தது.

சரி ரீச்சர்! நான் வருகிறேன். இன்னுஞ்சில இடங்களுக்கும் போக வேண்டும். கொழும்பில் உங்கட்கு ஏதும் வேலை

கள் இருந்தால் எழுதுங்கள் முடித்தனுப்புகிறேன். வேறு என்ருல் என்ன ஆகவேண்டும். ஷாபிதீன் எழுந்து நின்ற வாறு அவளுடைய முகத்தைக்கூர்ந்து பார்த்தபடி கேட் டான்.

அவள் நிமிர்ந்து அவனேப்பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின. அவளது நீல விழிகள் நிறம் மாறிற்று. கண்ணீர்த் துளிகள் பொலபொலவென அவள் சாரியில்பட்டு உதிர்ந் தோடிற்று.

ஷாபிதீன் செய்வதறியாது திகைத்தான். ''சே! குழந்தைப் பிள்ளேபோல இருக்கக்கூடாதே. நான் இடம் மாறுகிறேனே ஒழிய மனம் மாறவில்லே மர்லியா! தைரிய மாக இருங்கள். காலம் எல்லாவற்றையும் கைகூடச் செய் யும்—ஷாபிதீன் போய்விட்டான். மர்லியா அந்த மூலேயை விட்டும் அசையாமலே நின்ருள்.

○ ○ ○

மர்லியா தனது ஆண்டறிக்கையை வாசித்து முடித் தாள். ஜனங்கள் கரகோஷம் செய்து தம் திருப்தியைத் தெரிவித்தனர். ஷாபிதீனின் சிந்தனேயும் இப்பொழுது தான் பரிசளிப்பு விழா மண்டபத்திற்கு திரும்பியது. கல்வி மா அதிகாரி பேசுவதற்கு எழுந்தார்.

கல்வி என்பது ஒரு தீபம். அது மனிதனுடைய மன வெளியில் உறைந்துள்ள இருளே அகற்ற வேண்டும். உள் ளத்தில் உண்மையொளியும், வாக்கினிலே தூய்மை ஒளி யும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இந்த உண்மை ஒளி தான் வாழ்க்கையில் நேர்மை, நியாயம், அன்பு, வாய்மை முதலாம் பண்புகளே பிரகாசிக்கச் செய்கிறது......

ஷாபிதீனின் சிந்தனே மீண்டும் தான் விட்ட இடத்தி லிருந்து தொடர்ந்தது. தான் ஒரு சர்வகலாசாலே விரி வுரையாளஞக அறிவுத்துறையோடு தொடர்புடைய வஞக இருந்தும், மர்லியாவைப் பொறுத்தவரை, தான் உள்ளொளி அற்றவஞ? வாழ்வில் நேர்மையும் வாய்மை

யும் அற்றவனு? காலம் எல்லாவற்றையும் கைகூடச் செய்யும் என்று மர்லியாவின் கண்ணீருக்கு ஆறுதல் சொல்லி விட்டு வந்தேனே! அந்தக்காலம் ஏன் பிழைத்தது? மர்லியா இன்னும் கன்னியாகவே இருக்க நான்தானே காரணம். அவளுக்கு ஒரு மங்கள வாழ்வை நான் எப்படி அளிப்பேன்? அவன் உள்ளம் கலங்கிற்று. அவன் கண்கள் மட்டும் சில துளி நீரைச் சிந்தவில்லே. ஏனெனில் அவன் ஆண் மகன். தன்னேக்கட்டுப்படுத்திக்கொண்டான்.

ஷாபிதீன் விரிவுரையாளராக சர்வகலாசாலேக்குப் போனதும், அவனே மாப்பிள்ளே கேட்டு ஊரவர் படை எடுக்கத் தொடங்கினர். வெளியூரிலிருந்துகூட கார்கள் அவனது வீட்டை நோக்கிப்படை எடுத்தன.

இஸ்மாயில் ஹாஜியாரின் வீட்டிலிருந்தும் கேள்வி போயிற்று. ஆரம்பத்தில் இஸ்மாயில் ஹாஜியார் ஷாபிதீனே விரும்பவில்லே. அது ஒரு விசித்திர காரணம். ஷாபிதீனின் தாய்க்கு இஸ்மாயில் ஹாஜியாரைத்தான் முதன் முதலில் கேட்டார்கள். தூரத்து உறவில் ஷாபிதீனின் உம்மா ஹாஜியாருக்கு மாமிமகள் முறை. பின்னர் மாப்பிள்ளே பெண்ணேப்பற்றி ஏதோ குறை கூறினுராம் என்ற காரணத்தால் அந்தக் கல்யாணம் அலேந்து விட்டது.

இந்தத் தொடர்பு உறவுமுறை காரணமாகத்தான் இஸ்மாயில் ஹாஜியார், ஷாபிதீனே 'மகன்' என்று அழைப்பார். உண்மையில் மகன் முறையான ஷாபிதீனே மருமகனுகப்பெற அவர் சற்று தயங்கினுர். இது ஒரு பெரிய காரணமல்ல. தவிர பையனுக்கு மர்லியாவை முடிக்க பூரண விருப்பம் என்பதால் இறுதியில் ஹாஜியாரும் விரும்பிவிட்டார். எல்லோருக்கும் பூரண சம்மதமான இந்த கல்யாணம், ஷாபிதீனின் உம்மாவுக்கு மட்டும் விருப்பமில்லே. தனக்கும் இஸ்மாயில் ஹாஜியாருக்கும் நடைபெறவிருந்த விவாகம் என்ன காரணம்பற்றி நின்று விட்டதோ, அதே காரணம்தான் தன் மகனுக்கும் இஸ்

மாயில் ஹாஜியாரின் மகளுக்கும் நடைபெறவிருந்த கல்யாணமும் நின்றுபோகக் காரணமாயிற்று.

ஷாபிதீனின் உம்மா சிறு பிள்ளையாக இருக்கும் போது ஒருநாள் அரிவாள் முனையில் இறைச்சி அரிந்து கொண்டிருக்கையில் அவளின் வலது கைச் சின்னிவிரலும் பலமாக அறுபட்டு, பின்னர் அவ்விரலை எடுக்கவேண்டிய தாகவே ஆயிற்று. அதிலிருந்து குர்ஆன் மத்ரஸாப் பிள்ளைகள் நாலு விரல்காறி என்று அவளுக்குப் பட்டமும் வைத்துவிட்டார்கள். எங்கு செல்வதானாலும் வலது கையை பிடவைக்குள் வைத்துக்கொண்டு போகும் பழக்கம் அவளுக்கு இன்றுவரை உண்டு.

இஸ்மாயில் ஹாஜியாருக்கு அவளைக்கேட்டுக்கல்யாணம் அடுத்தமாதம் என்றிருக்கையில் அவளுடைய ராத்தாவைக் கண்ட இஸ்மாயில் ஹாஸ்யமாக நாலுவிரல் காறிக்கு நான் அழகோ, மாப்பிள்ளைக்கு..........என்று ஒரு கிராமியப் பாடலைப்பாடிவிட்டார்.

வந்தது வினை! இதைக்கேள்விப்பட்ட ஷாபிதீனின் தாய் அழு, அழுவென அழத்தொடங்கிவிட்டாள். இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம் என்று ஒரே காலில் நின்றாள். கலியாணம் அலைந்துவிட்டது.

இந்தச்சம்பவம் இருபத்தைந்து வருஷங்களுக்கு பிறகும் உயிர் பெற்றெழுந்து ஆடத்தொடங்கிற்று. நாலு விரல் காறியின் மாப்பிள்ளை ஐந்து விரல்காற ஹாஜியாரின் பொண்ணுக்கு சரிவராது என்று அவள் கூறி விட்டாள். மிகவும் ரோசக்காரியான அவளுடைய முடிவை மாற்ற யாரும் முன்வரவில்லை. ஷாபிதீனுக்கும் உம்மாவினுடைய் முடிவை மாற்ற முடியவில்லை. உம்மா கூறும் காரணம் அற்பத்தனமானதுதான். ஆனால், அவளின் மனதில் பதிந்துவிட்ட அந்த வடு யாராலும் மாற்றம் செய்ய முடியாததாயிற்று.

ஷாபிதீனுக்கு நிந்தவூரில் ஒரு பணக்காரப் போடி யார் வீட்டில் ஜாம், ஜாம்மென விவாகம் நடைபெற்றது.

விவாகம் நடந்து நான்கு வருடங்களின்பின் மர்லியா வின் அழைப்பை ஏற்று அவளுடைய வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்ற இன்று வந்திருக்கிறுன் ஷாபிதீன்.

ஒரு மணி நேரம் சபையோர் மெய்மறந்து கேட்கும் படியாக அழகான சொற்பொழிவொன்றை நிகழ்த்தி ஞன் ஷாபிதீன். மர்லியா வைத்த கண் வாங்காமல் அவ னேயே பார்த்துக்கொண்டிருந்தாள்.

விழா முடிந்தது. பிரமுகர்கள் எல்லோரும் மண்டபத்தை விட்டு வெளியேறினர். வித்தியாலய அதிபர் ஒவ்வொரு வரையும் காருக்கு அழைத்துச்சென்று விட்டார். ஷாபி தீனும் காரில் ஏறிப்புறப்பட ஆயத்தமாக இருந்தான். அவனிடம் சென்ற மர்லியா ''உங்கள் சிறப்புச்சொற் பொழிவு உண்மையில் சிறப்பாகவே இருந்தது. மிக்க நன்றி'' என்று கூறியவள், நாம் ஆறுதலாக பேசிக்கொள் ளத்தான் கிடைக்கவில்லை; குறை எண்ணுதீர்கள் என்று ஒரு மேலதிக இணைப்பையும் சொருகி தன் நாகரிக அந் தஸ்தையும் மேம்பாட்டையும் அனுசரித்துக்கொண்டாள்.

நாம் ஆறுதலாகவும், தனியாகவும் பேசிக்கொள்ள நம்மிடம் எந்த அந்தஸ்துமே இல்லை மர்லியா! உங்களு டைய பெருந்தன்மைக்கும், பண்பாட்டுக்கும் நான் மிகவும் நன்றிக்கடன் உள்ளவனுக இருக்கிறேன். இந்த விழாவுக்கு நீங்கள் துணிந்து என்னை அழைத்தது. என்னுடைய புருஷாத் துவத்திற்கு ஒரு சவாலா? உங்களுடைய நிலைதளம்பாத நிறைகுணத்துக்கு ஒரு சான்ரு? என்று என்னுல் பிரித்தறிய முடியவில்லை.

''வாழ்க்கை என்பது புதிய புதிய சம்பவங்கள் நிறைந் தது. புதிய புதிய சவால்கள் தோன்றுவது. இவைகளுக்கு

முகம் கொடுக்கும்போதுதான் நாம் வாழ்க்கையை எதிர் நோக்கி வெற்றி பெற முடியும்?''

அத்தகைய வெற்றியை நீங்கள் மட்டுமல்ல; நானும் கூட இன்னும் பெறவில்லை மர்லியா. இருவருமே தோல்வி யின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோம்.

''நான் ஒரு பெண். வாழ்க்கையில் நான் தோற்றுவிட் டதாக இன்னும் கருதவில்லை. சில நியதிகளும், சந்தர்ப் பங்களும் நம் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போகின் றன. இதனை நமக்கு வெற்றி என்றோ, தோல்வி என்றோ பாகுபடுத்திக்கொள்ளத் தேவை இல்லை. ஒரு பேராசிரிய ரான நீங்கள் இப்பாகுபாட்டை இன்னும் புரிந்துகொள்ள வில்லையா?''

''என்னை மன்னியுங்கள். நான் வருகிறேன் மர்லியா'' ஷாபிதீனின் கார் பாதையை நோக்கிப் புறப்பட்டது. மர்லியா அதனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந் தாள்.

## ( 2 )

ஸுபஹு தொழுது விட்டு குர்ஆனை எடுத்து சப்த மிட்டு ஓதிக்கொண்டிருந்தார் இஸ்மாயில் ஹாஜியார். அவரது சகதர்மிணி ஹாஜரா உம்மா ஆவிபறக்கும்படி யாக பெரிய கோப்பை ஒன்றில் கோப்பியைக் கொண்டு வந்து அவருக்கு அருகில் வைத்துவிட்டு போனாள். குர் ஆனை நிறுத்தற்குறி யொன்றில் நிறுத்தி, குனிந்து அதனை முத்தமிட்டவராக நிறுத்திய பக்கத்தில், குர்ஆனோடு இணைத்திருந்த நாடாவை மதிப்பு வைத்து மூடிவிட்டு நிமிர்ந்தார். அவருடைய நெஞ்சில் ஏதோ தாங்க முடி யாத சுமையொன்று அழுத்தி இருந்ததை வெளியேற்றி

விடுபவர் போல... அல்லாஹு ஜல்லஷ ஆனுஉதஆவா... என்று கூறியவராகப் பெருமூச்சு ஒன்றை விட்டார். அப்புறம் கோப்பியைக் கையில் எடுத்து மெள்ள மெள்ளச் சுவைத்துக் குடிக்கத் தொடங்கினுர்.

அன்று திங்கட்கிழமை. இளையமகன் ஜெமில் மட்டக்களப்பு வங்கியில் வேலை பார்ப்பவன். அவசர அவசரமாக உடுத்திக்கொண்டு ஆறரைமணி பஸ்ஸிற்குப் போவதற்குப் புறப்பட்டான்.

மகள் சித்தி மர்லியா ஏழுமணிக்கெல்லாம் வித்தியாலயத்தில் நிற்கவேண்டுமல்லவா? அதிபர் வேலை என்ருல் சும்மா போயிற்ரு? பாடசாலை தொடங்க குறைந்தது அரை மணி நேரம் முன்னுல் போக வேண்டும். பாடசாலை விட்டு அரை மணி நேரம், சில வேளை வேலைப் பொறுப்பு இருந்தால் ஒரு மணி நேரம் பிந்தித்தான் வரவேண்டி ஏற்படும். இதனையெல்லாம் தாங்கித்தான் அதிபர்கடமை செய்ய வேண்டும். மர்லியா இவ்வளவு பளுவையும் ஏற்றுச் செய்வதற்கு அவள் உண்மையில் அதிபர் பதவியுடையவளுமல்ல; அதற்குரிய சம்பளம் பெறுபவளுமல்ல. அந்த வித்தியாலயம், தக்க அதிபர் ஒருவரின்றி நீண்ட காலமாக சீர்குலைந்து பிள்ளைகளின் கல்வியும் அலைக்கழிந்து போய்க் கிடந்தது. ஊர் மக்களெல்லாம் கல்விக்கந்தோருக்கு தூது கோஷ்டி போய், மர்லியாவை அதிபராகப் போட்டுத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஊர் மக்களுடைய வேண்டுகோளைத்தவிர்க்க முடியாமல் மர்லியாவும் இச்சிரம சாத்தியமான பதவியை ஏற்றுக் கொண்டாள். — எப்படியோ போகட்டும் மர்லியாவுக்கு நாளைக்குக் கல்யாணமாகி, குழந்தை குட்டி, கணவனின் கடமை என்று வரும் போது இவள் இந்த அதிபர் பதவியை எப்படிச் சமாளிக்கப் போகிருள்? என்று இஸ்மாயில் ஹாஜியார் கவலைப்பட்டு, தான் பெண்பிள்ளையை உத்தியோகத்திற்கு விட்டது தவருே என்றும் ஒருதரம் எண்ணினுர்.

ஹாஜரு உம்மா பிள்ளைகளைப் புறப்படுத்தி விடுவ தற்கு ஓடோடிச் சென்று காரியங்கள் பார்த்துக் கொண் டிருந்தாள். வேலைக்காரச் சிறுமி பாத்தும்மா, ஹாஜரு வின் கட்டளைக்குப் பணிந்து பம்பரமாகச் சுழன்று கொண் டிருந்தாள்.

இருக்கீங்களா? என்று கூப்பிட்டவாறு, சேனைக் கண் டத்து வயல் அதிகாரி மீரான்கனி வந்து கொண்டிருந் தான். அவன் சாதாரணமாக செய்த வயல்களுக்கான சுமந்திரம் வாங்கிக் கொண்டு போகத்தான் வருவது வழக் கம் அல்லது வெள்ளாமைக்காரன் வேலி குத்த வில்லை. வாய்க்கால் மறித்து வயலுக்குத் தண்ணீர் விட வரவில்லை. மற்ற வயல்காரரெல்லாம் வந்து கட்டுக் கட்டி தண் ணீரை மறித்து விட்டார்கள். கட்டுக்கட்டுவதற்கு உங் களுடைய வயல்காரன் வரவில்லை. இப்படி ஏதாவது முறைப்பாடோடு தான் வருவான். இப்போ முன்மாரியை எதிர்பார்த்து காலபோகம் தொடங்குகிற வேளை. அதி காரியின் வருகைக்கு எவ்வித காரணமுமில்லை. சரிசரி வீடு தேடி வந்தவன் அலுவல் இல்லாமலா வருவான்? என்று எண்ணிய ஹாஜியார்,

மீரான்கனி! வாவா! என்ன செய்தி! என்று கேட் டார்.

மீரான்கனி திண்ணையில் கிடந்த பாயை அவனுக வாசற்படியோடு இழுத்துப் போட்டு உட்காந்தபடி ஒன்று மில்ல பாருங்க! — ஒரு விசகளம் சொல்ல வந்தன் என்றான்.

என்ன விசகளம் விட்ட விடியங் காட்டில லாபமோ நட்டமோ செல்லன் என்றார் ஹாஜியார்.

ஒண்டு மில்ல! உங்குட மோட்டுவெளி வெள்ளாமக்கா ரன் அலியார், உங்களிடம் ஒரு செய்தி சொல்லச் சென் றான். ராவு என்ர வீட்டுக்கு வந்து விடியக்காலத்தால

போடியார் ஊட்டுக்குப் போய் சொல்லிப் போடு எண்டான். அதுதான் வந்தன் வந்து... ஓங்குட மோட்டு வெளிப் பூமிய அவனுக்கும் செய்யத்தோதில்லயாம். பூமிக்கு வேற ஆள் ஒண்ட பெச்சுக்கட்டாம்...

'அடேயப்பா! இதுதான செய்தி. ஒண்ட ஊட்டுக்கு மெனக்கட்டு வந்த அவனுக்கு, என்ர, ஊட்டுக்கு வந்து அதச் செல்ல ஏலாதாமா?

அப்படியில்லப் பாருங்க! இருபது வருஷமா உங்களுக் கிட்ட ஒரு முள்ளுமுறியாமத் தொழில் செஞ்சவன். இப்ப திடீரென உங்களிற்ற வந்து இதச் செல்ல கஷ்டப்படுகிறான். இவ்வளவு காலமா உங்கட செல்லை மீறி நடவாதவன் இப்ப உங்களுக்கு முன்னால் வந்து பூமியச் செய்ய மறுத்துப்பேச கூச்சப்படுகிறான்.'

'ஏய் ஹாஜாரு! கேட்டியா விட்ட விடியங்காட்டியில வந்த விசகளத்தை; நம்முடமோட்டு வெளி அலியான் இனி மேல் அந்தப் பூமியச் செய்ய மாட்டானும். அதுக்கு வேற ஆள் வெச்சுக்கட்டாம் எண்டு தூதுவரக்காட்டி இருக்கான் என்றார் ஹாஜியார் ஆத்திரத்துடன்.

'அதுக்கென்ன இப்ப தோதில்லை யாக்கும். நாம வேற ஆள் வெச்சாப் போகுது. ஆளா இல்லை. மொக்கர்ர கலந்தன் ஒரு பூமி கேட்டு நடையா நடக்கான். அவன வெய் யுங்களன்'.

''ஓமோம் ஒனக்கிட்ட யோசனை கேட்டேனே! என்ர புத்திக்கு செருப்பால அடிக்க வேணும். மொக்கர்ர கலந்தன் வெள்ளாமச் செய்றவனா? அவன வச்சி உருப்பட்டவன் ஆரு. அதில்ல அலியானுக்கு வந்த பவுசப்பாரு. இந்த வீட்டில கிழமைக் கொருக்கா வந்து கொள்ளி கொத்தினவன். வக்கில தண்ணி நிறைச்சவன். வேலி எண்டும் கூரை எண்டும் கட்டினவன் நம்மள விட்டு வெல

கிலியும் இஞ்சவந்து பேசி வெலகிக்கலாமே. தூது அல்லவா அனுப்பி இருக்கான்.

மீரான்கனி! இப்பகாலம் கெட்டுப்போய், அம்மிமிதக்குது அரசிலே தாழுதுதுடா. அலியான்ட பொடியன் ஒருவன் உத்தியோகமாயிற்ருன். பொடிச் சொருதி அழுத்துமயில படிக்காள். மற்றப் புள்ளய ளெல்லாம் வெள்ளாமையை மறந்து படிப்புல நிக்குதுகள். நாம இனியும் வெள்ளாமைக்காரளுக இருப்பது மரியாதை இல்ல என்ட நெனப்பாலதான், அவன் என்ன உட்டு வெலகுருன். பத்து வருசத்துக்கு முன் நான் மக்காவுக்குப் போகக்க. இவன வெலக்கி வேற வெள்ளாமைக்காரன் ஒருதன மோட்டுவெளிக்கு வெக்கப்பாத்தன். இவன்ர செய்கைப் புளயால ரெண்டு தரம் பூமி உட்டுப் போச்சு. இவன வெலக்குறத்துக்கு முடிவு கட்டிற்றன். ஒரு நாள் அவன்ர பெண்டாட்டி வந்து ''உங்களிட்ட தொழில் செய்து நாங்க பத்துப் பேர் இரணம் திங்கம் வாப்பா. மக்காவுக்குப் போற நீங்க எங்களுக்கு இந்த அநியாயத்தை செய்திற்றுப் போகாதீங்க... என்று என்ர காலப் புடிச்சி அழுதாள். சரி யெண்டு திரும்பியும் அவன வெள்ளாமைக்கு வெச்சன். இப்ப என்னடா எண்டா இந்த அற்பத் தொழிலெல்லாம் செய்ய ஏலாதெண்டு அவனே உதறித்தள்ளுருன்.''

மீரான்கனி போடியாரை சமாதானம் செய்ய நினைத்தான். அது இல்ல பாருங்க. அலியாண்ட மூத்த மகன் விவசாயக் கந்தோரில் வேலே செய்கிருனே! அவன் இலுக்குச் சேனையில பத்தேக்கர் பூமி வாங்கி இருக்கான். அது பாய்ச்சல் வடிச்சலுக்கு மிச்சம் கஷ்டமான பூமி. ஊரான வெச்சி அதச் செய்ய ஏலாது. அலியார்தான் அதச் செய்யப் போருன். அவன்ர கறுப்பாவெளி ஐந்தேக்கர் வேறயாக்கிடக்கு. இது போக வட்டமடுவில அலியார் காடு வெட்டின பூமி ஐந்தேக்கரையும் செய்யச் சொல்லி எனக்

கித்தான் தந்திருக்காங்க. இந்த நிலையில செய்கைக்கு ஆருக்கிட்டயும் நிண்டு ஒப்பேத்த ஏலாது எண்டுதான் அலியார் வெலகுறன்.''

'அப்பிடிச் செல்லன்! நீ இப்ப வெள்ளாமைக்காரன். அலியான் போடி! இந்தப் போடித்தத்துவத்திலதான் அவன் உன்னத் தூது அனுப்பி இருக்கான்! சே! சே! காலம் மாறிப் போச்சு! இத அவனே வந்து என்னிட்ட சொல்லி இருக்கலாமே! இருபது வருஷமா எனக்கிட்ட தொழில் செஞ்சவன் காட்டுகிற நண்டி இதுதானு? அதுதான் ஆத்திரமாக இரிக்கி.

மீரான்கனி போய் விட்டான். ஹாஜியாருக்கு ஆத்திரம் அடங்கி யோசனை கூடிற்று. ஆமாம்! வேளாமைக்கு நல்லொருதனுகப் பார்த்து வைக்க வேண்டுமே என்பது தான் அவருடைய கவலை. எழுந்து சேர்ட்டைப் போட்டார். வட்டத் தொப்பியை தலைக்கு மாட்டினுர். மக்காச் சால்வையைத் தோளில் அணிந்தார். மிதிதடிக் கட்டையை காலில் போட்டார். 'புள்ள நான் இன்னு போக்கிற்று வாறன்' என்று மனைவியிடம் கூறிவிட்டு புறப்பட்டு நடந்தார்.

'புட்டவிச்சு வெச்சிரிக்கன். நேரம் செண்டால் அது காஞ்சி போகும். போற எடத்த போக்கிற்று சுட்டியா வாங்க! என்று மனைவி விடை கொடுத்து அனுப்பினுள்.

அன்று பின்நேரம் அவருடைய வீட்டில் ஒரே சனக் கூட்டம். மோட்டு வெளிப்பூமிய அலியார் செய்கிறதில்லை என்ற அறிவித்தலை மீரான்கனி ஊரெல்லாம் பறை சாற்றி விட்டான். இதைக்கேள்விப்பட்டவர்கள் பத்தேக்கர் காணி, அதுவும் நல்ல பூமியாக் கிடக்கிற தெண்டால் ஒருபோகம் தொழில் ஜம் ஜம் மென்று போகுமே, என்று எண்ணி பலரும் வந்து பூமியைச் செய்கைக்கு கேட்டனர். ஹாஜியார் செய்கைக் காரன்களை வைத்து நடத்துவதில் ரொம்ப

நேர்மையானவர். சூடு போட்டுக் கணக்குப் பார்க்கும் போது, செய்கைக் காரனுக்குச் சாதகமாகவே பார்ப்பார். அவர் ஒரு போடியார்தான். ஆனால், உழைக்கிறவனின் ஒரு சதத்தையும் சுரண்டுபவர் அல்ல. ஊர் ஜும்ஆ பள்ளி பிரதம நம்பிக்கையாளர் என்றால் தன்னிடம் வேலை செய்பவர்களின் நம்பிக்கையை இழந்து விடுவாரா என்ன? மக்காவுக்கு ஹஜ்ஜுக்கும் போய் வந்து ஐந்து நேரமும் ஒழுங்காகத் தொழுபவர். — இந்தக் காரணங்களினால்தான் எல்லோரும் அவரிடம் தொழில் செய்ய முண்டியடித்துக் கொண்டு வந்தனர்.

''நான் அலியாரை இன்னும் சந்திக்க இல்லை. அவன் தான் விலகிக்கொள்வதாக வெசகளம் தான் அனுப்பி இருக்கான். இருபது வருசம் தொழில் செஞ்சவன் திடீரென விட ஏலாது. எதுக்கும் அவனக் கண்டு பேசிற்று உங்களில் ஒருத்தரை எடுக்கன்' — என்று கூறி அனைவரையும் அனுப்பி வைத்தார் ஹாஜியார்.

'அசர்' தொழுகைக்கு நேரமாயிற்று. 'ஒழு' செய்வதற்காக ஹாஜியார் கிணற்றடிக்குப் போக மிதிதடிக் கட்டையைப் போட்டார்.

''தம்பி!'' என்று கூப்பிட்டபடி அலியார் திண்ணைப் பக்கமாக பழைய உரிமையோடு வந்து கொண்டிருந்தான். ஹாஜியார் நிமிர்ந்து அவனைப்பார்த்தார். 'இவன் பழைய அலியார் அல்ல. சாயம் போன பைஜாமா சாறன் உடுத்தி பழைய அழுக்குப்படிந்த சேர்ட் ஒன்றையும் போட்டு, தோளில் துவாய்த் துண்டோடு நைந்து குழைந்து வரும் அலியார் இப்ப என்னடா வென்றால்... இந்தியன் மௌலானாமார்க் பழையகாட் சாறன் உடுத்தி டெர்லினில் சேட்டும் போட்டு தலையில் தொப்பி அணிந்து தோளில் மாப்பிள்ளை போலச் சால்வையோடு — 'வயது பதினாறு' கோலத்தில் வருகிறான். ஹாஜியார் மனதுக்குள்

வியப்படைந்தவராக, ''இரு அலியார் தொழுதிற்று வாறன்'' என்று கூறிவிட்டு ஒழுச் செய்ய கிணற்றடிக்குப் போனூர்.

தொழுது முடித்து விட்டு ஹாஜியார் வந்தார். அலி யார் திண்ணைத் தொங்கலில், காலைப் பூமியில் ஊன்றிய வனூக இருந்தான். ஹாஜியாரின் மனைவி, இருவருக்கும் தேனீர் கொண்டு வந்து வைத்தாள். ஹாஜியார் தேனீ ரைக் கையில் ஏந்தியவராக 'நீயும் குடி' என்று கூறிக் கொண்டு தேனீரைக் குடிக்கத் தொடங்கினூர். அலியாரும் தேனீரைக் குடித்தான். ஹாஜியார் கதையைத் தொடங் கினூர்.

''காலையில மீரான்கனி வந்து எல்லாம் சொன்னூன். உனக்குத் தோதில்லை எண்டா என்ன செய்ற, நான் வேற ஆள் வெச்சுக்கிறன்.''

''நீங்க ரொம்பக் கோவிச்சதாக மீரான்கனி சொன் னூன். அது எனக்கு பெருங்கவலையாப் போச்சி. இருபது வருசமா நானும் என் குடும்பமும் உங்குட உப்பத்திண்டு வளந்தோம். எங்களுக்கு நீங்க ஒரு அனியாயமும் செய் யல்ல என்ர வசதிக் குறைவாலதான் நான் வெலக வேண்டி இருக்கி. அத நேரில உங்களிட்டச் செல்றது எனக்கி பெரும் சங்கடமாயிருந்திச்சி. ஆனபடியாலதான் மீரான்கனிய அனுப்பினன்.''

''அதில என்ன இரிக்கி. உன்ர புள்ளயளெல்லாம் இப்ப நல்லா இரிக்குதுகள். மகன் பூமியும் பத்தேக்கர் வாங்கிப் போட்டான். உனக்கும் அங்கால இங்கால எண்டு பத் தேக்கர் இரிக்கி. இந்த நிலயில யாருக்கிட்டயும் தொழில் செய்ய தேவை இல்லை. — இதில எனக்கிக் குறை யொண்டு மில்ல. உன்னப் போல ஒரு நல்ல வெள்ளாமக்காரன் எனக்கி வாய்க்க வேணுமே எண்டுதான் கவலை''

''உங்களிட்ட வெள்ளாமச் செய்றண்டா ஆரும் விரும்பி வருவாங்க. நானும் இடைக்கிடை பூமியப் போய் பாத்து வேண்டிய முறை தலேகளைச் செல்லிக் குடுக்கன். விதைப்பாட்டுக்கு என்னயும் கூப்பிடுங்க. என்ர கையால தான் முளே எறிய வேணும். வடிச்சல்ல கொஞ்சம் கரச்சல் இரிக்கி ''அதயும் நான் வெள்ளாமக் காரனுக்கு விளங்கப்படுத்துவன்.''

அதில்ல அலியார்! உன்னநம்பி மூண்டவண நெல்லத் தருவன். நீ வெதச் சிற்றுவருவாய். பத்து அந்தர் பயள யைக் கொண்டுபோய் எறிஞ்சிற்றுவருவாய், பத்து போத் தல் எண்ணெயைக் கொண்டுபோய் அடிச்சிற்று வருவாய் — இதில எல்லாம் நீ மிக நேர்மையாக நடந்துக்குவாய். நான் பூமிப்பக்கமே வரத் தேவையில்லாத முறைக்கு நீ எல்லாம் பாத்துக்குவாய்! இந்தக்காலத்தில உன்னப்போல எல்லாரையும் நம்ப ஏலுமா? பத்தந்தர் பயளேயைக் குடுத்து நாமும் போய் நிண்டு அத எறியாட்டி, ஏழு அந் தரை எறிந்து விட்டு மூன்றந்தரையும் யாருக்கோ முக்கால் விலேக்கு வித்துர்ருனுகள். சோத்து நெல் சோத்து நெல் லெண்டு வெள்ளாமை வெட்டுறத்துக் கெடயில நம்முட சீவன வாங்கிருவானுகள்.

சில தொழிலாளிகள் அப்படி இருக்காங்கதான்! எல்லாரையும் அப்படிச் சொல்லமுடியுமா? வேணு மென்டா நானே ஒரு நல்ல ஆள் பாத்துத்தரவா?

''வேணும் அலியார்! நானே ஒருதனப்பாத்துக்கி றன். நீ என்ன உட்டு வெலகினத்துக்காக இந்தப் பக்கத்த மறந்துதிராத. அடிக்கடி வந்து போ! உதவி பதவிகளேச் செய்துதா!

''இது என்ர தாய்வீடு அல்லவா? நீங்க மறுத்தாலும், என்னுல் மறக்க ஏலுமா? எண்டக்கும் நாம நல்லா இரிக்க ணும். அல்லா அதுக்கு அருள் செய்யணும் எண்டுதான் நான் 'துவா' கேக்கன்.''

## ( 3 )

அன்று கஸ்ஸாலி மகளிர் வித்தியாலய ஆசிரியைக ளும், மாணவிகளும் ஓர் உல்லாசப் பிரயாணம் ஒழுங்கு செய்திருந்தனர். பரிசளிப்பு விழா வெற்றிகரமாக முடிந் ததை யொட்டி எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. மர்லியா அதிபருடைய தலைமையில் அந்த வித்தியாலயம் வீறு நடை போடப் போகிறது என்று எல்லோருக்கும் சுப குறி தென் பட்டது. அந்த மகிழ்ச்சி விழாதான் இந்த உல்லாசப் பிரயாணம்!

இரவு மூன்றுமணி. அந்தக் காரிருளையும் கிழித்துக் கொண்டு, புலிபோல உறுமியவாறு அந்த உழவு மெஷின் கூழுனையை நோக்கிப் புறப்பட்டது. பெற்றோர் இருவர் உட் பட முப்பது பேர் அளவில் அந்த மெஷின் பெட்டியில் இருந்தனர்.

காலை எட்டு மணியளவில் மெஷின் உகந்தை முருகன் கோயிலைச் சென்றடைந்தது. மாணவிகளுக்கெல்லாம் சிறு குடலைப் பெருங்குடல் தின்னும் பசி, ஆடலும் பாட லுமாக அவர்கள் செய்து வந்த மகிழ்ச்சிக் கூத்தெல்லாம் அடங்கிவிட்டது. பயற்றங்கொடி போல அனைவரும் துவ ளத் தொடங்கினர். இவர்களைக் கண்ட மர்லியா அதிப ருக்கும் சிரிப்பாகி விட்டது. 'பிள்ளைகளுக்கெல்லாம் நல்ல பசி போல தெரியிது! கெதியாகக் காலைச்சாப் பாட்டைக் கொடுங்கள்' என்றார் 'அவர்களுக்கு மட்டு மல்ல, எங்களுக்கும்தான்' என்று உதவி ஆசிரியை நாதிரு ஹாஸ்யமாகக் கூறினர். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

முருகன் கோயில் புற வளவில் கிணறு உண்டு. பிரயா ணிகள் தங்கி உணவு சமைத்துச் சாப்பிடக் கூட மலையடி வாரத்தில் நல்ல மர நிழல்கள் உண்டு. கடல் ஓரத்தில்

கோயில் அமைந்திருந்ததால் எப்பொழுதும் ஜிலுஜிலு வென்று ஒரே காற்று. இந்த மந்தஹாஸச் சூழ் நிலையில் காலைச் சாப்பாடு ஆயிற்று. மாணவிகள் மீண்டும் உற்சாகம் பெறத் தொடங்கினர்.

பிரயாணம் தொடர்ந்தது. மாணவிகள் ''நமோ நமோ மாதா!'' என்ற தேசிய கீதத்தை இசைத்தனர். உகந்தை முருகன் கோயிலைக் கடந்ததும் மிருக பாது காப்பு வனம் தொடங்குகிறது. கோயிலுக்கு எதிர்ப்புறம் மிருகபாதுகாப்பு இலாகா காரியாலயம் இருக்கிறது. அங் கிருந்த அதிகாரி ஒருவர் துவக்கு அல்லது மிருகங்களைக் கொல்லக் கூடிய ஆயுதங்கள் ஏதும் இருக்கிறதா? என்று மெஷின் பெட்டியைப் பரிசோதித்தார். வழிகாட்டியாக புஞ்சிசிங்கோ என்ற ஒருவரை அனுப்பினர்.

புஞ்சிசிங்கோவுக்கு அரை குறையாகத் தமிழ் தெரியும். அது நியாயமான அளவு உபயோகம். பிள்ளைகளைப் பார்த்து புஞ்சிசிங்கோ, ''பிள்ளைங்க! ஏதும் மிறுகங்கலக் கண்டா நீங்க சத்தம் போடக்கூடாது. அதுக்குப் பொறவ ஓடவும் படாது. சும்மா மெஷின்ல இருந்து பாத்துக்க ணும்'' என்று தன் முதல் எச்சரிக்கையை விடுத்தார். றைவருக்குப் பக்கத்தில் மட்காட்டில் புஞ்சிசிங்கோ தாங்க லாக இருந்து கொண்டான்.

சிறிது தூரம் போனதும், ஒரு சிறு நீர்நிலை வந்தது. அதில் மூன்று பெரிய மான்கள் நீரருந்திக் கொண்டிருந் தன. பிள்ளைகளெல்லாம் மான்! மான்! என்று கூச்சலிட்ட னர். சுமார் பதினைந்து யார் தூரத்தில் நின்ற அம் மான் கள் தலை நிமிர்ந்து இவர்களை உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றன. ''இப்படித் தவித்து வந்து தண்ணீர் குடிக்கும் போதுதானே வேட்டைக்காரர்கள் இம் மான்களைச் சுடு கிறார்கள். எவ்வளவு பாவம் இல்லையா'' என்று தன் கருணை நிறைந்த பெண்மனத்தை வெளிப்படுத்திப் பரிதவித்தாள் நாதிரு.'' ஓமோம்! அதைக்கறி சமைத்துத் தின்னும்போது

அந்தப் பாவம் தெரிவதில்லை, யாராவது மானிறைச்சிக் கறியை வேண்டாம் என்றிருக்கிறார்களா?'' என்று அவளை கிண்டல் செய்தாள் றஹீமா ரீச்சர்.

இன்னுஞ் சிறிது தூரம் போனதும் இரண்டு மரைகள் காட்டுக்குள் இருந்து புறப்பட்டன. மெஷின் சப்தத்தைக் கேட்டதும் சற்று மிரண்டு நின்றன. சுமார் ஐந்தடி உயர மான அந்த மரையின் தோற்றம், அகன்று விசிறி நின்ற அதன் கொம்புகளின் கம்பீரம் அனைவரையும் வியப்புறச் செய்தது. 'அம்மாடி! மரை இவ்வளவு பெரிசா...' என்று மாணவிகள் அதிசயித்தனர். 'மிருகங்களை உயிரோடு அதன் இயல்பான தோற்றத்தில் காண்பதே ஒரு தனி அழகு!' என்று யாரோ தன் இரசிப்பை மற்றவர்களும் அறியும்படி கூறினர். சிறிது தூரம் சென்றதும் மூன்று இளமான்கள் பாதையின் நடுவில் உறுமிவரும் உழவு இயந்திரத்தைப் பார்த்தபடியே நின்றன. இயந்திரம் அண்மையில் சென்ற தும் அவை வழி விட்டு விலகிச் சென்றன. இதனைக்கண்ட றஹீமா 'அது சரி பெண்களுடைய விழிகளை மான் விழிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்களே! இந்த மான்களின் கண்கள் அப்படியொன்றும் பிரமாதமாகத் தெரியவில்லையே' என்று ஒரு ஆராய்ச்சியைத் தொடங்கினாள். 'மான்விழி, மலர் விழி, வேல் விழி, வாள் விழி என்றெல்லாம் கூறியவர்கள் ஆண்கள். அவர்களுக்கும் பெண்களின் விழிகள் இப்படி யெல்லாம் தெரிவதால்தான் கூறுகிறார்கள். உனக்கு அது தெரியாது. நீ உன் விழிகளைக் கண்ணாடி போடாமல் காப் பாற்றிக் கொண்டால் அது போதும்' என்று பக்கத்தில் இருந்த காமிலாரீச்சரைப்பார்த்து கண்ணடித்தபடி கூறி னாள் நாதிரா. கொல்லென்று எல்லோரும் சிரித்தனர். 'திறந்த வாகனத்தில் போகும்போது இந்த குளிர் கண்ணாடி கண்ணுக்கு எவ்வளவு பாதுகாப்பைத் தருகிறது' என்றதை உணராமல் கதைக்கிறீர்கள். ஒருவகையில் இது பொறாமை என்று கூடச் சொல்லுவன்' என்று பதில் கூறிவிட்டு தன் கண்ணாடியைக்கழற்றி முந்தானைத் தலைப்பால்

துடைத்து விட்டு மீண்டும் கண்ணில் மாட்டிக் கொண்டாள் காமிலா.

இயந்திரம் சிறிது தூரம் போனதும் 'ட்றைவர்! ட்றைவர்! மெஷின நிற்பாட்டுங்கோ!' என்று பலத்த குரலில் எல்லாமாணவிகளும் கத்தினர். ட்றைவர் ஒன்றுமறியாதவனாக இயந்திரத்தை உடனே நிறுத்தினான். புஞ்சிசிங்கோ ''என்ன பிள்ளைகள்! சத்தம் போடப்படாது என்று தானே சென்னன்!'' என்று கூறியவனாக தன் இருப்பிடத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

''மிருகங்களைக் கண்டால் தான் சத்தம் போடப்படாது என்று சொன்னீங்க! நாங்க அங்க சொரிஞ்சி கிடக்கிற விளாங்காயைக் கண்டுதான் சத்தம் போட்டம்'' என்று பதில் கூறினாள் ஒரு மாணவி. இதனிடையே நாதிரு ரீச்சருடைய தலைமையில் மாணவிகள் எல்லோரும் காட்டுக்குள் புகுந்து விளாங்காய் பொறுக்கிக் கொண்டிருந்தனர். இரண்டு விளாமரம் இலை யொன்று காய் ஒன்றாகக் காய்த்துக் குலுங்கியது. கீழே மலர் சொரிந்தாற் போல விளாம் பழங்கள் சொரிந்து கிடந்தன. மாணவிகள் வேண்டிய மட்டும் அள்ளிக் கொண்டனர். புஞ்சிசிங்கோ ஒரு பொல்லை எடுத்து எறிந்து மேலும் விளாங்காய்களைப் பறித்துக் கொடுத்தான். உழவு இயந்திரம் மீண்டும் புறப்பட்டது. பெண்களுடைய சப்தமெல்லாம் அடங்கிற்று. ஆமாம் அவர்களது வாய்க்குள் பச்சை விளாங்காய்! புளிப்பும் சற்று இனிப்பும் கலந்த உதப்பழங்களை சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மாங்காயும் விளாங்காயும் என்றால் பெண்களுக்கு வயது வித்தியாசமே இல்லை. எந்த வயதினரும் விரும்பி சாப்பிடுவார்கள். மர்லியா அதிபர் என்றால் இதற்கு விதிவிலக்கா என்ன? அவள் விளாங்காய் சாப்பிடுவதில் முன்னணியில் நின்றாள்.

'முதலை பார்க்க விருப்பமா' என்று இவர்களைப் பார்த்துக் கேட்டான் ட்றைவர். 'முதலையா? எங்கே'' என்று எல்

லோரும் சற்று அச்சத்துடன் கேட்டனர். ''ஓமோம்! வண்ணனைப் பிடிச்ச அந்த முதலையைப் பார்க்கத்தான் வேண்டும்'' என்று தான் முதலாம் வகுப்பில் படித்த கதையொன்றை நினைவூட்டினாள் ஒரு மாணவி. அதோ! என்று தன் கையை வலப்பக்கமாக நீட்டிக் காட்டினான் ட்றைவர். அங்கே புல் தரையில் பத்துப் பன்னிரெண்டு முதலைகள் அனுயாசமாக வெய்யில் காய்ந்து கொண்டிருந்தன. ஆமாம்! பக்கத்தில் அவை வாழும் சிறிய குளம் ஒன்று இருந்தது. அதனை விட்டு வெளியேறி, புல் தரையில் கிடந்தன அவைகள் சில முதலைகள் வாயைப் பிளந்தபடி பயங்கரமான தோற்றத்தில் காட்சி தந்தன. அதன் திறந்த வாயினுள் தன் சொண்டுகளை விட்டு எதையோ கொத்தித் தின்றன சில பறவைகள்.

''இந்தப் பறவைகள் முதலையின் வாயினுள் எதைக் கொத்தித் தின்கின்றன? மனிசனையே விழுங்கி விடும் இந்த முதலைகள் இந்தப் பறவைகளை ஏன் ஒன்றும் செய்வதில்லை?'' என்று தன் ஆசிரியையிடம் வியப்போடு கேட்டாள் ஒரு மாணவி

''பிள்ளைகளே! கல்லினுட்தேரைக்கும், கருப்பை உயிர்கட்கும் உணவளிப்பவன் அல்லாஹ் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அதுபோல இந்தப் பறவையின் முக்கிய உணவே இந்த முதலையின் பல்லிடுவல்களில் சிக்கி இருக்கும் இறைச்சித் துணிக்கைகள் தான். முதலைகள், தனக்கு அகப்படும் முயல், மான்குட்டி முதலியவற்றை தன் உணவாக்கிக் கொள்ளும். அப்பொழுது மாமிசத்துணிக்கைகள் அதன் பல்லிடுவல்களில் சிக்கிக்கொண்டு அதற்கு வேதனைதரும். இந்தப்பறவைகள் அவற்றைத் தன் சொண்டினுல்கொத்திஎடுக்கும்போது முதலைகளுக்கு வேதனைகுறைந்து சுகமாகயிருக்கும். ஆதலால் தனக்கு உதவி செய்யும் இந்த பறவைகளை அவை ஒன்றும் செய்யா.'' றஹீமா ஆசிரியை சொன்ன இந்த விளக்கத்தைக் கேட்டு மாணவிகள் அதிசயித்துப் போயினர். ''மிருகங்கள் பறவைகளின் இயற்கை

யான வாழ்வு, நடை முறைகளை நுட்பமாகப் பார்த்தால் எவ்வளவு அற்புதங்கள் நிறைந்திருக்கின்றன. மனிதன் மட்டும் தான் உயர்வானவன் என்றும் உயர்ந்த பண்பாடுகள் நிறைந்தவன் என்றும் நாம் நினைத்திருக்கிறோம். உயிரினங்களிடையே உள்ள தாயன்பு, தாம்பத்திய உறவு; கூடிவாழும் பண்பு, உதவி செய்யும் குணம் இவற்றை யெல்லாம் ஊன்றி அவதானிக்கும் போது, மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் சில இயல் பூக்கங்களும் நடை முறைகளும் பொதுத்தன்மை பொருந்தியவையாகவே இருக்கின்றன.'' — நாதிரு ஆசிரியை இந்த விளக்கத்தை உணர்ச்சி வயப்பட்டுக் கூறினாள். மாணவிகள் பள்ளியில் பயிலாத தத்துவ பாடமொன்றை இங்கே கற்றுக் கொண்டிருந்தனர். இயந்திரம் பயங்கர சப்தத்துடன் புறப்பட்டது.

பாதையின் திருப்பத்தில் இருபது யார் தூரத்தில் ஒரு குளம் இருந்தது. அதன் கரையில் ஒரு மரத்தின் ஓரமாக இரண்டு யானைக்குட்டிகள் இவர்களை வரவேற்பது போல துதிக்கையை மேலே உயர்த்திக் கொண்டிருந்தன. 'யானை! யானை!' என்று மாணவிகள் கூச்சலிட்டனர். புஞ்சிசிங்கோ கையைக்காட்டி ''சத்தம்போடாதிங்க'' என்று சொன்னான். சிறிது நேரத்தில் அவை இரண்டும் தோளோடு தோள் இணைந்தபடி காட்டினுள் நுழைந்தன. அவை மரக்குற்றி போன்ற தம் கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நடந்த நடையழகையும் அதன் கம்பீரத்தையும் பெண்களெல்லாம் மெய்மறந்து நின்று ரசித்தனர்.

பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் உழவு இயந்திரம் குமுக்கன் ஆற்றங்கரையைச் சென்றடைந்தது. வந்திருந்த பெற்றோர் இருவரும் ட்றைவரும் பகல் சாப்பாட்டை சமைக்கத் தொடங்கினர் பெற்றார் ஒருவர் 'நீங்கள் பெண்கள் ஒவ்வொரு நாளும் எங்களுக்குச் சமைத்துப் போடுகிறீர்கள். இன்றைக்கு நாங்கள் சமைத்துத்தர நீங்கள் தின்று பாருங்கள். நீங்கள் யாரும் எங்களுக்கு உதவி செய்யத்

தேவையில்லை. ஒரு மணி நேரத்தில் உங்களுக்கு சாப்பாடு தருகிறோம்' — என்று முன்னுரை கூறிவிட்டு வேலையைத் தொடங்கினர்.

குமுக்கன் ஆற்றங்கரை இயற்கை அழகு கொஞ்சி விளையாடும் ஓர் இடம். கிழக்கே வளைந்து வளைந்தோடும் வளம் மிகும் ஆறு. அதன் கரைகளில் நிழல் பரப்பி நிற்கும் மருத மரங்கள். அதைச் சூழ்ந்து பச்சைக் கம்பளம் விரித்தாற் போல தோன்றும் பசும் புற்தரை. மேற்கே 'ஹோ' வென்று உயர்ந்து, ஆற்றின் போஷாக்கால் செழித்து வளர்ந்த காடுகள் மெல்ல மெல்லத் தழுவிச் செல்லும் இளந் தென்றல் — இந்தச் சூழ்நிலையில் மாணவிகளும், ஆசிரியைகளும் ஆங்காங்கே கூடிக்கூடி இருந்து அரட்டை அடித்தனர். சிலர் வானொலியில் பாட்டுக்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். மணி பன்னிரண்டைக் கடந்து விட்டது. வெயில் உச்சியில் நின்றது. ஆனால் குளிர் ஊட்டப் பெற்ற ஓர் அறையில் இருப்பது போல அனைவரும் அப் புல் வெளியில் ஆங்காங்கே சுயாதீனமாகக் கிடந்தனர். பெண்கள் எப்பொழுதும், எங்கு சென்றாலும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவர்கள். இந்தக்காடாவது அவர்கள் விரும்பியது போல் சிரித்து மகிழ — சுதந்திரமாக நடமாட இடம் அளித்ததே என்று நினைத்து முடிவதற்கிடையில்,...

ஒரு வெள்ளை நிற வொக்ஸ் வேகனில் இளைஞர்கள் பத்துப்பேர் வந்திறங்கினர். ஹிப்பித்தலையும், குறுந்தாடியும், பெல்ஸ் காற்சட்டையுமாக அவர்கள் வந்திறங்கிய காட்சி பெரும் பரபரப்பை தந்தது. கல்லெறிபட்ட பறவைகள் கலைந்து செல்வதைப் போல மாணவிகள் ஒரு புறமாக ஒதுங்கி வந்தனர். ஒரு செம்மறி ஆட்டுத் தாடிக்காரர், அதிபர் மர்லியாவிடம் வந்து ''மிஸ் நாங்கள் இங்கு வந்ததில் உங்களுக்கு ஏதும் சிரமம் இருந்தால் மன்னிக்க வேண்டும். உங்களுக்கு உதவியாகவே

நாங்கள் இருப்போம். சமைத்துச்சாப்பிட வேறிடமும் இங்கே இல்லை. நாங்கள் இங்கிருப்பதில் உங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இருக்குமா?'' என்று கேட்டான்.

''இல்லை! இல்லை இது எல்லாருக்கும் பொதுவான இடம் தானே! நாங்களென்ன இந்தக்காட்டுக்கு உறுதியா எழுதி வைத்திருக்கின்றோம். நீங்கள் தாராளமாக தங்கி சமைத்துச் சாப்பிடுங்கள். ஆனால் ஒன்று...''

''என்ன மிஸ். சொல்லுங்க...''

''பள்ளிக்கூட மாணவிகள் இங்கிருப்பதால் 'பொப்' பாடல்கள் மட்டும் பாடாமலிருந்தால் அது போதுமானது. சாஸ்திரிய சங்கீதம் தான் எங்கள் பாடசாலையில் கற்றுக் கொடுக்கிறோம். அதுக்காகத்தான் சொன்னேன் ..''

அந்தத்தாடி இளைஞனுக்கு நாம் ஏன் வந்து இப்படி மாட்டிக் கொண்டோம். தர்ம சங்கடமாக வல்லவா ஆகி விட்டது என்று பெரும் யோசனை ஆயிற்று. அந்தக் குமுக் கன் ஆற்றின் தென்றற் காற்று மட்டும் அவனுக்கு உதவி செய்யாவிட்டால் அவன் உடம்பெங்கும் வேர்த்துக் கொட்டி இருக்கும். மிகவும் வெட்கப்பட்டவனாக ''சரி மிஸ் நாங்கள் இயன்ற வரையில் கட்டுப்பாடாக இருக்கிறோம்.'' என்று கூறி அவ்விடத்தை விட்டு தப்பிப் பிழைத்துப் போனான்.

றஹீமா ஆசிரியைக்கு அவர்கள் இவ் விடத்துக்கு வந்து சேர்ந்தது பிடிக்கவில்லை. ''சில ஆண்கள் பெண்களைக் கண் டால் உதவி செய்யப் புறப்பட்டு விடுவார்கள்! அவர் களுக்கு அது ஒரு நோய். அதில் சேர்ந்தவர் தான் இவரும். இவர்களுடைய உதவியை நம்பியா நாங்க இங்கே வந் தோம்.?'' என்று அலுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் அவர்களுடைய வானொலிப் பெட்டி யிலிருந்து கர்நாடக பாடல் ஒன்று கேட்டது. திருச்சி

வானொலியில் யாரோ ஒரு பாகவதர் பாடிக்கொண்டிருந்தார். நேரமோ 12-45 இலங்கை வானொலியில் செய்திக்கு முன்னர் சினிமாப்பாடல் ஒலிபரப்பாகும் நேரம் அது. அவர்கள் வேண்டுமென்றே திருச்சி நிலையத்தை வைத்திருந்தனர். ஆமாம் அவர்கள் 'இயன்ற அளவில் கட்டுப்பாடாக நடக்கின்றனர்.'

மத்தியானச் சாப்பாடு ஆயிற்று. அந்த இளைஞர்கள் யாருமே இப்பக்கம் விளையாட்டாகக் கூட பார்க்கவில்லை. இந்த அல்லிராஜ்யத்தில் இருந்து தப்பிப் போனால் போதும் என்பது போல அவர்கள் நடைமுறை இருந்தது. மர்லியா இப்பொழுதுதான் இவர்களெல்லாம் யார் என்று ஆராயத் தொடங்கினாள். அவர்கள் எல்லோரும் உத்தியோகஸ்தர்கள். அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்கள். சில வெளியூர் இளைஞர்களும் இருந்தனர். தனக்கு அறிமுகமான சில முகங்களையும் அவள் கண்டாள். அவர்களுள் ஒருவன் விவசாயப் போதனாசிரியர் றஹீம். அவனுடைய தகப்பன் தான் விலகிய வெள்ளாமைக்காரன் அலியார், றஹீமை படிக்கும் காலத்தில் மர்லியா கண்டிருக்கிறாள். அதற்குப் பிறகு இப்பொழுது தான் காண்கிறாள்.

தாடியோ, ஹிப்பித்தலையோ அவனுக்கு இல்லை. ஆண்களுக்கே உரிய அரும்பு மீசை வைத்து அழகான முறையில் உடுத்தி வாட்டசாட்டமாக இருந்தான். செக்கச் செவேல் என்ற அவனுடைய சிவந்த நிறமும் தோற்றப் பொலிவும் அவளை வெகுவாகக் கவர்ந்தன. எப்பொழுதும் சிரித்த முகத்துடன் விளங்கினான். வெகுநாட்களுக்குப் பிறகு கண்டதால் அவனோடு பேச வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு ஏற்பட்டது. சாப்பிட்டுவிட்டு தனிமையில் ஒரு மர நிழலில் இருந்த றஹீமை, மர்லியா அடிக்கடி பார்ப்பதை அவனும் அவதானித்தான். யார் முந்திப் பேசுவது என்று தெரியாமல் இருவரும் தயங்கிக் கொண்டிருந்தனர்.

றஹீமே முந்திக் கொண்டான். மர்லியாவை நோக்கி அவன் வந்து கொண்டிருந்தான். மர்லியாவுக்கு நடுக்கம் ஏற்பட்டது. எழுந்து நின்று அவனை மரியாதை செலுத்தி வரவேற்ருள்.

''ரீச்சர்! உங்கள் புரேகிரும் என்ன? இரவைக்கு எங்கே தங்குறீர்கள்! ஊருக்கு எப்போ புறப்படுகிறீர்கள்''- என்று கேட்டான் றஹீம்.

''நாங்க இன்னும் ஒன்றும் பார்க்கவில்லை. பின்னேரமா சில இடங்களுக்குச் சென்று மிருகங்கள் பார்க்க வென்றிருக்கிறோம். இரவைக்கும் இங்குள்ள பாடசாலை ஒன்றில் தங்கலாம் என்று வழி காட்டி கூறுகிருன். பறவைகள் பார்க்கக் காலை வேளைதான் நல்லதாம். காலையில் அவற்றையும் பார்த்துக் கொண்டு நேரத்தோடு மத்தியானச் சாப்பாட்டை முடித்ததும் ஊருக்குப் புறப்படுவோம்.''

''நாங்களும் அப்படித்தான் எண்ணி இருக்கிறோம். இரவுத்தங்கலுக்கு ஒரு சிறு வீடுகிடைத்திருக்கிறது. காலையில் பறவைகளைப் பார்த்ததும் — காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்பட்டு விடுவோம் ''

''நீங்கள் கொஞ்சம் முந்துகிறீர்கள் அவ்வளவு தானே! உங்கள் வாகனம் வேகன் அல்லவா? அதை அதிகம் தாமதிக்க ஏலாதே!''

''இல்ல, இல்ல! நாங்கள் பகற்சாப்பாட்டுக்கு பாணமைக்குப் போகிறோம், அங்கே எனது நண்பரான விவசாயப் போதனுசிரியர் ஒருவர் சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்துள்ளார். சாப்பிட்டு விட்டு உங்களுடைய மெஷினையும் எதிர்பார்த்துத்தான் புறப்படுவோம். காட்டுவழி! நீங்களெல்லாம் பெண்கள், மெஷினுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலும் இதையெல்லாம் கவனிப்பது எங்கள் கடமையல்லவா? சில வேளை நாங்கள் வலிந்து உங்கள் மீது

கொண்டுள்ள அக்கறையை, நீங்கள் விரும்பாமலும் இருக்க லாம். என்றாலும் உங்களோடு வந்த பிள்ளைகளெல்லாம் எங்களுடைய ஊர்ப்பிள்ளைகள், தங்கைமார்கள்! அவர்களை நடுக்காட்டில் விட்டு விட்டு நாங்கள் ஓடிவிட முடியா தல்லவா?''

மர்லியாவால் ஒன்றும் பேச முடியவில்லை. நியாயபூர் வமான அவர்களது அக்கறையைப் பணிவோடு ஏற்றுக் கொண்டு, ''நீங்கள் சொல்வதும் சரிதான். அப்படியே செய்யுங்கள் மிக்க நன்றி'' என்றாள்.

''இன்னு மொன்று... முகஸ்துதி யல்ல, உங்கள் வித்தி யாலயப் பரிசளிப்பு விழாவுக்கு நானும் வந்திருந்தேன். விழா மிகச் சிறப்பாக இருந்தது. அறபு நாட்டு இஸ்லாமிய பாணியில் மாணவிகள் ஆடிய நடனம் வெகு அற்புதம்! பெண்கல்வியில் நாம் மிகப் பின்தங்கி இருக்கிறோம். நீங்கள் உங்களால் ஆனமட்டும் பாடுபடுங்கள். உங்களுக்குத் தேவை யான உதவிகளைச் செய்ய நாம் காத்திருக்கின்றோம்.''

''மிக்க நன்றி. தேவைப்படும்போது நிச்சயமாக உங் களை அழைத்து ஆலோசிப்பேன்.''

மாணவிகளெல்லாம் மெஷினில் ஏறி ஆயத்தமாக இருந்தனர். மர்லியாவும் ஏறிக் கொண்டாள். மெஷின் வன விலங்குப் பகுதியை நோக்கிச் சென்றது,

இளம் மான் கூட்டங்கள் சாரிசாரியாகச் சென்றன. காட்டுக்கிடாய்கள் பார்க்கப் பயங்கரமாகக் காட்சியளித் தன. ஒரு கொம்பன் யானை துதிக்கையை மேலுயர்த்தி குழை பறித்துத் தின்று கொண்டிருந்தது. எல்லோரும் மிகப் பிரமாதமாக வியந்து ரசித்தனர். தூரத்தில் இரண்டு கரடிகள் தளர் நடை போட்டுச் சென்றன. இத னைக் கண்ட மாணவிகளெல்லாம். ஓ! என்று கூச்சல் போட்டு விட்டனர். அவை தம் கூரிய முகங்களால் ஒரு முறை இவர்களைத் திரும்பிப் பார்த்தபடி சென்றன.

மர்லியாவின் கண்கள் இவற்றை யெல்லாம் பார்க்கத் தான் செய்தன. மனம் மட்டும் எங்கோவெல்லாம் அலைந்து கொண்டிருந்தது. இனம் புரியாத ஒரு தாபம்! இராகம் கூறமுடியாத ஒரு இசை. கருத்துக்கூற முடியாத ஒரு கவிதை. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு ஏன்? அந்த தாடி இளைஞர் கூறியதுபோல ''முடியுமான அளவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு'' இருந்தாள் மர்லியா.

மாலை ஐந்து மணி, முப்பது நிமிஷமாயிற்று. எல்லோ ரும் இராத்தங்கலுக்கு கிராமப் பாடசாலையை அடைந்த னர். பாடசாலை மிகவும் சிறியது. அதில் சிலர் தங்கினர். ஏனையோர் தாங்கள் கொண்டு வந்த கன்வேஸ் கூடாரங் களைப் பாடசாலை முற்றத்தில் அடித்தனர். கதவுகளுக்கு தாழ்ப்பாள் போட்டு தனி அறையில் படுக்கும் பெண்களுக்கு இது புது அனுபவமாயிருந்தது!

மர்லியாவின் மனவெளியில் ஒரு நிழல் ஊசலாடியது. அதன் தாக்கம் அவளைக் கிறங்கச் செய்தது. ஐந்து வருடங் களின் முன் வேறோர் நிழல் ஊசலாடியதால் ஏற்பட்ட சுவடு இன்னும் அழிய வில்லை. சுவடு என்று கூறுவதை விட தழும்பு என்று அதைச் சொல்லலாம். ஆம் புரையோ டிய புண்ணாகி வழிந்தோடிய கண்ணீர்க் கதையாகிய அச் சுவடு அவள் மனத்தை விட்டு இன்னும் அழியவில்லை. இப் பொழுது புதியதொரு நிழல் மற்றுமொரு சுவட்டைப் பதிக்கப்போகிறதா?

டோர்ச்-வெளிச்சத்தில் இருவர் பாடசாலை வளவி னுள் பிரவேசித்தனர். எல்லோருடைய கவனமும் வெளிச் சத்தை நோக்கி சென்றது. மர்லியா, அவர்களை நோக்கி சில அடிகள் முன் சென்றாள். றஹீமும் வேறொருவரும் வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் புதிதா கக் களவெடுக்கும் கள்ளனின் மனம் போல மர்லியாவின் மனமும் பக்பக் என்று அடித்துக் கொண்டது!

ரீச்சர் எல்லாம் வசதியாக இருக்கின்றதா? ஏதும் உத விகள் தேவையா? என்று றஹீம் அக்கறையோடு கேட் டான்.

ஓமோம்! எல்லாம் வசதியாக இருக்கின்றன. வழிகாட்டி புஞ்சிசிங்கோ எங்களோடு ரொம்ப இரக்கம். ஓடி ஓடித் தேவையான உதவிகள் எல்லாம் செய்கிறுர்.

மாணவிகள் அப்பொழுதுதான் பின்னேரத் தேநீர் குடித்துக் கொண்டிருந்தனர். ஒரு பிள்ளை மர்லியாவிடம் ஒரு தேநீர் கோப்பையைக்கொண்டு வந்து கொடுத்தாள். அதனை வாங்கிய மர்லியா, பிள்ளை! ''இன்னும் இரண்டு தேநீர் கொண்டுவா!'' என்று கட்டளை இட்டாள்!

''உங்கள் விருந்தில் எங்களுக்கும் பங்கா? வேண்டாம் ரீச்சர்!'' என்று றஹீம் மறுப்பதற்கிடையில் மாணவிகள் இரண்டு கோப்பைத் தேநீரை அவர்களிடம் நீட்டிக் கொண்டிருந்தனர்.

தேநீரைக் குடித்து நன்றி கூறிவிட்டு றஹீமும் நண் பரும் போய்க்கொண்டிருந்தனர். புல்லும் புதருமான அப் பாதையில் வெளிச்சத்தை அணுக்காமல் இவர்கள் போய்க் கொண்டிருப்பதை, வெகு அக்கறையோடு மர்லியா கவ னித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாட் காலையில் எல்லோரும் பறவை வனத்துக்குச் சென்றனர். செல்லும் வழியில் மறக்க முடியாத ஒருகாட்சி நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆம்! பெண்மயில் ஒன்று பார்த் திருக்க, ஆண் மயில் ஒன்று ஆடிக்கொண்டிருந்தது.

தோகையை விசிறிபோல விரித்துக் கொண்டு அது ஆடிய அழகு மாணவிகளை மெய் மறக்கச் செய்தது. நீல மும் பச்சையும் மஞ்சளும் கலந்த அதன் இயற்கையான வர்ணங்கள், உதய சூரியனின் கதிர்கள் பட்டு ஜெக ஜோதியாக விளங்கிற்று.

றஹீமின் 'வொக்ஸ் வேகனும்' அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. அவர்கள் கீழே இறங்கி நின்று மயில்களின் ஆட்டத்தை பார்த்தனர். மர்லியாவின் பார்வை றஹீமை நோக்கி விழுந்தது. அந்த மயிற்சேவலின் ஆட்டத்தின் அழகில் அவள் மனம் இலயித்தது போல, றஹீமின் கம்பீரமான தோற்றப் பொலிவிலும் அவள் மனம் ஈடுபட்டது.

எல்லோருமே ஒன்றுபட்டுப் பறவை வனத்திற்குச் சென்றனர். அங்கே ஒரே இசை முழக்கம். பாட்டொன்றிற்கு இசை அமைக்க முயலும் சங்கீத இயக்குனர் ஒருவர் தம் அறையில் உள்ள நூற்றுக் கணக்கான இசைக் கருவிகளையும் ஒவ்வொன்ருய் மீட்டிப் பரீட்சிப்பது போல பறவைகள் வித விதமான இசைகளை எழுப்பிக் கொண்டிருந்தன. இறைவன் வர்ணங்களைச் கலந்தெடுத்து இப்பறவைகளில் தான் தெளித்துவிட்டானே என்று எண்ணும்படியாக ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு வண்ணமாகத் தோன்றியது. வெளி நாட்டில் இருந்து வந்த சில பறவைகளைப் பற்றி வழிகாட்டி மாணவிகளுக்கு விளக்கம் கூறிக்கொண்டிருந்தான். மாணவிகள் புதுமையான வர்ணங்கள் உள்ள பறவைகளின் உதிர்ந்து கிடக்கும் இறக்கைகளை ஆங்காங்கே தேடிப் பொறுக்கிக் கொண்டிருந்தனர்.

புஞ்சிசிங்கோ தான் தேடிவைத்திருந்த பறவைகளின் விதம் விதமான சொண்டுகளை மாணவிகளுக்கு அன்பளிப்பாக வழங்கி அவை எவ்வெவ் பறவைகளின் சொண்டுகள் என்றும் விளக்கினுன். ஒரு வெளிநாட்டுப் பறவையின் பஞ்சு வைத்து ஸ்ரவ் செய்யப்பட்ட உடல் ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்தான். அது ஆசிரியைகளைக்கூட வெகுவாகக் கவர்ந்தது. 'பிள்ளைகள் இவற்றையெல்லாம் கவனமாக வைத்திருங்கள். நம் விஞ்ஞான கூடத்தில் வைப்பதற்கு இந்த அபூர்வமான பொருட்கள் மிகவும் பிரயோசனமானவை' என்று மர்லியா அதிபர் மாணவிகளுக்குக் கூறினர்.

றஹீமும் நண்பர்களும் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தனர். தாங்கள் பொறுக்கி வந்த மயிலிறகு முதலான பொருட்களையும் மாணவிகளி டம் கொடுத்தனர். அதுமட்டுமின்றி றஹீம்தான் உயிரி யல் பாடத்தில் மிக ஈடுபாடுடையவன் என்றும் தனக்குக் கிடைத்த சில அபூர்வமான பறவைகளின் உடலைத்தான் 'ஸ்ரவ்' செய்து வீட்டில் வைத்திருப்பதாகவும், ஊருக்குப் போனதும், அவற்றை யெல்லாம் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விடுவதாகவும் கூறினான். மாணவிகள் எல்லோ ரும் கையடித்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

''சரி! நேரமாயிற்று. நாங்கள் பாணமைக்குப் போக வேண்டும். அப்போ நாங்கள் வரட்டா ரீச்சர்!'' என்று கூறி மர்லியாவிடம் விடை கேட்டான் றஹீம்! 'நாங்களும் வரட்டா மிஸ்' என்று நேற்று உதவி செய்ய முன் வந்த தாடி இளைஞனும் கிண்டலாக விடை கேட்டான்.

அவர்கள் வேகனில் ஏறிக் கொண்டு கை அசைத்து விடை பெற்றனர். மாணவிகளும் தங்களுடைய கைகளை உயர்த்தி 'டடா' கூறினர். மர்லியா வேகனில் செல்ல வில்லை. நிச்சயமாக இவள் மாணவிகளோடு தான் நின் றாள். இதனை உணர அவளுக்கு சில நிமிடங்கள் ஆயிற்று.

## ( 4 )

இஸ்மாயில் ஹாஜியார் பகல் சாப்பாட்டை முடித் துக்கொண்டு அன்றையத் தினசரியைப் புரட்டினார். ஹாஜரு வெற்றிலை வட்டாவை அவருக்குப் பக்கத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனாள். சாப்பிட்ட வாய்க்கு வெற்றிலை போடுவதையே மறந்தவராக பத்திரி கைச் செய்தி ஒன்றில் மூழ்கிக்கிடந்தார் ஹாஜியார்.

சேனைக்காட்டு வெள்ளாமைக்காறன் ஆதம் கண்டு அவருக்கு முன்னால் வந்து வெகுநேரமாக நின்று கொண்டிருந்தான். இப்போ நாட்டில எங்க பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் கற்பழிப்பும் தான் நடக்குது. மனிசர்களுடைய மனங்களெல்லாம் ஏன்தான் இப்பிடி வன்நெஞ்சாக மாறிவிட்டதோ தெரியல்ல..... என்று கூறி அலுத்துக் கொண்டவராக பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தார். முன்னால் நின்ற ஆதம் கண்டுவை நோக்கி என்ன வேண்டும் என்று கேட்பதுபோல அவருடைய பார்வை இருந்தது.

''நாளைக்கு சேனைக்காட்டுக்குப்பயளை எறியணும் வெள்ளாமை மஞ்சள் அடித்துப்பாக்க ஏலாமக் கெடக்கு! நாளைக்கு பயளையை எறிஞ்சிற்று மறுநாள் தண்ணி உட்டுக் கட்டலாம்''.

சரி சரி! பத்தந்தர் யூரியா கொண்டுபோய் நல்ல விதமாக எறிஞ்சிபோடு. நாளைக்கு ஸுபஹுல வண்டிலக் கொண்டுவந்து பயளையை ஏத்திக்குப் போவன்!

நாம முதலாம் பயளையும் ஏழேக்கருக்கும் ஏழந்தர்தான் எறிஞ்சம். இப்போ இடைப்பயளை பதினாலந்தர் எறிஞ்சாத் தான் நல்லது. வெள்ளாமையும் செனச்சி வளரும். கடைசியில் ரீ. டி. எம். ஏழந்தர் எறிஞ்சாப்போதும்!

அதுக்கென்ன? பதினாலந்தர் எடுத்துக்குப் போவன். பயளை எறிய நல்லதொருத்தனைக்கூட்டிக்கொள்ளு. சுழி விழாமல் நல்லா எறியனும்!—இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் மோட்டுவெளி வெள்ளாமக்காறன் கபூர், பாமங்காய் வெள்ளாமைக்காறன் வெள்ளைத்தம்பி இருவரும் வந்துகொண்டிருந்தனர்.

பாக்குச்சீவலை வாயிற்போட்டு, வெற்றிலைக்கு சுண்ணம்பு 'பூசியவராக......என்னடப்பா! நீங்க எல்லாரும்

பேசி வெச்சதுபோல வாறீங்க... வெற்றிலே இரண்டை வாய்க்குள் சொருகினுர். சிறிது நேரம் அவரால் பேச முடியவில்லே.

கபூர் கதையை தொடங்கினுன். ''மோட்டுவெளி வெள்ளாம வந்தமாதிரிக்கி கண்பட்டது போலப்போச்சி! நீங்ககூட போன கிழமவந்து பாத்திங்கத்தானே! இப்ப என்னடா எண்டால் வெள்ளாமை நுனி கருகிக் கருகி சிவந்து போகுது. சில இடத்தில மடிச்சுக்கட்டியும் கெடக்கு இதுக்கு என்ன செய்யலாம் எண்டு நானும் கேக்காத ஆக்க ளில்ல. ஒவ்வொருத்தனும் ஒவ்வொண்டச் செல்ருன். எதச் செய்ற? என்ன மருந்து அடிக்கிற? எண்டு ஒண்டும் விளங்க இல்ல.

மடிச்சுக்கட்டி ஒருபுறம். நுனிகருகுவது ஒருபுறம்...... இரண்டுக்கும் சேத்து என்ன செய்ற...? சரி! வெள்ளத்தம்பி வந்ததென்ன?

''வெள்ளாம குடலேயாகுது. இன்னம் இரண்டு மூண்டு நாளேயில ரீ. டீ. எம். அடிக்கவேணும். இப்ப என்னடா எண்டு பாத்தன். அடி அழுகி அழுகி வெள்ளாமயெல்லாம் கீழ விழுந்து கெடக்கு. அறக்கொட்டி எண்டுதான் எல்லா ரும் செல்ருங்க. எதுக்கும் நீங்களும் வந்து பாத்து எறியிரத எறிஞ்சி வெள்ளாமயக் காப்பாத்தவேணும்''.

அறக்கொட்டியா எண்டால் அந்த பலாய்க்குத்தானே ஒரு மருந்தும் இல்லேயே! அழியிரதுபோக மிஞ்சுறதுதான் நமக்கு. ஹாஜியார் நம்பிக்கை இழந்து பேசினுர்.

''மாவடிப்பள்ளியில மவ்லானு உம்மா இருக்கா. மவ் லானுட கபுத்தில கொஞ்சம் மண் எடுத்து ஓதித்தருவா! அத எறிஞ்சா அறக்கொட்டியில்ல அதுர வாப்பாக்கொட்டி எண்டாலும் தீந்துபோயிரும். போனவருசம், இளேய பிள் ளட புருஷன், புருளே ஹாஜியாரெல்லாம் அந்த கபுர் மண் ஓதித்தான் எறிஞ்சி எல்லா நசலும் தீந்துபோச்சி. நீங்களும்

வெள்ளத்தம்பிய மாவடிப் பள்ளிக்கு அனுப்பி கொஞ்சம் மண் ஓதி எறியுங்க...'' ஹாஜியாருடைய மனைவி ஹாஜரு தன்னுடைய நம்பிக்கை பூர்வமான யோசனையை இப்படிச் சொன்னாள்.

சேசே! போனவருஷம் பனையறுப்பான் கேளி வட்டை முழுவதும் அறக்கொட்டி அடிச்சிது. குஞ்சாயிமக் கூட்டிக் கொண்டு போய் தண்ணி ஓதி எறிஞ்சி மண் ஓதி எறிஞ்சி ஏலுமான வித்தயெல்லாம் பாத்தாங்க கொஞ்சம்கூட கேக்கல்ல—கபூர், ஹாஜியாருடைய மனைவியின் கூற்றை ஆதாரபூர்வமாக மறுத்தான்.

ஹாஜருவுக்கு கோபம் வந்துவிட்டது நீங்க அல்லா விலயும் நம்பிக்கை இல்ல. வேதத்திலயும் நம்பிக்கை இல்லாத ஆக்கள். நான் மவ்லானுட கபுருக்கு எவ்வளவோ நேத்திக்கடன் வெச்சிப்பாத்திருக்கன். கைமேல பலன் கிடைச்சிருக்கு, ஒங்களுக்கும் நம்பிக்கை இருந்தாச் செஞ்சி பாருங்க. எனக்கி ஏன் இந்த வீண்வம்பு—என்று முகத்தைச் சுழித்தவளாகக் குசினிப்பக்கம் தனக்கு—வந்த ஆவேசத்தை அடக்கிக்கொண்டு நடந்தாள் ஹாஜரு.

வெள்ளத்தம்பி சொன்னான்: நம்முட அலியார்ர மகன் றஹீம் இரிக்காரே, அவர் விவசாயக் கந்தோருலதான வேலே பாக்கார், வட்டக்க நோய் நொடி புடிச்சா, ஆக்கள் அவரத்தான் கூட்டிக்கிப் போய் காட்டுறுங்க. அவர் பயிரப்பாத்த மாத்திரத்தில இதுதான் நோய்! அதுக்கு இன்ன மருந்து வாங்கி அடியுங்க என்கிறார். அடிச்சாச்சரி வருகுது, அவரத்தான் நாமளும் கூட்டிக் கொண்டு போய் காட்டுவம் என்றான்.

''ஓமோம்! அந்தப்பொடியன் இலுக்குச்சேனையில பத்தேக்கர் பூமி வாங்கி அவங்க வாப்பாதான் அதச்செய்றார். மூண்டு நாளைக்கு ஒருக்கா அந்தப்பொடியன் பூமிக்க போகும். வெள்ளாமயெண்டா கரும்புச்சோல தோத்துப் போகும். அவ்வளவு சிகிச்சை அதுக்கு நடக்குது. அந்தப்

பொடியனத்தான் நாமளும் கூட்டிக்கி வந்து காட்டுவம்'' என்ருன் கபூர்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு தன்பாட்டில் வெற்றிலையை மென்று கொண்டிருந்த ஹாஜியார், ''சரி சரி! நாம றஹீமத்தான் கூட்டிக்கொண்டு போய் இரண்டு பூமியையும் காட்டுவம். அவன் வெள்ளாமயப்பத்தியே படிச்சபுள்ள ஏதாவது நல்ல யோசனை செல்லுவான். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை லீவு நாள்தான் தோதா யிருக்கும். வெள்ளத்தம்பி நீ ஓடிப்போய் நான் சென்ன எண்டு அந்தப் பொடியனக் கூட்டிக்கி ஓடிவா... வசதி யெண்டா நாளைக்குக் கூட்டிக்கொண்டுபோய் இத என்ன எண்டு பாத்திரலாம்.''

மறுநாள் ஹாஜியார், றஹீம், வெள்ளாமைக்காரன் கபூர், வெள்ளைத்தம்பி—நான்கு பேரும் காரில் மோட்டு வெளிக்கும், பாமங்காய் வட்டைக்கும் போய்க்கொண்டிருந்தனர்.

றஹீம் பூமியை நான்கு புறமும் சுற்றிப்பார்த்தான். காற்சட்டை கீழ்மடிப்பைச் சுருட்டி முழங்காலுக்கு மேல் வைத்தான். பூமிக்குள் கிடந்த தண்ணிச்சகதியில் எந்தவித மான அருவருப்புமின்றி இறங்கினுன். வெள்ளாமையை ஒதுக்கிவிட்டு அதன் அடிப்பாகத்தைக் கூர்ந்து பார்த்தான். கையில் இருந்த 'மைக்கிறஸ் கோப்பை' கண்ணில் வைத்து மீண்டும் மீண்டும்பார்த்தான். அரைமணி நேரம் நோயுற்ற ஒரு குழந்தையை வைத்தியர் வாய், மூக்கு, கண்ணெல்லாம் புரட்டிப்புரட்டி பார்ப்பதுபோல றஹீமும் பார்த்தான். சிரித்துக்கொண்டு வரம்பில் ஏறினவன் ஹாஜியாரைப் பார்த்து ''நீங்கள் அதிர்ஷ்டம் செய்திருக்கிறீர்கள். அறக் கொட்டியா பூச்சி கிடக்கு. அது இப்போதான் முட்டைப் பருவம். இன்னுஞ் சில மணி நேரத்தில் முட்டைகளெல் லாம் வெடித்து, வயல் முழுவதும் பரவிவிடும். அதனி டையே சிகிச்சை நடைபெற வேண்டும். நான் ஒரு மருந்

துக்கு துண்டு தருகிறேன். அந்த மருந்து புதிதாக வந்தது. மருந்து கம்பெனியின் பிரதான ஏஜன்ஸியிடம் மட்டும்தான் இருக்கிறது. கடைகளுக்கு இன்னும் வரவில்லை. அது ஒரு வகை வெள்ளைக்குறுனல். பூச்சியையும் அழிக்கும். பூச்சியின் தாக்கத்தால் ஏற்பட்ட பலக்குறைவையும் போஷித்து பயிரை நன்கு வளர்த்தெடுக்கும்'' என்று விளக்கினுன் றஹீம்.

ஹாஜியாரும் வெள்ளாமைக்காரர்களும் குருவுக்குப் பணிந்து நிற்கும் மாணவர்கள்போல, வாய் புதைத்துநின்று அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கார் மீண்டும் மோட்டுவெளிக்குப் புறப்பட்டது. ''தம்பி! புதுப்புதுவகை நெல்லினங்களும், புதுப்புதுவகை பயளைகளும் வந்து புதுப்புது வகைநோய்களும் வருகுது. எங்களின் அனுபவ அறிவையும் மீறி இதெல்லாம் நிற்குது'' — என்று தம் அனுபவ அறிவின் தோல்வியை வருத்தத்தோடு ஒப்புக்கொண்டு பேசினுர் ஹாஜியார்.

''ஓமோம்! அந்தக்காலத்தில் ஏக்கருக்கு ஐந்து அவணம் தானே விளைச்சல்! இப்போது இருபது அவணம் வரை விளையுது. பயிருக்கு இதற்கேற்ற பரிபாலனமும், போஷிப்பும் கொடுத்தால்தானே. சரியான விளைவைக் காணலாம். செயற்கை நெல்லானபடியால் நோய் நொடிகள் இலகுவாகத் தொற்றிக்கொள்கின்றன. உங்களுடைய பாரம்பரிய நடைமுறைகள் இதற்குச் சரிவராது. நவீன விஞ்ஞான வளர்ச்சி இதற்கெல்லாம் மருந்துகளையும், எண்ணெய் வகைகளையும் தந்திருக்கிறது'' இவ்வாறு விளக்கம் கூறினுன் றஹீம்.

மோட்டு வெளிக்கும்போய், பயிரைப்பார்த்து உரிய சிகிச்சை முறைகளைக் கூறினுன் றஹீம். பயிர் நுனி கருகிச் சிவந்து போனதற்குரிய காரணத்தையும் வெள்ளாமைக் காரனுக்கும் ஹாஜியாருக்கும் எடுத்து விளக்கினுன்.

''உங்க வாப்பா இருபது வருஷமாச் செய்த பூமி இது. இந்த முறைதான் கைமாறி இருக்கி, அவரை விட்டுவிட எனக்கி விருப்பமே இல்ல, அவரும் மனவருத்தத்தோடு தான் இந்த பூமிய விட்டு விலகினுர்... உங்கள் குடும்பமே எனக்கிட்ட தொழில் செய்து வளர்ந்ததுதான்'' என்பது போல இந்தக் கதையைக்கூறி, இவ்வளவு நேரமும் தனக்கு உபதேசம் செய்த றஹீமை சற்று மடக்கி விடுவதுபோல கூறினுர் ஹாஜியார்.

''ஓமோம்! நான் சின்னப் புள்ளயாயிருக்கும்போது வாப்பாவுடன் விதைப்புக்கென்றும் சூடுபோடவென்றும் எத்தனையோ முறை இந்தப் பூமிக்கு வந்திருக்கன்'' என்று விகற்பமில்லாமல் கூறினுன் றஹீம்.

றஹீமுடைய ஆலோசனைகள் மிகவும் பயன் உள்ளதாகவும் நியாய பூர்வமானதாகவும் இருந்ததை ஹாஜியார் ஏற்றுக்கொண்டார். ஆனுல் தனது வெள்ளாமைக் காரனுடைய மகனை கார் பிடித்து ஏற்றி வந்து, பெரிய மனிதனுக்கி அவனிடம் யோசனை கேட்க வேண்டியதாயிற்றே என்பதை அவரால் சீரணித்துக்கொள்ள இயலாமற் போயிற்று. அவருடைய அந்தஸ்துக்கு இதுவெல்லாம் சரிப்பட்டு வராத செய்திகள். என்ன செய்ய! நிலைமை அப்படியாயிற்று என்று தன்னைச் சமாதானம் செய்து கொண்டார் ஹாஜியார்.

## ( 5 )

அன்று திங்கட்கிழமை கடமைக்கு லீவுபோட்டுவிட்டு றஹீம் கஸ்ஸாலி மகளிர் வித்தியாலயத்திற்குப் புறப்பட்டான்.

ஒரு புத்தம் புதிய மோட்டார் சைக்கிளிலிருந்து றஹீம் இறங்கி அதிபர் காரியாலயத்தை நோக்கிச் செல்வதை

மாணவிகளும் ஆசிரியைகளும் மிக உன்னிப்பாகக் கவனித்தனர். காரியாலயத்துள் சென்ற றஹீம் அதிபரை பார்த்து ரீச்சர்! எனது மோட்டார் சைக்கிளில் ஒரு பெட்டி இருக்கிறது. ஒரு பிள்ளையை அனுப்பி அதனை எடுக்கிறீர்களா? என்று அன்பும் பணிவும் கலந்து சொன்னான்.

அதிபர் காரியாலயச் சேவகனை அதை எடுத்து வருமாறு பணித்தார். சேவகன் மோட்டார் சைக்கிளில் இருந்து பெரியதொரு காட்போட் பெட்டியைச் சுமந்து வந்தான்.

பெட்டியைத்திறந்து உள்ளே இருந்த ஸ்ரவ் செய்யப்பட்ட பறவை மாதிரி உருவங்களை ஒவ்வொன்ருக எடுத்து பக்கத்தில் இருந்த மேசை ஒன்றில் வைத்தான் றஹீம். விஞ்ஞான ஆசிரியைகளும் அங்கு வரவழைக்கப்பட்டனர். ஆசிரியைகள் ஒவ்வொன்ருக எடுத்துப்பார்த்து அதன் அழகைப்பாராட்டிக்கொண்டிருந்தனர் எல்லாமாகப்பத்து உருவங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் தனித்தனிச் சிறப்புடையது. அதில் ஒன்று இங்கிலாந்துப் பறவை ..ஆம்! பெங்குயின் என்று இங்கிலாந்து மக்கள் பெருமையாகச் சொல்வார்களே நீண்ட காலம் வாழும் பறவையென்று. அது இங்கிலாந்திலேயே பஞ்சுவைத்து உரு அமைக்கப்பட்டது. உயிர் பெற்ற அசல் பறவைபோல அது விளங்கியது.

'இத்தப்பறவை உங்களுக்கு எப்படி கிடைத்தது'? விஞ்ஞான ஆசிரியை நாதிரு மிக வியப்போடு றஹீமிடம் கேட்டாள்.

அது இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்ததே பெருங்கதை. இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்த ஒரு உல்லாசப் பிரயாணி எனக்கு நண்பராகக் கிடைத்தார். இந்தப் பெங்குயினை கண்டதும் நான் அதில் மிக ஈடுபாடு கொண்டதை அவர் அறிந்து, நாட்டை விட்டுப் போகும் போது இதனை எனக்கு அன்பளிப்பாகத் தந்து விட்டு போனுர்.

''இந்த அருமையான அன்பளிப்புக்காக நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம் என்று மனம் திறந்து கூறினாள் நாதிரு''.

இதனைக் கேள்விப்பட்ட மாணவிகள் இவற்றைப் பார்த்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தனர். எல்லா வகுப்புகளிலும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. நாதிரு ரீச்சர் அவற்றை விஞ்ஞான கூடத்திற்கு எடுத்துச் சென்று வகுப்பு வகுப்பாக மாணவிகளை அழைத்து வந்து காட்டினாள்.

றஹீமுக்கு சோடா, கேக், வாழைப்பழம் எல்லாம் வரவழைக்கப்பட்டுஒரு சிற்றுண்டிப்பாட்டியே நடைபெற்றது.

இதெல்லாம் ஏன் ரீச்சர்! நான் இந்த உதவியைச் செய்ததற்கான நன்றிக்கடனை இந்த இடத்திலேயே தீர்த்துவிடப் போகிறீர்களா?— சிரித்தபடி றஹீம் மர்லியாவிடம் கேட்டான்.

இன்று நீங்கள் எங்களுக்கு ஒரு விருந்தாளி! உங்களை உபசரிக்க வேண்டியது எங்கள் கடமை. இதில் விசேஷமாக எதுவும் இல்லையே! நீங்கள் அன்று கூழுனையில் சாதாரணமாகச் சொன்னீர்கள். அதை எவ்வளவு அக்கறையோடு நிறைவேற்றி விட்டீர்கள்! அதற்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

எனது தங்கைமாரின் இப்பாடசாலைக்கு இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும் என்ற அக்கறையோடும் ஆவலோடும் இருக்கிறேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது செய்வேன்.

மீண்டும் மீண்டும் எங்களைக்கடமைப்படுத்துவ-துதான் உங்கள் நோக்கமா?- மர்லியா சிரித்துக்கொண்டு கேட்டாள்.

சமுதாய வாழ்க்கை வலைப்பின்னல்போல ஒருவரில் ஒருவர் தங்கி இருப்பதுதானே! இதனை ஒவ்வொருவரும்

உணர்ந்து செயல்படும்போது, சமுதாயம் சீராக இயங்கும். இந்த முறையில் பார்த்தால் நாம் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவர்களாகவே இருக்கிறோம். இதனை மிகக்காத்திரமான கருத்தாகக் கூறினான் றஹீம்.

மர்லியாவுக்கு அவனோடு பேசுவது கஷ்டமாக இருந்தது. அவனுடைய பரந்த அறிவும் பண்பாடும் அவளை மிகவும் கவர்ந்தன.

சரி! உங்கள் விஞ்ஞான கூடத்தை நான் ஒருக்கா பார்க்கலாமா? அதன் நிலைமையை அறிவது எனக்கு தேவைப்படுகிறது என்றான் றஹீம்.

சரியென்று றஹீமைக் கூட்டிக்கொண்டு விஞ்ஞான கூடத்திற்குச் சென்றாள் மர்லியா. இருவரும் சற்று முன் பின்னாக விலகி விலகி வந்தாலும் இருவருடைய சோடிப் பொருத்தம் மிக அற்புதமாக அமைந்திருந்தது! இவர்கள் இருவரும் இவ்வாறு வருவதைக்கண்ட ஏனைய ஆசிரியைகள் 'குசு குசு' மந்திரம் ஜெபித்துக்கொண்டார்கள். அவர்களுடைய சிரிப்பும் பார்வையும் வேறோர் அர்த்தத்தில் இருந்ததை மர்லியாவும் றஹீமும் புரிந்து கொண்டனர்.

எல்லாம் ஊமை கண்ட கனவுதான். ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ள முடியாத நிலை. ஆனால் றஹீம் இவற்றை மிகவும் விரும்பியவனாக பெரும் மகிழ்வில் இருக்கிறான் என்பதை மர்லியா புரிந்து கொண்டாள்.

விஞ்ஞானகூடத்தைச் சுற்றிப்பார்த்த றஹீம் ஜி.ஸி.ஈ. வகுப்புக்குப்போதியதாக இதன் வசதிகள் இல்லை. இந்த நிலையில் பிள்ளைகள் எப்படி பூரணமான விஞ்ஞான அறிவைப்பெறமுடியும்? என்றான்.

விஞ்ஞான கூடத்தை இன்னும் பெருப்பித்து தேவையான சாமான்களையெல்லாம் விரைவில் தருவதாக இங்கு வந்த மேலதிகாரிகள் கூறிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

எதற்கும் இந்தமுறை சில பிள்ளைகளையாவது விஞ்ஞானப் பிரிவில் நல்ல முறையில் சித்தியடையச் செய்ய வேண்டு மென்று நாங்கள் முயற்சிக்கிறோம்.

'வெரிகுட்' அதுதான் சரி! முதலில் நாங்கள் எங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். அதன் பிறகு இதனை ஆதாரமாகக் காட்டி அரசாங்கத்திடம் உதவிகளைக் கேட்கவேண்டும் என்று அதிபரின் இக்கூற்றை பாராட்டி னான் றஹீம்.

றஹீமின் கருத்துக்கள் மர்லியாவுக்கு மிக மிகப் பிடித் துப்போயின. அவனுடைய பாராட்டுகள் அவளுடைய மனதில் புது உற்சாகத்தை அளித்தது. ''நாங்கள் விரை வில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றைக்கூட்டி பாடசா லைத்தேவைகளைப் பற்றி ஆலோசிக்கப் போகிறோம். நீங்கள் இதுவரை பெற்றார் இல்லாவிட்டாலும் நீங்கள் வந்து, பெற்றாருக்கு இதை எல்லாம் விளங்கப்படுத்த வேண்டும் என் று ஒரு வேண்டுகோளை விடுத்தாள் மர்லியா.

இதனைக்கேட்ட றஹீம் சிரித்தபடி 'இனிமேல் கூட நான் பெற்றார் ஆவனோ என்னவோ தெரியாது ரீச்சர்! பொருள் விலை ஏற்றமும் இன்றைய மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையும் இருக்கும் மாதிரியைப்பார்த் தால் பெற்றோர் ஆகிற உத்தேசமே எனக்கு இல்லை. நீங்கள் பணக்காரவீட்டுப்பிள்ளை உத்தியோகமும் பார்க்கிறீர்கள். எனது விதி உங்களுக்கு பொருந்தாது அல்லவா? என்று அவ ளைப்பார்த்து கிண்டலாகச் சிரித்தான் றஹீம்.

மர்லியாவுக்கு உடம்பெல்லாம் வேர்த்துவிடும் போலி ருந்தது தான் அனுவசியமாக ஒரு வசனத்தைப் பாவிக்கப் போய் அதற்கு இவ்வளவு நீண்ட விளக்கம் வந்து வேலி யில் பிடித்த நெருப்பு கூரைக்கும் தாவினாற்போல அது தன் னையும் தாக்கிவிட்டதே என்று வெட்கப்பட்டுப்போனாள். ''உங்களிடத்தில் மிகக் கவனமாகக் கதைக்க வேண்டும்

போலிருக்கு, எழுத்துப்பிழை, கருத்துப்பிழை ஏற்பட்டுவிட்டால் அது என் தலையையே கொண்டுபோய் விடும் போல! என்று கூறிச் சிரித்தாள் மர்லியா.

றஹீம் வெற்றிப் பெருமிதத்தில் மிதந்தான். தனது பேச்சுக்கள் மர்லியாவை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளது என்பதை அவள் தனக்கு முன்பே ஒப்புக்கொண்டது அவளுடைய இதய பூர்வமான அன்பையே காட்டிற்று - என்று எண்ணினான். அவள் ஒரு பணக்காரப் பெண்ணாக, படித்தவளாக, ஒரு வித்தியாலயத்தின் ஒரு அதிபராக இருந்தும் இவ்வளவு எழிமையும் பணிவும் நிறைந்த பெண்ணாக இருப்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. 'ரீச்சர்! உங்களுடைய கடமை நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை நான் வருகிறேன் என்று விடைபெற்று விஞ்ஞான கூடத்தை விட்டு வெளியேறினான் றஹீம்.

விடைகொடுக்க விருப்பமில்லாமலும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்க சந்தர்ப்பம் சரியில்லாமலும் மர்லியா தயங்கிக்கொண்டிருந்தது - அவனுக்குத்தெரிந்தது.

இதனை றஹீம் உணர்ந்தும் ஆண் மிடுக்கோடு அதைப் பொருட்படுத்தாதவனாக மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தான். சைக்கிளில் இருந்தபடி தலையைக்குனிந்து விடைபெற்றான், சைக்கிள் வேகமாகப்பறந்தது.

## ( 6 )

அன்று ஜெமீல் வங்கிக்குப் போகவில்லை- இவ் வருடத்தில் முஸ்லிம் வாலிபர், இயக்கப் பேராளர் மகாநாடு கல்முனையில் நடைபெற விருக்கிறது. அக்கரைப்பற்று கிளைத் தலைவரான ஜெமீல்தான் நடைபெறவிருக்கும் மகாநாட்டுக்குப் பொறுப்பாக இருந்தான். அதன் பூர்வாங்க வேலைகளில் இவன் சென்ற ஒரு வாரமாக ஈடுபட்டுவந்தான். இது

தவிர பேராளர் மகா நாட்டில் பங்கு பற்றும் அனைவருக்கும் இவன்சார்பில் மதிய போசனம் ஒன்றைக் கொடுக்கவும் அவனுடைய தந்தை இஸ்மாயில் ஹாஜியார் இணங்கி இருந்தார். அதிலும் ஒரு இரகசியம் என்னவென்றால் இம் முறை அகில இலங்கை— வை. எம். எம். ஏ. இயக்கத்தின் தலைவராக ஜெமீல் போட்டி இடுகிறான். அவனைக் கட்டா யம் இம்முறை தலைவராகத்தெரிவு செய்ய பல கிளை இயக் கங்களும் தம் ஆதரவைத் தெரிவித்திருந்தன. மகன் இந்த இயக்கத்திற்குத்தலைவராகத் தெரிவு செய்யப்படப் போகும் மகிழ்ச்சியில்தான் இந்த மதிய போசன விருந்துக்கு ஹாஜி யார் சம்மதம் தெரிவித்திருந்தார்.

ஹாஜியாருக்கு மர்லியா மூத்த மகள். அதற்கடுத்து ஜெமீல்தான். இன்னுமொரு மகளும் மகனும் பன்னி ரெண்டாம் வகுப்பிலும் பத்தாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தனர்.

ஜெமீல் குடும்பத்தில்பெரிய ஆண்பிள்ளை. படிப்பிலும் கெட்டிக்காரன் ஆதலால்தான் மிக இலகுவாக வங்கியி லும் உத்தியோகம் ஒன்றைப் பெற்றுக் கொண்டான். ஒரு ஆண்பிள்ளைக்கு ஒரு தகப்பன் செய்ய வேண்டிய கடமைப் பாடுகள் இத்தோடு முடிந்து விட்டன என்பதில் ஹாஜியா ருக்குப் பரம திருப்தி. ஆனால் ஒன்று, ஜெமில் பொது வேலை என்றும் சமூக சீர் திருத்தம்என்றும் தேவையற்ற பல காரியங்களில் ஈடுபடுவான் தான் பள்ளி வாசல் பிர தம நம்பிக்கையாளராக இருக்க, இவனோ பள்ளி வாசல் நிருவாகம் பற்றியும், நிதி விஷயங்கள் பற்றியும் பொது மக்களைத் தூண்டும் விதமாகப் பேசிக் கொண்டு திரிவான்.

ஊரில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் பற்றியும் பிரச்சினைகள் எழுப்புவான். கருவாட்டு லொறி எங்கே போனது? இத்தனையாம் தேதி வந்த பத்து லோட் யூரியா பசளை யாருக்கு விற்கப்பட்டது? ஒரு லொறி நிறைய வந்த இரும்புக் கம்பிகள் எப்படிக் கைமாறின?

என்றெல்லாம் கேள்விகள் எழுப்பி, மேலதிகாரிகளுக்கு இது பற்றியெல்லாம் அறிவித்துக் கொண்டு திரிவான். ஐக்கிய சமாசம் என்ருல் நல்லதும் கெட்டதும் ஐக்கியமாகிவிட்ட சமாசம் என்பதுதானே பொருள். இந்த விஷயங்களிலெல் லாம் நீ தலையிடாதே. கூட்டுறவுச் சங்கத்தில் வரலாற் ருேடு இவையெல்லாம் சம்பந்தப்பட்டதுதான் என்று ஹாஜியார் சொன்னுல் அவன் கேட்கமாட்டான்.

சமூகத்தில் நடைபெறும் சில காரியங்களைப் பார்த்து இளைஞர்கள் ஆவேசத்தோடு போர்க் கொடி தொடங்கி விடுகிருர்கள். முதியவர்கள் உடம்பை அலட்டிக் கொள் ளாமல் தன்பாட்டில் திரிகிருர்கள். இது ஏன் தெரியுமா? உண்மை அழிக்கப்படுவதையும் நேர்மை மறுக்கப்படுவ தையும் நம்பிக்கை சிதைக்கப்படுவதையும் இளைஞர்கள் தங்கள் குறுகிய அனுபவத்தில் இப்பொழுதுதான் முதன் முதலாக காண்கிருர்கள். அப்பொழுது அவர்க ளால் இதனைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. முதியவர் களோ, இதனையெல்லாம் பலமுறை கண்டு, அதற்காகப் போராடி அலுத்து விட்டார்கள். சர்பத்துக் கடைக்கார னிடம் சர்பத் கேட்கிருேம். அவன் தண்ணீர் கலந்துதானே அதைத் தருகிருன். அது போல கலப்படம் இல்லாத பொருளும் பொய்மை கலவாத வியாபாரமும் நேர்மை தவறிய நீதியும் சேர்ந்துதான் உலகம் நிகழ்கிறது. பஞ்ச பூதங்களாவன உலகம் என்று அறிஞர்கள் கூறுகிருர்களே, அது என்ன? ஐந்து கொடுமைகள் — பஞ்சமா பாதகங்கள் நிறைந்த உலகம் என்பது தானே மறு பொருள். இல்லா விட்டால் அவற்றைப் பூதம் என்று ஏன் கூறவேண்டும்?

இவ்வாருன கருத்துக்களையெல்லாம் ஹாஜியார் ஜெமீலுக்கு எடுத்துச் சொல்லி விளக்குவார். ‘இல்ல வாப்பா! புதியதொரு சமுதாயத்தை நாங்கள் படைத் துத்தான் தீருவோம். இது அறிவியல் யுகம். விஞ்ஞானம் செவ்வாய்க் கிரகத்துக்கும் உயிர்களை அனுப்பி விட்டது’’ என்று கூறுவான் அவன்.

''இவன் என்னவாவது பண்ணட்டும்! இந்தக் காலத்துப் பிள்ளைகள் தாய் தகப்பன் சொல்ற மாதிரியா நடக்குதுகள்? தன் தன் இச்சைப்படி தானே போகுதுகள்'' என்று ஹாஜியார் அலுத்துக் கொண்டாலும், ஜெமில் மீது அவருக்கு வெகு பிரியம். சிலவேளை அவனுடைய புரட்சிகள் அவருக்கு உள்ளூரப் பெருமை அளித்தன.

தாயும் மகனும் அன்றெல்லாம் கூடிக்கூடிக் எதையோ பேசிக்கொண்டிருந்ததை ஹாஜியார் கவனித்தார். அவர்கள் இருபேருக்கும் இடையில் நானறியாத இரகசியம் என்ன வேண்டிக்கிடக்கு. என்று அவரும் ஆச்சரியப்பட்டார். இதுதவிர நேற்று அலியாரின் மனைவி சுலைகா வீட்டுக்கு வந்திருந்தாள். ஹாஜறுவும் அவளும் ஏதோ உறவு முறை போலப்பழகினர். உபசாரமெல்லாம் பலமாக இருந்தது. இந்த இரண்டு இரசியங்களுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும். ஹாஜியார் ஒன்றும் விளங்காமல் விழித்தார்.

ஹாஜியார் சாய்மனையில் சாய்ந்து படுத்திருந்தார். அவர் மனைவி கீழே இருந்தபடி பாக்குச் சீவி வெற்றிலை மடித்து அவருக்குக் கொடுத்தவள், மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு 'கேட்டீங்களா? என்றாள்.

கேக்காம எனக் கென்ன காது செவிடா? சொல்லன்! ரெண்டு நாளா ஈன நடக்கிற குசு குசு மந்திரத்த... என்றார் ஹாஜியார்.

எத எடுத்தாலும் 'கார்பூர்' எண்டு என்னில உழுவீங்க. இப்ப நான் ஒங்களிட்ட கேக்கன், மர்லியா உம்மாக்கு கேட்ட மாப்புள்ள அலஞ்சி அஞ்சி வருசமா போகுது. இதுவரை அதுக்கு ஒரு மாப்பிள பாக்காமத்தான இரிக்கிங்க. ஒங்குட பள்ளிப் பதவியும் ஊர்க்காரியங்களும் போடித்தனமும் தான் உங்களுக்கு பெரிசி. வீட்டலுவல் ஒண்டும் முக்கியமாத் தெரியல்ல!

இஞ்சபாரு! நீ வந்த விசயத்தை செல்லு கேக்கன். என்ர பட்டம் பதவிகள்ளே கை போடாத! அது ஒரு ஆம் புள்டரோஷத்தக் கிட்டுற அலுவல்!

இல்ல பாருங்க! தம்பி ஜெமீல் ஒரு மாப்பிள்ளயச் செல்றுன். மாப்பிள்ளக்கி நம்முட ஊட்ட கலியாணம் முடிக்க வேணும் எண்டு நல்ல விருப்பமாம். அவர்ர கூட்டாளிமார், மாறுதலாக ஜெமிலுக்கு விசகளம் கெடச்சிருக்கு. ஜெமீலுக்கு நல்ல விருப்பம். எனக்கும் விருப்பம் நீங்க மட்டும் விரும்பிற்று. அடுத்த ஹஜ்ஜில கலியாணத்த முடிச்சிரலாம். புள்ளக்கும் வயதாகுது. இன்னமும் வெச்சிருந்தா பருவம் தப்பிப்போய் மாப்பிள்ள எடுக்கிறது, பொறுப்பாப் போயிடும்.

நான் என்ன மாப்பிள்ளே பாக்காமலா இருக்கன். நம்முட ஊரில நமக்குத் தகுதியான ஒருவனத் தேடிக்கித்தான் வாறன். கடைசியாக ஒரு முடிவுக்கு வர இரிக்கன். நீங்க ரெண்டு பேரும் விரும்புற மாப்பிள்ளே ஆரது? முதல்ல அத சொல்லுங்க!

ஒங்களுக்குத் தெரியாத மாப்பிள்ளயா? நம்முட அலியார்ர மகன்தான்! நீங்க போன கெழம பூமிபாக்க கூட்டிக்கிப் போனயளே! அவன் நல்ல குணமான பொடியன் எண்டு எல்லாரும் செல்லுறுங்க. நம்முட ஜெமீலும் நல்லா விரும்புது!

ஹாஜியாருடைய மூகம் சிவந்து கொண்டு வந்தது. அவருடைய உதடுகள் துடித்தன. வாயில் போட்ட வெற்றிலேயை வாசலில் துப்பினுர். 'என்னடி பைத்தியக்காறி நான் மானம் மரியாதயா இந்த ஊரில ஒரு பெரிய மனுஷனு வாழ்றது உனக்கும் உண்ட பிள்ளேக்கும் புடிக்கல்லயா? எனக்கிற்ற வெள்ளாமச் செஞ்சி என்ர ஊட்ட வேலிவெளச்சல் கட்டினவன்ற மகன எடுத்து என்ர புள்ளக்கிக் கலியாணம் செய்யவா? ஒங்குட மூளே என்ன குழம்பிப் போச்சா?

இல்ல என்ர மானம் மரியாதயத் தொலக்கிறதுக்கு வந்தி ருக்கயளா?

'எனக்கி ஒண்டும் பைத்தியம் இல்ல. இப்பிடி இப்பிடி வாற மாப்பிள்ளயள எல்லாம் கழிச்சா, இந்தப் பாரக் குமர் வாழ்றதில்லயா? அதுட வயதோட ஒத்த குமர்க ளெல்லாம் நாலஞ்சி புள்ளயளும் புருஷனுமா சந்தோசமா இரிக்குதுகள். என்ர புள்ளட தலேயில ஆண்டவன் இப்பி டித்தான் எழுதி இரிக்காஞ? ஹாஜரூவின் கண்கள் கலங் கின.

ஹாஜரு! புலி பசித்தாலும் புல்லத் தின்னுதுடி! என்ற உப்புத்திண்டு வளந்தவன்! குடும்பத்தில நான் மாப்பிளே எடுக்கிற தென்டா, ஊர் என்னப்பளிச்சிப் போடும்டி.

'வாப்பா' உங்குட உப்ப அவங்க ஒண்டும் தின்னல்ல. புண்ணியத்தில நீங்க உப்புப் போடவுமில்ல! அவங்கட உழைப்புலதான் நாம சோறுதிண்டம்! நீங்க போடியார் ஆனீங்க, மக்காவுக்கும் போய் ஹாஜியாராக வந்தீங்க இது வரை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த ஜெமீல் பொங்கி — எழுந்து இவ்வாறு கூறினுன்.

ஒண்ட புள்ள புதிய சமுதாயம் ஒண்டப்படைக்கான் பாத்தியா? போடியார்ர மகளுக்கு வெள்ளாமக் காரன்ர மகனக் கலியாணம்! அந்த மாப்பிள்ளேயை இந்த நாய், மச்சான் எண்டு எடுத்து, கால் கழுவுற... என்ன கேவலம்! என்ன வேதனே! இவனப்படிச்சபுள்ள! மதிப்பான உத்தி யோகம் பாக்கான் எண்டுனுவா நான் நெனச்சிருக்கன். இவன்ர படிப்பால என்ன பிரயோசனம்! புத்தி கெட்ட வன்!

வாப்பா! உலகம் மாறி வருகுது ஒங்குட பழைய காலத்து முதலாளித்துவப் பெருமையெல்லாம் எப் போவோ அழிஞ்சி போச்சி! நீங்க பெரிய போடியாராக,

பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளராக, ஹாஜியாராக இருப்பதானு லெல்லாம், ஒரு பெரிய அந்தஸ்தை நீங்களே பாவனை பண்ணிக் கொண்டு ஒரு வெறும் வெளியில் உலவு கிறீர்கள். அந்த அந்தஸ்தும் பெருமையும் இதுவரைல ராத்தாவுக்கு ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வரல்ல வாப்பா!

ஏன்டா! என்ர அந்தஸ்துக்கு தக்க மாப்பிள்ளை எனக் கிட்ட இரிக்கி. நீகால்கழுகத் தகுதியான மாப்பிள்ளடா?

'அரயாவது சொல்லுங்கவன், பொண்ணேயும் பூவை யும் வாடுறத்துக்கெடயில குடுத்துடனுமாம். — அந்தமாப் புள்ள நல்ல மெண்டா அதயாவது செய்வம்! என்ருள் ஹாஜரு.

நல்ல மெண்டு நீ யென்னடி தீர்மானிக்கிற! நான் சொன்னு அது நடக்கவேண்டியதுதானே! என்ர தங்கச்சிர மகன் முஸம்மில்' அவன்தான் நான் தீர்மானிச்சிரிக்கிற மாப்பிள்ள. உத்தியோகம் மட்டுமில்லே. வேறென்னத்தில குறை சொல்லப் போறயள்! முப்பதேக்கர் வெள்ளாமை செய்ருன். உழவு மெசின் ஒண்டு, சொந்தமாக இரிக்கி. இன்னும் சொத்துப் பத்தெல்லாம் வாங்கி இருக்கான். ஆதம்வாவா போடிற மகன் எண்டா இந்த ஊரே அறி யும். முஸம்மில்ற தகுதி எங்கே? இந்த வெள்ளாமக்கா றன்ர மகன் எங்கே? அவன் என்னத்தப் படிச்சாலும் குலத் தளவுதானடா குணம் வரும்!

வாப்பா! பணமும் மெஷினும் எல்லாருக்கிட்டயும் வரும். அதுக்கு ஒண்டும் புத்தி தேவ இல்ல. ராத்தா படிச் சவ. நாலு நல்ல இடத்தில புளங்குறவ. அவட அந்தஸ் துக்கு இந்த மெஷின்கார மாப்பிள்ள சரிவருமா? ஒரு சர்வகலாசாலேப் பேராசிரியரைத்தான் முதல்ல நாம கேட்டம். இப்ப ஏழாம் வகுப்புப் படித்த ஒரு கோமாளி மாப்பிள்ளயக் கேக்கம். ஒருமாப் பிள்ளயப்பத்தி நம்முட

அளவுகோல் என்ன எண்டு எனக்கி விளங்க இல்லயே வாப்பா!

ஒன்ட ராத்தாக்கிட்ட படிப்பு இரிக்கி, மச்சானுக்கிட்ட பணம் இரிக்கி, இரண்டும் சேர்ந்தால்தானேடா உலக வாழ்வு நடக்கும், இது உனக்கு விளங்க இல்லயா?

இப்பிடிச் சொன்னல் என்னவாப்பா. ராத்தாக்கிட்ட அறிவும் அடக்கமும் இரிக்கி, மச்சானுக்கிட்ட மடத்தனமும் கோமாளித்தனமும் இரிக்கி, இந்த இரண்டும் எப்படி ஒத்து வரும் வாப்பா?

போடா! அதிகப் பிரசங்கி! நான் தீர்மானிக்கிற விஷயங்களில் நீ தலைப் போடாத! நீ சின்னவன். உனக்கு ஒண்டும் தெரியாது.

'இப்பிடியே சென்ன? என்ர புள்ள இன்னும் எத்தின வருசத்துக்கு குமரா இரிக்கிற... என்று அழுது புலம்பத் தொடங்கினள் ஹாஜரு. அவளுடைய பிரலாபம் ஹாஜியாருக்கும் உள்ளூறக் கவலையை அளித்தது.

ஹாஜரு! நீ அழாதா! ஒவ்வொண்டுக்கும் காலமும் நேரமும் வரவேணுமா? நாம அவசரப்பட்டு என்ன செய்ற! நடக்கிற பொழுது ஒவ்வொண்டும் நடக்கும்.

அதில்ல. மத்தவளும் இன்ன திடுமலையா வளந்திற்ருள். அவளுக்கே வயது பதினெட்டாகுது. அவளுக்கெண்டு இன்னம் ஊடு வளவு ஒண்டும் பாக்கல்ல, ஜெமீலும் ஆம்புளப் புள்ள ராஜகுமாரன் மாதிரி வளந்திற்ருன். நான் மவுத்தாகிறத்துக் கெடயில அவனுக்கும் ஒருகல்யாணம் செய்து பாக்கணும்! மர்லியாவ இப்பிடி வெச்சிக்கிருந்தா மற்றக் காரியம் என்ன நடக்கப் போகுது.

இந்தப் போகம் வெள்ளாம வேல முடிஞ்சதும் இளைய மகள்ற ஊட்டக்கட்டத் தொடங்குவம். அதோட மர்லியாட கலியாணத்தையும் வெப்பம்!

மாப்புள்ள...

என்ர மருமகன் முஸம்மில்தான்! தங்கச்சிர மகன நாம எடுக்கல எண்டு அவவும் கோவிச்சிக்கிருக்கா. இதவிட்டு நாம அலியார்ர மகன எடுத்தா குடும்பப்பழியும் நெடுக வளந்திடும்.

முஸம்மில் முன் கோபக்காரன். படிப்பு அருமை தெரியாதவன். மர்லியாட குணத்துக்கும் அது ஒரு நாளும் சரி வராது. புள்ளேக்கும் அது முக வெக்கம்! இவ்வளவு இருந்தும் ஒரு படிச்சமாப்புள்ள எடுக்க ஏலாமப் பெய்த்தா எண்டு எல்லாரும் கேப்பாங்க!

இஞ்சப்பார்! திரும்பத்திரும்ப என்ர வெசறக் கிட்டுகிருய்! நீ ஊசிமுனேயில நிண்டு தவம் செஞ்சாலும் அலியார்ர மகன எடுக்க நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டன் அத உடு!

நீங்க உச்சாரக் கோப்புல நிண்டு ஆடினுலும் முஸம்மில முடிக்க நான் ஒரு பொழுதும் விரும்பமாட்டன். நானும் உதுமாலெப்பைப் போடிரமகள். எனக்கும் புடிவாத மிருக்கி என்றவளாக மீண்டும் அழுது கொண்டு குசினிப் பக்கம் ஓடினுள் ஹாஜரு.

## ( 7 )

மர்லியா பாடசாலேயை விட்டு வந்தால் கொஞ்சம் கண்ணயர்ந்துவிட்டு எழும்புவதுதான் வழக்கம். அன்று மணி நான்காகியும் அவள் கட்டிலேவிட்டு எழும்பவில்லே. இத்தனேக்கும் அவள் தூங்கவுமில்லே. சும்மா கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள். அவளுடைய மனம் எங்கெங்கெல்லாமோ அலேந்து திரிந்தது.

அன்று காலேயில் அவளுடைய பால்ய வயதுத் தோழி சுபைதா பாடசாலேக்கு வந்திருந்தாள். அவளும் மர்லி

யாவும் ஐந்தாம் வகுப்புவரை ஒன்ருகப் படித்தவர்கள். அவள் அத்தோடு படிப்பை நிறுத்திக்கொண்டாள். மர்லியா படிப்பைத் தொடர்ந்தாள். இதன் விளைவு அவளுக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றன. மர்லியா ஒரு பாடசாலையில் அதிபராக இருக்கிருள். சுபைதா பிள்ளையொன்றை பாடசாலையில் சேர்க்க வந்திருந்தாள்.

அது அவளுடைய இரண்டாவது குழந்தையாம் முதலாவதும் மூன்ருவதும் ஆண் குழந்தைகளாம். இது மட்டும் பெண் குழந்தை என்று மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்திருந்தாள், அதன் அழகைப் பார்த்தால் யாரும் அப்படித்தான் வளர்ப்பார்கள். அளவோடு செய்து ஒட்டிவைத்தாற் போல் அழகிய மூக்கு. குறுகுறுவென்று அனைவரையும் கவர்ந்திழுக்கும் அகன்ற விழிகள், இளம்பிறை நெற்றியின் இனிய தோற்றம். உருண்டு திரண்ட அவயவங்கள். மல்லிகை மலர்ந்தது போன்ற குமிழ்ச் சிரிப்பு. அச்சிரிப்பினூடே கன்னங்களில் குழி விழுந்து அச் சிரிப்பை இன்னும் அழகாகக் காட்டும் லாவண்யம்! குழந்தையின் வண்ணத்திற்கேற்ப மஞ்சள் பட்டில் அழகாக தைக்கப்பட்ட ஒரு கௌண் அணிந்து தலையில் மயிர்கள் முன் விழாதபடி நீல றிபன் கட்டி காலில் சிவப்பு நிறத்தில் சப்பாத்தும் வெள்ளை நிறக் கால் மேசும் அணிந்திருந்தாள் அக்குழந்தை.

குழந்தையை ஆசை மிகுதியால் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டபோது மர்லியாவுக்கு எங்கிருந்தோ ஒரு அமைதி ஏற்பட்டது. இனிமை! இனிமை! என்பார்களே அது இதுதானு? என்று ஒரு புதிய அனுபவத்தைப் பெற்ருள் அவள். அப்பொழுது அவளுடைய ஆண் குழந்தையையும் ஒருக்காப் பார்க்க வேண்டும்போல் மர்லியாவுக்குத் தோன்றியது.

ஏன் சுபைதா உங்கள் கைக்குழந்தைக்கு எத்தனை வயது அவன வீட்டில விட்டுட்டுத்தான் வந்தீர்களாக்கும். என்று தன் ஆவலை அடக்கிக்கொண்டு கேட்டாள் மர்லியா,

அவனுக்கு மூன்று வயதாகிறது. இஞ்ச கூட்டிவந்தா திரும்ப அவனை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகஏலாது. அவனும் பள்ளிக்குப் போகவாம் என்று ஒரே அடம் பிடித்துக்கொண்டிருக்கான். அதுதான் உம்மாக்கிட்ட விட்டுட்டு வந்தேன் என்று பதில் கூறினுள் சுபைதா.

அடம்பிடிக்கிற ஆம்பிள்ளை என்னும்போது அவ்வாறு அடம்பிடிக்கும் பிள்ளையை மடியில் தூக்கிவைத்து சமாதானப்படுத்தும் ஒரு காட்சி மர்லியாவின் கற்பனையில் தோன்றியது. 'என்ர மகனல்லவா' உம்மா சொல்றதைக் கேளுங்க! என்ர ராஜா அல்லவா என்று சொல்லி அப்பிள்ளையை முத்தமிடும்போது அந்த முத்தத்தில் ஏற்படும் இன்ப உணர்ச்சி மர்லியாவுக்கும் ஏற்பட்டு உடம்பெல்லாம் புல்லரித்தது.

'ரீச்சர் எனக்குப் பாட்டுச் சொல்லித் தாங்கோ' —தன் அணைப்பில் நின்ற குழந்தை மர்லியாவின் முகத்தைப் பார்த்து தன் மழலை மொழிகளால் இவ்வாறு கூறினுள்.

ஓமோம்! நீங்க வந்து இவ்வளவு நேரத்துக்கு ஒரு பாட்டாவது சொல்லிக் கொடுக்காவிட்டால் இந்த பள்ளிக் கூடத்தில என்ன படிப்பு நடக்கிற! ஓங்களுக்கு உடனே பாட்டுச் சொல்லித்தர வழிபண்ணுறன்...என்று கூறிக் கொண்டு, அந்தப் பக்கம் வந்த பாலர் பகுதி ஆசிரியையை அழைத்து 'ரீச்சர்! இவ வந்து வெகு நேரமாகுது. இன்னம் ஒரு பாட்டாவது சொல்லிக் கொடுக்கல்ல, நீங்க இவவ அவட வகுப்புக்கு அழைத்துப்போய் உடனடியாகப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கணும்! என்றுள் சிரித்துக்கொண்டு.

பாலர் பிரிவு ஆசிரியை குழந்தையைக் கையில் பிடித்து குனிந்து அதன் முகத்தோடு முகம் வைத்தவராக 'சரி வாங்க! அம்மா பாட்டு, பூனைப் பாட்டு, குருவிப் பாட்டு எல்லாம் சொல்லித் தர்ரேன்' என்று கூறி வகுப்புக்கு அழைத்துச் சென்றுள்.

பெற்றவளுக்கு இந்தக் காட்சியை எல்லாம் பார்த்து மனம் பூரித்துப் போயிற்று. 'கொஞ்சம்கூட பயமில்லாம எவரிடமும் இப்படித்தான் ரீச்சர் பேசுவா!' என்று கூறிய வளாக 'வீட்டில தம்பி என்ன புரளி பண்ணுறுனோ தெரி யல்ல. நான் வரட்டா ரீச்சர்' என்று விடைபெற்றுக் கொண்டு போனுள் சுபைதா.

இந்தியன் ஒயில் ஒன்றைச் சாதாரணமாக உடுத்தி யிருந்தாள் சுபைதா. அவள்து அடக்கம் நிறைந்த தோற் றத்திற்கு அது இன்னும் அழகூட்டிற்று. பிள்ளையும் புரு ஷனுமான அவளது கலகலப்பான வாழ்வை அவளது முக மலர்ச்சி காட்டிற்று. எவ்வளவு மகிழ்ச்சியான வாழ்வு வாழ் கிறுள் என்று எண்ணியபோது மர்லியாவுக்கு அழுகைவரும் போல் இருந்தது.

காலையில் பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்த இச் சம்பவங்களை இரைமீட்டிக்கொண்டிருந்தது அவளது மனம். இரண்டு கைகளையும் மேலே நீட்டி நெட்டி முறித்துக்கொண்டு எழுந்து கட்டிலில் இருந்தபடி முன்னுல் இருந்த நிலைக் கண் ணுடியில் தன் தோற்றத்தைப் பார்த்தாள். வாடிப்போன முகம், வதங்கிப்போன கால் கைகள், உற்சாகமிழந்த மனம். உணர்வலைகளில் மோதி மோதி களைத்துப்போன புலனுணர்ச்சிகள் எல்லாம் சேர்ந்து பரிதாபமான ஒரு தோற்றத்தை நிலைக் கண்ணுடி காட்டிற்று.

பூத்துக் காய்த்து நிற்கிறது ஒரு மரம். பூவுமில்லை. காயு மில்லாமல் நிற்கிறது மற்ருெரு மரம். இரண்டுக்கும் எவ் வளவு வித்தியாசம்? சுபைதாவின் வாழ்க்கைக்கும் தனது வாழ்க்கைக்கும் அத்தகைய வேறுபாடுகள்தான் உண்டு. கார் ஒன்று இருக்கிறது. காணி, பூமி விளைந்து வருகிறது. மூன்று மாடி மாளிகை இருக்கிறது என்பதால் ஒரு குடும்பத் தில் மகிழ்ச்சி நிலவுகிறது என்பது கருத்தல்ல. மூன்ருவது மாடிப் படுக்கை அறையில்தான் கணவன், மனைவியைக் கொலை செய்துவிடுகிறுன். அந்த ஆடம்பரக் காரில்தான்

மனைவி மற்றொருவனுடன் ஓடி விடுகிருள். எனவே இது வெல்லாம் அவர்களுடைய காசுப் புழக்கத்தைக் காட்டுமே யன்றி மகிழ்ச்சியைக் காட்டாது. மனம் உள்ளதைக் கொண்டு போதுமாக்கி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் என்கிருர்களே அது என்ன? வாழ்க்கையில் மன நிறைவு பெறுதல், மகிழ்ச்சியாக இருத்தல் இதுதான் அதிர்ஷ்டம். இந்த அதிர்ஷ்ட வாழ்வு உலகில் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது? ஒரு படத் துக்கு ஐந்து இலட்சம் வாங்கிய சினிமா நடிகை மர்லின் மன்ரோ ஒருநாள் தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு செத்துவிட்டாள். இளைஞர்களின் கனவுக் கன்னி யான அவள் புகழின் உச்சக் கட்டத்தில் நின்ருளே அவ ளுக்கு என்ன நடந்தது? ஆம் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை யாம். மண வாழ்வு அமையவில்லையாம்! உடனே விரக்தி யால் தற்கொலைசெய்துகொண்டாள். இவள் வாழ்க்கை யில் அதிர்ஷ்டம் செய்யவில்லை. சாதாரண கடைக்காரன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு மகிழ்ச்சி பொங்க குழந்தை குட்டிகளோடு வாழ்கிருளே இந்த சுபைதா இவள்பெற்ற பாக்கியம் மர்லின்மன்ரோ பெறவில்லை.

நான் சுபைதாவும் இல்லை. மர்லின்மன்ரோவும் இல்லை. இடைப்பட்ட ஒரு ரகம். மகிழ்ச்சியை இழக்கவும் இல்லை. மகிழ்ச்சியைப் பெறவும் இல்லை. இரண்டுக்கும் இடையில் போராடிக்கொண்டிருக்கிறேன். முடிவு?

என் மனதில் என்றும் இடம்பெற்றவர் ஷாபிதீன். என் னுேடு அவருக்கு அலாதிப் பிரியம். எதிர்பாராத சந்திப் பின் காரணமாக அவருடைய தொடர்பு எனக்குக் கிடைத் தது. வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் எதிர் பாராத்துதானே. அவரைக் கணவராகப் பெற்றுக்கொள்ள லாமென்று மனக்கோட்டை கட்டியிருந்தேன். அந்த அளவு அவரும் உறுதியோடு இருந்திருப்பாரேயாளுல் எங்கள் விவாகம் நடந்திருக்கும். உம்மாவுக்குச் செல்லப்பிள்ளை யான அவரால், உம்மா கூறிய அற்ப காரணத்தை மீற

முடியவில்லை. தனியொரு பிள்ளையும் திரண்ட சீதனமும் கிடைத்ததால் என் மீதுள்ள காதலை அந்தத் தீயில் எரித்து விட்டார் போலும். தாயுடைய பிடிவாதத்தை ஊரறியும் காரணமாகக் கூறிவிட்டார். ஒரு செடியிலிருந்து பூவொன்றைப்பறிக்கும்போது அச்செடி தன் அழகை இழக்கிறது. தன் செல்வத்தை இழக்கிறது. இந்த வேதனையைப் பூப்பறிப்பவள் சிந்திப்பதில்லை. கொத்துக்கொத்தாகப் பறித்துத் தன் கூடையை நிரப்பிக்கொண்டு அவள் போய்விடுகிறாள். இதுபோல பல பெண்களைக் காதலிகளாக வைத்துக் கொண்டு கடிதங்கள் எழுதுவதில் ஆண்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. அதனைத் தன் நண்பர்களோடு சொல்லி இன்புறுவதில் ஒரு தனிப்பெருமை. இறுதியில் அவரால் கைவிடப்படும் பெண்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்பதை அந்த ஆண்கள் சிந்திப்பதில்லை. அந்த வேதனைகூட அவருக்கு இன்பம் அளிக்கும் ஒரு விளையாட்டு.

'உனது பழைய காதலிக்கு நேற்றிரவு விவாகம் ஆகிவிட்டதே! என்று ஒரு நண்பன், மற்றொரு நண்பனிடம் கூறினானும். அதற்கு அவன் 'எந்தக் காதலியைச் சொல்கிறாய்? என்று நகைச் சுவையாகக் கேட்டுச் சிரித்தானும். இது ஆண்களுக்கிடையே நிகழும் ஒரு ஜோக்!-ஷாபிதீன் என்னையும் ஒரு ஜோக்பொருளாக்கிக் கொண்டார். ஒரு சர்வகலாசாலை விரிவுரையாளர், அறிவின் பீடத்திலே அமர்ந்து அறிவைப்போதிப்பவர், அவர்கூட ஒரு சாதாரண இளைஞனுக்கு ஏற்படும் சபலத்திற்கு ஆளாகி ஒரு பெண்ணைப் பலி எடுத்துவிட்டார். தான் ஒரு ஆடவனை மனமார விரும்புவதுதான் காதல்! விரும்பிய அவனையே மனதில் நிச்சயித்து அவனையே அடையப் பெறுவதுதான் கற்பு. இந்தக் காதலையும் கற்பையும் நான் இழந்துவிட்டேன். உடல் அளவில் நான் தூய்மையாக இருக்கலாம். உள்ளத்தில் நான் தூய்மை கெட்டவள். உளத் தூய்மை கெட்ட என்னை மற்றொருவர் ஏற்பது எப்படி? நான்தான் அவரோடு மனம் ஒருமித்து வாழ்வது எப்படி? ஷாபிதீன் என்னை எப்படியான இக்கட்டுக்குள்ளாக்கிவிட்டார்.

றஹீமோடு பழகுவதற்கு எனக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அப்போது அவர் என்னை விரும்புவதையும் அறிந்தேன். ஒரு நண்பர் மூலமாக தம்பி ஜெமீலைப் பிடித்துக்கொண்டு அவர் திரிகிறுர். நான் ஒரு பெண். வைராக்கியமும் பிடிவாதமும் எனக்கு ஆகாது. நான் என் மன நிலையை எப்படியோ மாற்றிக்கொண்டு எவனே ஒருத்தனுக்குத் தாலி கட்டத் தலையைக் குனிந்து கொடுக்கத்தான் வேண்டும். ஒரு ஆண் துணையில்லாமல் இந்த ஆண்கள் உலகத்தில் பெண்கள் வாழ முடியாதே. துறவி, யோகி, பிரமச்சாரி என்பதெல்லாம் பொதுப்பாலில் அமைந்தாலும் சிறப்பாக ஆண்களைத்தான் அவை குறிக்கும். ஆண்களைப் பூசிக்கும் இந்த இல்வாழ்வை விட்டு, பொதுப்பணி, அறப்பணி என்றெல்லாம் பெண்கள் ஈடுபடும் நிலை உலகில் இன்னும் ஏற்படவில்லை. அவ்வாறு ஈடுபட்டாலும் வாழாவெட்டி, புருஷன் கிடைக்காமல் துறவியாகப் போயிற்ருள் என்று உலகம் தூற்றும். அதுமட்டுமின்றி இந்த உடலில் இளமையும் அழகும் இருக்கிறவரை, இந்த மாமிச பட்சணியான ஆண்கள் சும்மா விட்டுவிடுவார்களா?

றஹீம்! இப்பொழுது என் மனவெளியில் ஊசலாடும் மற்ருேர் நிழல்! அவருடைய குணமும் நடத்தையும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. கம்பீரமான அவருடைய தோற்றப் பொலிவு எந்தப் பெண்ணையும் அடிமைகொள்ளவே செய்யும். நான் அவரை விரும்பவில்லையென்று சொல்வது பொய். நான் அவரை ஏற்றுக்கொள்ள வெகு பிரியமாக இருக்கிறேன், ஆனுல் என் வாப்பா அவரை விரும்புவதாகத் தெரியவில்லையே!

ஷாபிதீனை நான் இழக்க வேண்டி ஏற்பட்டதற்கு என் வாப்பாவின் கடந்த கால வாழ்க்கைச் சம்பவம் ஒன்று காரணமாயிற்று. இப்பொழுது றஹீமை நான் ஏற்பதற்கும் அவருடைய அத்தஸ்து தடையாக இருக்கிறது. என் தகப்பன் எனக்கு வில்லனு? புதுமையான கொடுமை. தம்பியும்

உம்மாவும் எப்படியோ றஹீமை எனக்கு முடித்துவிடு வதற்கு ஆலாவாகப் பறக்கின்றனர். ஆனுல் என் தகப்பன் ராஜாளியாக இருக்கும்போது இந்த ஆலாக்கள் பறந்து என்ன நடக்கும்? நிகாஹ் கலரியில் இருந்து என்னை ஒரு ஆட வனிடம் ஒப்படைக்கும் சத்தியப்பிரமாணத்தை- 'ஒலியை'- லெப்பைக்கு முன்பு சொல்லி ஒப்புக் கொடுப்பவர் அவர் ஆயிற்றே. இந்த ஒலி என்ற ஆயுதம் அவரிடத்தில் இருக்கும் போது மற்றவர்களும் அவரை அனுசரித்துத்தானே செல்லவேண்டும்.

றஹீமை நான் காதலிக்கிறேனு? என்று என் சக ஆசிரி யைகள் என்னிடம் கேட்கின்றனர். அவரை நீயும் நல்லா விரும்புகிருய் போல் தெரிகிறது. ஏன் நல்ல மாப்பிள்ளை தானே! ஓமென்று சொல்லி கெதியாக கல்யாணத்தை வைத்து எங்களுக்கும் விருந்து தாவன்டி! என்று என் தோழிகள் கூறுகிருர்கள். என்னுடைய நிலை எவ்வளவு விசித்திரமானது. என் காதல் நாடியை மற்றவர்கள் பிடித் துப் பார்க்கிருர்கள். நான் போட்ட முதல் சித்திரமே அலங்கோலமான உருவங்களாகி, வர்ணக் குழம்புக ளான வெறும் கோடுகளாகக் காட்சி தருகின்றன. அக் கோடுகளுக்கு மேலால் மற்ருேர் சித்திரத்தை எவ்வாறு போட முடியும்? பெண்கள் என்ன புகைப்படம் பிடிக்கும் கருவிகளா? வருகிற வருகிற ஆண்களையெல்லாம் தம் இத யக் கருவியில் இருத்திக்கொள்வதற்கு?

அப்போ என் முடிவு என்ன என்பது எனக்கே குழப்ப மாக இருக்கிறது. வாழ்க்கை என்பது வித்தைக்காரி குடை பிடித்துக்கொண்டு ஒற்றைக் கயிற்றில் நடக்கிற ஒரு விளை யாட்டு. முதல்முறை தவறிவிட்டால் பின்னர் அவளால் நடக்கவே முடியாது. நானும் அந்த வித்தைக்காரியின் நிலையில்தான் இருக்கிறேன். இரண்டாம் முறை அக் கயிற் றில் நடக்கக் கால் கூசுகிறது. ஆதலால்தான் நடப்பதெல் லாம் நடந்து எது இறுதி முடிவாகிறதோ அப்பொழுது தான் நான் அதைப்பற்றிய முடிவுக்கு வருவேன்.

என் வாப்பாவை நான் மிக மதிக்கிறேன். இந்த ஊரே அவரை மதிக்கும்போது நான் மதியாமல்விட என்ன காரணம் இருக்கலாம்? ஆனுல் என் வாழ்க்கையில் அவர் இப்பொழுது மூன்ருவது முழக்கம் செய்கிருர். மூன்ருவது இடியை விழுத்தியிருக்கிருர் என்றுகூடச் சொல்லலாம். ஆம்! என் மாமி மகன் முஸம்மிலே எனக்குக் கட்டிவைக்கப் போகிருர். இது இடியா? ஜோக்கா என்று எனக்குத் தெரியவில்லே. முஸம்மிலிடம் பணம் இருக்கிறதாம். என்னிடம் படிப்பு இருக்கிறதாம். இரண்டும் சேர்ந்தால்தானே வாழ்க்கை என்று வாழ்க்கைக்குப் புதிய விவரணம் ஒன்றைக் கொடுக்கிருர் அவர். உழவு மெஷின், காணி, காசு எல்லாம் ஒரு மணமகனைத் தீர்மானிக்கும் தகுதிகளா? இங்கிலாந்தில் வளர்ப்பு நாய்கள், வளர்ப்புப் பூனைகளுக்குக் கூட அவற்றின் எஜமானர்கள் இலட்சக்கணக்கான ரூபாய்களே வங்கிமூலம் விட்டு செத்துப் போகிருர்கள். இந்த இலட்சாதிபதியான நாயையோ பூனையையோ யாராவது கல்யாணம் கேட்கிருர்களா? அவருடைய தங்கை மகன் என்ற பாசத்தாலோ, குடும்பப் பெருமையைப் பாதுகாக்க வேறு மாப்பிள்ளே கிடையாததாலோ மகளுக்கு தகுதியான மாப்பிள்ளேயொன்று கிடைக்கவில்லேயே என்ற ஆதங்கத்தாலோ வாப்பா இதைக் கூறியிருக்கலாம். அதுதான் அவரது முடிவு என்று அவர் சொல்லவில்லேயே. உம்மாவும் தம்பியும் றஹீமைச் சொன்ன ஆத்திரத்தில் அவரும் ஒரு காய் எறிந்திருக்கலாம்.

அன்று றஹீம் கால்சட்டையும் சேர்ட்டும் அணிந்து மிகச் சாதாரணமான தோற்றத்தில் மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய காட்சி எவ்வளவு அழகாக இருந்தது. ஒவ்வொரு பெண்ணுமே தன் கணவன் இப்படிப் பெருமையாக விளங்குவதைத்தான் விரும்புவாள்.இதுபோல முஸம்மில் தனது உழவு இயந்திரத்தில் பைஜாமா சாறனும் அழுக்குப் படிந்த கலர் சேர்ட்டும்அணிந்தவனுக வந்திறங்கினுல் அது எவ்வாறிருக்கும்? நான் அந்த இடத்திலேயே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்திருக்கலாமல்லவா?

'என்னபுள்ள! இன்னம் கட்டில உட்டுஎழும்பஇல்லையா?' என்று கேட்டுக்கொண்டு அவள் உம்மா அறைக்குள் வந்த போதுதான் மர்லியா சுய நினைவுக்கு வந்தாள்.

'கன்னேரம் எழும்பிற்றன் உம்மா' என்று கூறியவளாக வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து வெளியில் வந்தாள். ஆனால் அவளுடைய முகபாவனையையும் ஆடை அணிகள் குலைந்து கிடந்த தோற்றத்தையும் கண்ட ஹாஜருவுக்கு மனம் கொதித்துவிட்டது. மகள் ஏதோ யோசனை வசப் பட்டுவிட்டாள். முந்தநாள் இங்கு நடைபெற்ற விவாதம் பற்றி தங்கை ருஹிலா எதையோ சொல்லியிருப்பாள். அதைப்பற்றிதான் இவள் எண்ணிக் கவலைப்பட்டுக்கொண் டிருந்தாளோ? என்ற எண்ணம் அனுபவசாலியான ஹாஜருவுக்கு தோன்றியது.

'மர்லியா கிணற்றடிக்குப்போய் முகத்தைக் கழுவிக்கி வந்து தேயிலையைக் குடியன்! என்ன புள்ள ஒரு மாதிரி தெகப்புட்டியில மரிச்சவளப் போல நிக்காய்! என்று அவளுடைய சிந்தனை வயப்பட்ட நிலையில் இருந்து மீண்டும் அவளை உலுப்பிவிட்டாள் ஹாஜரு.

'என்னம்மா நீங்க குழந்தப் பிள்ளைக்குச் சொல்றது போல சொல்லிக்கொண்டிருக்கீங்க என்று உம்மாவைப் பார்த்து ஒரு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு 'சோப் கேசு'டன் கிணற்றடிக்கு நடந்தாள் மர்லியா.

மகளைப் பார்த்ததும் ஹாஜருவுக்கு நெஞ்சை அடைத் துக்கொண்டு வந்தது.

'நான் பதினெட்டு வயதில கலியாணம் முடிச்சி இருபது வயதில மர்லியாவைப் பெத்துட்டன். என் மகள் இருபத் தொன்பது வயதாகியும் இன்னமும் கலியாணம் முடிக் கல்ல- ஒரு கொமர் வெளிய சொல்லிக்க முடியாம என் னென்னத்த நெனச்சிக்கி இருக்கோ. அதுர விதி இப்பிடியா போகனும்? பத்து வயது சென்டா பறயன்ட கைலயாலும்

பிடிச்சுக் குடு' என்று எங்க மூத்தம்மா செல்லுவா! ஏனெண்டா பருவமான பெண்ண வெச்கிக்கிறது அவ்வளவு பாவமாம்.

'இந்த மனுஷன் ஒண்டயும் கேக்கார் இல்ல. வெள்ளா மக்காறண்ட மகன். வேலசெஞ்சவன்ட மகன் எண்டெல்லாம் கதக்கார். அல்லா ஒரோருத்தருக்கும் எதஎதக் கல்பிச்சிருக்கான் எண்டு ஆருக்குத் தெரியும். ஆலம் அர்வாஹூல் ஒவ்வொருதருடைய சீவியத்திலயும் இன்னஇன்னது தான் நடக்கும் எண்டு ஆண்டவன் எழுதி இரிக்கான். அது தான் நம்முட தலே எழுத்து. நாம கூத்தாடிளுப்போல இந்தத் தலேயெழுத்து மார்றதில்ல. நம்முட புள்ளட தலேயில ஆரமாப்புளயா எழுதி இரிக்கோ அவன்தான் அவவுக்கு புருஷன். காலமும் ஒகுத்தும் வரக்க களாக்காறன் வந்து கதவத் தட்டுவான் எண்டு பெரியவங்க சொல் லு வா ங் க. மர்லியாட களாக்காறன் நம்மிட கதவத் தட்ட இன்னம் வர இல்லேயா? இல்ல, தட்டுற களாக்காறன நாமதான் துரத்தி உர்றமா? என்ரபுள்ள இப்பிடி வாடி வதங்கிப் போகுது. இன்னமும் பிந்தின பொண்ணுக்கு வயதுகூட எண்டுல்லுவா பேச்சி வரும்.

மாப்புள எண்டா நாம கொல்லனுக்கிட்டக் குடுத்து நம்முட விருப்பம்போல அடிச்செடுக்கிற பொருளா? இந்தக் காலத்துப்புள்ளயள் ஒவ்வொருகோலமாத்திரியிதுகள். அண்டொருநாள் ஜெமில் ஒரு பொம்புளயக் கூட்டிக்கி வந்தான். அவள் என்னடா எண்டா சாப்புப் பக்கமாப் போய் இருந்துக்கிட்டு ஜெமீல்ற கையைப் பிடிச்சமாதிரி கூக்குரல் போட்டுக் கதக்காள். கொஞ்சம்கூட பொம்புளேடை குரல் இல்ல. எனக்கு ஒண்டும் வெளங்கல்ல. மகனக் கூப்பிட்டு 'பொம்புள வந்தா இஞ்சால வெரக்காட்டன் மகன்' ராத்தாவும் இரிக்காதானே எண்டு சென்னன்.

ஆரும்மா பொம்புள அது ஆம்புள! அவன் பல்கலேக் கழகத்தில் படிக்கான். கொண்ட வளத்திருக்கான். அதப்

பாத்து நீங்க பொம்புள எண்டு நெனச்சிற்றீங்களா? எண்டு சொன்னான். எனக்கு ஆச்சரியமாப் போயிற்று. இப்பிடி யான காலத்தில குடியாதவனு அஞ்சொகுத்தும் பள்ளிக்கு போறவனு? அதபான நடத்தையுள்ளவனு ஆரிருக் கான்? கெடச்சமாப்புள்ளயச் செய்றத்துக்கும் இந்த மனுஷன் ஒத்துக்காட்டி என்ர புள்ள இப்பிடிக் குமராகத் தான் இரிக்கிறதா?

முந்தானையை இரண்டு கைகளாலும் ஏந்தி பிடித்த ஹாஜரு, ''ஆண்டவனே என்ற புள்ளக்கி கெதியா ஒரு நல்ல மாப்புளயத்தா! அப்பிடி நடந்தா நான் ஏழு மிஸ்கீன் களுக்கு சோறு குடுப்பன். மூண்டு மௌலூதும் நிண்டோது விப்பன்'' என்று துவா கேட்டாள். அவளுடைய கண்களி லிருந்து கண்ணீர் மள மளவென வழிந்தோடிக்கொண் டிருந்தது.

கிணற்றடியிலிருந்து வந்த மர்லியா, 'என்னம்மா அழுகிறீங்க! என்ன நடந்தது' என்று வியப்போடு கேட் டாள்.

'ஒண்டுமில்ல மகள்' என்ர கவலையையும் கஷ்டத்தை யும் நீ கேக்காத, என்று கூறியவளாக முந்தானையால் கண் களைத் துடைத்துக்கொண்டு தேநீர்க் கோப்பையை மகளி டம் கொடுத்தாள். மர்லியாவுக்கு உம்மாவின் கவலை என்ன என்பது விளங்கிவிட்டது. அவள் எதையும் மீண்டும் கேட்க விரும்பவில்லை. தேநீரை வாங்கி உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினாள்.

## ( 8 )

**அ**ன்று கல்முனை பட்டின சபை அசம்பிளி மண்ட பம் விழாக் கோலம் பூண்டிருந்தது. அகில இலங்கை முஸ் லிம் வாலிபர் இயக்க பேராளர் மகாநாடு நடைபெறுவ

தற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. வெளியூர்களில் இருந்துவந்த பேராளர்கள் ஒருவரோடொருவர் மகிழ்ச்சியாக உரையாடுவதில் ஈடுபட்டிருந்தனர். இலங்கையெங்கும் ஆங்காங்கே இயங்கிக்கொண்டிருந்த நூற்றியொரு கிளையின் பிரதிநிதிகள் அவர்கள். சமூக சேவைக்கென்று தம்மை அர்ப்பணித்துக்கொண்ட இளைஞர்கள். ஈழம் வாழ் பத்து இலட்சம் முஸ்லிம்களினதும் கலாசார நல்வாழ்வுக்கும் இனிய உறவுக்கும் பாலம் அமைத்து நிற்பவர்கள். விழா மண்டபம் கலகலவென இருந்தது. மேடையின் இடப்புறமாக பொது மக்களுக்கென்று இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பொது மக்கள் பக்கம் சனத்திரளால் நிரம்பி வழிந்தது.

தலைவர் பதவிக்குப்போட்டியில்லையென்று எதிர்பார்த்திருந்தாலும் இறுதி நேரத்தில் கடும் போட்டி இருந்தது. காரணம் இம்முறை தெரிவுசெய்யப்படும் தலைவர் இன்னும் மூன்று மாதங்களில் ஜெர்மனியில் நடைபெறவிருக்கும் அகில உலக இளைஞர் மகாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியாக அரசாங்க செலவில் போகவிருக்கிறார். இந்த அருமையான சந்தர்ப்பத்தை யார்தான் இழப்பார்கள்? ஆசை யாரைத்தான் விட்டது.

ஜெமீலின் நண்பர்கள் அவனுக்காகப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். றஹீம், ஜெமீல் எப்படியோ தெரிவுசெய்யப்பட்டுவிடவேண்டுமே என்ற அங்கலாய்ப்புடன் ஓடி ஓடி வேலை செய்தான். மற்ற அபேட்சகரும் அவரது ஆதரவாளர்களும் இவ்வாறே அந்த மண்டபத்தைக் கிண்டி 'இரத்தினக் கல்' தேடிக்கொண்டிருந்தனர்.

நேரம் சரியாகப் பத்து மணியானதும் மகாநாடு ஆரம்பமாகிவிட்டது. நிகழ்ச்சிகள் வெகு துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

உத்தியோகத்தர் தெரிவு நேரம் வந்தது, காரியதரிசி, உப காரியதரிசிகள், தனாதிகாரி முதலாம் பதவிகளெல்

லாம் போட்டியின்றித் தெரிவு நடைபெற்றன. தலைவர் தெரிவையும் போட்டியின்றி நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதாவது போட்டியிடும் இரு அபேட்சகர்களின் ஆதரவாளரும் மற்ற அபேட்சகரை நின்று கொள்ளும்படி கேட்டனர். சமாதானம், சாத்வீகம் ஆக வில்லை. போட்டி வலுப்பெற்றது. ஆதலால் பகிரங்க வாக் கெடுப்பு சிரமசாத்தியம் ஆயிற்று! உடனே தேர்தல் ஆணை யாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இரகசிய வாக்கெடுப் புக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

தேர்தலில் புதிய சூடு பிடித்து, கவர்ச்சியும் ஏற்பட் டது. அரைமணி நேரத்தில் சமுகமளித்திருந்த முந்நூறு பேராளரும் வாக்களித்தனர். வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.

சபைத் தலைவர் எழுந்தார். ''இப்பொழுது தலைவர் தெரிவுக்கான முடிவுகள் கிடைத்துள்ளன. மொத்தம் முந் நூறு வாக்குகள் அளிக்கப்பட்டன. அதில் ஒன்று பழுது போக (சபையில் சிரிப்பு) ஜனாப் எம். ஐ. எம். ஜெமீல் 179 வாக்குகளும் ஜனாப் கே. எம் எம். தௌபீக் 120 வாக்குகளும் பெற்று ஜனாப் எம். ஐ. எம். ஜெமீல் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கத்தின் அடுத்த ஆண் டுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஜனாப் ஜெமீல் அவர்களை மேடைக்கு வரும்படி அழைக்கிறோம்.'' ஜெமீல் எழுந்து மேடையை நோக்கி நடந்துகொண்டிருந்தான், கரகோஷம் அந்த மண்டபமே அதிரும்படி கேட்டது.

சபைத்தலைவர் ஜனாப் ஜெமீலை அறிமுகம் செய்து வைத்தார். ''ஜனாப் ஜெமீல் நமது இயக்கத்தோடு ஒன்றி விட்ட ஒருவர். அதற்காகப் பெரிதும் உழைத்து வருபவர். துடிப்பு நிறைந்த இளைஞர். இவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை பொருத்தமும் தகுதியுமாகும். இவ ருக்கு தலைவர் பதவிக்கான இலாஞ்சனையை இதோ அணிந்து இவ்விலாஞ்சனை மூலம் அவரை இப்பதவிக்கு

உரியவராக ஆக்குகிறேன்'' என்று கூறி தலைவர் இலாஞ்சனையை அணிந்ததும் மீண்டும் கரகோஷம் வானைப் பிளந்தது. றஹீம் மேடையில் ஏறி அழகான ஒரு பூமாலையை ஜெமீலுக்கு அணிந்து தன் மகிழ்வைத் தெரிவித்துக்கொண்டான்.

சிறப்பான சொற்பொழிவொன்றை நிகழ்த்தி சபைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டான் ஜெமீல். அவனோடு போட்டியிட்டுத் தோல்வியடைந்த தௌபீக் மேடைக்கு வந்து ஜெமீலை நெஞ்சோடு நெஞ்சு கட்டியணைத்து தனது சகோதரத்துவ அன்பையும் விசுவாசத்தையும் தெரிவித்துக்கொண்டான்.

மகாநாட்டு அலுவல்களெல்லாம் முடிந்து பேராளர் ஒவ்வொருவரையும் அறிமுகமாகி அவர்களை இரா றெயினுக்கும் வழி அனுப்பிவிட்டு ஜெமீல் மண்டபத்தைவிட்டு வெளியேற பின்னேரம் நான்கு மணியாயிற்று. ஜெமீலும் றஹீமும் மிகவும் களைத்தவர்களாக அக்கரைப்பற்றை நோக்கி காரில் புறப்பட்டனர்.

ஊரை அண்மித்ததும் பாதையெல்லாம் ஒரே சனக் கூட்டமாக இருந்தது. இருவரும் ஒன்றும் விளங்காதவர்களாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். கார் சனக் கூட்டத்தை அண்மித்ததும்தான் விஷயம் விளங்கியது. இளைஞர்கள் எல்லோரும் மாலையும் கையுமாக நின்றனர். பட்டாஸ் வெடிகள் காதைச் செவிடாக்கின. சனங்களின் உற்சாகம் கரைபுரண்டோடும் வெள்ளமாகத் தெரிந்தது. இருவரும் காரைவிட்டிறங்கினர். ஊர்வலம் சின்னப் பள்ளிவாசலை நோக்கிச் சென்றது. அங்கு இஸ்மாயில் ஹாஜியாரும் அவருடைய சக மரைக்காயமாரும் நின்றனர். பள்ளிவாசலில் துஆ பிரார்த்தனை செய்யப்பட்டது.

இஸ்மாயில் ஹாஜியாருக்குப் பெருமை தாங்க முடியவில்லை, அங்குகூடி நின்றவர்களுக்கு தன் மகனின் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறினார். 'இதுமட்டுமில்ல இன்னம்

மூண்டு மாதத்தில மகன் ஜேர்மனிக்கும் போகப்போகி ருன். அங்க பெரிய மகாநாடொன்று நடக்கப் போகுது. அதில இவன் புள்ளயும் பேசப்போருன்.'

ஹாஜியாருடைய விளக்கத்தைக் கேட்டு கூடி நின்ற வர்களெல்லாம் மூக்கில் விரலைவைத்து நின்றனர். ஒரு மரைக்கார் 'அதுதானே ஹாஜியார் புலிக்குப் பொறந்தது பூனையாகுமா? ஒங்குட புள்ள ஒங்குட புள்ளதான்! வெண் டிக்கொட்டய நாட்டினு பாவச்செடியா வளரும்?' என்று ஹாஜியாரையும் மகனையும் ஒரே பல்லவியில் புகழ்ந்து கூறினுர்.

ஊர்வலம் வீட்டுக்குத் திரும்பியது. அங்கும் ஒரே அமர்க்களம். பெண்களெல்லாம் கூடிநின்று குரவையிட்ட னர். பொல் அடிகாரர்கள் வீட்டுப்புற வளவில் பொல் அடித்துக்கொண்டிருந்தனர்.

'கோலமயிலாக வீற்றிருந்த கோமான் நபி பெயரில்
சாலவே சலவாத்தும் சாற்றி அடித்திடுவோம்'

அண்ணுவியார் பாடினுர். பாடலின் இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப அடிகாரர்கள் துள்ளித்துள்ளி அடித்த னர். அடி பொல்லில் வெண்கல வெண்டயம் பொருத்தி இருந்ததால் பொல்லின் ஒவ்வொரு அடிக்கும் அது கலீர் கலீரென நாதம் எழுப்பிக்கொண்டிருந்தது. உள்ளே ஒரு வட்டமாகவும் வெளியே மற்ருேர் வட்டமாகவும் வட்டமொன்றிற்கு எட்டுப் பேராகப் பதினுறு பேர் நின்று பொல் அடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அடியின் இசையோடு வெளியில் உள்ளவர்கள் உள் ளேயும் உள்ளே இருந்தவர்கள் வெளியேயும் மாறி மாறி வந்து சுழன்றுகொண்டிருந்த காட்சி இழை மாறி மாறி ஒரு கயிற்றைப் பின்னுவது போல் இருந்தது. பொல்லடிப்பவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு அண் ணுவியாரின் பாட்டின் ஈற்றடி வருந்தோறும் பெண்கள் குரவையிட்டு அதற்குப் பின்னணி இசை செய்தனர்.

இந்த அமர்க்களத்துக்குள் ஜெமீலின் தாயார் ஹாஜரு உம்மா மகனுக்கு கண் எச்சில் கழிக்க தீப ஆரத்தி ஒன்று செய்துகொண்டிருந்தாள், செம்புத் தாம்பாளம் ஒன்றில் மூன்றுவகை எண்ணெய் சேர்த்து ஏழு திரிகள் வைத்து அதைக் கொளுத்தி எடுத்துக்கொண்டு ஆரத்தி எடுக்க மக னுக்கு முறைப் பெண்ணான ஒரு சுமங்கலியைத் தேடிக் கொண்டிருந்தாள். அவளின் தூரத்து காக்கா ஒருவரின் மகளான லத்தீபா, 'என்ன மாமி ஆலாத்தி எடுக்க ஆள் தேர்றயளாம்' என்று கேட்டுக்கொண்டு வந்தாள்.

'ஓம்புள்ள! இந்த தம்பிக்கு எடுத்திருகா! நானும் ஒன் னத்தான் தேடித்திர்ரன். பிஸ்மில் செல்லி எடு! என்ர புள் ளக்கி கண்ணூறு நாவூறு ஒண்டும் படாம அல்லா காப் பாத்தணும், என்று சொல்லி ஆரத்தியை அவளிடம் கொடுத்தாள்.

வீட்டு முற்றத்தில் ஜெமீல் வரும் வழியில் நின்றாள் லத்தீபா, ஜெமீல் அவளின் முன்னே வந்து தலையைக் குனிந்து நின்றான். தீப ஆரத்தியை அவனின் தலைக்கு மேலாக மூன்று தரம் சுற்றி எடுத்து அவன் முகத்துக்கு நேரே அதனைக் கொண்டுவந்து பிடித்தாள் லத்தீபா. ஏழு திரிகளும் ஜெகஜோதியாக எரிந்துகொண்டிருந்தன. அதில் மூன்று திரிகளை ஜெமீல் வாயால் ஊதி அணைத்தான். அப்பொழுது பெண்கள் குரவையிட்டு மகிழ்ந்தனர். மற்ற நான்கு திரிகளையும் தானே நூர்த்துவிட்டு ஆரத்தியை எடுத்துச் சென்றாள் லத்தீபா. இதனைப் பார்த்துக்கொண் டிருந்த ஹாஜரு உம்மாவுக்கு மகன் மணப் பெண்ணோடு வர, முறைப் பெண்ணொருத்தி ஆரத்தி எடுக்கும் காட்சி ஒன்று நினைவுக்கு வந்தது.

வரவேற்பு நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்தன. வந்த பெருங் கூட்டமும் கலைந்து போயிற்று. ஹாஜரு அப் பொழுதுதான் இராச் சாப்பாட்டுக்குரிய வேலைகளைத் தொடங்கினாள். அதனிடையே அவளுக்கு அது பற்றிய

எண்ணமும் வரவில்லை. அவகாசமும் கிடைக்கவில்லை. மர்லியாவும் அவளுமாகச் சமையல் வேலையில் மூழ்கிக் கிடந்தனர். இளையவள் ருஹீலா, ஏதோ பள்ளிக்கூடத்து அவசர வேலையாம் என்று திண்ணையில் கிடந்த மேசையில் இருந்து எழுதிக்கொண்டிருந்தாள். ஹாஜியாருக்கு இந்தச் சன சந்தடியில் 'மகரிப்' தொழுகையும் 'களா'வாயிற்று. அவர் உள் வீட்டறையில் இஷாவும் மகரிபுமாக தொழுது கொண்டிருந்தார்.

யாரோ டோர்ச் லைட் அடித்துக்கொண்டு வருவது ஹாஜருவுக்குத் தெரிந்தது. உற்றுப் பார்த்தாள். தனது மதினி-அதாவது ஹாஜியாரின் தங்கை ஸாஹிருஉம்மாவும் இன்னுமொரு பெண்ணும் வந்துகொண்டிருந்தனர்.

'வாங்க புள்ள வாங்க! மர்லியாம்மா மாமி வந்திருக்காங்க' என்று மாமி வரும் செய்தியையும் கட்டியம் கூறிக்கொண்டு அவளை வரவேற்றாள் ஹாஜரு உம்மா.

திண்ணையில் கூட்டப்பாய் எடுத்து விரித்தாள். ஸாகிருவும் வந்த பெண்ணுமாக அதில் இருந்தனர். ஆனால் ஸாஹிரு ஒன்றும் பேசவில்லை. இடித்த புளி மாதிரி என்பார்களே அப்படி உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகபாவங்கள் ஒரு மாதிரியாக இருந்தன. அவளருகில் பாயை இழுத்துப் போட்டுக்கொண்டு, 'தம்பிக்கு என்னமோ தலைவர் பதவியாம்! ஊராக்களெல்லாம் வந்து ஊர்வலமாகக் கூட்டிக்கி வந்து உட்டுட்டுப் போனாங்க...' என்று கதையைத் தொடங்கினாள் ஹாஜரு உம்மா.

'இத நீங்க சொல்லித் தெரியத் தேவல்ல புள்ள! இது ஊரெல்லாம் தெரிஞ்ச கததான்! இல்ல என்னையும் ஒரு மதினியெண்டு நீங்க நெனச்சிருந்தா ஒருகாகக்காரல்ல இதச் செல்லி அனுப்பி யிருக்கலாமே. நான் ஒங்களுக்கு ஒரு மதிப்புக்கெட்ட மதினியாப் பெய்த்தன். எங்க காக்காட புள்ளட ஒரு சந்தோசத்தப் பாக்க எங்களுக்கு ஆசை இல்லையா?'

ஹாஜியார் அப்பொழுதுதான் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியில் வந்தவர் 'ஸாஹிரு இதொண்டும் எங்களுக்குத் தெரியாம்மா! வாலிப சங்கத்துப் புள்ளயள்தான் இதெல்லாம் செஞ்சாங்க. அதுக்காக நீ ஆரையும் கோவிக்காத. நாங்க செய்த காரியம் எண்டா ஒனக்கு ஒரு ஆள் அனுப்பாம இருப்பமா?'

'இல்ல காக்கா! நானும் ஒரு பொண்ணப் பெத்துவச்சிருக்கன். ஒங்குட மாப்புள்ளயக் கேட்டு வந்திருவளோ எண்டு ஒங்குட பெண்சாதிக்கு ஒரு பயம்! அதில இருந்து இப்ப கொஞ்ச நாளா அவ என்ன எட்டவச்சிக்கி வாரு!'

'என்ன புள்ள இன்று கதக்கிற! ஒங்கு காக்காட்ட மாப்புள இருந்தா அவருகிட்டக் கேட்டு நீங்க எடுப்பீங்க! இதுக்குத் தடை போட நான் ஆரு? நான் தடுத்தாக்கூட ஒங்கு காக்கா கேக்கிற ஆளா. நான் நெனயாத கதயளச் சொல்லி வீண் மனத்தாவத்த கிட்டாதங்க!'

'இல்ல! இல்ல! ஒரு மகள். அதிபரா இரிக்கா. ஒருமகன் வேங்கில உத்தியோகம்! காணி, பூமி வெளஞ்சி வருகுது எண்டு உங்களுக்குப் பெரும காக்கா பொண்டி! இந்தப் பெருமையில நாங்களெல்லாம் தூசியாத் தெரியிறம்! இந்தப் பெருமையெல்லாம் எங்கால இருந்து வந்ததெண்டு எண்ணிப் பாருங்க?'

'இந்தப் பெருமையெல்லாம் எங்கால இருந்து வந்ததெண்டு எங்கு வாப்பா உதுமா லெவ்வைப் போடியயத்தான் கேக்கணும்! எந்தப் பெருமைக்கு எந்தப் பெருமை உசத்தி எண்டு பாத்துத்தான் ஒங்க காக்காவ எனக்கி எடுத்துக் கலியாணம் முடிச்சித் தந்திருக்கார். நீங்க ஒரு சண்ட பிடிக்கத்தான் வேணுமெண்டு வந்தயளா? ஹாஜறுவுக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது.'

ஹாஜியார் தங்கையைப் பார்த்து 'ஸாஹிரு சும்மா நிதானமில்லாம கதச்சிக்குப் போகாத! இது பெரிய குடும்

ப்ப் பழியத்தான் கொண்டு வரப்போகுது. இந்தச் சின்ன விஷயத்துக்கு நீ ஏன் இப்பிடி ஆத்திரப்படவேணும்' என்று தங்கையைக் கண்டித்தார்.

'இல்ல காக்கா!மத்தியானம் ஏன்ரமகள் பானுவுக்கிட்ட ஆக்களெல்லாம் 'ஒங்க மச்சான் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு பெரிய வரவேற்பெல்லாம் நடக்கப் போகுதாம், ஆக்களெல்லாம் றோட்டுல தோரணம் கட்டிக்கிற்று நிற்காங்க, நீங்க போகல்லயா? எண்டு கேட்டினமாம். பகல் அவள் சந்தோஷத்தில சாப்பிடவே இல்ல. மாமிற்ற நாமளும் போவம் உம்மா எண்டு என்னச் சுத்திக்கே திரிந்தாள். நான் என்ன அழையா வீட்டுக்கு நுழையா விருந்துக்குப் போறவளா?'

ருஹிலா தேநீர் கொண்டுவந்து மாமியின் பக்கத்தில் ட்றேயுடன் வைத்து 'குடிங்க மாமி' என்று கூறினுள், அதைக் கண்ட சாஹிரு, 'என்ர மருமகன் மாலை போட்டு ஊர்வலம் வாறத நான் பாக்கல்ல, என்ர புள்ள துடியாத் துடிச்சாள் அவள் பாக்கல்ல. இந்த தேயிலை குடிக்கத்தான் நான் வந்ததாக்கும்' என்று கூறிப் போவதற்கு எழுந்தாள். இரண்டெட்டு வைத்து நடந்தாள்.

'சாஹிரு! புள்ள! சாஹிரு! புள்ள!'

ஹாஜியாரும் மனைவியும் மாறி மாறிக் கூப்பிட்டார்கள்- அவள் கேட்கவில்லை! நடந்துகொண்டிருந்தாள். கூட வந்த துணையாளும் அவளைப் பின்தொடர்ந்தாள். இந்த வேளை ஏதோ அலுவலாக வெளியில் போயிருந்த ஜெமீலும் வந்து சேர்ந்தான். மாமி புறப்பட்டுப் போவதைக் கண்டதும்...

'என்ன மாமி! இப்பதான் வந்தீங்களா; எல்லாம் முடிஞ்ச நேரமா பாத்து ,ஏன் நேரத்தோட வரல்ல' என்று கேட்டான், மருமகனிடம் ஒண்டும் சொல்லிக்கொள்ள இயலாமல் அவள் திணறிக்கொண்டிருந்த வேளை பார்த்து,

'புள்ள போகாதங்க! கொஞ்சம் திண்ணக்க வந்திற்றுப் போங்க' என்று கூப்பிட்டாள் ஹாஜரு.

'ஸாஹிரு ஒன்றும் அறியாதவள்போல வந்தாள். மீண்டும் பாயில் இருந்தாள். இருவரும் தேநீரைக் குடித்தனர். வெற்றிலே வட்டாவும் வந்தது. சாஹிரு வெற்றிலேயும் போட்டுக்கொண்டாள்.

ஜெமீல் மாமியைப் பார்த்து 'ஏன் மாமி! மாமா வரல்லேயா? இன்டக்கி நான் அவரையும் காணல்லியே!' என்றான்.

'இன்டக்கித்தான் சேனேக்காடு வெட்டின. பூமிக்கு போனவர் இன்னம் வரல்ல தம்பி! அதுதான் பாத்திற்றுப் போகலாமெண்டு நான் வந்தன்' என்று மருமகனிடம் குற்றச்சாட்டையெல்லாம் சொல்லிக்கொள்ள முடியாமல் இழுத்தாள்.

'மாமிய நேரத்தோட கூப்பிடல்லியாம் எண்டு கோவிச்சிக்கி இருக்காடப்பா' என்று ஹாஜியார் மகனிடம் கூறினார்.

'ஏன் மாமி உண்மையா? நான் ஒரு சங்கத்துக்குத் தலேவராக தெரிவுசெய்யப்பட்டேன் மாமி. இந்த வாலிப சங்கத்து புள்ளேயள்தான் அதைப் பெரிசாக்கி ஆர்ப்பாட்டம் செஞ்சிற்றுங்க. இதெல்லாம் சின்ன விஷயம். ஆள் கூப்பிட்டுப் பட்டக் கலியாணம் முடிக்கிற விஷயமல்ல'

'சிறிசோ பெரிசோ சந்தோஷமான காரியங்கள எல்லாரும் பாக்கத்தானே வேணும் தம்பி! அதில ஒண்ணுமில்லே. நாளேக்குப் பகல் சாப்பாட்டுக்கு நீங்க வரணும் தம்பி! நான் எல்லா ஆயத்தமும் செஞ்சிற்றன் ...' காக்கா பெண்சாதியைப்பார்த்து 'புள்ள தம்பியை நாளேக்குபகலக்கி எங்குட ஊட்ட அனுப்பிரனும்! நான் கூட்டிக்கிவர ஆள் வரக்காட்டுவன்...'

'இல்ல மாமி நாளைக்கு திங்கட் கிழமை நான் பேங்குக்குப் போகணும்! சாப்பாட்டைப் பிறகு பாக்கலாம்' நாளைக்கு வேணும்!'

'அப்போ வாற சனிக்கிழமை வாங்க தம்பி'

ஹாஜியாரும் மனைவியும் ஒன்றும் பேசவில்லை. மாமியும் மருமகனும் பாசக் கடலில் நீந்திக்கொண்டிருந்தனர். இதனை இருவரும் புதினம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

'சரி மாமி! நான் சனிக்கிழமை கட்டாயம் சாப்பாட்டுக்கு வாறன்! நான் ஜெர்மனிக்கெல்லாம் போக இரிக்கி. மாமி தருகிற சாப்பாடுதான் முழுத்தச் சாப்பாடு' என்று மகிழ்ச்சியோடு கூறினான் ஜெமீல்.

இதற்கு முன் என்ன நடந்தது என்பதையே மறந்தவளாக ஸாஹிரு கலகலப்பாக மாறினாள். முன்னர் கோபித்துக்கொண்டு புறப்பட்டவள் இப்பொழுது மூத்த மருமகள் மர்லியாவிடம் போய் 'நான் வாறன் கிளி! நேரமாப் போச்சி' என்றாள்.

'போய் வாங்க மாமி' என்று அவளும் சற்றுப் பயத்தோடு கூறினாள்.

'புள்ள நான் கதச்சதெல்லாம் மனசில வச்சிக்கிற்று தம்பிய சாப்பாட்டுக்கு அனுப்பாம உட்டுடதாங்க!' என்று காக்கா பெண்சாதியிடம் கூறினாள்.

ஹாஜரு ஒன்றும் பேசவில்லை;

ஸாஹிரு தன்னைத்தானே திருப்திப்படுத்திக்கொண்டு 'வாறன் காக்கா' என்று காக்காவிடமும் விடைபெற்றுக் கொண்டு போனாள்.

ஹாஜியாருக்கும் பெரும் பிரச்சினையாகிவிட்டது. அவர் தங்கையின் மகன் முஸம்மிலை, மகளுக்கு மாப்பிள்ளையாக எடுக்க எண்ணி இருக்கிறார், மனைவியையும் சமாதானப்

படுத்தி எடுத்துக்கொண்டு அவளோடு போய்த்தான் தங்கையிடமும் மச்சானிடமும் இதைக் கதைக்க வேண்டுமென்று அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். கேட்கக் கடவது தங்கையும் மச்சானும் சம்மதம் தெரிவிப்பாங்க! தன்னுடைய சொல்லுக்கு அந்த வீட்டில் மறுப்பே இருக்காது என்று அவருக்குத் தெரியும், முஸம்மில் சென்ற கிழமை ‘பேஜோ’ கார் ஒன்றும் கொண்டு வந்திருக்கிறான்! அவன் பரம்பரைப் போடிர புள்ளதானே, காணி வாங்க, காசு சேர்க்க அவனுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? அவன் காரும் வாங்கி இருப்பதால் மகள் பாடசாலைக்குப் போக, கல்முனை கல்விக் கந்தோருக்குப் போக எல்லாம் வசதியாக இருக்கும், இப்படியான அலுவல்களுக்காக என்ர புள்ள கூலி பஸ்ஸில அல்லவா போகிறாள். என்னுடைய அந்தஸ்துக்கு எவ்வளவு வெட்கம்,

அடுத்த ஹஜ்ஜில் எப்படியும் கலியாணத்தை வைத்து விட வேண்டும். இரவைக்குக் கல்யாணமென்றால் நாளைக்குக் காலையில வீட்டுப்போட்டிக்கோவுக்கு முன்னால் கார் கிடக்கும். இந்தப் பைத்தியக்காரி ஹாஜிறாவுக்கும் மகன் ஜெமீலுக்கும் இதொன்றும் விளங்குவதாக இல்லையே! இவர்கள் இருவரையும் எப்படியும் நான் சமாதானம் செய்து எடுப்பதற்கிடையில் தங்கை ஸாஹிறா எல்லாவற்றையும் கெடுத்துவிடும் போலிருக்கிறதே; என்றெண்ணிய ஹாஜியார் மனைவியைச் சமாதானப்படுத்துவதற்காக முயன்றார்.

‘ஹாஜிறா! இவட குணமே இப்பிடித்தான். ஆரம்பத்தில் இடி முழக்கம், அப்புறம் சலார் மழை! நீ இதெல்லாம் மனசில போட்டுக்காத’

‘ஓமோம் இடி என்ற தலையில உழட்டும். மழை ஒங்குட தலையில பெய்யட்டும். ஒங்குட தங்கச்ச நீங்க காப்பாத்

துங்க என்று கூறியவளாக முகத்தைச் சுழித்துக்கொண்டு எழுந்து போனாள்.

ஹாஜியார் அதற்கு மேல் ஒன்றும் பேசவிரும்பவில்லை. அவர் மௌனியானார்,

## ( 9 )

அன்று ஜெமீல் வங்கிக்குப் போய்ச் சேர்ந்ததுதான் தாமதம் வங்கி ஊழியர்கள், மனேஜர் எல்லாரும் வந்து அவனைச் சூழ்ந்து விட்டனர். முதலில் மனேஜர், ருத்திர மூர்த்தி அவனுக்குத் கை கொடுத்து 'மிஸ்டர் ஜெமீல், எங்களது வங்கியைச் சேர்ந்த ஒருவர் அகில இலங்கை இயக்கம் ஒன்றுக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாரென்றால் அது எங்களுக்குத்தான் பெருமை! இந்தப் பெருமையை எங்களுக்கு அளித்த உங்களை மனமாரப் பாராட்டுகிறேன்' என்று வாழ்த்தினார். மற்ற ஊழியர்களும் அவனைப் பலவாறு வாழ்த்தித் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அவனையும், அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் பாராட்டுதல்களையும் மிக அக்கறையோடு கவனித்து உள்ளம் பூரித்துப் போய் நின்றாள் றஸீனா. ஆம் அவள் ஒரு இலிகிதராக சென்ற ஒருவருட காலமாக அவனோடு கடமையாற்றிக் கொண்டிருக்கிறாள்.

றஸீனா மிக அழகானவள். மாநிறம்! வாளிப்பான தோற்றம். அடக்கமான உடை நடை, எவரையும் கவரக் கூடிய சுபாவம். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு இந்தத் தொழிலுக்கு வந்தாள். அவளோடு ஜெமீல் நல்ல முறையில்தான் பழகினான். இவளைப் போல எத்தனையோ பெண்களோடு அவன் பழகத்தான் செய்கிறான். அதற்கெல்லாம் அர்த்தமும்

விளக்கமும் உண்டா? றஸீனாவுடனும் அவன் பழகத்தான் செய்தான்! அவளைப்பற்றி மிக உயர்ந்த அபிப்பிராயமும் வைத்திருந்தான். ஆனால் அவனுக்கு எந்தப் பெண் தன்னோடு எந்த அளவில் பழகுகிறாள். இவர்களுள் அழகி யார்? அகங்காரி யார்? என்றெல்லாம் அவன் கணக்கு வைத்திருக்கவில்லை. ஏனெனில் அவனது ஆர்வங்கள், கடமைகள் முடிந்ததும் பொது வேலைகள், சமூகப்பணிகள் என்பனவற்றில் ஈடுபட்டன.

எல்லோரும் கலைந்து விட்டனர். ஜெமீல் தன்னுடைய வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் அப்பொழுது மேசையின் முன்னால் றஸீனா வந்து நின்றாள். அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்!

''மன்னிக்க வேண்டும்! உங்களுக்கு இன்றைக்கு மத்தியானச் சாப்பாடு எங்கள் வீட்டில். எல்லா ஏற்பாடுகளும் ஆயிற்று. வாப்பா உங்களைப் பார்க்க வேண்டுமென்று மிக ஆவலாக இருக்கிறார். நேற்று நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது முதல் உங்களைகப் பற்றியே வாப்பா பேசிக் கொண்டிருக்கிறார்''.

''நீங்கள்தான் இதற்கெல்லாம் காரணமாக இருப்பீர்கள். மிஸ் றஸீனா! இந்தச் சிரமத்தை நீங்கள் ஏன் ஏற்படுத்திக் கொண்டீர்கள்! வாப்பா என்னைச் சந்திக்க வேண்டுமென்றால் நான் ஆறுதலாகப் பின்னேரம் வந்திருப்பேனே!''

''இதொன்றும் சிரமமில்லை. நான் மனேஜரிடம் சொல்லி இருக்கிறேன். ஒரு மணி நேரம் சோட் லீவு போட்டுக்கொண்டு, லஞ்ச் இன்ரவலுக்கு முந்தியே நாம் போனால் எல்லாம் வசதியாக அமையும்.''

''சரி றஸீனா! இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து விட்டு நீங்கள் கூப்பிடும்போது என்னால் எப்படி மறுக்க முடியும் மிக்க நன்றி.''

றஸீனா தன் கதிரைக்குப் போய்விட்டாள். ஜெமீல் சிந்தித்துப்பார்த்தான். அவனுக்கு வியப்பும் சிரிப்புமாக இருந்தது. 'இன்று பகல் சாப்பாட்டிற்கு மாமி எவ்வளவோ ஆசையுடன் அழைத்தாள். இதே பகல் நான் றஸீனா வீட்டில் சாப்பிடப் போகிறேன். அங்கே மாமி, இங்கே றஸீனாவின் தகப்பன். இருவருக்கும் அன்புக்கினியவனாக நான் நிற்கிறேன். எனக்கு ஒருபக்கம் பானு மறுபக்கம் றஸீனா. வினோதமான ஒரு காட்சி. தமிழ் திரைப் படங்களில் காதல் கை கூடி கல்யாணம் ஆனதும் கடைசியில் எல்லோரும் ஒன்று பட்டு நிற்பார்களே! அப்படி ஒரு காட்சி என் மனதில் தோன்றுகிறது. இது நிழலா? நிஜமா? என்பதை ஆண்டவன்தான் அறிவான்! வை. எம். எம். ஏ. தலைவர் பதவி ஒரு வருஷத்தைக்கு மட்டும் உரியது. ஆனால் அது வந்து என் வாழ்க்கையிலேயே பெரும் மாறுதல்களைச் செய்து விடும் போலிருக்கிறதே' என்று ஜெமீல் யோசித்துத் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டான்.

நேரம் சரியாகப் பதினொன்று. றஸீனா அவனிடம் வந்து 'போவமா?' என்றாள். அவனும் எழுந்து அவளோடு நடக்கத் தொடங்கினான். திருப்பங்கள் குறுக்குப் பாதைகள் எல்லாம் கடந்து அவளது வீட்டுக்குப் போய்ச் சேர பத்து நிமிஷ நேரம் எடுத்தது. அதனிடையே அவர்கள் இருவரும் எதுவும் கதைத்துக் கொள்ளவில்லை. அப்படிக் கதைப்பதற்கும் அவர்களிடையே போதிய அளவு விஷயமில்லை.

வீட்டினுள் பிரவேசித்தான் ஜெமீல். சாதாரணமாக அளவோடமைந்த வீடு. முன்னால் அழகானதொரு பூஞ்சோலை. செடிகள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. வீடு மிகவும் தூய்மையாகவும் அழகாகவும் இருந்தது. முன் அறையை அறபு எழுத்தணிச் சுலோகங்களும் அவற்றின் மத்தியில் முக்கோணத் தோற்றம் காட்டும் கஃபாஷரீபின் படம் ஒன்றும் அலங்கரித்தன.

''தம்பி! வாங்கோ!'' என்று கூறிக் கொண்டு வெள்ளை நிறமான உயர்ந்த தோற்றத்தை யுடைய ஒருவர் வந்தார். அவருடைய தலைமயிர் முக்கால் வாசியும் பழுத்து பளபள வென மின்னியது! அவர் றஸீனாவின் தந்தையே என்பதை அவர் முக வடிவம் காட்டிற்று. முப்பது வருஷமாகக் கட்டிடத் திணைக்களத்தில் உத்தியோகம் பார்த்து சென்ற வருஷம் தான் அவர் 'ரிடையர்' ஆகி இருந்தார். இப்பொழுது யாருக்கும் 'வீட்டுப் பிளான்' கீறிக் கொடுப்பது, ஆலோசனைகள் கூறுவது என்பதோடு, வீட்டில் உட்கார்ந்து கொண்டார். அவரை ஜெமீல் இப்பொழுது தான் கண்டான் என்றாலும், றஸீனா தன் வாப்பாவைப் பற்றி முன்னமே கூறி இருக்கிறாள் மிஸ் றஸீனா முகையதீன் என்ற அவளது பெயரில் இருந்து, அவரது பெயரையும் தெரிந்து வைத்திருந்தான்.

சோபாவில் அமர்ந்தான் ஜெமீல், றஸீனாவின் தந்தையே பேச்சை ஆரம்பித்தார்.

''தம்பி! நேற்று உங்களது வை.எம் எம்.ஏ. இயக்கப் பேராளர் மகா நாட்டுக்கு வந்த சிலர் கூட்டம் முடிந்ததும் இங்கு வந்து நின்றுதான் இரவு புகையிரதத்தில் போனார்கள். அவர்கள் வாயிலாகத்தான் நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது பற்றியும் நீங்கள் மட்டக்களப்பு வங்கியில் கடமையாற்றுகிறீர்கள் என்பது பற்றியும் அறிந்து கொண்டேன். பிறகு மகள்தான் நீங்கள் தன்னோடு வேலை செய்வதாகவும் சொன்னா!''

''ஆமாம்! நானும் இங்கு வந்து இரண்டு வருடங்களாகின்றன. பெரிய பட்டினங்களில் கடமையாற்றுவதில் உள்ள விஷயம் இதுதான். யார் யார் எந்த எந்தகாரியாலயத்தில் கடமையாற்றுகிறார்கள் என்பது சரியாகத் தெரியவராது. கந்தோர்களும் அதிகம், கடமையாற்றுவோரும் அனேகர்''

''ஓமோம். கிராமமென்டால் ஒரு உதவி அரசாங்க ஏஜன்ட் கந்தோர். ஒரு டிஸ்பென்ஸரி, ஒரு கிராமச்சபைக் கந்தோர் என்றிருக்கும். அங்கு வேலை செய்பவர்களைப் பற்றி கிராமத்தில் எல்லோருமே அறிந்திருப்பர்.''

''அதுபோக தம்பி! நேற்று நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டதுமே உங்களைக்காண வேண்டும். உங்களோடு கதைக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டு விட்டது. அதுதான் இன்றைக்கு உங்களைக் கூட்டி வரும்படி மகளிடம் சொன்னேன். ஏன் தெரியுமா?''

''எனக்கு எப்படித் தெரியும், உங்கள் மகள் கூட அப்படி யொன்றும் என்னிடம் சொல்லவில்லையே!''

''அவவுக்கு அதொன்றும் தெரியாது! இலங்கையில் வை. எம். எம். ஏ. ஐத் தொடங்கி வைத்த ஆரம்பகால உறுப்பினர்களுள் நானும் ஒருவன். நீண்ட காலம் அவ்வியக்கத்தில் இருந்து பணியாற்றியுள்ளேன். அதன் பயனாக எனக்கு இலங்கை எங்கும் எத்தனையோ நண்பர்கள் இருக்கிறார்கள். இவ்வாறு அதில் ஈடுபாடுள்ளவன் நான். ஆதலால்தான் அதன் இன்றைய தலைவரை என் வீட்டுக்கு அழைத்து கௌரவிக்க எண்ணினேன்.''

''இவ்வாறு எல்லாரிடமும் இந்த ஆர்வம் இருந்தால் இளைஞர்களாகிய நாங்கள் எங்கள் பணியைத் திறம்படச் செய்யலாம். நீங்கள் தந்த இந்தகௌரவத்தை நான் எப்பொழுதுமே மறக்க மாட்டேன். நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.''

''அதுமட்டுமில்ல தம்பி! நீங்கள் எவ்வளவுதான் கெட்டிக்காரராகவும், உழைக்கும் திறன் உள்ளவராகவும் இருந்தாலும் அனுபவம் குறைந்த இளைஞர். ஆனபடியால் உங்களுக்கு ஏதும் ஆலோசனைகள் தேவைப்பட்டால், இதன் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட விபரங்கள் தேவைப் பட்டால்

எந்த நேரமும் என்னிடம் வாருங்கள். நான் உதவி செய்ய முடியும்.''

''மிகவும் நன்றி. முக்கியமான காரியங்கள் வரும்போது நிச்சயமாக உங்களிடம் வந்து நான் ஆலோசனை பெறுவேன்.''

''அது இருக்க, ஜேர்மனிக்கு எப்போது போறீங்க. எவ்வளவு காலம் அங்கே தங்குவீர்கள்?''

''இன்ஷா அல்லா! இன்னும் மூன்று மாதத்தின் பிறகு போவேன். இளைஞர் மகாநாடு ஒருவாரம் நடக்குமாம். இன்னும் ஒரு வாரம் தங்கி அந்த நாட்டையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு திரும்பி விடுவோம்!''

''நல்ல சான்ஸ்! சிறந்த அனுபவம் கிடைக்கப் போகிறது. அதனை நல்ல முறையில் உபயோகித்துக் கொள்ளுங்கள்.''

''வாப்பா! சாப்பாடு ஆயத்தம்'' என்று றஸீனா வந்து சொன்னாள்.

இருவரும் எழுந்து சாப்பாட்டு அறைக்குச் சென்றனர். இரு கதிரைகள் தான் போடப்பட்டிருந்தன. இதன் பொருள் றஸீனா மேசைக்கு வரப் போவதில்லை என்பது. ஒரு வயது வந்த பெண் ஒரே மேசையில் தகப்பனோடும், பிற ஆடவர் ஒருவரோடும் இருந்து சாப்பிடுவது அவ்வளவு சிறந்ததல்ல என்று கருதி றஸீனா இந்த ஒழுங்கை செய்திருக்கலாம். அன்றியும் ஒரு கட்டுப்பாடான சமுதாயம் இதனை விரும்பாது அல்லவா?

விருந்து மிகப் பிரமாதமாக அமைந்திருந்தது. சாதாரணமாக ஹோட்டல்களில் சாப்பிட்டு பணம் கொடுத்து வயிற்று வலியை வாங்கும் ஒருவருக்கு இப்படி அன்பும் கௌரவமும் கலந்த விருந்து கிடைப்பதென்றால் கேட்க

வேண்டுமா? மகிழ்வும் நிறைவும் கலந்த விருந்தில் ஜெமீல் திக்கு முக்காடினுர்.

சாப்பாட்டு மேசைக்கு முன்னுல் இருந்த ஜன்னலின் படுதாவை விலக்கிக்கொண்டு யாரோ வந்து ஜெமீலைப் பார்ப்பதையும் அவன் கவனித்தான். அது றஸீனுவின் உம்மாவாகத்தான் இருக்க வேண்டும். ஒரு ஆண் எவ்வள வுதான் பகிரங்க பாதையில் சென்ருலும், பெண்கள் இப் படித் திரைச் சீலையை விலக்கிக்கொண்டு, அல்லது வேலிக்கு ஓட்டை போட்டுக் கொண்டுதான் பார்ப்பார்கள். இதில் அவர்களுக்கு ஒரு திருப்தி.

ஜனுப் முகையதீனுக்கு மத்திய கிழக்கு நாடுகள் பற்றிப் பேசுவதென்ருல் அலாதி விருப்பம். அங்கு தொழில் வாய்ப்புப் பெற்றுப் போனவர்கள் அவர்கள் எடுக்கும் கொழுத்த சம்பளம், வாழும் உல்லாச வாழ்க்கை பற்றி எல்லாம் ஜெமீலுடன் பேசினுர்.

''தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்லவாய்ப்பும், கொழுத்த சம்பளமும் கிடைக்கிறதே, அங்கு நீங்களும் ஒருக்கால் போய் வரலாமே!'' என்று அவரைக் கேட்டான் ஜெமீல்

''நியாயமான கேள்விதான் தம்பி! எனக்கு றஸீனு வோடு அவவின் காக்காவும் - ஆக இரண்டு பிள்ளைகள் இருக்கிருர்கள். இருவருக்குமே இன்னும் விவாகம் ஆக வில்லை. இவர்களின் விவாகத்தை முடித்து விட்டு மக்கா வுக்கு ஹஜ்ஜுக்குப் போக ஆசையாக இருக்கிறேனேதவிர, இனியும் பொருள் தேடுவதில் எனக்கு ஆர்வமில்லை'' என் ருர் முகையதீன்.

நேரம் 12-45 ஆயிற்று. றஸீனு வங்கிக்குப் போவதற்கு ஆயத்தமாக வந்து 'வாப்பா நேரமாயிற்று நாங்க வரட்டா' என்று அவர்களுடைய சுவாரஸ்யமான உரை யாடலை இடைமறித்தாள். 'ஓமோம்! தம்பி நேரமாகுது!

நீங்க போங்க! மறந்திராம அடிக்கடி இந்தப் பக்கம் வந்து போங்க!' என்று ஜெமீலை வழி அனுப்பினுர் முகையதீன்.

இருவரும் புறப்பட்டு பாதையில் சென்று மறையும் வரை முகையதீனும் அவருடைய மனைவியும் அவர்களைப் பார்த்தபடியே நின்றனர்.

இருவரும் வாவி ரோட்டுக்குத் திரும்பினர். இடப்பக்கம் நீண்டு வளைந்து செல்லும் மட்டக்களப்பு வாவியின் துலா பூர்வமான அழகு. அதன் மீது கம்பீரமாகக் தோற்றமளிக்கும் பிரமாண்டமான இரும்புப் பாலம். இரண்டு தோணிகளில் மீனவர்கள் நின்று கொண்டு தம் தோளில் கிடக்கும் வலைகளை ஆற்றின் மீது அனுயாசமாக வீசும் அழகு. இவற்றில் மனம் கொண்டவனுக நடந்து வந்தான் ஜெமீல். ஆற்றை வருடி அள்ளி வீசும் தென்றற் காற்று தகிக்கும் வெயிலின் வெம்மையைத் தணித்து இவர்கள் மீது படிந்து சோபனம் கூறிச் சென்றது.

ஒரு மர நிழலில் போய் ஒதுங்கி நின்ற ஜெமீல், வலது புறமாக, மீன் வடிவில் கட்டப்பட்டிருந்த மாதா கோயிலின் கலை அழகைப் பார்த்து ரசித்தவனுக அப்படியே நின்ருன்.

''இதென்ன இது அப்படியே நின்று விட்டீர்களே'' என்று சிரித்தவாறு கேட்டாள் றஸீனு.

'தகிக்கும் வெயிலில் வருவோருக்கு குளிர் ஊட்டி நிற்கும் இந்த ஆற்றின் இனிய தென்றலைச் சிறிது நேரம் அனுபவித்து விட்டுப் போகலாமே றஸீனு. வானளாவ நிற்கும் இம்மாதா கோயிலின் மீன்வடிவத் தோற்றத்தின் கலை அழகைப் பாருங்கள், எவ்வளவு சிரமம் எடுத்து இதனைச் செய்திருக்கிருர்கள்.'

'ஆம்! பாடும் மீன் வாழும் இவ்வாவியின் முன்ஞல் இக் கோயில் அமைந்ததால், அதனை மீன் வடிவில் செய்துள்ள

னர். கலைகளைச் சமயங்கள் தானே வளர்த்தன. அதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டு.''

''கலை அழகு ஒரு புறம், இயற்கை எழில் மறுபுறம், காவிய வடிவம் இன்னோர் புறம், நான் இவ்விடத்தை விட்டு எப்படி நகர முடியும் றஸீனா!''

''அது சரி! காவிய வடிவம் எங்கிருந்து இங்கு வந்தது? காவியம் படித்துணரலாம் என்றுதான் அறிந்திருக்கி றேன். உருவமாக வரும் என்று இப்பொழுதுதான் கேட்கி றேன். நேரமாகிறது உங்கள் கலை அழகையெல்லாம் இங் கேயே வைத்துவிட்டு வருகிறீர்களா! 'பேங்கில் கணக்க ழகை' பார்ப்போம்'' என்றாள் றஸீனா.

இருவரும் வங்கியைப் போய்ச் சேரும் போது மனேஜர் ருத்திரமூர்த்தி முன்னால் நின்று 'வருக! வருக' என்று சிரித்துக் கொண்டு வரவேற்றார்.

அதன் அர்த்தம் இருவருக்கும் விளங்கினாலும் விளங் காதவர்கள் போல சிரித்துக் கொண்டு போய் தம் ஆச னங்களில் அமர்ந்தனர்.

## ( 10 )

**கா**லையில் படுக்கையை விட்டெழுந்த ஷாபிதீன் நேரே அவனுடைய வாசிப்பறையை நோக்கி நடந்தான். எப் பொழுதுமே பாட ஆயத்தம் செய்வதற்காக அல்லது எழுது வதற்காக அந்த அறைக்குப் போகும் அவன், அன்று மிக அவசர அவசரமாக அவனுடைய விவாகப் புகைப் படங் கள் நிறைந்த 'போட்டோ ஆல்பத்தைத்' தேடி எடுத்து அதனைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அவனுடைய மனைவி காலைத் தேநீரை எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குப் போனவள் அவன் அங்கில்

லாதது கண்டு தேநீரோடு வாசிப்பறைக்கு வந்தாள்.

'என்ன இது! தேநீர் கூடக் குடியாம இங்கேயே வந்து உட்கார்ந்திற்றீங்க!, என்று கூறியவளாக அவன் இருந்தெழுதும் மேசையில் தேநீரை வைத்துவிட்டு, மீண்டும் படுக்கையறைக்குப் போய் சிகரட் பக்கற், நெருப்புப் பெட்டி ஆகியவற்றையும் கொண்டுவந்து மேசையின் மேல் வைத்தாள். வாய் கொப்பளிப்பதற்கு ஒரு கிளாசில் தண்ணீரும் வந்தது.

நிமிர்ந்து தன் மனைவியை ஒரு முறை உச்சந்தலை முதல் புறங்கால் வரை உற்றுப்பார்த்தான் ஷாபிதீன். அன்பே உருவான ஒருத்தி இறைவனிடம் அழகையும் வாங்கிக் கொண்டு தன்னிடம் வந்திருக்கிறாள். எனக்கு மனைவி என்று சொல்ல இவளில் என்ன குறை இருக்கிறது? கணவனை உயிராக நேசிக்கும் இவளைப் போன்ற ஒரு மனைவியை வேறு யாரும் பெற்றிருப்பார்களோ என்னவோ? வீட்டுக்கு விளக்கு அன்புக்கு ஓர் உருவம். தியாகத்திற்கு ஒரு சுடர்! எல்லாமிருந்தும் ஆண்டவன்...

ஷாபிதீன் தேநீரைக் கையில் எடுத்து அவளைப்பார்த்த படியே குடித்துக்கொண்டிருந்தான். தேனீரில் இனிப்புக் கலந்திருந்தது. அவளது பார்வையில் அன்பு கலந்திருந்தது

'என்ன இது! புதுசாப்பாக்கிறீங்க! என்னை நீங்க இன்னும் சரியாகப் பாக்கல்லியா? இல்ல நான் இப்ப வேற மாதிரித் தெரியிறேனா?'

'இல்ல பரீதா! இந்த அல்பத்தில, நான் உனக்குத்தாலி கட்டும்போது நீ தலை குனிந்து கொடுத்து அந்தத் தாலியை ஏற்றுக் கொள்வது பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது?

'இப்ப என்ன! அழகு குறைஞ்சு போய் இருக்கிறேனா?

'அப்படி இல்ல! நீ அழகாய் இருக்கிறாய் என்பது வேறு. அந்தப் போட்டோவில் நீ இருக்கிற பாவம், அது வேறு அழகு!'

'அந்தப் பாவத்தை நான் வேணுமென்றே ஏற்படுத்தி கொண்டேன் என்கிறீர்களா?'

'இல்ல! இல்ல! அது ஒவ்வொரு மணப் பெண்ணுக்கும் அந்த வேளையில் இயற்கையாகவே ஏற்படும் நாணத்தாலும் பயத்தாலும் வருபவை! அதைப் படம் பிடித்து வைத்துக் கொண்டு நான் பார்த்துப் பார்த்து இரசிக்கிறேன்!'

'அது சரி இப்போ நான் எப்படி இருக்கிறேன்! மணவறையில் உங்களோடு இருக்கிற மாதிரி இருக்கேனா? இல்ல மாறிப் போயிற்றேனா?'

'ஐந்து வருஷங்களாக உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்! ஒரு மாற்றம் கூட இல்லாம அப்பிடியே இருக்கிறாய்?'

'அப்போ! இப்போ மாற்றம் தேவை என்கிறீர்களா?'

'அது மனித இயற்கை தானே பரீதா? இப்பொழுது ஒரு மாற்றம் தேவை!'

'ஐந்து வருஷமா உன்னை நீயாகவே காண்கிறேன். நீ, நீயாகவே நிற்கிறாய்! சுவை தருகிறாய்! அன்பு காட்டுகிறாய்! எல்லாம் தருகிறாய்!'

'போதாதா?'

'மனித வாழ்வில் போதுமானது எதுதான் இருக்கிறது பரீதா? நிறைவு அற்ற வெளிதான் வாழ்க்கை. அந்த நிறைவைத் தேடி ஒவ்வொருவரும் நடத்தும் போராட்டம் தான் வாழ்க்கைப் பயணம்!'

'இந்த வாழ்க்கைப் பயணத்தில் இறுதிவரை நான் உங்களோடு இருப்பேன். நீங்கள் விரும்பும் நிறைவை உங்

களுக்கு அளிப்பது தான் என் இலட்சியம்!''

'அது உன்னுல் முடியாமலிருக்கிறது என்பதுதானே எனது பிரச்சினே! நீ, நீயாகவே இருந்து அந்த நிறைவைத் தர உன்னுல் இயலாது! உன்னில் என்னேக் காண வேண்டும். அந்த நாள் என்று வரும்?'

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது எனக்கு விளங்குகிறது! என்னில் உங்களேக்காண நானும் ஆசைப்படுகிறேன். ஒரு பெண்ணுக்கு இதைவிட ஆசை வேறு எதுவும் இருக்கமுடியாது.'

'ஒரு ஆண் முதல்ல ஒரு பெண்ணேத்தான் விரும்புகிருன்! ஒருத்தியை மனேவியாக்கிக் கொள்கிருன். அப்புறம் ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள் என்பார்கள். அதன் பிறகு அவனுக்குத் தேவை ஒரு குழந்தை. அது வந்து அவளுக்குப் பாசமாகவும், அவனுக்கு வாரிசாகவும் இருந்து இருவரையும் அன்புக் கயிற்றினுல் பின்னிப் பிணேக்கிறது! இப்படியே நாம் தனித்தனியாக இருந்தால் அந்தப் பிணேப்பு நம்மிடையே இல்லாமல் அறுந்து போய் விடுமோ என்று பயப்படுகிறேன் பரீதா!'

'அந்தப் பிணேப்பு அறுந்துவிடுமோ' என்ற அந்தச் சொற் தொடர் அவளது நெஞ்சைக் குத்திப் பிளந்தது. பாய்ந்து அவனது கரத்தைப் பற்றித் தன் நெஞ்சோடு அணேத்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினுள்.

ஷாபிதீன் எழுந்து அவளே நெஞ்சோடு அணேத்துக் கொண்டு, அழாதே பரீதா! நீ மலடி அல்ல. நீ மென்மையான தாயுள்ளம் கொண்டவள். உனக்கு நிச்சயம் பிள்ளே பிறக்கும் என்ற நம்பிக்கையை நான் இன்னும் இழக்கவில்லே. அந்தக் குழந்தை பேற்று வைத்தியர் மூன்றுமாதங்களாக உன்னேச் சோதித்துப் பார்த்த முடிவை இன்று சொல்லப் போகிருர். நம்பிக்கையான நல்ல முடிவும்

சிகிச்சை முறைகளும் இன்று கிடைக்கப்போகின்றன. நீ, தைரியமாக இரு. இறைவன் மங்களமாக ஆக்கி விடுவான்.

'இந்த ஐந்து வருஷமா நாமதான் எவ்வளவு வைத்தியம் பாத்திருக்கோம்; எத்தனை டாக்டர்களிடம் காட்டி இருக்கோம், என்ன நடந்தது? மீராக்குட்டி ஆலிம் வெள்ளைப் பீங்கானில் இசும் எழுதி நாப்பது நாள் கரைத்துக் குடிக்க தந்தாரே! அவர் கட்டின, துவாதான் எத்தனை? அவர் பாத்து எத்தனையோ பெண்கள் பிள்ளை பெற்று இருக்காங்க. எனக்கி அதுகூட பிரயோசனம் இல்லாமல் போயிற்றே!

இல்லை பரீதா. இந்த டாக்டர் குழந்தை வைத்தியத்தில் பேர் போனவர். இதுக்கென்று இங்கிலாந்துக்குப் போய் மூன்று வருஷம் படித்தவர், அவர்ல எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அல்லது நீ ஏன் பிள்ளைப்பெற முடியாமல் இருக்கிறாய் என்ற காரணத்தையாவது கூறுவார். அதையாவது அறிந்து கொண்டு இந்த முயற்சிகளை இனிமேல் நாம் கைவிடலாம்.

பரீதா சிந்திய கண்களோடு கணவனின் அணைப்பிலிருந்து விடுபட்டுப் போனாள். அவளுடைய மனப்பாரம் அவளுக்குத் தாங்க முடியாத வேதனையைத் தந்து கொண்டிருந்தது. இயக்கமே அற்றவளாக படுக்கை அறைக்குப் போய் கட்டிலில் விழுந்தாள்.

அவளுடைய கணவன் வாங்கி வந்த அழகானதொரு ஆண் குழந்தையின் படம் ஒன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. இவளுடைய கண்கள் அப் படத்தில் விழுந்தன. குழந்தை தன் ரோஜா இதழ், உதடுகளைக் குவித்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அதன் மல்லிகை அரும்புப் பற்கள் வெளியே தெரியும் போது அந்த அறை முழுவதும் பிரகாசிப்பது போலத் தோன்றியது. வார்த்தெடுத்த சிற்பம்

போல உருண்டு திரண்ட உடலழகைக் காணும் போது அதனை அப்படியே அள்ளி நெஞ்சோடு அணைத்துக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அவளால் இனியும் தாங்க முடியவில்லை. எழுந்து முன் மண்டபத்திற்கு வந்தாள்.

வெளிப்பக்கத்து நிலையில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள். முன்னால் இருந்த 'ஷோகேஸ்' அவளது கண்ணில் பட்டது. அதற்குள் கண்களை விழித்து விழித்துப் பார்க்கும் ஒரு பூனையின் பொம்மை இருந்தது. சடைதன்னை மூடியுள்ள நாயென்று உயிர் பெற்றது போல ஆடிக்கொண்டிருந்தது. புலி, மயில் இப்படி எத்தனையோ வகைப் பொம்மைகள்! மன்னர் ஷாஜஹான் தன் மனைவி மும்தாஜ் மீது கொண்டிருந்த பெருங்காதலின் நினைவுச் சின்னமான தாஜ்மஹால் — சிற்பம் ஒன்றும் அதனுள்ளிருந்தது. அவளது கண்கள் இவற்றையெல்லாம் ஊடுருவிப்பார்த்தன.

நான் பெற்ற ஒரு செல்வத்தின் சிறு நெளிவின்முன், அம்மா என்று அது அழைக்கும் அமுத கானத்தின் முன் இவையெல்லாம் ஈடு கொடுக்குமா...? இவை யெல்லாம் பொம்மைகள்! உயிரற்றவை. நான் கூட இவற்றைப்போல ஒரு பொம்மைதான், அழகாக இருக்கிறேன். அலங்காரமாக உடுக்கிறேன். கணவனுக்குத் துணையாக வாழ்கிறேன். எனினும் வாழ்வின் ஜீவனை நான் இழந்தவள். அதன் இன்ப அனுபவங்களை அழித்துக் கொண்டவள்.

இந்த பொம்மைகள் கூட உயிர் பெற்று விளங்கும். அது எப்போ தெரியுமா? ஒரு குழந்தை அதனை வைத்து விளையாடி, அதன் ஒரு காலை ஒடித்து, மறுகாலில் பிடித்தவனாக அதனைத் தலை கீழாகத் தூக்கிக் கொண்டு வருவானே! அப்பொழுதுதான் அது உயிர் பெறுகிறது. இவ்வாறு 'ஷோகேஸ்' சிற்குள்ளே இருக்கும் வரை அது பொம்மையே பொம்மைதான்!

காயாத மரம், அதனை யார் வைத்துத் தண்ணீர் ஊற்றுவார்? பூவாத செடி, அது முற்றத்தை நிரப்பிக் கொண்டிருப்பதை யார் விரும்புவார்? ஆண் பனை! அது வெறும் பூவைப் பூத்து சில நாளில் அப்பூவும் கருகிப் போக, அது வெறுமனே நெட்டை மரமாக நிற்கிறது. நான் காயாத மரம், பூவாத செடி, ஆண் பனை, என் கணவன் என்னையும் மனைவி என்று வைத்திருப்பதால் என்ன இன்பம் கண்டார்? வாழ்வின் முக்கால்வாசி இன்பத்தையும் அவர் இழந்து நிற்பதால் அவரே ஒரு போலி மனிதராகிறார்! ஒரு பொம்மையாகிறார்! இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு நானே காரணம்! அவர் பாவம்!

அனேகமான டாக்டர்கள் நான்தான் மலடு என்று கூறிவிட்டார்கள். சில வேளை அது இடையில் நீங்கி பிள்ளை பிறக்கவும் கூடும் என்றும் கூறினர். 'அந்தச் சில வேளை' யில் என்பதை வைத்துக் கொண்டு என் கணவர் நப்பாசை கொள்கிறார். இந்தச் 'சில வேளை, எனது ஐம்பதாவது வயதில்தான் வரப்போகுதோ என்னவோ? அதனை நம்பிக்கொண்டு நாங்களிருவரும் இருக்க வேண்டியதுதானா?

இந்தக் குழந்தை வைத்திய நிபுணரும் மூன்று மாதங்களாக எனக்கு வைத்தியம் செய்துவருகிறார். எத்தனையோ விதமான சோதனைகள் செய்துவிட்டார். இன்றைக்கு அவருடைய இறுதியான முடிவைச் சொல்லப்போகிறார். என் வயிற்றில் கர்ப்பம் தரித்தால் அது எனக்கே இதுவரை தெரிந்து விடுமே! இனிமேல் பிறக்குமா? பிறக்காதா? என்ற சோதிடத்தை அவர் கூறப் போகிறார். அதை நானே கூறிவிடுகிறேனே! எனக்குக் குழந்தை பிறக்காது. நான் கந்து கவர் இல்லாத தனி மரம்!

அன்று பின்னேரம், ஷாபிதீனும். மனைவியும் டாக்டரிடம் செல்லப் புறப்பட்டனர். இருவருடைய இதயங்களிலும் பீதி குடிகொண்டிருந்தது. அதனால் முகங்கள் வெள்ளை

யடித்துத் தோன்றின. தேர்தல் முடிவை எதிர் பார்த்திருக்கும் அபேட்சகர்களைப் போல இருவரும் காட்சிதந்தனர். அவர்கள் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. கார் டாக்டரின் வீட்டுக்கு முன்னால் நின்றது.

இருவரும் இறங்கிப்போய், 'வெயிற்றிங்ஹோலில்' இருந்தனர். 'மிஸ்டர் ஷாபிதீன் கொஞ்சம் வருகிறீங்களா?' என்று டாக்டர் அவரைத் தம் அறைக்கு அழைத்தார்.

டாக்டர் அவ்வளவு உற்சாகமாக இல்லை. செயற்கையான ஒரு புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு 'மிஸ்டர் ஷாபிதீன் கடந்த மூன்று மாதங்களாக உங்கள் மனைவியை நான் பார்த்தேன். என் படிப்பு முழுவதையும் அவவில் பிரயோகித்தேன். நிச்சயமாக நீங்கள் மலடல்ல என்பது என் முதல் சோதனையிலே தெரிந்து கொண்டேன். எனவே, என் கவனம் முழுவதையும் அவவில் செலுத்தினேன்!

ஒரு பெண் பிள்ளைப்பெறாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கால் வாசிக் காரணங்களையும் எங்களால் சரி செய்யமுடியும்! இவவுக்கு கர்ப்பம் தரிப்பதில் இரண்டு முக்கிய காரணங்கள் தடையாக இருக்கின்றன. ஒன்று; ஒருபெண் கர்ப்பம் தரிப்பதற்காக உற்பத்தி செய்து கொள்ளும் முட்டைக்கரு 'பெலோ பைன் ரீயூப்' என்ற குழாய் வழியாக கர்ப்பாயசத்தை வந்தடைந்து ஆணின் ஜீவதாதுவோடு சேர்ந்து கருக்கொள்கிறது. உங்களுடைய மனைவியின் 'பெலோபைன் ரீயூப்' பில் ஒரு அடைப்பு இருக்கிறது அல்லது அது செயலிழந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது. இதனால் முட்டை ஆணின் ஜீவதாதுவோடு சேர்ந்து கொள்ள முடியாமலிருக்கிறது. இரண்டாவது காரணம் உங்கள் மனைவி தாய்க்கொரு பிள்ளை இவவுடை தாய்க்கும் 'பெலோபைன் ரீயூப்' தடைதான் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவவுடைய நிலைமையை விட தாயின் நிலைமை சற்று நன்றாயிருந்ததால் தான் இவ

கர்ப்பமாயிருக்கிறு. இந்தப்பரம்பரைக் காரணமும் இருக்கிறது. மூன்ருவது நியாயம் ஒன்றும் நான் கூறுவேன் ஷாபிதீன்!, என்று கூறிக்கொண்டு டாக்டர் சிரித்தார். ஷாபிதீன் மிக ஆவலோடு அவரின் முகத்தைப் பார்த்தான்! 'ஆம்! இறைவனுடைய அற்புதம் எங்களுடைய வைத்தியத்தைவிட மேலானது. அவனுடைய அற்புதங்களைக் கண்டு பிடிப்பதுதான் வைத்தியம். ஆதலால் ஒரு நாள் திடீரென இந்தக்குழாய் திறந்து கொள்ளவும் கூடும். உங்களுக்கு அழகிய குழந்தையொன்று கிடைக்கவும் கூடும். இதனுல் உங்கள் மனைவி திட்டமாக மலடுதான் என்று என்னுல் கூறமுடியாது.''

ஷாபிதீனும் டாக்டருக்காகச் சிரித்துக் கொண்டான். சரி டாக்டர் நான் வருகிறேன். நீங்கள் மிகச் சிரமம் எடுத்துப் பார்த்தீர்கள். மிக்க நன்றி என்று கூறிக்கொண்டு எழுந்தான் ஷாபிதீன்.

ஷாபிதீனும் மனைவியும் காரில் ஏறினர். டாக்டர் என்ன கூறினுர் என்பதை அறிய பரீதா அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வழமையான கதைதான் பரீதா! எல்லா டாக்டர்களையும் போல இவரும் கூறினுர். இவர் காரணங்களையும் விளக்கினுர். அவ்வளவுதான்''

பரீதா விம்மி விம்மி அழத் தொடங்கினுள். அவளது விசும்பல் ஒலி காரின் சப்தத்தோடு போட்டியிட்டது. அது பாலைவனத்தில் வீசும் சூறைக்காற்றுப் போல ஷாபிதீனுக்குக் கேட்டது. ஆம்! அவள் ஒரு பாலைவனம் தானே! இனி நம்பிக்கையை இழந்து நின்ருன் ஷாபிதீன்.

அன்று ஜெமீலும், றஸீனாவும் முன்னமேயே வங்கிக்கு வந்துவிட்டார்கள். றஸீனா வழக்கமாகவே ஒன்பது மணிக்கு வருபவள். இப்பொழுதெல்லாம் எட்டரை, எட்டே கால் என்று வரத்தொடங்கினாள். ஜெமீலும் அவளை அறியாமலே அவள் வருகிற நேரத்திற்கு வரத் தொடங்கினான்.

''என்ன; ஜேர்மன் பயணத்திற்கு எல்லாம் ஆயத்த மாகி விட்டீர்களா?'' என்று கேட்டாள் றஸீனா.

ஓம் றஸீனா! எல்லாம் ஒருவாறு ஆயத்தமாகி வருகின்றன. நாளைக்கு விமானச்சீட்டை 'புக்' செய்கிறோம். போவதற்கு ஒருவாரம் முன்னதாகத்தான் ஜேர்மன் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்குரிய உத்தரவுச்சீட்டான 'விஸா' தருவார்கள். அப்புறம் 'இலங்கை ரூபாய்களை' ஜேர்மன் பிராங்குகளாக மாற்றிக்கொண்டால் விமானம் ஏற வேண்டியது தான். முக்கியமான காரியம் ஒன்று இன்னும் ஆகவில்லை!

'என்னது'

''மகாநாட்டில் நிகழ்த்துவதற்கான பிரசங்கம் இன்னும் தயாரில்லை. சில புத்தகங்கள் வாசித்த மாதிரி கிடக்குது; குறிப்புகள் சில எழுதிக்குறை! ஒரு நாட்டின் குரல் அல்லவா நான் ஒலிக்கப்போவது? அதை எவ்வளவு காத்திரமாகச் செய்ய வேண்டும்?

''நீங்கள் பேசும் தலைப்பு!''

''இன்றைய இளைஞர்களின் பிரச்சினைகள்!''

றஸீனா சிரித்தாள்; ''அருமையான தலைப்பு!'' இன்றைய இளைஞர்களுக்கு புதுப்புது பிரச்சினைகள் எல்லாம் எவ்வளவோ உண்டு. பிரச்சினைகள் அவர்களை நோக்கி வந்தனவா? அல்ல பிரச்சினைகளை அவர்களே உருவாக்கிக் கொண்டார்களா? என்பதுதான் எனது பிரச்சினை!

உலகம் விரிந்துவிட்டது. தேவைகள் அதிகரித்துவிட்டன. கல்வி அறிவு கூடி விட்டது! தொழில் வாய்ப்பு குறைந்துவிட்டது! இந்த அலைகள் எல்லாம் போய் இளைஞர் என்னும் கரையைத்தானே மோதி உடைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த தாக்கங்களிலிருந்து அவர்கள் தங்களைக் காத்துக்கொண்டு அவ்வலைகளை கரையோடு சங்கமமாக்கிக் கொள்ள வேண்டிய திறனை அவர்கள் ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறதே! இந்நிலையில் அவர்களே பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்கிறார்கள் என்று எவ்வாறு கூறலாம் றஸீனா?

இல்லை! இன்றைய இளைஞர்கள் உடை, நடை, பாவனைகளில் ஒரு போலிக் கௌரவத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நாட்டின் தேசிய நலனுக்கோ, சமுதாயத்தின் உயர்வளர்ச்சிக்கோ, தன் சொந்த வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கோ உழைக்கும் இளைஞர்கள் இன்று மிகக்குறைவு. இரண்டொரு டெர்லின் சேர்ட்டுகளுக்காகவும் இரண்டொரு காற்சட்டைகளுக்காகவும் மட்டுமே அவர்கள் உழைக்கிறார்கள்! அப்புறம் டோபிச்செலவும் தம் தாயிடம் இருந்தே பெறுகிறார்கள்.

இளைஞர்களை மிகவும் தாக்கிப் பேசுகிறீர்கள்! இது அவர்களுடைய கௌரவப் பிரச்சினையில் கைவைப்பது ஆகும்.

இல்லை, நொண்டி நொண்டிப் போகிறவனைப் பார்த்து நொண்டி என்றால் அவனுக்குக் கோபம் வரத்தான் செய்கிறது! அதற்காக நாம் என்ன செய்யலாம்? நான் என்ன சொல்கிறேன் என்றால் இளைஞர்களெல்லாம் இன்று 'வெள்ளை சேர்ட்' உத்தியோகத்தையே தம் வாழ்வின் தெய்வம் எனப்பூசித்துக் கொண்டிருக்கிறார்கள். போதிய படிப்புத் தகைமை இல்லை போதிய தொழில் அறிவும் இல்லை. இந்த நிலையில் அவர்களுக்கு எப்படி தகுதியான உத்தியோகம் கிடைக்கும்? நல்ல வருவாய் கிடைக்கும்?

நானூறு ரூபாய்க்குட்பட்ட சம்பளம்பெறும் சிற்றூழியத்தில் தான் அனேக இளைஞர்கள் இருக்கிறார்கள்!

''இதுவே ஒருபெரும் பிரச்சினை இல்லையா?''

இது அவர்களாகவே ஆக்கிக்கொண்ட பிரச்சினை என்பதுதான் என் வாதம்! நமது மட்டக்களப்பு பகுதியை எடுத்துக்கொள்ளுங்கள். நவீன முறையில் விவசாயம் செய்யப்படுகிறது! நல்ல விளைச்சல் கிடைக்கிறது! இதனால் எவ்வளவோ பேர், கார் என்றும், உழவு மெஷின் என்றும் நல்ல வசதியோடு இருக்கிறார்கள். ஹிங்குறான சீனித் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலெல்லாம் கரும்புச்செய்கை பண்ணப்படுகிறது. நிலம், முளைக்கரும்பு, பயளை, எண்ணெய்வகை, ஆரம்ப செய்கைக்கான முன் பணம் எல்லாம் அரசாங்கமே கொடுக்கிறது. மூன்று ஏக்கரில் கரும்பு செய்யும் ஒருவர் இருபதினாயிரம் வரை இலாபம் பெறுகிறார். இந்த நல்ல வாய்ப்பை எத்தனை இளைஞர்கள் பயன்படுத்துகிறார்கள்? இது சொந்தமான உழைப்பாக அமைவதுபோக, நாட்டின் தேசிய நலனுக்காக நாம் ஆற்றும் பணியாகவும் இருக்கிறதல்லவா? படித்த இளைஞர்கள் முந்நூறு ரூபா உத்தியோகத்தைவிட்டு உழைப்புத் துறைகளுக்குத் திரும்புகிறவரை இந்நாடு ஒருபொழுதும் முன்னேற முடியாது.

''றஸீனா! ஜேர்மன் மகாநாட்டுக்கு உங்களையே அனுப்பிவிடலாம் போலிருக்கிறதே!''

''நீங்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். நான் சர்வகலாசாலையில் 'சமூகக்கல்வி' எடுத்தவள். இந்த இளைஞர்களைப்பற்றி எனக்கு நிறையத்தெரியும்''. நீங்கள் போகப்போகிறீர்களே ஜேர்மனி! அது மட்டுமல்ல மேற்கு நாடுகளிலெல்லாம் தோன்றிவரும் புது இயக்கங்களையெல்லாம் பாருங்கள், ஹிப்பீஸ், பீடில்ஸ், ஹரேராம் ஹரே கிருஷ்ண இயக்கம்! இவைகள் பெரும் சக்தி வாய்ந்த இயக்கங்களாகத்தோன்றி வளர்ந்து வருகின்றன. எல்லாவற்றி

லும் விரக்திகொண்ட இளைஞர்கள் நிறைய இருக்கிறார்கள். இந்த விரக்தியைப் போக்கிக்கொள்ள ஆண்களும் பெண்களும் ஒழுக்கம்கெட்ட நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள். பூங்காக்களிலும், கடற்கரைகளிலும் நிர்வாண கோலத்தில் கிடக்கிறார்கள். எங்களது பண்பாட்டையும் சீர்குலைக்கவே இவர்கள் இங்கு வருகிறார்கள். இதைப்பற்றியெல்லாம் நீங்கள் நல்ல முறையில் அந்த உலக மகாநாட்டில் எடுத்துக் கூற வேண்டும்.

றஸீனா! ரொம்ப வேலைப்பளுவில் இருக்கிறேன். நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?

நிச்சயமாக......

பிரசங்கத்தைத் தயாரித்து, அதனை டைப்செய்து, ஆயிரம் பிரதிகள் அச்சடிக்க வேண்டும். இதில் உங்களது உதவி தேவை!

''நான் இவ்வளவும் பேசிவிட்டதால் எனக்கு விஷயம் தெரியும் என்று நம்புகிறீர்களா?

''அப்படி இல்லை றஸீனா! நான் வேண்டிய குறிப்புகளெல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன். அதை நீங்கள் ஒரு கட்டுரை வடிவில் தயாரித்து 'டைப்' செய்து தரவேண்டியதுதான். பின்னர் நான் அதை அச்சிட்டுக் கொள்கிறேன்; எல்லாம் எனக்கு நெருக்கடியாகிவிட்டது. இன்னொருவர் உதவி இல்லாமல் என்னால் சமாளிக்க முடியாது''.

''உங்கள் கட்டளைக்கு நான் பணிகிறேன்! உங்களுடைய நல்ல பணிக்கு என் பங்கையும் செய்கிறேன். பிரசங்கத்தைத் தயார் செய்து வாப்பாவிடமே கொடுத்து விட்டால், ஆங்கிலத்தில் தவறு இருந்தாலும் திருத்தி, வாப்பா அழகாக டைப் செய்து தருவார்''.

வீட்டில் 'டைப்ரைற்றர்'

ஆமாம்! இருக்கிறது! வாப்பா கையால் எதுவும் எழுத மாட்டார். எல்லாம் டைப்பிலேயே செய்வார்.

ஒருவாரம் கழிந்தது. றஸீனா டைப் செய்யப்பட்ட மூன்று பிரதிகளை ஜெமீலிடம் கொண்டுவந்து கொடுத்தாள்.

அதனை பெருமட்டாக ஒருமுறை வாசித்துப்பார்த்தான் ஜெமீல். தான் கொடுத்த குறிப்புகளையெல்லாம் அப்படியே வைத்து, இன்னும் சில அருமையான கருத்துக்களையும் சேர்த்து அழகான பிரசங்கம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஒரு பெருஞ்சுமையும் தன்னைவிட்டு இறங்கியதாகவும் உணர்ந்தான்.

நான் உங்கள் குடும்பத்திற்கே மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்தப் பிரசங்கத்தை நிகழ்த்தும்போது என் மனக்கண்ணின் முன் நீங்கள் தான் நிற்பீர்கள். மிகவும் நன்றி! வாப்பாவிடமும் சொல்லுங்கள்.

அவனது நன்றிப்பெருக்கை ஏற்றுக்கொண்டதால் மனம் பூரிப்படைந்த றஸீனாவின் முகம் வெட்கத்தால் நாணிச் சிவந்து போயிருந்தது. அவன் அவளை அப்படியே விழுங்கி விடுபவனைப்போலப் பார்த்தான்.

'என்ன இப்பிடிப் பாக்கிறீங்க, இதையும்கூட வாப்பாவிடம் சொல்லவா?'

'வாப்பா இதை அனுமதிக்க மாட்டாரா?'

இது சட்டமும் சமூகமும் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். இதற்கான அனுமதியை வாப்பாவிடமே நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நாம் இரண்டுபேரும் அன்று நெடுஞ்சாலை வழியாக ஒன்றிணைந்து வரும்போது, வாப்பா மட்டுமில்லை, உம்மாவும் கூட அனுமதித்துக் கொண்டுதானே நின்றார்கள்! இனியும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உத்தரவு தேவையா?

'முந்தானையால் முகத்தை மறைத்துக்கொண்டு போங்கள்' என்று கூறியவளாக தன் இருப்பிடம் சென்றாள் றஸீனா.

ஜெமீலுக்கு மாமி ஸாஹிரு உம்மா கொடுக்கவிருந்த விருந்து, குறித்த சனிக்கிழமை நடைபெறவே இல்லை. முதல்நாள் வெள்ளிக்கிழமையே ஜெமீல் கொழும்புக்கு இயக்க சம்பந்தமான வேலையாகப் போயிருந்தான். தொடர்ந்து வந்த சனி, ஞாயிறெல்லாம் இப்படி ஒவ்வோர் காரணங்களால் ஜெமீலுக்கு வசதியீனமாகப் போயிற்று.

கடைசியாக அவன் ஜேர்மனிக்குப்போகும் பிரியா விடை விருந்தாக அது அமைந்தது.

அன்று அதிகாலையிலேயே ஸாஹிரு உம்மா எழுந்து கூட்டுக்குள் இருந்த இரண்டு அழகான சேவல்களைப் பிடித்து 'தக்பீர்' செய்வதற்காகப் பள்ளிவாசலுக்கு அனுப்பி வைத்தாள். சுபஹு தொழுதுவிட்டு முஅத்தினுர் பள்ளிவாசலை விட்டு வெளியிறங்குவதற்கிடையில் அவற்றைத் 'தக்பீர்' செய்யாவிட்டால், பிறகு தக்பீர் செய்து கொள்வது கஷ்டம் என்பதை அவள் அறிவாள். பையனொருவன் கோழிகளையும் எடுத்துக்கொண்டு, கத்தி, 'தக்பீர்' செய்வதற்கான கூலி இரண்டு ரூபாய் சகிதம் பள்ளிவாசலுக்குப்போனுன்.

உம்மாவோடு பானுவும் விடிய முன்னமே எழுந்து விட்டாள். அவளுக்கு அன்று ஹஜ்ஜுப் பெருநாள்மாதிரி ஒரே மகிழ்ச்சி. உம்மாவுக்கு உதவியாக அவளும் வேலைகளில் மூழ்கிக்கிடந்தாள். உம்மா காலைத் தேநீர் தயாரித்துக் கொண்டிருக்கும்போதே, அவள் வெங்காயத்தை எடுத்து அதனை உரித்துத் துப்புரவாக்கத் தொடங்கினுள். ''உம்மா மச்சானுக்கு வெண்டிக்காய்ப் பொரியல் என்ருல் மிச்சம் விருப்பமாம், என்று ருஹிலா மச்சி சொல்லிச்சி, நேத்து நாம வெண்டிக்காயே வாங்கலியே உம்மா'' என்று கூறினுள் பானு!

''அதுக்கென்ன கொஞ்ச நேரத்தில, சந்தைக்கு ஆள் அனுப்பி வாங்குவம். பொரியலுக்கு மீனும் ரெண்டு ருத்தல் வாங்கணும்! எல்லாத்துக்கும் கோழி அறுக்கப்போன பொடியன் வரட்டுமே! பொழுது விடிஞ்சிதானே, சந்தைக் கடைகளும் திறப்பாங்க!''.

சாஹிரு உம்மாவுக்கு நான்கு ஆண் குழந்தைகளுக்குப் பிறகு பானு ஒருத்திதான் பெண்! ஆதலால் பானுவை மிகச் செல்லமாக வளர்த்திருந்தாள். பெண்களுக்கு அதிகம் படிப்பு தேவையில்லை என்று அவளை எட்டாம் வகுப் போடு நிறுத்திக் கொண்டாள் சாஹிரு. தற்காலத்து நாகரிகங்கள், நடைமுறைகள் எதுவும் தெரியாது பானுவுக்கு. பதினெட்டு வயதாகியும் இன்னும் பாவாடை, சட்டை, தாவணியோடு மான்குட்டிபோல துள்ளித் துள்ளித் திரிந்து கொண்டிருந்தாள் அவள்.

மகளுக்குக் கல்யாணம் ஒன்று முடித்துப் பார்ப்பது தான் ஸாஹிருவுக்கு இப்பொழுது உள்ள ஒரே ஆசை! அதற்கிடையில் முஸம்மிலுக்கும் வயதேறிவிட்டது. முதலில் அவனுக்குக் கல்யாணம் முடிக்க வேண்டும். அதன் பிறகு பானுவைப் பார்க்கலாம் என்று அவளுடைய கணவன் கூறுகிறான். மகன் ஆண்பிள்ளை எங்குசரி அவனுக்கு விருப்பமான பெண்ணை முடித்துக்கொண்டு போகட்டும். ஆண்பிள்ளை ஊராள் ஒருத்தியின் சொத்துத்தானே! பெண் பிள்ளைதான் பிறந்த வீட்டில் கலகலப்பாக இருப்பவள். அவளுக்குக் கண் நிறைந்த மாப்பிள்ளை எடுத்துக்கொடுத்தால், அது வீடு நிறைந்த மாதிரி இருக்கும். ஆனபடியால் தன்னுடைய விருப்பத்திற்குத்தான் மாப்பிள்ளை எடுக்க வேண்டும் என்று ஸாஹிரு எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டி இருந்தாள்.

அதுவுமில்லாமல் பானு வெகுளித்தனமான ஒரு பெண். எதிலுமே காரசாரம் இல்லாதவள். அவளுக்கு இது முக்கியமானது; இது முக்கியமற்றது என்று எதுவுமே

இல்லை. கலகலவெனச் சிரித்துக்கொண்டிருப்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். குடும்பத்தில் ஒற்றைப்பிள்ளையான படியால் அப்படி வளர்க்கப்பட்டுப்போனுள். இவளைக் கண வனோடு வைத்துப் பழக்கி எடுக்கவேண்டும். அந்தக் காலத் தில் பெண் பிள்ளைகளுக்கு பத்து பன்னிரெண்டு வயதில் கலியாணம் முடித்து விடுவார்கள். அப்புறம் மருமகனுக்கு சோறு போட்டுக்கொண்டு வைப்பது. முகம் கழுவத் தண் ணீர் வைப்பது, குளிப்பதற்கு சாரம், துவாய், சவர்க்கா ரம் கொண்டு கிணற்றடியில் வைப்பது எல்லாம் மாமி யாவே செய்வாள். படிப்படியாக பிள்ளையையும் பழக்கி எடுக்க இரண்டு மூன்று பிள்ளைத் தலைமுறையாகப் போகும். பதினெட்டு வயதாகியும் பானுவும் இந்த நிலையில்தான் இருக்கிறுள். ஸாஹிரு உம்மாவுக்கு இதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை. மருமகனுக்குத் தேவையான காரியங்களை யெல்லாம் செய்ய அவளே ஆசையோடு காத்திருக்கிறுள்! மருமகன் வருவதில்தான் தாமதமிருக்கிறது.

பகல் 12 மணியாகிவிட்டது. முஸம்மில் காரை எடுத் துக்கொண்டு மச்சானை ஏற்றி வரப்போனுன். அவன் கூட இன்று வயலுக்குப் போகவில்லை. மச்சானுக்குச் சாப்பாடு இருப்பதால் அதைக் கவனிப்பதற்காக வீட்டிலேயே நின்றுவிட்டான்.

வீட்டுக்குக் கார்வரும் சப்தம் கேட்டது. பானுவால் இனியும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஒரு குழந்தைப் பிள்ளைபோல முற்றத்துக்கு ஓடிவந்தாள். அங்கு நின்ற மாமரம் ஒன்று காய்த்துக்குலுங்கி பூமிவரை தொங்கியது. அம் மரத்தின் கிளைகளுக்குள் தன்னை மறைத்துக்கொண்டு, இரண்டு குலைகளை இரு கைகளாலும் பிடித்து நெஞ்சோடு அணைத்தவாறு முகத்தை அதனுள் புதைத்துக்கொண்டு பார்வையை மட்டும் எக்ஸ்றே கதிர்களாக வெளியே வீசி நின்றுள். காரிலிருந்து இறங்கிய ஜெமீலுக்கு அந்தக் காட்சி தான் முதலில் கண்ணில் பட்டது. கன்னியும், தாயும் கலந்துறவாடிநின்ற அந்த இயற்கையான அழகு, அவன்

மனதில் நிழல்படம்போல் பதிந்தது அம் மாமரத்தைச் சுற்றிச்சுற்றி அவளைத் துரத்தி விளையாட வேண்டும் போலி ருந்தது அவனுக்கு. அவள் அவனையே விழுங்கி விடுபவள் போலப் பார்த்துக் கொண்டு நின்றாள் அந்தப்பார்வை ஒளிமடுவில் இருக்கும் ஒரு வேட்டைக்காரன், மானின் கண் கள் கூசும் படியாக, தன் கையில் இருக்கும் 'டோர்ச்' வெளிச்சத்தை பிடிப்பதுபோல் இருந்தது. அவளுடைய கூர்விழிப்பார்வையின் முன் இவனுடைய கண்கள் கூடக் கூசின. பானு ஒளிமடுவில் இருந்து தன்னை வேட்டை யாடிக் கொண்டிருக்கிறாள் போலும் என்று அவன் மனம் நினைத்தது.

ஜெமீலைக் கண்ட மாமி, 'தம்பி! வாங்க தம்பி! வாங்க!' இன்டைக்குக் கூட நீங்க வராம இருந்திருவீங்களோ எண்டு பயந்து போயிருந்தன்' என்று கூறியவளாக ''பானு!பானு! மச்சான் வந்திற்றாங்க!'' என்று பானுவுக்கும் மச்சான் வரவை அறிவித்தாள். பானு அவளின் கொடுங்கைக்குள் தான் நின்றுகொண்டு மச்சானின் அழகு விருந்தை அனுப வித்துக்கொண்டிருந்தாள்.

அவளைக்கண்ட சாஹிறா 'இஞ்சதான் நிக்கயா? மச்சா னோடை கதச்சிக்கி நில்லு. நான் மேசையில சாப்பாட்ட வச் சிற்று வர்றேன்' என்று கூறிக்கொண்டுபோய்விட்டாள்.

பானுவை இப்பொழுதுதான் முழுமையாகப் பார்த் தான் ஜெமீல்! படாடோபமற்ற அழகு! முகத்தில் பவுடர் கூடப் போட்டுக்கொள்ளவில்லை. அவள் முகம் எல்லாம் இயற்கையான எண்ணெய் தோய்ந்து ஒளி வீசிக் கொண்டி ருந்தது ஒற்றைக்கலர் நைலக்ஸியில் பாவாடையும் சட் டையும் போட்டு அதற்கேற்ற தாவணியும் அணிந்திருந் தாள். அவளுடைய சுருண்ட கேசங்கள் சில முகத்தில் விழுந்து புரண்டு புரண்டு விளையாடியன. ஒரு குமர்ப் பிள் ளையை இவ்வளவு இயற்கையான அழகுடன் இந்தக்காலத் தில் எங்கும் காண முடியாது? என்று அவன் மனம் எண்ணி யது.

''என்ன! இப்பிடிப் பாக்கிங்க! என்னை இதுக்குமுன்ன கண்டதே இல்லையா?''

'கண்டேன் பானு! அது வேறு பானு! இப்போ என் முன்னே நிற்கும் பானு வேறு''

''ஆமா! எங்களுக்கு நாகரிகம் ஒண்டும் தெரியாதெண்டு, என்னப்பாத்து சிரிக்கிங்களாக்கும்!''

''நாகரிகமா? அது தங்களின் அழகு போதாதெண்டு நெனக்கிறவங்க! உடை அலங்காரத்தால் தம் அழகைச் சரிசெய்து கொள்ளும் விஷயம். இவ்வளவு அழகும் இருக்கிற உங்களுக்கு அது ஏன்? அதைப் பார்த்துப் பார்த்துத் தானே அலுத்துப்போய் கிடக்கிறோம்!''

''ஆமா! இந்தக்காலத்து ஆண்கள், ஆளுக்குத்தக்க மாதிரி கதைப்பாங்க! நீங்க கூட அப்படிக் கதைக்கப் பழகிற்றீங்க! நமக்கென்ன இன்னொரு இடத்தபோய் எங்களப் பழிச்சிக் கதச்சிப் போடாதங்க!''

''சரி சரி! நான் ஜேர்மனிக்குப்போகப் போறேனே! அங்கவரும் நண்பர்களிடம் வேண்டுமானால் கதைக்கிறேன். எனக்கு ஒரு மாமி மகள் இரிக்கா, அவ பெல்ஸ்போட்டுக்க மாட்டா! சேர்ட் அணிய மாட்டா! முகத்துக்கு பவுடர்கூட போட்டுக்க தெரியாது! பாவாடையும், தாவணியுமா பழைய காலத்துப் பெண்போல இருப்பா! இவவை எடுத்து நான் என்ன பண்றது என்று கேட்கிறேனே!''

''எங்கள எடுக்கச் சொல்லி ஒங்களுக்கிட்ட ஆரு சொன்ன? மாமாட மகன் எண்ட உரிமையோட நான் பேசிக்கிறிக்கன். நீங்க என்னை எடுத்தாலும் எடுக்காட்டிலும் மச்சான் மச்சான் தானே!''

ஜெமீலின் நெஞ்சில் இந்தப்பேச்சு சுள் என்று தைத்தது! உரிமையோடு பேசுகிறாள் பானு! உரிமையோடு விருந்தளிக்

கிருள் மாமி! இரத்தத்தோடு உறவாடும் இந்த உரிமை எவ்வளவு சக்தி வாய்ந்தது? வாப்பாகூட முஸம்மிலே ராத்தாவுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று பிடிவாதமாக நிற்கிருர். மகளிலும், மருமகனிலும் அவருடைய இரத்தம் ஓடுகிறது. ஒரே இரத்தத்தை அவர் ஒன்று சேர்க்க நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது? பானுவும் என் இரத்தம்! என் தங்கை ருகிலாவின் அழகுத்தோற்றமும், சாயலும் கூட இவளில் இருக்கிறது! அதனை நான் மறுக்க முடியாது! இரத்த உறவால் வருவதே பாசம்! அந்தப் பாசம்தான் தாய்க்கும், பிள்ளைக்கும் இருப்பது! எவளோ ஒருத்தியை மனைவியாக வரிந்து கொள்வதற்கும், இரத்த உறவால் வரும் ஒருத்தியை மனைவியாக்கிக் கொள்வதற்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு உண்டு?

''மச்சான் சாப்பிடுவமா?'' என்று கேட்டுக்கொண்டு வந்தான் முஸம்மில். பானு மெள்ள அந்த இடத்தைவிட்டு நழுவினுள்.

மேசையில் பத்துப்பேர் சாப்பிடுகிற அளவு உணவு வகைகள் குவிந்து இருந்தன. ஜெமீலும், முஸம்மிலுமே சாப்பிட உட்கார்ந்தனர். பானு குசினிப்பக்க ஜன்னலில் ஜெமீலுக்கு எதிர்ப்பக்கமாக நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஸாகிரு உம்மா, மகனை நோக்கி 'மகன்! மச்சானை நல்லா சாப்பிடச் செல்லுங்க' என்று கூறினுள். கையும் வாயும் உறவாடின.

சாப்பாடு ஆனதும், முஸம்மில் மச்சானைத் தன் காரிலேயே ஏற்றி மீண்டும் அவன் வீட்டுக்கு கொண்டுபோய் விட்டான். பானு மீண்டும் அந்த மாமரக்கிளைகளுள் நின்று ஆசை மிகுதியோடு மச்சானை வழி அனுப்பினுள்.

## ( 13 )

ஷாபிதீனுக்கு அன்றெல்லாம் மனநிலை சரியாக இல்லை; விரிவுரைகளின்போது வேண்டா வெறுப்பாக நடந்துகொண்டான். மனநிலையில் உற்சாகமிழந்த ஒரு தன்மை! ஒரு ஏமாற்றம்! விரக்தி வெறுப்பு எல்லாம் ஒன்றுபட்டு நின்று அவனை வேதனைப்படுத்தின.

ஒரு வாரம் லீவு போட்டுவிட்டுத் திடீரென ஊருக்குப் போகப் புறப்பட்டான். ஊருக்காவது போனால் காலையில் பிடித்த மீனை மத்தியானம் சாப்பிடலாம், பகல் உறைய வைத்த தயிரை இரவைக்கு உண்ணலாம், காலைச் சாப்பாட்டிற்கு சோளப் புட்டோ அவலோ கிடைக்கும். பாலப்பத்தைச் சுடச்சுட வாங்கி தேனில் துவட்டிச் சாப்பிட்டால் அது ஒரு தனி ருசி. மனைவி பாகற்காயைத் துவட்டி ஒரு குழம்பு வைத்துக் கொடுப்பாள்! மீன் கறியோடு சேர்த்து சாப்பிடத் தொடங்கினால் அது ஒரு தனிச் சுவை... இப்படி ஒரு வாரம் விருந்துண்டு வரலாமெண்டு ஷாபிதீன் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஆனால் அவனுடைய மனதில் உள்ள தாக்கம் என்ன என்பது அவனாலேயே இனம் காண முடியாதிருக்கிறது. அவனுடைய உடல் நிலையும் பாதிக்கப்பட்டிருந்ததை அவன் உணர்ந்தான்! ஆனால் என்ன பாதிப்பு அதற்கு என்ன வைத்தியம் என்று மட்டும் அவனால் கூற முடியவில்லை.

புகையிரதம் மட்டக்களப்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. சிலிப்பறேற் சீட்டில் அமர்ந்திருந்த அவன் கண்களை பொய்க்கு மூடிக்கொண்டு தூங்க முற்பட்டான். பக்கத்திலாவது பேச்சுத் துணைக்கு யாரும் கிடைப்பார்களா என்று பார்த்தால் எல்லோரும் அவனைப் போல்தான் சீற

றில் சாய்ந்தவர்களாக பொய்த் தூக்கம் போட்டுக்கொண் டிருந்தனர். ஐந்தாறு சீற் தள்ளி தம்பதிகள் இருவர் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சமீபத் தில்தான் திருமணம் செய்திருக்கவேண்டும். அவள் தங்க ஜரிகை கட்டிய ஒரு கூறைப் பிடவை உடுத்தி இருந்தாள். அவன் முகத்தில் புதுக் கலியாணத்து மாப்பிள்ளையின் தேஜஸ் ஒளி வீசிக்கொண்டிருந்தது. றெயினில் திருடர் பயம் உள்ள இக்காலத்தில் அவர்களாவது விழித்திருந்து பேசிக்கொண்டிருப்பது இந்தப் பொய்த் தூக்கம் போட் டுக்கொண்டிருக்கும் எல்லோருக்குமே சேமமான காரி யம்! என்று நினைத்து ஷாபிதீன் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டான்,

தனது 'ஜேம்ஸ்பொன்ட்' சூட்கேஸைத் திறந்து அவ னுடைய டயரியை எடுத்து அவசர அவசரமாகப் புரட்டி ஞன். ஒரு என்வலப்பை எடுத்து விரித்தான். அதனுள் ஒருபுகைப் படம் இருந்தது. படத்தின் பின்பக்கம் 'பிறந்த தினம் ஒகஸ்ட் 30' என்றிருந்தது. ஆம் இன்று ஒகஸ்ட் 22, இன்னும் எட்டு நாளில் மர்லியாவின் பிறந்த தினம். அவ ளுக்கு 30 வயது நிரம்புகிறது! அவளின் படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். தனக்குச் சமீப காலமாக ஏற்பட்டு வரும் சோர்வு, விரக்தி, உற்சாகமின்மை எல்லா வற்றிற்கும் காரணம்? ஆம் 'நோயும் மருந்தும் இவளே' என்று எண்ணியது அவன் மனம்.

கடந்த நான்கு வருடங்களாக அவளுடைய பிறந்த தினத்திற்கு 'வாழ்த்துக் கார்ட்டுகள்' அனுப்பி வருகிறுன் ஷாபிதீன். அது கிடைத்ததற்கு நன்றி கூறி அவள் பதிலும் அனுப்புவாள். அதுபோல அவனுடைய பிறந்த தினத்திற் கும் அவள் வாழ்த்துமடல் அனுப்புவாள். அவளைப் போலவே இவனும் 'நீங்கள் அனுப்பிவைத்த வாழ்த்து மடல் கிடைக்கப் பெற்றேன். என் இதயபூர்வமான நன்றி கள்' என்று ஒரு பதில் அனுப்புவான். இந்தச் சிறு

தொடர்பு காரணமாகத்தான் அவனே அவள் தனது பாட சாலைப் பரிசளிப்பு விழாவுக்கு அழைத்திருந்தாள். காத லிக்கக் கூடாது அவ்வாறு ஒருத்தியைக் காதலித்தால் மற் றொருத்தியைக் கல்யாணம் செய்யக் கூடாது என்பது ஷாபி தீனுக்குக்கிடைத்த அனுபவமாகும். காதல் தோல்வி யானல் ...கூறும சந்நியாசம் கொள்' என்பதே முடி வாகும். மனைவி ஏறுமாருகப் பேசினுலும் சந்நியாசம் காதல்கைகூடாவிட்டாலும் சந்நியாசம்என்பது சந்நியா சத்தின புது விளக்கமாகும். ஏனெனில் ஒரு நீங்காத காதல், தவிர்க்கமுடியாத இல்வாழ்வு, ஆடை அணியாத சந்நியாசம் மூன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அவனது வாழ்வில் மிக விரைவில் இவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் ஷாபிதீன் ஒரு குடிகார ஞகவோ பைத்தியக்காரஞகவோ மாறவேண்டி ஏற்படும். இந்த சிக்கலிலிருந்து விடுபடாத காரணத்திஞல்தான் அவன் கொழும்பிலும் நிம்மதியாக வாழ முடியவில்லை. ஊருக்கு வந்தாலும் அவன் விரும்பும் நிம்மதி கிடைப்ப தாக இல்லை.

மிக விரைவில் அவன் கலாநிதிப் படிப்புக்காக இங்கி லாந்திற்கோ அவுஸ்திரேலியாவுக்கோ போகவேண்டி யிருக்கிருன். அதனிடையே வாழ்க்கைச் சிக்கல் தீரவேண் டும். இல்லாவிட்டால் கலாநிதிப் படிப்புக்கான ஊக்கமும் திராணியுமற்றவஞக அவன் இரண்டு வருடப் படிப்பின் பிறகு 'வெறுங்கையோடு' இலங்கை திருப்பவேண்டி ஏற்ப்டும். இதனை ஷாபிதீன் ஸ்பஷ்டமாக உணர்கிருன்.

தனது ஐந்து வருட காதலின் நினைவாக இம்முறை மர்லியாவுக்கு ஒரு பரிசு அனுப்பினுல் என்ன? வெறும் அலங்கார மடல் ஒன்றை பத்து ரூபா கொடுத்து வாங்கி அனுப்புவதால் என்ன பயன்? இதுவெல்லாம் ஆங்கிலேயர் நமக்குத் தந்துவிட்டுப்போன முதுசம். அர்த்தமற்ற சம்பிர தாயம். ஒரு நினைவுப் பொருளாக அது அமைந்தால்தான்

ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பும் நிலையானதாக நினைவுச் சின்னம் உள்ளதாக இருக்கும். கொஞ்சம் முன்னால் இந்த யோசனை வந்திருந்தால் கொழும்பில் ஒரு எவர் சில்வர் ட்றே அல்லது நல்லதொரு பெங்களூர் சாரி வாங்கியிருக்கலாம். மட்டக்களப்பில் நாம் நினைத்த மாதிரியான பொருள்கள் கிடைக்குமோ? என்னவோ?

மர்லியா இதனை விரும்பாவிட்டால் 'சேத்திக்குச் செய்யப் போய் முன் இருந்த புன் சிரிப்பும் போயிற்றும்' என்ற கதையாக மாறிவிடாதா?

ஒரு பெண் ஒருவனைப் பார்த்து இலேசாக சிரித்துக் கொள்வாளாம். அந்தச் சிரிப்போடு அவளுடைய முழுமையான காதலையும்பெற அவன் நினைத்தான். தன் அருகே அவளை வைத்திருந்து ஆசை தீரக் கதைக்க வேண்டும் என்பது இவனது தணியாத விருப்பம். வேறொரு வழியும் இவனுக்குக் கிடைக்கவில்லை ஒரு வைத்தியனைப் பிடித்து தன்னுடைய நிலையைக் கூறினான். அவன் மிக அபூர்வமான 'சேத்தி மருந்து' கொஞ்சத்தை ஒரு சீசாவில் ஊற்றி இதில் மூன்று துளிகளை உன் காதலிக்குத் தெளித்துவிட்டால் மறுநாளே அவள் உன் காலடியில் வந்து கிடப்பாள்' என்று கூறி அனுப்பினான். இவன் மருந்து சீசாவுடன் பல நாட்கள் திரிந்து அவளுக்கு மருந்தைத் தெளித்தான். மறுநாள் அவள் இவனுடைய காலடியில் விழ வேண்டும்! நல்லவிதமாக உடுத்தி கம்பீரமான நடை நடந்து அவள் வரும் வழியில் அவளைக் காத்துக்கொண்டு நின்றான் அவன், அவள் வந்தாள். இவனைக் கண்டதும் ஆவேசம் வந்தவள்போல முகத்தை சுருட்டி இவனை முறைத்துப் பார்த்துக்கொண்டு போனாள். 'இதென்னடா அநியாயம்! சேத்திக்குச் செய்யப் போய் முன் இருந்த புன் சிரிப்பும் இல்லை என்று எண்ணியவனாக ஆத்திரத்தோடு வைத்தியன் வீட்டுக்கு ஓடினான்.

வைத்தியன் தலையில் அடித்துக்கொண்டான்! 'தம்பி நான் மருந்தை மாறி, பிரிவுக்குப் போடும் மருந்தை தந்து

விட்டேன். இனி ஒன்றும் செய்ய முடியாது. 'நீ இன்னுமொரு பெண்ணைக் காதலி' நான் அசல் மருந்தொன்று தருகிறேன். அவள் நிர்வாணக் கோலத்தில் உன்னிடம் வந்து கிடப்பாள் போ! போ! கெதியாக் காதலி! யாரையாவது காதலித்துக்கொண்டு ஓடி வா என்றான் வைத்தியன்.

பையனுக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது. 'ஐயா! வைத்தியரே நிர்வாண கோலத்தில் பெண்களைப் பார்ப்பதென்றால் நான் ஹிக்கடுவ கடற்கரையிலும், பாசிக்குடா கடற்கரையிலும் எவ்வளவோ வெள்ளைக்காரப் பெண்களை பார்த்துக்கொள்வேன்! நீங்கள் இன்னும் என்னென்ன விபரீதங்களைச் செய்யப் போகிறீர்களோ' என்று கூறிக் கொண்டு வந்துவிட்டான் அவன்.

இதேபோல பிறந்த தின வாழ்த்து மடல் அனுப்பிக் கொண்டிருக்கும் மர்லியாவுக்கு பரிசுப் பொருள் அனுப்பப் போய் நிலைமை வேறு விதமாகத் திரும்பி விடுமோ? இதனை அவள் விரும்பாவிட்டால் இருந்த உறவும் கெட்டுவிடுமே என்று அவன் எண்ணினான்.

மர்லியாவை மறந்து விடுவதற்கு ஷாபிதீன் மிகவும் தெண்டித்தான். இடையிடையே அலைபோல வந்து மோதும் சம்பவங்கள் அவளை மறந்துவிட அவனால் முடியாத நிலைக்கு அவனைத் தள்ளியது. ஐந்து வருஷமாக அவள் இன்னும் கலியாண மாகாத கன்னியாகவே இருந்து வருகிறாள். அவள் மற்றொருவனின் மனைவியாக இருந்தால் கதை அத்தோடு முடிந்திருக்கும். அதுவுமன்றி றஹீமா? முஸம்மிலா என்ற போராட்டத்தில் குடும்பத்தினர் ஒன்று பட்டுக்கொள்ள முடியாமல் சர்ச்சை நீண்டுகொண்டு அவளது நிலை இன்னும் சங்கடமாக இருக்கிறது. தன்னைப் போல சர்வகலாசாலை விரிவுரையாளரோடு தான் விரும்பிய காதலனோடு வாழ்க்கை நடத்தக் கனவுகொண்டிருந்த அவளுக்கு இந்த இரண்டு மாப்பிள்ளைகளுமே மனம் இசைந்ததாக இருக்க முடியாது அவனது நிலையோ இதை விடப் பரிதாபமானது.

கட்டிய மனைவிக்குப் பிள்ளை இல்லை என்று டாக்டர்கள் எல்லாம் ஏகமனதாகக் கூறிவிட்டனர். மனைவி அவனில் எவ்வளவுதான் அன்புடையவளாக இருந்தாலும் காணி, பூமி, கை நிறைய கொழுத்த சம்பளம் என்றிருந்தாலும் மனம் நிறைந்த வாழ்வுக்கு மங்களகரமான குழந்தைகள் இல்லையே என்பது ஒரு பெருங் குறை! ஒரு பாலைவனத்தில் ஒட்டகையில் பிரயாணம் செய்வதுபோல இருந்தது அவனது வாழ்க்கை.

உண்மையில் மார்லியா...அவன் நினைவுக்கு வருந்தோறும் புயல் கார்மேகத்தை அள்ளிக்கொண்டு மழையாகப் பெய்து கொட்டுகிறதே! அவ்வாறு அவன் மனம் கவலையால் நிறைந்து கண்கள் நீரைக்கொட்ட ஆயத்தமாக நிற்கும். அன்று வாழைப்பழத்தை தோல் உரித்துத் தந்த அவளுடைய அன்பு அவனது பிரிவைத் தாங்க முடியாமல் அவள் கண்ணீர் சிந்திக்கொண்டு நின்ற அந்தக் காட்சி! அவன் மனதை வெகுவாக உருக்கி நின்றது

மார்லியாவுக்கு நான் துரோகம் செய்துவிட்டேன். அவளுடைய நம்பிக்கையை சிதறடித்துவிட்டேன். அதன் விளைவு நான் வாழ்வில் நிம்மதியை இழந்து நிற்கிறேன். அந்தப் பாவம் எனக்குக் குழந்தை செல்வமே இல்லாமல் என்னைக் கருக்கிக்கொண்டிருக்கிறது ...அவன் மனம் அவனை கூர்வாள் கொண்டு குத்திப் பிளந்துகொண்டிருந்தது.

பொல்காவலை நிலையத்தைக் கடந்து புகையிரதம் போய்க்கொண்டிருந்தது, நேரம் பதினொரு மணி. சிறிது கண்ணயர்ந்து தூக்கத்திலாவது இவற்றையெல்லாம் மறந்து நிம்மதிகொள்ளலாம் என்று நினைத்தான், நித்திரா தேவி அவனை அணைத்துக்கொண்டாள்.

எதிர்பாராமல் இவளைக் கண்ட ஷாபிதீனின் மனைவி அதிர்ச்சியடைந்து போனாள். என்ன இது இரண்டு கிழமைக்கு முன்புதானே கொழும்புக்குப் போனீர்கள், இப்போ திடீரென...

ஒன்றுமில்ல பரீதா! நீ நெத்தலி மீன் வாங்கித் தக்காளி பழமும் போட்டு ஒரு குழம்பு வைப்பாயே அதைத் தின்ன ஆசை வந்துவிட்டது. வந்தேன். என்னுடன் யாழ்ப்பாணத்துப் பேராசிரியர் ஒருவர் இருக்கிறார், அவர் திடீர் திடீரென மட்டக்களப்புக்கு வருவார். 'ஏன் ஸார் மட்டக்களப்பில் என்ன விசேஷம்' என்று கேட்போம் நாம். அதற்கு அவர்—

'இறுக்கமான மட்டக்களப்பு தயிரை புதிது கெடாமல் சாப்பிட,

'சின்ன முகத்துவாரத்தில் இப்பொழுது இறால் காலம்' அதை உயிரோட பிடித்து உருக்கு எண்ணெயில பொரித்துச் சாப்பிட என்று இப்பிடி ஏதாவது உணவு வகைபற்றி கூறுவார். இதுபோல நானும் ஏன் வரக்கூடாது? என்று மனைவியை திருப்தி செய்து மடக்கினான் ஷாபிதீன்.

என்றாலும் களைச்ச மாதிரி ஏதோ உள் வருத்தம் இருக்கிறாப் போல இருக்கிறீர்களே.

உண்மையில் எனக்கு நேற்று முந்திய நாளெல்லாம் உடம்பு சரியில்ல. படிப்பிக்கவும் முடியாமலிருந்தேன், எதற்கும் ஒரு வாரம் வீட்டில் நின்றுவிட்டு வருவோம் எண்டு வந்தேன்.

அப்படிச் சொல்லுங்களன் என்றவள் குசினிக்குள் போய் பிளாஸ்கில் இருந்த டீயை கோப்பையில் ஊற்றி வந்து கொடுத்துவிட்டு 'டீயைக் குடிங்க' இரவெல்லாம் கோச்சில வந்த களைப்புமாக இருக்கிறீங்க' சுடு தண்ணி வச்சித் தாறன், குளிச்சிக்கொள்ளுங்க' என்று கூறியபடி கிணற்றடிக்குப் போனாள்.

அன்று மத்தியான சாப்பாட்டுக்குப் பின் நல்லதொரு தூக்கமும் போட்டு எழுந்தான் ஷாபிதீன். ஆனால் அவனின் முகத்தில் இருந்த கலவரம் இன்னும் மாறவில்லை.

'பரீதா அப்படியே கடற்கரைக்குப் போய் கொஞ்ச நேரம் உலாவிவிட்டு வருவோமா?'

'கடற்கரையா? என்ன கோல்பேஸ் கடற்கரைக்குப் போற ஞாபகமா'

நிந்தவூர் கடற்கரை என்ருல் என்ன காற்றில்லையா? இருந்து பேச வெண்முத்து மணல் இல்லையா? அலை அடிக்கும் கடல் இல்லையா? கொழும்பில் கடற்கரையே ஒரு 'பிஸி' இடமாக மாறி. அங்குகூட நிம்மதி கெட்டுப்போய்க் கிடக்கு!

'சரி சரி நம்மூர் கடற்கரைக்குப் போய் அங்கே மீன் பிடிக்கிற ஆட்களையெல்லாம் பார்க்க எனக்கும் விருப்பம் தான்' என்று பரீதாவும் கடற்கரைக்குப் போக ஆயத்த மானுள்.

ஷாபிதீனும் பரிதாவும் கடற்கரையை வந்தடைந்த னர். ஜிலுஜிலுவென வீசிய இன்பமான குளிர் காற்று பரீதாவின் முக்காட்டுப் பிடவையைக் கிளப்பி ஷாபிதீன்மீது வீசிக்கொண்டிருந்தது. அது ஷாபிதீன்! நீ கலங்காதே! என்று பரீதாவின் ஆத்மா ஷாபிதீனுக்கு ஆறுதல் கூறுவது போலிருந்தது. மேற்கே சரிந்த மாலைக் கதிரவன் தன் பொற் கதிர்களை கடலை நோக்கி வீசியது. அப்பொழுது நீலக் கடல் எங்கும் வெள்ளி முலாம் பூசியது போல பள பளத்துத் தனி அழகுபெற்று விளங்கியது. அகன்று விரிந்த வங்காள விரிகுடா கடல் 'ஹோ' வென்று குமுறி மலை போல் எழுந்த இதன் அலைகள் கரையை நோக்கி மோதிற்று. ஷாபிதீனின் மன உளைச்சலை அது பிரதிபலிப்பது போல இருந்ததால் வெள்ளிக் கீற்றுகளாக எழுந்த அவ்வலைகளை ஷாபிதீன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். மீன்பிடி வள்ளங்கள் சில ஆழ்கடலின் அப்பால் சென்றுகொண்டிருந்த காட்சி மர்லியா தன்னைவிட்டு அப்பால் தனித்து நிற்பதை ஷாபிதீனுக்கு நினைவூட்டியது.

கடல் அலைகள் செப்பனிட்டு வைத்த பொன் மணற் பரப்பொன்றில் ஷாபிதீனும் பரீதாவும் இருந்தனர். கடற் கரையெங்கும் தாளை மரங்கள் ஒன்றுரெடொன்று பின்னிச் செழிப்பாக வளர்ந்து கிடந்தன. பூத்துக் குலுங்கும் தாளை மலர்களின் நறுமணம் இவர்களையும் வந்தடைந்து நல்வரவு கூறிற்று. ஷாபிதீன் எழுந்து சென்று ஒரு மலர்க் குடலையைக் கொய்து வந்து பரீதாவின் கொண்டையில் சூடி அவளை அழகு பார்த்தான். இவர்களைப்பார்த்து மகிழ அக்கடற் கரையில் வேறு யாருமே இல்லை. இரண்டு சிறுவர்கள் மட்டும் தூரத்தில் எங்கோ போய்க்கொண்டிருந்தனர்.

வெறுந் தோணிகள் சில கரையில் கொல்லாவுடன் கிடந்தன. அத்தோணிக் குரியவர்கள் மாலை ஆறு மணிக்குத் தான் புறப்படுவார்கள், இரண்டு சிறுவர்கள் அத் தோணி களுக்குக் காவலாக இருந்து கதைத்துக்கொண்டிருந்தனர்.

கொழும்பு கோல்பேஸ் கடற்கரையைவிட இது நல்லா இருக்கிறதா?' என்று கேட்டாள் பரீதா.

அது கடல் காற்று பாதி, மனிதர்கள் விடும் கரியமில வாயு பாதி; இதைப்போல தாளைப்பூவின் மணத்தை அங்கு நுகர முடியுமா? ஒரு கணவனும் மனைவியும் இப் படித் தனித்து ஹாயாகத்தான் இருந்து கதைக்க முடி யுமா? என்று பதில் கூறினுன் ஷாபிதீன்.

'அப்போ கொழும்பு உங்கட்குப் பிடிக்கவில்லையா?

'எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை பரீதா'

'அப்படியென்றால் பிடித்த தொன்றைச் சொல்லுங் களேன்'

'எது பிடிக்கும் என்றுதான் எனக்கு இன்னும் விளங்க வில்லை'

அட பாவமே மனிதனுக்கும் இப்படியும் ஒரு வேதனையா? மருந்தில்லாத நோய்; நான் நினைக்கிறேன், நீங்க தான் இங்கிலாந்துக்குப் போகப் போறீங்களே! அது ஒரு புது வாழ்க்கைதானே! அதன் பிறகு எல்லாம் சரி வரும்!

ஏன் பரீதா வீண் ஆராய்ச்சி. என் உடல் நிலையில் ஒரு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அது மன நிலையையும் தாக்கி நிற்கிறது. உன் அன்பின் முன் எல்லாம் சரிவரும் எழும்பு போவோம்.

இருவரும் போய்க்கொண்டிருந்தனர்.

ஒரு சிறுவன் பட்டுப்போன தென்னைமரப் பொத்திலிருந்து இரண்டு கிளிகளைப் பிடித்துக்கொண்டு இறங்கினான்.

இதனைக் கண்ட பரீதா 'இஞ்சப் பாத்தீங்களா கிளிய, இரண்டையும் வாங்குவோமா?

குரல் கேட்டு சிறுவன் இவர்களுக்குப் பக்கத்தில் வந்து 'ராத்தா' இது நல்ல சாதிக் கிளி ராத்தா' வேணுமெண்டா எடுகா' என்றான்.

டேய் இந்தக் கிளி பேசுமாடா? என்றான் ஷாபிதீன்!

'கிளி பேசுமெண்டுதான் முதலாம் வகுப்புப் புத்தகத்திலயும் இருக்கே! இதுர அழகைப் பார்த்துகிட்டு பேசுமா எண்டு கேக்கீங்களே தொரா?

எனது கெட்டகாலம் நீயும் எனக்குப் படிச்சித் தாராய் அல்லவா? அது சரி இந்த இரண்டு கிளிகளுக்கும் எவ்வளவு கேட்கிறாய்?

ஓங்கள் ரெண்டு பேரையும் பார்த்தா சும்மாவே தந்திடலாம் போலிருக்கி. நானும் ரெண்டு நாளா காவல் இருந்து மரம் ஏறி எடுத்தன். இருபது ரூபாவையும் தாங்க தொரா!

இருபது ரூபாயா? என்று கேட்டுவிட்டு பதினைந்து ரூபாவை நீட்டினான் ஷாபிதீன்.

பையன் சிரித்தபடி வாங்கிக்கொண்டு கிளிகளைக் கைமாற்றினான்.

பரீதாவுக்கு குழந்தை ஆசை எந்தெந்த வழிகளிலெல்லாம் வெளிப்படுகிறது என்பதை எண்ணி ஷாபிதீன் மனதுக்குள் வேதனைப்பட்டுக்கொண்டான்.

## ( 14 )

அன்று ஜெமீல் ஜேர்மனிக்குப் புறப்படும் நாள் நாயகத்தின் பேரால் 'மௌலிது' ஒன்று ஓதிவிட்டே மகன் பிரயாணம் புறப்பட வேண்டும் என்பது ஹாஜியாரின் விருப்பம். அதற்கான ஏற்பாடுகள் இரவிலிருந்தே தயாராகிக் கொண்டிருந்தன.

இரவு முழுவதும், ஹாஜரு உம்மாவும், பெண்மக்களும் கண்ணோடு கண் பொத்தவில்லை. காலையில் மௌலிது ஓதுபவர்களுக்காக சாப்பாடு தயாரிப்பதில் அனைவரும் ஈடுபட்டிருந்தனர். அடுத்த வீட்டு சுலைகா ராத்தாவும் வேறு சிலரும் வந்து ஹாஜருவுக்கு உதவி செய்தார்கள். ஐந்நூறு இடியப்பம், கோழிக்கறி, இரூல் சொதி இப்படி எத்தனையோ காலைச்சாப்பாட்டிற்கான ஆயத்தங்கள் ஆயின.

ஹாஜியாருக்கு இருப்பே கொள்ளவில்லை அடிக்கடி மகனிடம் போய், மகன் எல்லாச் சாமான்களையும் ஆயத்தமாகப் பெட்டியில் வைத்துக்கொள்! என்று கூறுவார். பின்னர் மனைவியிடம் போய், என்ன ஹாஜரு! எல்லாம் சரியா? என்று கேட்பார். மௌலிது ஓதுவதற்காக முன் மண்டபத்தில் அடுத்த வீட்டு ஆதம் லெல்வையும், வெள்ளாமைக்காரன் ஹனிபாவும், வெள்ளைகட்டிக் கொண்டிருந்தனர். அதனையும் போய்ப்பார்த்துக் கொள்ளுவார். எல்லா அலுவல்களும் ஒருவாறு பூர்த்தியாயின.

சுபஹுக்கு பள்ளிவாசலுக்கு போன ஹாஜியார் மௌலிது ஓதுவதற்கான பள்ளிவாசல் பரிவாரங்களுடன் ஆறுமணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். மௌலிதுக்கு சொல்லி இருந்த வேறு சிலரும் வந்திருந்தனர். அவருடைய விசேஷ அழைப்பின் பேரில் அவர் மருமகன் முஸம்மில் வந்திருந்தான். நண்பன் என்ற முறையில்

ஜெமீல், றஹீமை அழைத்திருந்தான். இருவரும் ஜெமீ லின் இரு புறமும் உட்காந்திருந்தனர். மௌலிது கலரியில் உள்ளவர்களுக்கு அத்தர் பூசிக்கொண்டு வந்த ஹாஜியார் இவர்கள் மூவரும் இருக்கும் இடம் வந்ததும், கை நீட் டிப் பூசத்தயங்கி, மகனிடமே அத்தர் சீசாவைக் கொடுத் தார். அதனை வாங்கிய ஜெமீலுக்கு சிரிப்பு வந்து விட்டது. 'வாப்பா யாருக்கு மோதிரம் போடுவாரோ, நான் அவருக்கு கால் கழுவுவேன். ஆனால் அத்தரை இரண்டு பேருக்கும் பூசுகிறேன் என்று நினைத்துக் கொண்டு இரு வருக்கும் அத்தரைப் பூசியபடி உள்ளூரச் சிரித்துக் கொண் டான்.

பள்ளிவாசல் பேஷ் இமாம், 'து ஆ' வை ஓதி மௌலி தைத் தொடக்கி வைத்தார். ஒலிப்பெருக்கியில் மௌலி தின் இனிய கீதங்கள் அந்த ஊரெங்கும் இனிமையாக ஒலித்துக்கொண்டிருந்தது. ஹாஜரு உம்மா இரு கைகளா லும் முந்தானையை ஏந்தி, மகன் போகும் இந்த 'ஸபர்' நல்ல மாதிரியாக முடியவேண்டும் என்று இறைவனை இரந்து கொண்டிருந்தாள்.

மௌலிது முடிந்தது நண்பர்கள் இனத்தவர்களெல் லாம் ஆற்று வெள்ளம் போல வருவதும் போவதுமாக இருந்தனர். ஸாஹிரு உம்மாவும் கையில் ஒரு 'பொதியு டன் வந்தாள். தூரத்தில் அவள் வந்து கொண்டிருந்த தைக் கண்ட மர்லியா அவளை எதிர்கொண்டு 'வாங்க மாமி' என்று வரவேற்றாள், இந்தப் பிரயாண வேளை மாமி ஒரு சண்டையை எடுத்து விடக் கூடாதே என்பது அவளுடைய கவலை. மாமி சண்டை பிடிக்கும் 'மூட்' டில் இல்லை. பொதியை மர்லியாவிடம் கொடுத்து 'புள்ள' இதத் தம்பிர பெட்டிக்குள்ள வச்சிரணும் என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள். சரி மாமி என்று பொதியை வாங்கிக் கொண்ட மர்லியா ஏன் மாமி, துறை முகத்தில, கொண்டு போற சாமான்களை யெல்லாம் சோதிப்பாங்களாம், இதுக்குள்ள என்ன எண்டு கேப்பாங்களே!

அது சீனி மாவு புள்ள! முட்டையும் ஊத்திவறுத்து, நெய்யில தாளிச்சிருக்கன்! என்று அதன் பாக முறையினை யும் விளக்கத் தொடங்கினுள் ஸாஹிரு. மர்லியாவின் பகிடி ஸாஹிருவுக்கு எங்கே விளங்கப் போகுது?

**

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின்னர் பிரயாணம் ஆரம்பமாயிற்று. மூன்று கார்கள் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை நோக்கிப் புறப்பட்டன. ஹாஜியாரின் குடும்பம், ஸாஹிரு உம்மாவின் குடும்பம், இயக்க நண்பர்கள் என்போர் ஜெமீலை வழி அனுப்ப சென்று கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு புகையிரத நிலையம் ஒரே அமர்களமாயிற்று.! றஹீம், முஸம்மில், மர்லியா, ஜெமீல், பானு ஆகியோர் ஒன்று கலந்து நின்றனர். பேச்சும் கதையும் கலகலப்பாக இருந்தது. ஹாஜியார், ஹாஜரு, ஸாஹீரு உம்மா ஆகியோர் எல்லாவற்றையும் புதினம் பார்த்துக் கொண்டு நின்றனர். 'மகன் கவனம்! மகன்! போன உடனே கடிதம் போடுங்கோ' என்று ஹாஜியார் அடிக்கடி மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். மகனைப்பிரியும் துக்கத்தில் ஹாஜரு அழுது கொண்டிருந்தாள். அந்த வேளை திடீரென ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து வயது போன ஆனல் வாட்ட சாட்டமான ஒரு மனிதரும் இருபத்திமூன்று வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும் வந்திறங்கினர். எல்லோர் கவனமும் அவர்கள் பக்கம் திரும்பியது.

அந்தப் பெண் மிக நாகரிகமாக உடுத்தி முக்காடு போட்டிருந்தாள். தோளில் ஒரு தோற்பை தொங்கிக் கொண்டிருந்தது. இருவரும் ஜெமீலிடம் சென்று சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசினர். ஆட்கள் யார்என்று இன்னும் தெரியவில்லை அது போதாதென்று விளங்காத பாஷையிலுமல்லவா அவர்கள் பேசிக் கொள்கிறுர்கள்.

மச்சானுடன் ஒரு பெண் சமமாக, நெருங்கி நின்றபடி பேசிக் கொள்வதை பானுவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. றஸீனு சிங்கப்பூர் நைலக்ஸ் உடுத்தி அதற் கேற்ற சோளியும் அணிந்து, மிகக் கவர்ச்சியாக நின்ற அத் தோற்றம் பானுவை என்னவோ செய்தது!

தன்னுடைய உடையை ஒரு முறை கவனித்தாள். அதே பாவாடை அதே சட்டை அதே தாவணி, தனக்கு இது அழகாக இருக்கோ என்னவோ, 'நானும் நினைத்திரு ந்தால் அதைவிட அழகான சாரி வாங்கி உடுத்தி இருப் பேன்' எனக்கென்ன அவளைப் போல வயதா ஆயிற்று? நான் இன்னும் சின்னப்பிள்ளைதானே! வயது வந்தப்புறம் நானும் இவளைப்போல பிடவை உடுத்திக்குவன். இவள் பொல்லாத தேவடியாள். கொஞ்சம் கூட வெக்கமில்லாம மச்சானுக்கிட்ட நிக்காள்' — பானுவின் மனம் விளக்கில் விழுந்த விட்டில் போல துடித்தது.

அவள் கைலியிருந்த ஒரு சிறிய பார்சலை ஜெமீலிடம் நீட்டினுள். அவன் அதை வாங்கிக்கொண்டு 'நன்றி' என் ருன். இவள் என்ன கொடுத்தாளோ மாயக்காறி. அதில ஏதும் சேத்திக்குச் செய்திருந்தா... எல்லாம் பாழாய்ப் போகுமே! பாழாப் போகுமே! இந்தச் சனியன் இஞ்ச ஏன் வந்தாள்? பொம்புள எண்டா கொஞ்சங்கூட அடக்க ஒடுக்கம் வேணும்! முஸ்லிம் பொம்புள எண்டு மொக்காடும் போட்டிருக்காளே! இவளுக்கு மொக்காடு ஒண்டு கொறச் சலா? — இப்படி மிக ஆத்திரத்தோடு எண்ணினுள் ஸாஹிரு உம்மா.

ஜெமீல் அவளைக் கூட்டிக்கொண்டு உம்மாவிடம் வந்து 'உம்மா! இவ பேர் றஸீனு பி. ஏ. பாஸ் பண்ணி இருக்கா. என்னோட பேங்கில வேலை செய்ரு' என்று அறி முகம் செய்து வைத்தான். இந்த அறிமுகத்தைக் கேட்ட தும், சாஹிரு உம்மாவுக்கும் பானுவுக்கும் தலையில் இடி விழுந்தது பேலிருந்தது.

இந்த ஆட்டக்காரி, மச்சானுக்கு கூட வேலை பாக்கிரு ளாம் உம்மா என்று தன் வயிற்றெரிச்சலை உம்மாவின் காதுக்குள் கொட்டினுள் பானு.

இந்த ஆட்டத்த பேங்குலயே வெச்சிக்கலாமே! அது காணுதெண்டு தான் இஞ்சயும் கொண்டு வந்தாளாக்கும் — என்று உதட்டைக் குவித்து நெழித்து ஆவேசத்துடன் மகளிடம் கூறினுள் ஸாஹிரு!

றஸீனுவும் மர்லியாவும் ஒரு புறமாக நின்று கதைத்த னர். அவர்களது கதை சுவாரஸ்யமாக நீண்டு சென்றது.

ஸாஹிரு, ஹாஜருவைக் கூட்டிக் கொண்டு ஒரு மூலைக் குப் போய் 'அந்தப் புள்ள குடுத்த சாமான் — தின்ற சாமான் போல இல்லையா? சில வேளையில அது தம்பிர வகுத்துக்கு ஒத்துக்காட்டி பயண நேரத்தில கஷ்டம்தானே! அது நீங்க வாங்கி எடுங்க புள்ள! என்று ஹாஜருவின் மனதிலேயே ஒரு சந்தேகத்தை ஊட்டினுள்.

சிறிது நேரத்தில் அது பாகிலிடப்பட்ட கஜுக் கொட்டை என்று தெரியவந்தது. மச்சானின் கையிலிருந் தாலும் அதைப்பறித்தேனும் எடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் பானு. அதற்கான இலக்குகளை வைக் கத் தொடங்கினுள். காக்கா முஸம்மிலைச் கூப்பிட்டு காதுக்குள் விஷயத்தை இரகசியமாகச் சொன்னுள்.

முஸம்மிலும் இதைக் காத்திரமான ஒரு விஷயமாக எடுத்தான். இந்தக்காலத்தில மாப்பிள எடுக்கிறதுக்கு பொம்புளயள் எவ்வளவோ மோடிகள் செய்ருளுகள். இவளும் அதையாவது செய்து இந்த கஜுக் கொட்டை யில கொடுத்திருந்தா? தன் தங்கையின் வாழ்வு, உம்மா வின் கனவு எல்லாம் பாழாய் போயிடுமே! இப்பொழுது தான் முஸம்மிலுக்கும் மனதில் ஆத்திரம் வந்தது.

எல்லோரும் மேடைக்குச் சென்றனர். ஜெமீல் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறி உட்காந்தான். அவனைக் கொழும்புவரை கொண்டு போய் விட்டு வருவதற்குகாக றஹீமும் ஏறி அவன் பக்கத்தில் இருந்தான்.

ஹாஜியார் மகனிடம் போய், 'மகன் கவனமாகப் போய்வாங்க. அல்லா உங்கள சுக சேமமாகக் கொண்டு வந்து சேர்க்கணும்'—என்றார். அவருடைய கண்களிலிருந்து நீர் பனித்தது. எல்லோரும் ஒரு மூச்சு அழுதனர்.

புகையிரதம் புறப்பட்டது. எல்லோரும், கையுயர்த்தி வழி அனுப்பினர். றஸீனாவும் தன் கையை உயர்த்திக் காட்டி விடை கூறினாள். பானு அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றாள். ஜெமீல் கடைசியாக 'பானு நான் வாறன்' என்று தன் கையை உயர்த்திக்காட்டினான். அந்தச் சொல் பானுவின் நெஞ்சமெல்லாம் புல்லரிக்கச் செய்தது. ஏமலித்தவளாக அவளும் கையை உயர்த்திப் போய் வாங்க என்றாள்.

அனைவரும் மேடையை விட்டு வெளியே வந்தனர். ஹாஹிரு உம்மாவும் சாஹிரு உம்மாவும் இன்னும் அழுது கொண்டிருந்தனர். றஸீனாவின் தகப்பன் இஸ்மாயில் ஹாஜியாருடன் கதைத்துக்கொண்டு வந்தார். றஸீனா மர்லியாவுடன் நட்புறவு கொண்டாடினாள். எல்லாம் சொல்லி வைத்துச்செய்ததுபோல நடந்து கொண்டிருந்தன.

ஸாஹிரு உம்மாவும் பானுவும் தீயில் மிதித்ததுபோல் நின்றனர். நாங்கள் வந்ததால் அல்லவா? இந்தக் கண்ணருவியைக் கண்டோம். வராமவிருந்தால் செய்தி ஒன்றுமே தெரியாமல் அல்லவா போயிருக்கும்! இதில் எதுசரி? எது பிழை? என்று தெரியாமல் தவித்தனர்.

றஸீனாவின் தகப்பனார் 'எல்லோரும் வீட்டுக்குப் போய் தேநீர் ஒன்று எடுத்துக் கொண்டு போகலாம்' என்று அழைத்தார்.

ஸாஹிரு உம்மாவுக்கும் பானுவுக்கும் எரிகிறநெருப்பில் எண்ணெய் ஊற்றியது போலிருந்தது. அந்த அழைப்பு உறவு நல்லாமுற்றிக் கொண்டல்லவா வருகிறது? ஸாஹிரு ஹாஜியாரிடம் போய் 'காக்கா' மகரிப் ஆகுது. இஞ்செல்லாம் போய்க்கிருந்தா, நல்லா இருட்டாப் போகும். நாம ஊட்டதான் போவம் என்ருள். — சரியென்று எல்லோரும் காரில் ஏறினர்.

முஸம்மில் உம்மாவிடம் கஜுக்கொட்டைப் பொதியைக் கொடுத்தான். அதை எப்படி எடுத்தான் என்று யாருக்குமே தெரியாது. பானுவும் சாஹிருவும் முஸம்மிலின் வீரத்தை மெச்சி மகிழ்ச்சி கொண்டனர். அவர்களுக்கு இது சிறியதொரு ஆறுதலைத் தந்தது.

## ( 15 )

அன்று பின்னேரம் மர்லியா பாடசாலையில்தான் இருந்தாள். டிசம்பர் ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டிய நெருக்கடி. சக ஆசிரியைகள் சிலருடன் விண்ணப்பத்தைத் தயார் செய்துகொண்டிருந்தாள் அவள்.

ஒரு பையன் 'அதிபர் மர்லியா அம்மாவப் பார்க்கணும்' என்று கூறிக்கொண்டு அங்கு வந்தான்.

'நான்தான் மர்லியா என்ன வேணும் தம்பி' என்று கேட்டா மர்லியா! அவன் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டுப் போனுன்.

மர்லியா அக்கடிதத்தை வாங்கியவுடன் அதைப் பிரிக்க முடியாமல் அவள் கைகள் நடுங்கின. ஒருவாறு பிரித்தாள்

அன் பின் மர்லியா!

நான் சுகயீனமாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். உங்களைக் கண்டு கதைக்க என் மனம் அவாவி

நிற்கின்றேன். தயவுசெய்து நாளைக்கு இங்கு வந்தால் நான் பெரிதும் ஆறுதல் பெறுவேன். 15ஆம் இ. வார்டுக்கு வாருங்கள்...

ஷாபிதீன்

நடுக்கம் உதறலாக எடுத்தது மர்லியாவுக்கு. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஷாபிதீன் என்னை ஏன் இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறார்? அவருக்கு வந்த வருத்தம் என்ன? அவர் ஒரு கடிதம் எழுதி என்னை வரும்படி கேட்டுக்கொண்ட பிறகும் நான் போகாமல் இருப்பது எப்படி? வருத்தம் கடுமையானதென்றால் இந்த வருத்தத்தினால் அவர் மவுத்தாகியேவிட்டாரென்றால் பின்னர் நான் மிக வருந்தவேண்டி ஏற்படுமே! நோயோடு ஆஸ்பத்திரியில் இருக்கும்போதும் என்னை நினைத்து இக் கடிதத்தை எழுதி இருக்கிறாரே...இந்நேரம் அவளுக்கு நாதிரா ரீச்சர் தேவைப்பட்டாள். அவள்தான் இதற்கு நல்ல ஆலோசனை கூறுவாள்.

அவளை உடனே வரும்படி அவள் வீட்டுக்கு ஒரு ஆள் அனுப்பினாள். சிறிது நேரத்தில் அவளும் வந்துவிட்டாள். மற்றவர்களை வேலைகளைச் செய்யும்படி கூறிவிட்டு இருவரும் வகுப்பறை ஒன்றுக்குப் போனார்கள்.

கடிதத்தை வாசித்துப் பார்த்த நாதிரா சொண்டைச் சுருட்டிக்கொண்டு எனக்கு ஒன்றும் புரியவில்லையே என்று கூறுமாப்போல் தலையை ஆட்டினாள். 'அது சரி! போக வேண்டுமென்று நீ நினைக்கிறாயா? நாதிரா கேட்டாள்.

'எனக்கு ஒன்றும் விளங்க இல்லடி'

எனக்கும் இப்படித்தான்... நோயுற்று கிடக்கும் மனிதனிடம் கொஞ்சம் ஜீவகாருண்யம் வேண்டும். இது மனித பண்பு.

இந்த மனித பண்பு, நான் இன்னும் விவாகமான ஒருவரின் பின்னால் திரிகிறேன் என்ற அபவாதத்தைக் கிளப்பி விடாதா?

அவரைப் பரிசளிப்பு விழாவுக்கு அழைக்கும்போது நீ இதைப்பற்றி யோசித்திருக்க வேண்டும்.

'அது ஒரு பொது விஷயம்! நீங்கள் எல்லாரும் தீர் மானித்தீர்கள். வரவழைத்தீர்கள். நான் உடன்பாடு மட் டும் தெரிவித்தேனே அல்லாமல் முழுப் பொறுப்பும் உடையவளல்ல.

'இது உன் சொந்த முடிவும் அர்த்தமும் உள்ள விஷ யம். உனக்கு அவர்மீது இன்னும் காதல் இருக்கிறதா?

அது ஒரு இடிந்த மாளிகை. அந்த மாளிகையில் வாழ முடியாதுதான். ஆனல் அதன் சுவடுகள் இன்னும் அழியவில்லை. பெண்மனம் அப்படித்தான். எதையும் உட னுக்குடன் ஏற்றுக்கொள்ளாது. ஏற்றுக்கொண்டால் அதை மறந்தும் விடாது.

நானும் ஒரு பெண்தானே மர்லியா? நாம் இதுவரை ஒன்றையும் ஏற்றுக்கொள்ளவுமில்லை. இழந்துவிடவும் இல்லை. எந்தப் பயல் எனக்கு கணவனுக வரப்போருனே? என்று பயந்துகொண்டு மட்டும் இருக்கிறேன்.

காதல் என்பது ஒரு பெண் தேடிப்போகும் ஒன்றல்ல நாதிரு, அது சந்தர்ப்ப வசத்தால் ஏற்படுவது! நான் என்ன ஷாபிதீனைத் தேடியா போனேன். சந்தர்ப்பம் எங் களை இணைத்தது. காலம் எங்களைப் பிரித்தது.

'சரி சரி இப்போ என்ன செய்யப் போகிருய்'

நாளைக்கு மட்டக்களப்புக்குப் போகலாம் என்றுதான் எண்ணுகிறேன். நீயும் என்கூட வரவேண்டும். நாம் மட் டக்களப்பு பிரதேச கல்விக் கந்தோருக்குப் போவதாகச் சொல்லிக்கொள்ளலாம்.

'அதுக்கென்ன மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் எனக் குத் தெரிந்த ஒருவரும் 'ஒபறேசன்' செய்துகொண்டிருக் கிருர். நான் அவரையும் பார்த்துக்கொள்வேன்.

ஜி. ஸி. ஈ. விண்ணப்பப் படிவங்களில் அதிபர் கையெழுத்திட வேண்டிய இடங்களில் எல்லாம் மர்லியா ஒப்பமிட்டு நாளைக்கு அதனைத் தபாலில் இடும்படி கூறிக் கொண்டு மறுநாள் பயணத்திற்கு ஆயத்தமானாள்.

**

இருவரும் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தனர். தனக்குத் தெரிந்தவரை பார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறிக்கொண்டு நாதிரு பிரிந்துவிட்டாள்.

15ஆம் இலக்க வார்ட்டை மர்லியா சென்றடைந் தாள். அவள் கண்கள் ஷாபிதீனைத் தேடின.

நேர்ஸ் ஒருத்தி வந்து, மிஸ்டர் ஷாபிதீனைத் தேடுகிறீர் களா என்று கேட்டு அவளை ஷாபிதீனின் கட்டிலுக்குக் கொண்டு போய் விட்டாள்.

ஷாபிதீன் மூன்று நாட்களாக முகமும் இறக்காமல் தாடி வளர்ந்திருந்தது. பல நாட்கள் நோய்வாய்ப்பட்ட வனைப் போல மிகவும் களைத்துத் தோற்றமளித்தான்! மர் லியாவைக் கண்டதும் படுக்கையில் இருந்து எழுந்து உட் கார்ந்தான். மர்லியா கட்டிலின் கால்மாட்டுப் பக்கமாக போய் நின்றாள். என்ன பேசுவது என்றே அவளுக்குப் புரிய வில்லை. மௌனம் நிலவியது.

'உங்களுக்குச் சிரமம் தந்துவிட்டேன் அல்லவா? இன்று பாடசாலை நாள். லீவு போட்டுக்கொண்டு வேறு வந்திருக் கிறீர்கள்—ஷாபிதீன் கதையை ஆரம்பித்தான்.

'ஒரு மனிதன் நோயுற்றுக் கிடக்கையில் அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்ற வருவதும் சிரமமான காரியமா? இது மனிதப் பண்பாடு அல்லவா?

'நான் ஆஸ்பத்திரிக்கு வந்து மூன்று நாட்களாகின் றன. அநேகமாக இப்பொழுது வருத்தம் சுகம். நாளைக்கு வீட்டுக்குப்போக விடுவார்கள் என்று நினைக்கிறேன்'

வருத்தம் என்னவென்று தெரியவில்லையே!

'மனிதன் சாவதற்கு வருத்தமும் காரணமும் வேண்டுமா? மூன்று நாட்களின் முன் நான் உண்மையில் மௌனத்தாகிவிட்டேன். பத்து நிமிஷம் அளவில் மூச்சே அற்றுக்கிடந்தேனும். யாருடைய பங்கோ உயிர் திரும்பிவிட்டது.'

அப்படியென்ருல்? மயக்கமா? எதனுல் வந்தது?

அதற்கு மூன்று நாட்களின் முன்புதான் கொழும்பில் இருந்து வந்தேன். உடல் நலக்குறைவு காரணமாகத்தான் வந்தேன். ஒரே சோர்வும் களைப்புமாக இருந்தது. வகுப்பில் வேலைசெய்ய முடியவில்லை. உடனே புறப்பட்டு ஊருக்கு வந்துவிட்டேன்.

'அப்பொழுதே வருத்தம் தொடங்கியிருக்கிறது. உடனடியாக டாக்டரிடம் காட்டி இருந்தால் ஆரம்பத்திலேயே சுகமாக்கி இருக்கலாம்.

'ஆம்! தவறு என்னுடையதுதான். ஊருக்கு வந்த நான் மறுநாள் காலையில் கன்வஸ் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். யாரோ எட்டுப் பத்துப் பேர் வந்து என் உடலை அழுத்தி என்னைக் கொல்வதுபோல் இருந்தது. அப்புறம் மயங்கிவிட்டேன்! நேற்றுதான் டாக்டர் என்னிடம் ஆறுதலாகச் சொன்னுர். எனக்கு இரத்த உயர் அமுக்க நோய் இருப்பதாகவும் அது இருதயத்தையும் தாவி வருவதாகவும் கூறினுர்.

'இது எதனுல் ஏற்பட்டது என்று சொன்னுரா?

'நான் கவலை வயப்பட்டிருக்கிறேனும். மனதில் எதையும் போட்டுக்கொள்ளாமல் இருக்கட்டுமாம். அமைதிதானும் இதற்கு சரியான மருந்தாம்.

'உங்களுக்கு கவலையிருக்கக் காரணமே இல்லையே' மனத்தை வீணுக ஏன் அலட்டிக்கொள்கிறீர்கள்.

'கவலையை நான் வருவித்துக்கொள்ளவில்லை மர்லியா. கவலை என்னை ஆட்கொண்டுவிட்டது. அது ஒவ்வொருவரையும் வெவ்வேறு உருவத்தில் வந்தடைகிறது. அதன் தோற்றம் அவரவர்க்குத்தான் தெரியும்.

'ஆம்! கூளுக்குப்போட உப்பில்லை என்பார்க்கும், பாலுக்குப்போட சர்க்கரை இல்லை என்பார்க்கும் கவலை ஒன்றுதான் என்பார்கள்.

'நான் பால் கேட்டு அழவில்லை மர்லியா? நான் விரும்பிய கூள் எனக்குக் கிடைக்கவில்லையே என்பதுதான் என் கவலை. அதனை நான் பல்வேறு வடிவங்களில் அனுபவித்துக்கொண்டிருகிறேன்'

'உங்கள் மனைவி உங்களைக் கவரத் தவறிவிட்டாரா? என்ருல் நம்ப முடியவில்லையே!

'தப்பு மர்லியா. அவள் அமுதம்! என் காய்ச்சல் வாய்க்கு அதுவும் கசக்கிறது'

'செம்படவனின் வலையில் அழகான பெரிய கயல் மீன் ஒன்று படுகிறது. வலையில் இருந்து எடுக்கத் தெரியாமல் அதனை நீருக்குள் தவற விடுகிருன் அவன். அதன் பிறகு அதே மீனை அவன் தன் வலையால் பிடிக்க முடியுமா? அதனையிட்டுக் கவலைப்படுவதால் அவன் மற்ற மீன்கள் பிடிப்பதையும் இழந்து விடுகிருன்.

'மர்லியா! தவறு செய்தவன் தன் தவறை ஒப்புக்கொள்ளும்போது, அவன் செய்த தவறையே அவனுக்குச் சுட்டிக் காட்டுவதில் பயனில்லை' எனக்கு ஆறுதல்கூற உங்களால் முடியாது. உங்களைக் கண்டாலே எனக்கு ஆறுதல் ஏற்படுகிறது. அதனைப் பெறத்தான் உங்களை அழைத்தேன்.

'உங்கள் மனக் கண் என்னை இந்த ஐந்து வருஷமாக இன்னும் மறக்கவில்லையா?'

'மறக்க முடியாதபடியே என் வாழ்வில் சம்பவங்கள் நடைபெறுகின்றன. நான் உங்களை இவ்வளவு சிரமத் திற்குள் ஏன் அழைத்தேன் தெரியுமா?

.....................

நான் அன்று நோயுற்றிருக்கும்போது ஒரு கணம் என் கண்முன் நீங்கள் வெள்ளைச் சேலை உடுத்தி ஒரு தேவ கன்னிபோல தோற்றமளித்தீர்கள்...அப்புறம் மயங்கிவிட் டேன். நான் அன்று மவுத்தாகி இருந்தால் என் கடைசிக் காட்சி உங்களுடைய தோற்றமே...அந்தக் காட்சியோடு நான் நிம்மதியாக மவுத்தாகி விடாமல் தப்பித்துக்கொண் டதுபற்றியும் நான் கவலைப்படுகிறேன் மர்லியா.

'வாழ்க்கையின் தோல்விகளுக்கு மரணமே தக்க மருந் தென்றால் இதுவரையில் உலகில் எல்லோருமே செத் தொழிந்து போயிருப்பார்கள்.

'அவ்வாறு சாகாமல் இருப்பதே மனிதனின் துரதிர்ஷ்டம் என்கிறேன்'

'உங்கள் மனைவி வரமாட்டாளா? அவரிடமாவது இதற்கு வழி கேட்போம்!

சரியாக 12 மணிக்கு... அதோ வருகிறா. கையை நீட் டிக் காட்டினான் ஷாபிதீன்.

கையில் ஒரு பேக்குடன் இருபத்தைந்து அல்லது இரு பத்தாறு வயது மதிக்கத்தக்க யுவதி ஒருத்தி வேகமாக வந்துகொண்டிருந்தாள். அவளை வைத்த கண் வாங்கா மல் உற்றுப் பார்த்தபடியே நின்றாள் மர்லியா. அவள் கட்டிலண்டை வந்ததும் ஷாபிதீன் மர்லியாவைச் சுட்டிக் காட்டி பரீதா! இவ யார் என்று தெரியுமா? என்று கேட் டான்.

பரீதா மர்லியாவை ஊடுருவி ஒரு காந்தப் பார்வை பார்த்துவிட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாக 'மர் லியா ரீச்சர்' என்றாள்.

'எப்படி மதித்தீர்கள்? ரொம்பச் சாமர்த்தியமான பெண்ணு இருக்கிறீர்களே' என்ருள் மர்லியா.

'அப்படியொன்றுமில்லே! இவர் இவ்வளவு கலசமற வேறு எந்தப் பெண்ணுடனும் பழகமாட்டார். அன்றியும் இவர் உங்களேப்பற்றி அடிக்கடி என்னிடம் சொல்லி, உங்களுடைய வடிவம் ஒன்றை என் மனதில் பதித்துவிட்டார். அதனுல் உங்களே கண்டதும் இலகுவாக மதித்துவிட முடிந்தது.

மர்லியா ஆனந்த மிகுதியால், பரிதாவின் கையில் இருந்த பேக்கை வாங்கி அங்கிருந்த 'கபட்'டின் மேல் வைத்துவிட்டு அவளின் கையைப் பற்றிப் பிடித்துக்கொண்டாள்.

பரீதா, மர்லியாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தபடி 'இவர் உங்களுக்கு துரோகம் செய்துவிட்டாரல்லவா?' இப்பொழுதுதான் யோசிக்கிருர் என்ருள்.

'அப்படிச் சொல்லக் கூடாது பரீதா! நாம் நினேக்கிருேம். செய்ய முயற்சிக்கிருேம். நமக்கு மேலே உள்ள சக்தி திட்டமிடுகிறது. செயல்படுத்துகிறது. நாம் பம்பரங்கள்! அதனேச் சுழற்றி விளேயாடுபவன் அல்லா'—இதை நீங்கள் நம்பவில்லேயா?

'நம்புகிறேன்! இந்த நம்பிக்கைதான் ஈமான். நாம் ஒருவருக்கொருவர் எதிரியாக இருக்க வேண்டும். இன்று சகோதரிகளாகப் பேசிக்கொண்டிருக்கிருேம். மனம் திறந்து பேசுகிருேம். இந்த உறவும்கூட ஒரு நியதிதானே.'

நீங்கள் ஒரு விரிவுரையாளரின் மனேவியல்லவா? நன்ருகப் பேசுகிறீர்கள். உங்கள் மனம் இவ்வளவு விசாலமாயிருப்பது எனக்கு மகிழ்வைத் தருகிறது பரீதா.

நான் ஒன்றும் விரிவுரை நிகழ்த்தவில்லே. சில உண்மைகள் கசப்பாக இருப்பதற்காக நாம் அதனே மறுத்துவிட

முடியாது, இவர் மயக்கம் வந்து விழு முன், உங்களுடைய தோற்றம் ஒன்றைக் கண்டாராம்' அது அவர் மனதில் ஏற் பட்டிருந்த பதிவு. அதை மனம் திறந்து என்னிடம் அவர் கூறும்போது நான் மட்டும் என் மனதைக் கருமித்தனமாக ஏன் வைத்திருக்க வேண்டும்?

'ஆண்கள் இப்படித்தான் அலைமோதும் கடல் அலை கள். கரையில் மோதி அந்த அலை வடிவம் அழிந்த பின்பு மீண்டும் ஓர் அலை வடிவத்தை உண்டாக்கிக்கொள்வார் கள். பெண்களாகிய நாம் அவர்களுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்பி வழிப்படுத்த வேண்டும்.'

உண்மைதான் ரீச்சர்! தன் கணவரை உண்மை யாகவே நேசிக்கும் பெண்கள் அவர் செல்லும் வழியில் இணங்கி நடப்பார்களேயன்றி தனக்கொரு வழியை அமைத்துக்கொள்ளமாட்டார்கள்.

'எனக்கு நல்லதொரு தங்கை கிடைத்திருக்கிறீர்கள், உங்களது கணவரின் மனக் கவலையை நீங்கள் மட்டுமல்ல, நானும் சேர்ந்து தீர்க்க உதவுவேன், நாம் இனி அடிக்கடி சந்திப்போம் ' மனம் நெகிழ்ந்து கூறினாள் மர்லியா.

ஷாபிதீனின் கண்களிலிருந்து பொல பொல வென கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அது ஆனந்தக் கண் ணீரா கவலைக் கண்ணீரா என்று தெரியவில்லை.

இக் கண்ணீர் யாருக்காக என்று கேட்பதுபோல மர்லி யாவும் பரீதாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட னர்.

பரீதா தன் முந்தானையால் அவன் முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

மர்லியா, பரீதாவைப் பரிவோடு பார்த்து இதுதான் சரி! உங்கள் கணவரின் கண்ணீரை நீங்கள்தான் துடைக்க

முடியும். இது உங்கள் கடமையும்கூட என்று இரட்டை அர்த்தத்தில் கூறினுள்.

அந்த வேளை 'போகலாமா' என்று கேட்டுக்கொண்டு நாதிருவும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

மூன்று பேரும் தம்மை சுதாரித்துக்கொண்டு அவளை, 'வாங்க! வாங்க!' என்று வரவேற்றனர்!

நாதிரு ஷாபிதீனைப் பார்த்து 'என்னைத் தெரியுமா சார்' என்று கேட்டாள்.

மர்லியாவின் அந்தரங்க செயலாளர். உங்களுடைய ஆலோசனைப்படிதான் அவ நடப்பா. அதுபோக இப்ரு லெவ்வை மரைக்காரின் மகள் என்றும் அறிவேன்' என்று கூறிச் சிரித்தான் ஷாபிதீன். இதைக் கேட்டு மற்றிருவரும் கொல்லென்று சிரித்தனர்.

விரிவுரையாளரல்லவா நீங்கள்! எதையும் விரிவாக ஆராய்ந்து வைத்திருப்பீர்கள்!... இப்போ வருத்தம் எப்படி? சுகமாகிவிட்டதா?

சுகமானுல் ஆஸ்பத்திரியில் இன்னும் ஏன் இருக்கிறேன். ஆனுல் இன்னும் இரண்டு நாளில் வீட்டுக்குப் போகலாம் என்று எண்ணுகிறேன்.

நாதிரு மர்லியாவைப் பார்த்து வருத்தம் வேறு, அதற்கு மருந்தும் வேறு என்று கூறி கண்ணைச் சிமிட்டிக் காட்டிவிட்டு 'நேரமாகுது நாங்க போகலாமா மர்லியா?' என்ருள்.

இருவரும் சென்று மறையும்வரை ஷாபிதீனும் பரீதாவும் அவர்களைப் பார்த்தபடியே இருந்தனர்.

றஹீம் புதிதாக வாங்கிய இலுக்குச் சேனை பத்தேக் கரும், வயல் முழுவதும் நெல்லைக் கொட்டித் துழாவியது போல விளைந்து கொட்டிக் கிடந்தது. அவன் விவசாயப் போதனாசிரியனல்லவா? அவன் கையாண்ட செய்கை முறைகள் பூரண வெற்றி அளித்ததை அந்த வேளாண்மை பறைசாற்றிக் கொண்டிருந்தது. அந்தப் பக்க மெங்கும் உள்ளவர்கள் அதனை வந்து புதினமாகப் பார்த்து மூக்கில் விரலை வைத்துக்கொண்டு போயினர். புரிபுரண்டு கிடந்த கதிர்களை அள்ளி அள்ளிப் பார்த்தனர்.

'ஆயிர மெண்டாலும் அதுக் கெண்டு படிச்சபுள்ள இல்லவா? அது விளைவில தெரியிது' என்றார் ஒருவர்.

'இதுக்கு அடிச்ச எண்ணெய்க்கும், எறிஞ்ச பயளைக் கும் ஒரு கணக்கா? ஏக்கர் ஒண்டுக்கு இரண்டாயிரம் செலவு போயிருக்குங்கா! என்றார் மற்றொருவர்.

'ஓமோம் புதுக்காசும், புதுப் பூமியும் விளையாடுதுகா? இப்ப பரம்பரை போடிக்கு விளையிதில்ல. புதுக் காசிக் காறனுகளுக்குத்தான் விளையிது!' என்றான் ஒரு பொறாமைக் காரன்.

பூமிக்குள் வடிச்சல் வெட்டி ஐந்து நாளாகின்றன. இன்றோ நாளையோ வேளாண்மைய்யை வெட்ட வேண்டும். பூமி காய்ந்திருக்கிறதோ என்னவோ? நிலைமைகளைப் பார்த்தறிந்து வேளாண்மை வெட்டுவதற்கு 'தத்தி' க்கா ரன்களைக் கொண்டு வருவதற்காக, பூமிக்குள் வந்திருந் தான் றஹீமின் தகப்பன் அலியார்.

பூமியெங்கும் சுற்றிப்பார்த்தார். எல்லாம் பதமாக் இருக்கிறது. கூடுதலான பயளை எறிந்து அதிக விளைவு என் றால் 'அறக்கொட்டி' நோய் பிடிப்பது வழக்கம்! என்ற

புள்ள பூமி வாங்கி முன்ன முன்னம் செய்த வெள்ளாமய ஆண்டவன் காப்பாத்தித் தந்திற்ருன். சூடு போட்டதும் ஹயாத்து நபி அப்பாவுக்கு நல்லதொரு 'பாத்திஹா' ஓத வேணும். இவ்வாறு நினைத்துக்கொண்டு மிக்க மகிழ்வுடன் பூமியைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தான் அலியார். அவனது மனம் பூரிப்பால் விம்மியது.

தூரத்தில் தத்திக்காறன்கள் பின் தொடர யாரோ ஒரு போடியார் முன்னல் வந்து கொண்டிருந்தார். மருதையடிக் கண்டத்துக்குள்ளால் நடைவரம்பில் அவர்கள் விரைவாக வந்தனர். 'எழுவான் பக்கம் வெட்டுற வெள்ளாம ஒண்டுமில்லயே! எல்லாம் காயும் கதிரும்! இவர்களெல்லாம் எங்கே வருகிருர்கள் என்று அலியார் யோசித்துக் கொண்டிருக்கையில்' முன்னல் வந்தவர் போடியார் முஸம்மில் என்பது தெரிந்தது. முஸம்மிலுக்கு இந்தப் பக்கம் பூமியே கிடையாதே! என்று அலியார் யோசித்துக் கொண்டிருக்கையில், வந்தவர்கள் தனது பூமிக்குள் தரித்து நின்றனர்.

முஸம்மிலுடன், கோலாட மனுபும், கொழுக்கட்டயன் காதரும் நின்றனர். இரண்டு பேரும் ஊரில் பேர்போன காடையன்கள். இவர்களைத் தொடர்ந்து நீலாவணையைச் சேர்ந்த தத்திக்காறன்கள் பன்னிரண்டு பேர் நின்றனர். முஸம்மில் அவர்களைப் பார்த்துச் சொன்னுன்.

'நீங்க வேலையைத் தொடங்குங்க. பொலிசில்ல, பொலிசிர அப்பன்மார் வந்தாலும் அசையாதங்கோ! எல்லாரையும் கட்டி வெச்சிற்றுத்தான் நான் வந்திருக்கன். பயப்படாதங்கோ!... மச்சான் மனுப், நீயும் காதரும் நிண்டுக்கங்க! ஆக்கள நிமிர உடாம வெட்டுவிங்க! நான் இன்னு காரிலபோய் சாராயம் ஐஞ்சு போத்தலும் எடுத்துகிட்டு, ஜன சாப்பாட்டுக் கடையில நம் எல்லாருக்கும் சாப்பாட்டுப் பார்சலும் எடுத்துக்கு, பறந்து வாறன்' என்று கூறிவிட்டு காரை நோக்கி நடந்தான்.

அலியார் இந்தக் காட்சியைப் பார்த்து மலைத்துப் போய் சிலையாகி நின்றான். அவனுக்குச் கால் கை ஒன்றுமே இயங்கவில்லை. முன்னால் மூன்றடி நடந்து வந்து முஸம்மிலிடம் 'தம்பி' எனக்கி ஒண்டும் வெளங்க இல்ல. என்ர மகன் போன வருஷம் வாங்கின பூமி இது. நான் தான் செய்யிறன். அப்பிடி இரிக்க நீங்க வெட்டுறத்துக்கு ஆள் கொண்டு வந்து வேலை செய்ற முகாந்திரம் என்ன? இல்ல தெரியாமக் கேக்கன் என்றான்.

'முகாந்திரம் காட்டுவன் இப்ப! அதுக்குத்தான் ஆள் கூட்டிக்கி வந்திரிக்கன் தெரியுமா? மூண்டு வருஷமா நான் இந்தப் பூமிய பத்தாயிரம் ரூபா கொடுத்து முதல் கடன் ஈட்டுக்கு எடுத்துச் செய்றன். ஒன்ர மகனுக்கு புதுக் காசி கைல கெடச்சி கண் மூக்குத் தெரியயில்ல. என்னிட்ட ஒரு சொல் கேக்மாம நாவக்குடாவானுக்கிட்டப் போய் பூமிய வாங்கிற்றான். இப்ப வெள்ளாமைய சூடு போர்ற ஆர் என்று பாப்பம்!

வேளாண்மை வெட்ட வந்த தத்திக்காரங்கள் பன்னிரெண்டு பேரையும், ஆறு ஆறு பேராக எடுத்துக் கொண்டு, மனுபும், காதரும் இரண்டு எல்லையில் நின்று வெட்டுவித்துக் கொண்டிருந்தார்கள்!

தம்பி! இது அநியாயம்! நீங்க முதல் கடனுக்குப் பூமிய எடுத்திருந்தா, அதைப் போய் நாவக்குடாவனிட்ட கேளுங்க! இந்தப் பூமிய இப்ப நாங்க வாங்கி இருக்கம், உறுதி கைல இரிக்கி.

ஒன்ட உறுதிய நீ கொண்டா! என்ர முதல் கடன் ஈட்டுத் துண்ட நான் கொண்டாறன். வழக்கக் கோட்டில பாப்பம்! இப்ப பூமிய உட்டு வெளியே போ! கிழட்டுப் பயல்!

ஒங்க வாப்பாட வயதிருக்கும் தம்பி எனக்கி, இப்பிடியெல்லாம் ஏசாதங்கோ! என்ர மனம் பத்தின அது சும்மா விடாது!

போடா! மடயா? எங்கு மாமாக்கிட்ட வெள்ளாமச் செஞ்சவன் தானடா நீ! இப்ப ஒண்ட மகன் படிச்சிப் பெரியவனுகி நீ யெல்லாம் போடியாயிற்ருய்! ஒண்ட மனம் பத்தினு என்னடா நடக்கும் 'ஔலியா' மாதிரிப் பேசுருன் பேயன்! என்றவாறு அலியாரை நோக்கி வந்தான் முஸம்மில்.

தலேயில் கட்டியிருந்த துவாயைத் தோளில் அவிழ்த்துப் போட்டுக் கொண்டு ஓட்டமும் நடையுமாக நடந்தான் அலியார். இன்னும் கதை கொடுத்து நியாயங் கேட்கப் போனுல் தன் தலேயை இந்தக் காடையன்கள் உடைத்து விடுவார்கள் என்பது அலியாருக்கு விளங்கிற்று. ஒருக்கால் நின்று பூமியைத் திருப்பிப் பார்த்தான். 'தான் பெற்ற பிள்ளேயொன்றைக் கயவன் ஒருவன் கொலே செய்து கொண்டிருப்பது போல' அந்தக் காட்சி அவனுக்குத் தோன்றியது. தாங்க முடியாத கவலேயும், ஆத்திரமும் கொண்டான். அவன் கண்கள் வெம்மையான கண்ணீரைக் கொட்டிற்று! அவன் கால்கள் நடந்தன. ஆனுல் அவை பின்னேக்கி நடப்பது போல அவனுக்குத் தெரிந்தது.

முஸம்மில் ஒருமணி நேரத்தில் சாராயப் போத்தல்கள் சாப்பாட்டுப்பார்சல்களுடன் வந்து சேர்ந்தான். சாப்பிட நேரமிரிக்கி. இப்ப ஆளுக்குக் கொஞ்சம் குடிச்சிக்கங்க என்று இரண்டு போத்தலே தத்திக்காரன்களிடம் கொடுத்தான். பனிப்பட்ட பயிர்போல அவர்கள் முகங்களெல்லாம் மலர்ந்தன. புரையில் ஏறி தூணில் சாய்ந்தபடி முஸம்மில் உட்காந்திருந்தான். அவன் கண்கள் பிரதான வீதியையே நோக்கிக்கொண்டிருந்தன.

ஒரு ஜீப் வருகிறது. துரிசடியில் நிற்கிறது. நிச்சயமாக அது பொலிஸ் ஜீப் தான். நான்கு பொலிஸ் காரர்களும், அலியாரும், றஹீமும் வந்து கொண்டிருந்தனர். புரையடிக்கி வந்து சேர்ந்தனர்.

நீதானு முஸம்மில்! — பொலிஸ்காரன் ஒருவன் கேட்டான்.

'ஓமைய்யா!'

'அங்க! வெள்ளாம வெட்டுறவனுகள யெல்லாம் கூப்பிடு.'

'விசயத்த எனகிட்டப் பேசுங்க ஐயா! அவனுகள் வெட்டட்டும்.'

ஆர்ர பூமிக்குள்ள நிண்டு வெள்ளாம வெட்டுகிருய்! இது எப்படிப்பட்ட குற்றம் எண்டு உனக்குத் தெரியுமா?

ஐயா! இந்தப் பூமி நாவக்குடா வட்டிக்கந்தன் போடியார்ர. நான் இத மூண்டு வருஷமா, முதல் கடனுக்கு எடுத்து செய்றன். இது ஊரில எல்லாருக்கும் தெரியும்!

'இந்த வருஷம் வெதச்சது ஆரு!'

'நான்தான் வெதச்சன் என்ற சொந்த மெஷினுல'

'செய்கைக்காரன் ஆரு'

செய்கைக்காரன் வெக்கல்ல! கூலி ஆள் போட்டு நான்தான் செய்றன்.

(அலியாரைக் காட்டி) இவரைத் தெரியுமா? இவர் தான் இந்தப் பூமியின் செய்கைக்காறன். மிஸ்டர் றஹீம் தான் இந்தப் பூமியை வாங்கி இருக்கார். — இது உனக்குத் தெரியுமா?

ஐயா! இவர் என்ர மாமாட வெள்ளாமைக்காரன்! அவர்தான் இந்தப் பூமியவெதச்சு நெல்லெறிஞ்சி தந்தவர். இடைக்கிடையே கூலி வேலைக்கும் வருவார்.

றஹீமுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. 'மரியாதையாகத் கத. பொய்யையும் அளவோடு சொல்லிக் கொள்'

நீயாடா எனக்கி மரியாத சொல்லித் தரணும்? நான் பரம்பரையோக்கியன்ட மகன்ரா? உன்னப் போல பிச்சக் காரன்ர மகனில்ல. உன்னப் போல புதுப்பணம் கண்டவனு மில்லே தெரியுமா?

நீங்க சண்டை பிடித்தால், நாங்க எப்பிடி கடமை செய்ற! பிளீஸ்... என்று பொலிஸ்காரர்கள் அமைதிப் படுத்தினர். பொலிசார் மீண்டும் கேள்விகளைக் கேட்டனர்.

முஸம்மில்! இது மிஸ்டர் றஹீமின் பூமி. அவர்தான் இதில் வேளாண்மை செய்தவர் என்பதற்கு போதிய சாட் சியங்களும் இருக்கின்றன இந்தப் பூமிக்குரிய உறுதியும் கையில் இருக்கு. நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

முதல் கடனுக்கு பத்தாயிரம் ரூபா கொடுத்து இந்தப் பூமிய எடுத்தவன் நான். அதுக்கான ஒப்பந்தம் எனக்கிட்ட இரிக்கி. பூமிக்காரன் இந்தப் பூமிய ஆருக்கெல்லாம் வித் தான் எண்டது எனக்கித் தேவல்ல.

அதக் கோட்டில பாருங்க. இப்ப இந்த வேளாண் மையை என்ன செய்யப் போறீங்க?

'இதை வெட்டி சூடு போடத்தான் நான் வந்திருக் கன். அதுக்கான ஆதாரக் கடிதங்கள், சாட்சிகள் என்னி டம் உண்டு. — முஸம்மில் வாதாடினுன்.

மிஸ்டர் றஹீம் நீங்கள் என்ன செய்யப் போறீங்க.,

இது அத்துமீறின செயல்! அக்கிரமமும் ஆணவமும் நிறைந்தது. நீதி எங்கே இருக்கிறது என்பதை நான் பார்த்தே தீருவேன். இப்போ வெள்ளாம வெட்டுவதை தடுத்து ஆட்களை வெளியேற்றித்தாங்க!

சரி! வெள்ளாமை வெட்டும் ஆட்கள் தங்கள் வேலைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். முஸம்மில், றஹீம், மனுப், காதர், நான்கு பேரும் ஸ்டேஷனுக்கு வந்து உங்களது என்

ரியைப் பதிந்து விட்டு போங்க. இன்ஸ்பெக்டர் விளக்கத்தில் சொல்லும் முடிவை ஏற்றுக் கொள்ளுங்க.

*

முஸம்மிலும், றஹீமும் தங்களது விளக்கங்களை பொலிஸில் பதிவு செய்தனர். இது முடிந்ததும் இன்ஸ்பெக்டர் நாகராஜா இவர்களை விளக்கத்திற்கு அழைத்தார்.

மீண்டும் அதே விளக்கங்கள் கொடுபட்டன. றஹீமிடம் பூமிக்கான உறுதி இருந்தது. முஸம்மிலிடம் முதல் கடன் ஈட்டுத் துண்டு இருந்தது. இன்ஸ்பெக்டர் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டு,

முஸம்மில் நீ ஒரு காசிக்காரன்! போடி குடும்பத்தைச் சேர்ந்தவன். மற்றொருவருடைய சொத்தையும் உழைப்பையும் பறித்தெடுக்க விரும்பமாட்டாய் என்று நம்புகிறேன். ஆனால் ஒரு சந்தேகம்...

முஸம்மில் உற்சாகத்தோடு 'நீங்க சொல்றது அத்தனையும் உண்மை ஐயா! நான் ஒரு யோக்கியன். இவனப்போல புதுசாப் பணம் கண்டவனில்ல... கூலிக்கு வெள்ளாமைச் செய்றவன்ர மகன்...

ஓமோம்! மற்றவன்ர பூமிய அருகு கொத்தி ஏழைகளிற்ற நூறும் இருநூறும் கொடுத்து ஏமாத்தி, நீங்க போடியான விதம் எங்களுக்குத் தெரியாதோ! வட்டக்க கதிர் பொறக்கவாற கண் பொண்சாதிக் கெல்லாம் புள்ள குடுத்துத் திரியிற உங்குட யோக்கியங்கள ஊர் அறியும்.

என்முன்னுலேயே நீங்க இரண்டு பேரும் வம்புவசை சொல்றது நல்லா இல்லை. இந்த இடத்தில உண்மையையும் நீதியையும் பார்ப்போம்!... ஏன் முஸம்மில்... வேளாண்மை வெட்டத் தத்திக்காரன்களைத்தான் கூட்டிக் கொண்டு போவார்கள். நீயோ ஊரிலேயே பெயர்

பெற்ற காடையன்களான மனுவையும், கொழுக்கட்டயன் காதரையும் கூட்டிக் கொண்டு வயலுக்குப் போனதேன்? இது குளப்பம் எடுக்கிற ஒரு முயற்சி எண்டு நான் நினைக் கிறேன்! என்ருர் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டர் இப்படிச் சொன்னது மனுவுக்குப் பிடிக்கவில்லே! ஸேர்! நான் அமிர்தம் ஹோட்டல் ஹனிபா முதலாளிக்கு கத்தியால குத்தி ரெண்டு வருஷம் மறியலுக் குப் போனதுக்குப் பொறகு, நான் இந்த வம்புதும்புக் கெல்லாம் போறத உட்டுட்டன் ஸேர். சென்ற ஒரு வரு ஷமா என்னப் பத்தி பொலிசில ஒரு கொம்பிளேனும் இல்லே.... என்ருன்.

முஸம்மில் அவனே ஆதரித்துப் பேசினுன். ஐயா! இவ னுகளெல்லாம் அப்படி குளப்பங்கள், அடிபிடிக் கெல்லாம் போகக் கூடாது எண்ட நிபந்தனேப் படிதான் நான் சேத்து வெச்சிருக்கன்... நான் ஒரு வசதிக்காறன். என்னில பலருக்குக் கோபம் உண்டு. ஆனபடியால்தான் நான் எங்க போகிலியும் துணேக்கி இரண்டு பேரக் காரில போட்டுக் கிட்டுப் போவன். அது என் வழக்கம்!

நீ யோக்கியனென்டா, அயோக்கியன்ர உறவு உனக் கெதுக்கு? இவனுகளே வச்சிருக்கிறதே யானே கட்டித்தீனி போடுற வேலே. இவனுகளுக்கு சாராயம் ஊத்தவே கட்டு படியாகாதே! என்ருர் இன்ஸ்பெக்டர்.

இல்லே ஐயா! இவனுகள் சாராயத்தை தொடவும் மாட்டானுகள். அதையெல்லாம் நான் உட வெச்சிற றன்...

ஓமோம்! சாராயத்தை விட்டால் கஞ்சாவச் சிலும்பி யில போட்டு அடிப்பானுங்கள்! இவனுகள்ள உதட்டப்பாக்க இல்லேயா? வடமராச்சிச் சுருட்டைப்போல கறுத்திரிக்கிற மாதிரிய...

மனுபும், காதரும் தங்களது உதடுகளை நாக்கினல் தடவி ஈரமாக்கி, கையினுல் துடைத்துக் கொண்டார்கள். கஞ்சாத்தூள்கள் சில வேளை உதட்டில் படிந்து கிடக்கலாம் என்ற நினைப்பில்.

இன்ஸ்பெக்டர் சொன்னுர்:- இந்தக் கேஸை நீங்கள் பெருப்பித்துக் கொண்டு கோடு ஏற வேண்டாம். விளைந்து கெடக்கிற வெள்ளாமய விரைவில் யார்சரி வெட்டி எடுக்க வேணும். நான் முதல்ல இதை இலுக்குச்சேனை விவசாயக் குழுவுக்கு விளக்கத்துக்குப் போடுகிறேன்... இன்றைக்கு முதலாம் தேதி. நாலாம் தேதி விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரின் கந்தோரில் விளக்கம் நடக்கும். நீங்கள் இருவரும் உங்களுடைய சாட்சிகள் சான்றுகளுடன் சமுகமளியுங்க. அன்றைக்கு நானும் வருகிறேன்.

ஐயா! வெட்டின வெள்ளாம குறையில கெடக்கு. அத நான் வெட்டி சூடு வெக்கன். விளக்கம் முடிந்த பொறகு சூடு போர்றன். இதுக்கு உத்தரவு தாங்க ஐயா! என்ருன் முஸம்மில்.

வெள்ளாமையை வெட்டினு ராவோடுராவ, மெஷின் பெட்டியில அதைக் கடத்திடலாம் என்று நான் நினைக்கிறேன் ஸேர். றஹீம் இவர்களைப் பற்றி மற்ெருரு முறைப்பாடு செய்தான்.

ஓமோம்! அதுவும் நடக்கும்... என்னமேன் முஸம்மில் விஷயம் தகராறில் கெடக்கு. நீ என்னண்டா வெள்ளாமய வெட்டி சூடு வெக்கப் போறன் என்கிருய். எங்களுக்கிட்ட என்ன மூளை இல்லை என்று நினைக்கிருயா? சற்று ஆவேசம் வந்தவராக விளக்கம் முடிந்து தீர்ப்புத் தருகிறவரையில யாரும் பூமிக்கபோகக்கூடாது! கவனம்! நீங்க போகலாம்.

பொலிஸ் நிலைய வாசற் கேற்றைக் கடக்கும் போது, கொழுக்கட்டயன் காதர் றஹீமின் தோளைத் தனது தோளால் இடித்துத் தள்ளிக்கொண்டு வெளியேறினுன்.

முஸம்மிலின் காரில் மூவரும் ஏறிக் கொண்டனர். முஸம்மில் காரை வெகு வேகமாக ஸ்ராட் செய்து திருப் பிக்கொண்டு போனுன்,

றஹீமும் அவன் தந்தை அலியாரும் மிக அமைதியாக உள் தெரு ஒன்றில் தங்களுடைய வீடு நோக்கி நடந் தனர்.

## ( 17 )

புகையிரத நிலையத்தில் மச்சான் ஜெமீலை வழி அனுப் புவதற்கு றஸீனு என்ற அந்தப்பெண் வந்திருந்த சம்பவம், பானுவின் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை. அவள் உடுத்தி வந்திருந்த நாகரிகமும், மச்சானேடு நடந்து கொண்ட மாதிரியும், அவள் ஆங்கிலத்தில் பேசிய பவுசை யும் நினைக்க நினைக்க பானுவின் மனதில் ஆத்திரம் காட்டுத் தீயொன்று, சுவாலைவிட்டு எரிவது போன்றிருந்தது.

பானு ஏழாம் வகுப்போடு படிப்பை நிறுத்திக்கொண் டாள். அதற்குக்காரணம் அப்பொழுது மேல்வகுப்பு, முஸ் லிம் மகாவித்தியாலயத்தில் மட்டுமே இருந்தது. 'ஆண் களும் பெண்களும் கலந்துதான் அங்கு படித்தனர். பெண் கள் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும். இப்படி ஆண்க ளோடு கூத்தடித்துக்கொண்டு படிப்பது அழகல்ல. ஒழுக் கத்தையும் பெண்களுக்குரிய அடக்க ஒடுக்கத்தையும் இழந்து கற்றுக்கொள்ளும் கல்வி ஒரு பெண்ணுக்குத்தேவை இல்லை' என்பது பானுவின் உம்மா ஸாஹிருவின் எண்ணம் ஆதலால் ஸாஹிரு 'பெரியபிள்ளை' ஆனதும் அவளைப் பள்ளியில் இருந்து விலக்கிவிட்டாள். இதன் பிறகும் பிள்ளை ஆண்களோடு இருந்து கற்பதும், ஆண் உபாத்திமார்கள் கற்பிப்பதும் ஸாஹிரு உம்மாவுக்கு பிடிக்கவில்லை. வயது வந்த ஒரு பெண் பிள்ளையின், முகத்தை ஒரு ஆடவர் உற்றுப்பார்ப்பதே 'ஹறும்' என்று ஆலீம்கள் கூற அவள்

கேட்டிருக்கிறுள். மார்க்கம் கூறும் இந்த ஒழுக்கத்தை மீறி நிற்க அவள் விரும்பவில்லே. ஒரு பெண்ணுக்குத் தேவை யான கல்வி என்ருல் என்ன? குர்ஆன் முப்பது ஜுஸ்வும் ஓதி இருக்க வேண்டும். மௌலிது தலேப்பாத்திஹா தெரிந் திருக்க வேண்டும். தொழுகை முறைகளேப் படித்திருக்க வேண்டும். இதைவிட்டு ஆங்கிலம், சிங்களம், கணிதம் விஞ் ஞானமெல்லாம் ஒரு பெண்ணுக்குத் தேவை இல்லே என்பது ஸாஹிரு உம்மாவின் அசைக்கமுடியாத கருத்து. பானு, காதர்முகையதீன் ஆலிமிடம் இதையெல்லாம் கற்றுக் கொண்டாள். எல்லாம் ஓதி முடிந்ததும் பிள்ளேக்குக்கண் ணூறு கழித்து, மௌலிதும் ஓதினுள். ஓதிக்கொடுத்த ஆலி முக்கு சாறன் போர்த்தி, ஒரு கன்றுக்குட்டியையும் அன் பளிப்பாகக்கொடுத்தாள்.

இப்பொழுதென்ருல் கஸ்ஸாலி மகளிர் மகாவித்தி யாலயம் வந்து. அங்கு குமர் பிள்ளேகள் எல்லாம் படிக்கி ருர்கள். அங்கு எல்லாம் பெண் ஆசிரியைகள்தான் படிப் பிக்கிருர்கள். பிள்ளேகள் எல்லாம் இஸ்லாம் முறைப்படி 'பாய்சூட்' அணிந்து முக்காடுபோட்டு ஒழுக்கமாகப் போகி ருர்கள். எனினும் தன் பிள்ளேயும் இவ்வாறு போய் கற் றுக்கொள்ளவில்லேயே என்று அவள் தன்னே அலட்டிக் கொள்ளவில்லே. 'பாவம்' எளிய பிள்ளேகள்தான் அதிக மாகக்கற்கிருர்கள். நாளேக்கு அதுகள் ஒரு உத்தியோ கத்தை எடுத்தால்தானே 'அதுகளுக்கு மாப்பிள்ளேயாவது எடுக்கலாம்' என்று ஸாஹிரு உம்மா அப்பிள்ளேகளே அனு தாபத்தோடு அங்கீகரித்தாள்.

இந்தச்சூழ்நிலேயில் வளர்க்கப்பட்டவள் பானு. இது வரை எந்த ஒரு ஆடவனேடும் சமமாக நின்று முகம் பார்த்துக்கதைத்திருப்பாளா? என்பதும் சந்தேகம். வெள் ளிக்கிழமை, திங்கட்கிழமைகளில் பானு குர்ஆன் எடுத்து குரல் எழுப்பி ஓதினுல் அது கேட்க ஒரு தனி இன்பம். ஸாஹிரு அந்தப்பெருமையில் தன்னேயே மறந்து விடுவாள். தலேப்பாத்திஹாவை எடுத்து;

கதிஜா தருங்கனியே
ஹஸன் ஹுஸைனின் தாயகியே
மதியாத மாணிக்கமே
மகராஜி பாத்திமுத்தே!

என்று பானு இசை எழுப்பி ஓதுவாளேயானால், பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம் பக்தி வெள்ளத்தில் மூழ்கி, தலையில் முக்காடு போட்டுக்கொண்டு கேட்பார்கள்.

ஓதல் விஷயத்தில் மிகவும் கெட்டிக்காரி பானு. அவளுக்கு' ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்ற பாரதி பாடலெல்லாம் தெரியாது வீட்டிலே செல்லமாக வளர்ந்தவள். இந்தப் பதினெட்டு வயதில்கூட எதற்கெடுத்தாலும் அழுது விடுவாள். இவளை அழாமல் பார்ப்பதே ஸாஹிரு உம்மாவுக்கு ஒரு வேலை.

இந்த பானுவால், அந்த றஸீனாவின் நடத்தையை ஏற்றுக்கொள்ள முடியுமா? கடந்த மூன்று வாரமாக அவளுக்கு அந்தச் சம்பவம் நெஞ்சில் ஒரு முள்ளாகத் தைத்துக் கொண்டிருந்தது. மச்சான் வந்ததும் இதனைப்பற்றி அவருக்கு நேரில் எடுத்துக் கூறினால் என்ன? என்றும் அவள் எண்ணினாள். ஆனால் ஒரு ஆணுக்கு முன்னால் நின்று இப்படியெல்லாம் எடுத்துக்கூறும் திராணி அவளுக்கில்லையே! நெஞ்சம் நிலை குலைந்து தனக்கு வேர்த்துக்கொட்டத் தொடங்கிவிடுமே! அப்போ, மச்சானை அக்கரைப்பற்று வங்கிக்கு மாறி வரச்சொன்னால் என்ன? அந்த றஸினா உம்மா அதற்குப்பிறகு என்ன செய்வா? இங்கேயும் பெண்கள் இருந்தால், இவர்களும் மச்சானோடு அப்படிப் பழகத் தொடங்கினால்...... முற்றி விளைந்த வயலில் குருவி விழுந்து அழிக்காமல், பையன் ஒருவன் நின்று குருவிக்காவல் பார்ப்பானே! அப்படி வயது வந்த ஆண்களுக்குமல்லவா குருவி வெருட்டவேண்டி இருக்கிறது! இது எப்படி முடியும்?' பானுவின் கவலையெல்லாம் மச்சானை எப்படி காப்பாற்றி எடுப்பது என்பதாகவே இருந்தது.

உலக இளைஞர் மகாநாட்டுக்குப் போயிருந்த ஜெமீல் அன்று வந்துவிட்டான். மகன் கொண்டு வந்திருந்த இனிப்பு வகைகளை, வேண்டியவர்களுக்கெல்லாம் பகிர்ந்து கொண்டிருந்தாள் ஹாஜரு உம்மா! 'மகன் வெளிநாட்டுக் கெல்லாம் போய் வந்துவிட்டான், என்பதை பகிரங்கப் படுத்துவது இதன் உள்நோக்கம்.

மதினி ஸாஹீரு உம்மாவுக்கும் ஒரு டொபிப்பக்கற்றை அனுப்பிவைத்தான். அது கிடைத்ததும் 'ஹாஜரு இப்ப தான் தன்னை முறையாகக் கௌரவித்திருக்கிறாள்' என்று ஸாஹீரு உம்மாவுக்கு ஒரே பெருமை. 'என்ன சொன்னாலும் என்ர காக்கா பொண்டி நல்லவ' என்று அவளை மன துக்குள் வாழ்த்திக்கொண்டாள். மகளைக் கூப்பிட்டு 'பானு! மச்சான் வந்திற்றாராம். முட்டாசி அனுப்பி இருக்கா மாமி, இன்னா நீதான் முதல்ல தின்னு' என்று கூறி டொபிப் பக்கற்றை பானுவிடம் கொடுத்தாள்.

டொபியை வாங்கிய பானுவுக்கு அது தீண்டத்தகாத ஒரு பொருள் என்பதுபோலப் பட்டது. விருப்பக் குறை வோடு இரண்டு டொபியை எடுத்து ஜரிகையை உரித்து விட்டு வாய்க்குள் வைத்து உமிழ்ந்து கொண்டாள். மீதியை தையல் மெஷினுக்கு மேல் வைத்துவிட்டுப் போனாள். அவளுடைய விருப்பக்குறைவான செயலை ஸாஹீரு உம்மா கண்டு ஒன்றும் விளங்காதவளாக நின்றாள்

பானுவின் சிந்தனை வேகமாக வேலை செய்யத்தொடங் கிற்று. இதேபோல ஒரு டொபிப்பக்கற் அவரோடு வேலை பார்க்கும் றஸீனாவுக்கும் போகுமா? அவரே தன் கையால் கொடுப்பாரல்லவா? என்று நினைக்கையில் அவள் நெஞ்சு 'திகீர்' என்று பற்றிக்கொண்டது. இதைவிடக் கொடுமை ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?

மறுநாள் பின்னேரம் ஸாஹிரு உம்மா தன் காக்கா வின் வீட்டுக்குப்போகப் புறப்பட்டாள். 'மச்சான் ஜேர்மனி யில் இருந்து வந்ததும் எப்படி இருக்கிறார், என்று பார்க்க

பானு விரும்பினுள்.' அவரை ஒருமுறை பார்த்தால், அவரோடு இரண்டு வார்த்தை பேசினுல் மனதுக்கு ஒரு நிம்மதி ஏற்படும் என்று அவள் எண்ணினுள். 'நானும் வாறன் உம்மா' என்று கூறிக்கொண்டு அவளும் புறப்பட்டாள்.

வீட்டின் கடை வாயிலில் நின்ற ஜெமீல் இவர்களைக் கண்டதும், மாமி வாங்கோ! அது யார் பானுவா? பானு ரொம்ப வளந்திற்ரு மாமி என்று கூறி வரவேற்ருன். 'பானு ரொம்ப வளந்திற்ரு' என்ற வார்த்தை பானுவுக்கு மட்டுமல்ல, ஸாஹிரு உம்மாவுக்கும் இனித்தது.

ஜெமீலின் தங்கை ருஹிலா, பானுவைக்கூட்டிக் கொண்டு 'உள்வீட்டுக்குள்' போனுள். ஜேர்மனியிலிருந்து காக்கா கொண்டுவந்த புதுமையான சாமான்களையெல்லாம் காட்டி விபரித்தாள். உயர்தரமான ஒரு மேசை மணிக்கூடு, மேசைக்கத்தி, கரண்டிவகைகள், வாப்பாவுக்கு ஒரு கம்பளி பெனியன் இவ்வாறு பல சாமான்கள் இருந்தன. அன்று றஸீனு கட்டிவந்த தங்கக்கரைப்பிடவை அவளுக்கு நினைவுக்கு வந்தது. 'ஏன்! உங்களுக்கும் ராத்தாவுக்கும் பிடவை வாங்கி வரவில்லையா?' என்று கேட்டாள்.

பிடவையா? ஜேர்மனி நாட்டில் பிடவை ஏது? அங்க பெண்களெல்லாம் நீட்ட கௌண்தான் போட்டுக்குவாங்க.

இப்படி பாவாடை தாவணிகூட போட்டுக்க மாட்டாங்களா?

ருஹிலா விழுந்து விழுந்து சிரித்தாள். அவங்கட ஊர் வேற மாதிரி! அங்க இஸ்லாமான பெண்கள்கூட நீட்ட கௌண்தான் போட்டுக்குவாங்களாம்! ஆக்களைப் பாத்தா இஸ்லாமானவங்க எண்டே சொல்ல ஏலாதாம்!

பானுவுக்கு வியப்புத்தாங்க முடியவில்லை. 'இது என்ன அநியாயமான இஸ்லாம்' என்று அவள் மனம் எண்ணியது.

ருஹிலா எழுந்துசென்று ஒரு போட்டோ ஆல்பத்தைக் கொண்டுவந்து திறந்து 'இது காக்கா ஜேர்மனி மகாநாட்டில பேசுறது, அந்த நாட்டை சுத்திப்பார்த்தது எல்லாவற்றையும் படம் புடிச்சி இதில ஒட்டியிருக்கார்' என்று கூறிவிட்டு ஒரு பக்கத்தைப்புரட்டி பானுவிடம் பார்க்க கொடுத்தாள்.

அதில் ஜெமீல், ஒரு கௌண் அணிந்த பெண்ணுடன் நெருங்கி நின்று கொண்டிருந்தான். அந்தப்பெண் கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் சிரித்தபடி நின்றாள். இதனைப் பார்க்கவே பானுவுக்கு கூச்சமாக இருந்தது.

'இவதான், காக்கா அவங்களுக்கு வழிகாட்டியாம். போகவேண்டிய இடத்துக்கெல்லாம் இவதான் கூட்டிக் கொண்டுபோய்க்காட்டினவாம். இவட பேர் தெரியுமா? சுஹைறா—ஒரு முஸ்லிம் பொம்புள.'

பானுவால் இனியும் வியப்புத்தாங்க முடியவில்லை. அவள் நெஞ்செல்லாம் அடைத்துக்கொண்டு வந்தது. கண்கள் நீர் சொரிந்துவிடும்போலிருந்தது. ஆல்பத்தை மூடி, ருஹிலாவிடம் கொடுத்துவிட்டு எழுந்தாள். உம்மாவிடம் போய் 'ஊட்ட போவம் உம்மா' என்றாள். அவள் முகம் வேர்த்துக்கொட்டியது. அடிக்கடி தாவணியால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

வீட்ட போய்ச்சேர்ந்தாள் பானு அந்த டொபி பைக்கற் உடைத்து இரண்டை எடுத்தமாதிரி இன்னும் அப்படியே கிடந்தது. தையல் மெஷினுக்கு மேலேதான் எல்லாப் பண்டியையும் வைக்கிறயள் உம்மா, அத அத அந்தந்த இடத்தில வைங்களன்' என்று கூறியவாறு அதனைத் தூக்கி பக்கத்தில் இருந்த பெட்டியொன்றின்மேல் எறிந்தாள். 'எதை எதை எந்த எந்த இடத்தில வைக்க வேண்டும்' என்று அவளுடைய மனமே அவளிடம் கேட்டது. அதற்கு திட்டமான விடை அவளால் இன்னும் கூற முடியவில்லை. டொபியை மெஷின்மேல் வைத்தவள் அவள்தானே.

கட்டிலில் போய் விழுந்தாள். பெருகிவந்த நெஞ்சக் குமுறலை வெளியேற்றி விடாவிட்டால் அவளது நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு வேண்டியமட்டும் அழுதாள், அவளுக்கு ஆறுதல் கூறக்கூட யாருமில்லை. தலையணை நனைந்து 'தொப்'பாகியது

பள்ளிவாசலில் 'முஅத்தினுர்' மகரிபுக்கு பாங்கு சொல்லும் சப்தம் ஒலிபெருக்கியில் கணீர் எனக் கேட்டது. வீட்டில் விளக்குகளையெல்லாம் கொழுத்தி வைத்துவிட்டு உள் வீட்டுக்குள் விளக்கொன்றை எடுத்துக்கொண்டு போகும் போதுதான் ஸாஹிரு உம்மாவுக்கு பானுவின் நினைவு வந்தது. அங்கே கட்டிலில் 'துட்டகாமினி மன்னன் முடங்கிக் கிடந்தவாறு சுருண்டு கிடந்தாள் பானு. 'பானு என்ன இவ்வளவு நேரமும் இஞ்சயா படுத்தாய்? மகரிபுக்கு பாங்கு சொன்னன்ன நீ படுக்கிறன்ன? என்ருள் ஸாஹிரு.

'ஒண்டுமில்லம்மா. தலையிடிக்குது. படுக்கன்.

கையிலிருந்த வெளிச்சத்தில் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். முகம் விம்மி வீங்கிப் போயிருந்தது. கண்கள் சிவந்திருந்தன.

'பானு! அழுதாயா? முகம் இப்பிடி வீங்கிப் போயிருக்கே?

'இல்லம்மா' என்றபடி எழுந்து முகத்தைத் துடைத்தாள்.

இஞ்ச! என்னமோ நடந்திருக்கு. ஒழிக்காமச்சொல்லு. உன்னச் சிரிக்க வெக்கத்தான் நாங்க இவ்வளவு பாடு பர்றம்.

ஒண்டுமில்லம்மா... மச்சான்...

மாச்சானில என்ன வந்திற்று? அவர் சந்தோஷமாத் தானே இருக்கார்.

'அதில்லம்மா...நாம அவர வழி அனுப்பப் போனமே, அப்போ மச்சாஞேட இங்கிலிசில கதச்சிக்கி நிண்டாளே ஒருத்தி...

அந்த ஆட்டக்காறிய சொல்றயா? அதுக்கு நீ ஏன் அழஞும்! ஒன்ட மச்சான் அப்பிடிக்கொத்த ஆள் இல்ல. நீ ஒரு மடப்புள்ளயாயிருக்கயே!

அதுமட்டுமில்லம்மா! அவர் ஜெர்மனிக்குப் போஞர் இல்லுவா. அங்கேயும் சுஹைறு என்ற ஒரு வெள்ளக்காறிச்சியோட நிண்டு ஒரு படம் புடிச்சிருக்கிருர் உம்மா. இதெல்லாம் நெனச்சன் எனக்கி அழுக வந்திற்று.

'அடியே மடப்புள்ள! என்ர காக்கா எனக்கி மாப்புள்ள தாறண்டு சொல்லிற்ருர். மாமா சென்ஞ தெரியுந்தானே வெட்டொன்று துண்டிரண்டு. தப்பாது! நீ பேய்த்தனமாக என்ன வாயிருமோ எண்டு நெனச்சி அழுகயா?

அது இல்லம்மா...இந்தப் பொம்ளயளொடெல்லாம் மச்சான் ஏன் இப்படி பழகுகிருர்?

'ஆம்புள, அதிலயும் படிச்சவங்க எண்டா இப்பிடித்தான் எல்லாரோடையும் பழகுவாங்க' ஒனக்கு இது புதிசா இரிக்கி.

'அப்பிடியெண்டா' ஆம்புளயள் விரும்பின விரும்பின பொண்டுகளோடெல்லாம் அவங்கட இஸ்டம்போல பழகிக்கி படம் எடுத்துக்குத்திரதாஞ? நாங்க மட்டும் அப்பிடிப் பழகிற்ரு எவ்வளவெல்லாம் கதைக்காங்க.

'இதுக்கெல்லாம் விளக்கத்த, மச்சான் உன்னக் கலியாணம் முடிச்ச பொறகு, அவருக்கிட்டேயே கேள். நீயாஉம் ஏழாம் வகுப்புப் படிச்சிரிக்காய். ஓதி இருக்காய். நான் ஓதப் போய் அல்ஹம்து தொடங்கிற்று. வந்தவள்... எழும்பு போய் முகத்தக் கழுவு...

'இப்பிடியான மச்சானக் கலியாணம் முடிக்கிறத சும்மா இருந்திரலாம்...என்று முனகிக்கொண்டு கிணற்றடிக்குப் போனுள் பானு.

ஸாஹிருஉம்மாவுக்கு மகள்மீது பரிவு ஒரு புறம். மருமகன்மீது சந்தேகம் ஒருபுறம், இந்தக் காலத்து ஆம்புளப் பிள்ளையள என்ன சொல்லிக் கெடக்கு. தங்கட தங்கட இஷ்டத்துக்குத்தானே நடக்குதுகள். பானு செல்றதிலயும் நியாயம் இரிக்கி. ஒரு ஆம்புள ஒருத்தியோட நிண்டு படம் புடிக்கிற, இன்னொருத்தியோட கலகலவெண்டு பேசுற... வேகருருத்திய கலியாணம் முடிக்கிற...எண்டா இதெல்லாம் என்ன? இந்தக் கலியாணத்தைக் கெதியா முடிச்சாத்தான் திட்டம். ஒலகத்த என்ன நம்பிக் கெடக்கு?' இப்படி ஸாஹிரு உம்மாவின் நினைவும் சென்றது.

## ( 18 )

விவசாய அபிவிருத்தி சபை உத்தியோகஸ்தரின் காரியாலயம் அன்று வெகுபரபரப்பாக இருந்தது. முஸம்மிலின் ஆதரவாளர்களும் றஹீமின் அனுதாபிகளும் காணி விசாரணை முடிவை அறிவதற்காக சுப்ரீம் கோர்ட்டில் கொலை வழக்குப் பார்க்க சனம் திரண்டிருப்பதுபோல கூடி நின்றனர்.

முஸம்மில்,மனுப்,ஜூதர் சகிதம் காரில் வந்திறங்கினுன். றஹீம் தனது மோட்டார் சைக்கிளில் வந்திருந்தான். விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், இலுக்குச் சேனைக் கண்டத்து விவசாயக் குழுத் தலைவர், காரியதரிசி, தனுதிகாரி அனைவரும் வந்திருந்தனர். சரியாக ஒன்பது மணிக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜா தனது ஜீப்பில் வந்திறங்கினுர், இதுவரை இருந்த ஆரவாரமும் பேச்சொலியும் இன்ஸ்பெக்டர் நாகராஜாவைக் கண்டதும் நின்று எங்கும் அமைதி நிலவிற்று. கதிரையில் அமர்ந்

திருந்து சண்ட மாருதப் பிரசங்கம் நிகழ்த்திய மனுபும், காதரும் இன்ஸ்பெக்டர் வந்ததும் எழுந்து ஒரு பக்கமாகப் போய் ஒதுங்கி நின்றனர்.

விளக்கத்தை தொடங்கலாமா? என்று கேட்டார் விவசாயப் பகுதி உத்தியோகத்தர்,

'ஓம் நான் ஆயத்தம் என்ருன் முஸம்மில் வெகு உற்சாகமாக,

எனது சாட்சி ஒருவர் வரவேண்டும். விரைவில் வந்திடுவார். நீங்க ஆரம்ப விசாரணைகளைத் தொடங்கலாம் என்ருன் றஹீம்.

விவசாயக் குழுத் தலைவர் எல்லா ஆதாரங்களையும் பரிசீலனை செய்துவிட்டு 'இந்தப் பூமி 1970ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி முஸம்மிலுக்கு முதல் கடனுக ரூபா 10,000 ஈட்டுத் துண்டு எழுதிக் கொடுபட்டிருக்கிறது, 1973 செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி இக்காணி பத்தேக்கரும் றஹீமுக்கு கிரயமாக எழுதிக்கொடுபட்டிருக்கிறது. அப்பொழுதே காணிப் பதிவு இடாப்பும் றஹீமுடைய பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி பூமிக்கான முழு உரிமையும் றஹீமுக்குரியது என்ருர்,

'பூமிக்கு நான் உரிமை கோரவில்லை. அது யாருக்கும் சொந்தமாக இருக்கலாம். எனது முதல் கடன் ஈட்டுத் துண்டின்படி நாவற்குடா கந்தன் போடியோ, அல்லது றஹீமோ எனது பணத்தைத் தந்து எனது ஈட்டை மீண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில் பூமியில் பயிர் செய்ற உரிமை எனக்கு இருக்கிறது என்று விவாதம் செய்தான் முஸம்மில்.

'இந்தப் பூமி 1973 நவம்பர் ஏழாம் திகதி விதைக்கப் பட்டிருக்கிறது. இதனை விதைத்தது யார்?

'நான்தான் விதைத்தேன் என்றுன் றஹீம் மிகப் பணிவாக.

'முதல் கடன் ஈட்டுத் துண்டு மீட்கப்படாமல் அது என் வசம் இருக்கும்போது இவர் எப்படி பூமியை விதைக்க முடியும்?—முஸம்மில்,

'யாருக்கிட்ட என்ன துண்டு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. பணம் கொடுத்து பூமியை வாங்கினவன் நான். அதில் விதைக்கிறதுக்கு நான் யாரிடமும் கேட்கத் தேவையில்லே. யாரிடத்தில என்ன துண்டு இருக்கிறது என்ற கவலேயும் எனக்கில்லே. நான்தான் பூமியை விதைத்தேன் என்பதற்கு இங்கே நீர்ப் பாய்ச்சல் சேவகர் நிற்கிறுர், அவர்தான் சாட்சி. விதைக்கிறதுக்கு தண்ணீர்விட்டுக் கட்டினேன். அந்தத் தண்ணீரைத் துரிசி திறந்து தந்தவர் இவர்தான் என்றுன் றஹீம்,

நீர்ப்பாய்ச்சல் சேவகரை நோக்கி மனுப்கண்ணே உருட்டி ஒரு பார்வை பார்த்தான். அப் பார்வையில் சேவகர் இரவு 12 மணிக்கு நுவரெலியாவில் நிற்பவரைப் போல் நடுங்கினுர். பின்னர் தடுமாறிக்கொண்டு இந்தப் பூமிய மூன்று வருஷமா முஸம்மில்தான் செய்தார். அந்த மூன்று வருஷங்களும் அவர்தான் பூமிக்கான சுமந்திரம் தந்தார். இந்த முறை றஹீமின் வாப்பா அலியார் என்பவர் பூமியில வேலே செய்தார், அவர்தான் தண்ணியும் கேட்டார், கொடுத்தேன். அவரும் கூலிக்கு வெள்ளாமைச் செய்தவர். யாருக்காக அவர் அந்த பூமியில வேலே செஞ்சார் எண்டு எனக்குத் தெரியாது' இவ்வாறு கூறி முடித்தார்.

முஸம்மில் நிமிர்ந்து உட்கார்ந்தான். 'இன்ஸ்பெக்டரைப் பார்த்து இதுதான் உண்மை ஐயா! அலியாரைக் கூலி வேலேக்கு நான்தான் போட்டிருந்தன். அவ்வளவுதான் என்றுன்.

அப்போ இந்த பூமியை றஹீம் செய்யவில்லே. முஸம்மில்தான் செய்தார் என்கிருயா? என்று குழுத் தலேவர் ஒரு குறுக்குக் கேள்வியை நீர்ப்பாய்ச்சல் சேவகரிடம் கேட்டார்.

'யார் செய்த எண்டு திட்டமாக எனக்குத் தெரியாது. நடந்தத செல்றன்...

குழுத் தலேவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்ன மேன் சொல்ருய்? நான்கு மாதமாக அந்த பூமியில ஊடாடி வேலே செய்தவர் யார்? என்று உனக்குத் தெரியாதா?

'அலியார்தான் வேலே செஞ்சார்' என்று பதற்றத்துடன் கூறினுர் நீர்ப்பாய்ச்சல் சேவகர். முஸம்மிலுக்குப் போன உயிர் ஒருவாறு திரும்பி வந்தது.

அப்பொழுது நாவற்குடா கந்தன் போடியும், அலியாரும் வந்துகொண்டிருந்தனர், இவர்களேக் கண்ட றஹீம், 'நான் பூமியை வாங்கிய போடியார் கந்தனும் வெள்ளாமையைச் செய்த எனது தகப்பனும் வந்திற்ருங்க என்று அவர்களேச் சபைக்கு அறிமுகம் செய்தான்.

குழுத் தலேவர் வந்திருந்த கந்தன் போடியாரைப் பார்த்து 'போடியார் அந்தப் பூமியை நீங்கதானே றஹீமுக்கு விற்றீர்கள்?

'ஓம்! நான் தான் கிரயமாக விற்றேன்.' இதற்கு முன் முஸம்மிலுக்கு இந்தப் பூமியை முதல் கடன் ஈடாகக் கொடுத்திருந்தீர்களா?

'ஓம்! மூன்று வருஷமா அவருக்குக் கொடுத்திருந்தேன்.

இந்தப் பூமியை விற்கும்போது முதல் கடன் ஈட்டிலிருந்து மீட்டுக்கொண்டீர்களா?

ஓம்! றஹீமிட்மே முன்னதாக பத்தாயிரம் ரூபா வாங்கி பூமியை மீட்டுக்கொண்ட பிறகுதான் விக்கிறதுக்கான உறுதிய எழுதினன்.

பூமியை மீட்டிக்கொண்டீர்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? முஸம்மிலிடம் முதல் கடன் ஈட்டுத் துண்டு இருக்கிறதே.

'1973 செப்டம்பர் 1ஆம் திகதி நான் உரிய பத்தாயிரம் ரூபாவையும் முஸம்மிலிடம் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டு அவர் பூமியை விட்டு விலகிவிட்டதாக எழுதித் தந்த கடிதம் இன்ஞ இரிக்கி என்று கூறி கடிதத்தை தலைவரிடம் கொடுத்தார் கந்தன் போடி.

தலைவர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனைவரும் கடிதத்தைப் பார்த்தனர்.

முஸம்மில் தலைகுனிந்தபடி இருந்தான்.

இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து 'முஸம்மில் இப்போது என்ன சொல்கிறுய்? உன் காசை வாங்கிக்கொண்டு பூமியை விட்டு விலகியதாகத்தான் எழுதிக் கொடுத்திருக்கிறுயே' காலாவதியான ஈட்டுத் துண்டை வைத்துக் கொண்டு இரண்டு காடையன்களையும் துணைக்கு எடுத்துக் கொண்டு சண்டித்தனத்தால் எங்களையெல்லாம் ஏமாத்தப் பார்க்கிறுயா? நீ ஒரு காசிக்காறன் என்கிறுய்! உன் காசெல்லாம் இப்பிடித்தான் மற்றவங்களை ஏமாத்தி சம்பாதித்ததோ! உன்னைப்போல ஆட்களை ஊரில் நடமாட விடுவதே சமூகத்திற்குக் கேடு. உன்னையும் உன் கூட்டாளிமாரையும் எங்கே வைக்கவேண்டுமென்று எனக்குத் தெரியும். நீங்கள் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேணும். மிக ஆத்திரப்பட்டவராக இன்ஸ்பெக்டர் கூறி முடித்தார்.

விவசாய அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தீர்ப்பை வழங்கினார். 'றஹீம் நீங்க உங்களுடைய வேளாண்மையை வெட்டிச் சூடு போடுங்க! முஸம்மில் இதற்குப் பிறகும் தொல்லை தந்தால் இனி சட்ட நடவடிக்கைதான் எடுப்போம். முஸம்மில் அல்லது அவருடைய கையாட்கள் அந்தப் பூமி பக்கமே போகக் கூடாது' என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் முன்னால் நான் உத்தரவிடுகிறேன்.

எல்லோரும் எழுந்தனர். றஹீம் மோட்டார் சைக்கிளில் ஏறினான். முஸம்மிலும் அவன் கையாட்களும் காரில் ஏறினர். முன்னால் சென்ற கார் பெற்றோல் நிலையத்தின் முன் பாதையை குறுக்கறுத்து நின்றது. பின்னால் வந்த றஹீமின் மோட்டார் சைக்கிளும் நின்றது.

முஸம்மில் காரிலிருந்து இறங்கி வந்து றஹீமைப் பார்த்து 'நீ சூடு போடு, நான் உன் குடலை எடுத்து மாலையாகப் போடுறன்' வழிஞ்சி வந்த கழுசறைக்கி என்ற மாமா வீட்டில பெண்ணும் வேற! என்றான் மிக ஆத்திரத்துடன்.

'உன்னப்போல காடையனுக்கு யார்டா பெண் குடுப்பாங்க? உன்ட மாமாட்ட பெண் எடுக்க முடியல்ல எண்டா அதுக்கு என்ன மிரட்டப் பாக்கயாடா? என்ர வாப்பா வேர்வை சிந்தி உழச்சித் திண்டவன்ரா நான்.

'அடே அலியான்ட மகனே! காடையன் எண்டாடா சொன்னாய்! நீ எப்படா கால்சட்டை போட்டாய் கழுசற- என்று கூறிக்கொண்டு மனுப் றஹீம்மீது பாய்ந்தான். தொடர்ந்து முஸம்மிலும், காதரும் ஒருவர் இரும்புக் கம்பி ஒன்றும் மற்றவர் பாதையில் கிடந்த கல் ஒன்றுடனும் பாய்ந்தனர். மூவரும் சேர்ந்து அவனை அடித்து நொருக்கினர். மோட்டார் சைக்கிள் கண்ணாடிகள் சிலம் சிலமாக உடைந்துகிடந்தன.

றஹீமின் தலையால் இரத்தம் பெருகி ஓடிற்று. அவனது சேர்ட், காற்சட்டையெல்லாம் கிழிந்து தொங்கிற்று. ஒரு பெருங் கூட்டம் அவர்களைச் சுற்றி நின்றது. ஆனால் சண்டையை விலக்குவதற்கு யாரும் முன்வரவில்லை. தெருச் சண்டை கண்ணுக்குக் குளுத்திதானே!

அந்த வேளை பொலிஸ் இன்ஸ்பெக்டரின் ஜீப் அங்கு வந்து சேர்ந்தது. முஸம்மிலும் நண்பர்களும் காரில் ஏறிக் கொண்டு நழுவ முயன்றனர்.

'முஸம்மில் நில்! மூன்று பேரும் இங்கே வந்து ஜீப்பில் ஏறுங்கள். நான் என் கண்ணாலேயே எல்லாவற்றையும் கண்டுகொண்டேன்.

'இல்ல ஸேர்! அவன்தான் எங்களை அடிக்க வந்தான். பூமியை எடுத்துக்கிட்டன், உன் மாமட மகளையும் கெதியில் எடுப்பேன் என்று என்னை ஆத்திரப்படுத்தினான்.

'இதற்குப் பின்னால் ஒரு பெண் இருப்பது எனக்குத் தெரியும். உன் காடைத்தனத்தால் அதைச் சாதிக்க முடியாது. எல்லாம் ஸ்டேஷனில் பேசுவோம். ஜீப்பில் ஏறுங்கள்' என்று கூறிய இன்ஸ்பெக்டர் பக்கத்தில் இருந்த கான்ஸ்டபிளைப் பார்த்து 'சுந்தரமூர்த்தி! நீ இறங்கி அந்தக் காரைப் பொலிசுக்குக் கொண்டு வா' என்று சொல்லி விட்டு றஹீமைப் பார்த்து 'மிஸ்டர் றஹீம் நீங்களும் பொலிசுக்கு வாங்க' என்று கூறினான்.

ஜீப், கார், மோட்டார் சைக்கிள் மூன்றும் பாதையில் அணிவகுத்துச் செல்ல றஹீமின் தந்தை அலியார் அழுத படி அவற்றின் பின்னால் வேகமாக நடந்து சென்றார்.

இரு பக்கத்து விளக்கங்களும் பொலிஸில் பதியப்பட்டன. காதரும் மனுபும் தங்களுக்கு ஒன்றுமே தெரியாதது போல் பூமியைப் பார்த்துக்கொண்டு நின்றனர். இன்ஸ்பெக்டர், பொலிஸ், கான்ஸ்டபிள் ஒருவரைக் கூப்பிட்டு

'இவன்கள் மூன்று பேரையும் லொக்காப்பில் போடு' என்ருர்.

முஸம்மில் நெழிந்து குழைந்துகொண்டு சேர்! நான் ஊரில் ஒரு செல்வாக்கானவன்! பணக்காரன்! என்ன இப்படியெல்லாம் அவமானப்படுத்தாதங்க சேர்! வேண்டுமென்டா மனுவையும் காதரையும் 'லொக்கப்' பண்ணுங்க. நான் வெளியில் இந்த வாங்கில் இருந்துகொள்கிறேன்...என்று மன்ருடினுன்.

என்ன ஐஸே! நீர் கதைக்கிறது. உண்ட பணத்துக்கு நான் மதிப்புத்தரணுமா! நீதியும் சட்டமும் எல்லாருக்கும் ஒண்டுதான். மிஸ்டர் றஹீம் ஒரு அரசாங்க உத்தியோகத்தர். ஒரு கண்ணியமான இளைஞர். அவரைப் பகிரங்க பாதையில் நீங்கள் மூன்று பேரும் அடித்ததை என் கண்ணுல் கண்டேன். நான் கெட்டவங்களுக்கு மிச்சம் கெட்டவன் தெரியுமா?... சுந்தரமூர்த்தி... ஹரிஹப்' இந்தக் காடையன்களை 'லொக்கப்பில்' போடு. இந்த ஊரில பணத் திமிர் பிடித்தாடுகிற 'குட்டி' காசுக்காரன்களையும் படத் தியேட்டர் முன்ஞல் சண்டித்தனம் காட்டித் திரிகிற கஞ்சா சுருட்டுக் காடையன்களையும் அடக்கிவிட்டுத்தான் நான் இங்கே இருந்து போவேன்' இன்ஸ்பெக்டர் கோபம் கொண்டவராக இவ்வாறு கூறினர்.

முஸம்மில், மனுப், காதர் மூன்று பேரும் ஒருவர் கையைக் கட்டிக்கொண்டும், ஒருவர் தலையில் கைவைத்துக் கொண்டும் மற்றவர் கண்களைக் கையால் மூடிக்கொண்டும் கூட்டினுள் நின்ற காட்சி, மகாத்மா காந்தி அடிகளின் மூன்று குரங்குகளை நினைவூட்டியது. இப்பொழுது இன்ஸ்பெக்டர் இவர்களுக்கு ஒன்றும் செய்யாவிட்டாலும் இரவைக்கு லைட்டை அணைத்துவிட்டுத்தான் ஏதாவது நடக்கும் என்று அங்கு நின்ற அனுபவஸ்தர் ஒருவர் பொலிஸ் நடைமுறைகளைப்பற்றி விளக்கினர்.

இன்ஸ்பெக்டர், றஹீமைப் பார்த்து 'றஹீம்! நீங்கள் உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் காயங்களுக்கு மருந்து கட்டிக்கொண்டு மெடிக்கல் றிப்போட்டை எங்களுக்கு அனுப்பச் சொல்லுங்கள் என்ருர்.

றஹீமும் அலியாரும் ஒரு காரில் ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருந்தனர். ஒரு கான்ஸ்டபிளும் உடன் போனுர்

## ( 19 )

மர்லியா அன்று பாடசாலைக்குப் போகவில்லை. நேற்று முஸம்மில் மச்சானுக்கும், றஹீமுக்கும் இடையில் நடந்த சண்டை அவளை வெகுவாகத் தாக்கிவிட்டது. இன்றைக்குப் பள்ளிக் கூடத்தில் கதை இச்சண்டை பற்றியதாகவே இருக்கும். அது தன்காதில் விழக்கூடாது என்றெண்ணி அவள் 'வயிற்றைவலிக்குது' என்று கூறிக்கொண்டு வீட்டிலேயே இருந்து விட்டாள்.

சொந்த மச்சானுக்கும் கேட்ட மாப்பிள்ளைக்கும் சண்டை. 'இந்தச் சண்டைக்குப் பின்னுல் ஒரு பெண் இருக்கிருள் என்பது எனக்குத் தெரியும்' என்று பொலிஸ் இன்ஸ் பெக்டர் கூறிய கதை ஊரெல்லாம் 'ஹோ' வென்று பரந்து விட்டது. ஊராரின் வெறும் வாய்க்கு இவ்வளவு — அவல் போதாதா? மூன்று நாளைக்கு மென்று கொண்டிருப்பார்களே! றஹீமிடம் முஸம்மில் நடந்து கொண்ட முறையெல்லாம் மிகமிக மூர்த்தட்சண்யமானது. மச்சான் முஸம்மில் எப்பொழுதுமே இப்படித்தான். முரட்டுத்தனமாக நடந்து கொள்வார். நீதி நியாயம், சமூகம்—அதன் மதிப்பீடு என்பதெல்லாம் அவருக்கு விளங்குவதில்லை. தான் நினைத்ததைச் செய்து விட்டு நிற்பார்.

ஷாபிதீன், தன்னை அடையாத தாகத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை. வந்த வருத்தமும், மன நிம்மதியற்ற நிலையும் தன்னால்தான் ஏற்பட்டது என்று அவர் கூறிக் கொண்டிருக்கிறார். இங்கே முஸம்மிலும், றஹீமும் தன்னை அடையும் போட்டியில் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். ஒருவர் ஆஸ்பத்திரியில் மருந்து கட்டிக் கொண்டிருக்கிறார். மற்றவர் பொலிசில் கூட்டுக்குள் நிற்கிறார். நான் காயத்துக்கு மருந்து கட்டுபவளா? அல்ல கூட்டுக்குள் நிற்பவருக்கு ஆறுதல் கூறுபவளா? நானே ஆஸ்பத்திரியில் நோயுற்றுக் கிடப்பவருக்கே தேறுதல்கூற வழி தெரியாமல் தவித்துப் போய் நிற்கிறேன்.

தம்பி ஜெமீல் மட்டக்களப்பில் இருக்கிறான். அவனை வரவழைத்து முஸம்மிலைப் பிணை எடுக்கும்படி ஸாஹிரு மாமி நேற்றுமுழுவதும் ஒற்றைக் காலில் நின்றாள். அவன் மச்சானைப் பிணை எடுப்பதா? நண்பனுக்கு ஆறுதல் கூறுவதா? 'தர்மசங்கடமான நிலையில் அவனை மாட்ட வேண்டாம். அவன் தன்பாட்டில் வெள்ளிக்கிழமை வரட்டும்' என்று உம்மா வாப்பாவிடம் கூறிவிட்டாள். வாப்பாவுக்கு எல்லா விஷயமும் நன்கு விளங்கிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக்கொண்டு திரிகிறார். என்றாலும் தன் தங்கையின் இரத்தபாசம் அவரை மிக வேதனைப் படுத்திக் கொண்டிருக்கிறது. இன்று காலையிலேயே புறப்பட்டு மருமகனைப் பிணை எடுப்பதற்காக சட்டத்தரணிகளைத் தேடிக்கொண்டு அவர் போய் விட்டார். இரவு முழுவதும் — மச்சானைப் பிணை எடுப்பதற்கு வாப்பாவும் மாமாவும் தலைகீழாக நின்றார்களாம். '24 மணி நேரம் ஒருவரை றிமாண்டில் வைத்திருக்க எனக்கு அதிகாரம் உண்டு. அதன் பிறகு வாருங்கள் யோசிப்போம்' என்று இன்ஸ்பெக்டர் கூறி விட்டாராம். ஸாஹிரு மாமி வீட்டில் இரவு முழுவதும் அழுகையும் புலம்பலும் தானும்.

என் வாழ்க்கைதான் புதினமானது! கேட்ட மாப்பிள்ளைமாரெல்லாம் இப்படி எங்காவது மாட்டிக் கொண்டு

அதற்கு நான்தான் காரணம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு புதுமைப் பெண், என் வாழ்வின் நிகழ்ச்சிகளெல்லாமே புதுமையானது. என்னைப் பற்றி ஒரு காவியமே படைத்து விடலாம். இந்தக் காலத்து கவிஞர்கள் காதல் பற்றி நிறையப்பாடுகிறார்கள். காதலின் கோலங்கள் பற்றி அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பஸ் நிலையத்திலும், கல்லூரியின் முன்னாலும் நிற்கும் யாரோ ஒரு அபலைப் பெண்ணைப் பற்றி தங்களது மனதில் தோன்றுவதைக் கவிதையாகப் பாடிவிடுகிறார்களேயன்றி அவர்களைத் தான் எந்தப் பெண்ணும் காதலிப்பதில்லையே! எனக்குள்ளது போல் ஒரு அனுபவம் ஒரு கவிஞனுக்கு இருக்குமேயானால் அவன்தான் மகாகவி. இந்த நாட்டின் ஆஸ்தான கவியும் அவன்தான்.

எனது வகுப்பில் படிக்கும் சித்தி சுலைகா ... வகுப்பில் ஒரு கெட்டிக்காரி. எனக்கு அவளோடு வெகு பிரியம். நல்லமுகவெட்டான அழகி. அவளையே வகுப்பில் மொனிட்டராகவும் வைத்தேன். எந்த இரகசியமான காரியங்களையும் அவளிடம் சொல்லலாம். வெகுபவ்வியமாக முடித்துக் கொண்டு வருவாள். திங்கட்கிழமை பாடசாலைக்கு வந்தவள் செவ்வாய்க்கிழமை வரவில்லை. பிள்ளைகளிடம் 'சித்தி சுலைகா ஏன் வரவில்லை. என்று கேட்டேன். எல்லோரும் சிரித்தார்கள். 'ஏன் ரீச்சர்' உங்களுக்குத் தெரியாதா? நாங்க நினைத்தோம் உங்களுக்கு மட்டும் சொல்லி இருப்பாள் என்று' என்றாள் ஒரு துடுக்குக்காரி. எனக்கு ஒன்றும் தெரியாது பிள்ளைகள்! என்றேன் நான். அதற்கும் கொல்லென்று அவர்கள் சிரித்தார்கள்.

''ரீச்சர்! அவர்கள் இந்நேரம் புருஷனுக்கு பத்துமணி ரீ கொடுத்துக் கொண்டிருப்பாள், என்று கூறிவிட்டு சிரித்தாள் ஒருத்தி. அப்பொழுது தான் எனக்குத் தெரிய வந்தது. அவளுக்கு இரவு விவாகம் ஆகி விட்டது என்று. எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இன்று பின்னேரமே

அவள் வீட்டுக்குப் போய் அவளை வாழ்த்தி விட்டு வர வேண்டும் போலிருந்தது எனக்கு.

பெண் என்ருல் பல இரகசியங்களின் குகை. அவள் அழகி. அவள் நல்லவள் என்பது கூட வெளியில் தெரியக் கூடாது, இதனுல் கூட விபரீதம் உண்டு. பெண்கள் காவியம் படைக்க வந்தவர்களல்ல. காவியம் படைக்கப்பட்ட எவள் மகிழ்ச்சியாகத் தம் கணவரோடு வாழ்ந்து திருப்தி பெற்றிருக்கிருள்? இன்பம் கண்டிருக்கிருள்? கணவன் கொலை செய்யப்பட, மதுரையையே எரித்து தானும் அழிந்து போனவள் கண்ணகி. இராமனுக்கு வாழ்க்கை பட்டதால் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் நெருப்பில் நடந்து தன் கற்பை நிரூபிக்கவேண்டி ஏற்பட்டது சீதைக்கு லைலா இறுதி வரை தன் கயசை அடையாமலே இறந்தாள். ஆதலால் சித்தி சுலைகாவுக்கு கிடைத்தது போல அமைதியான ஒரு வாழ்க்கை ஒரு பெண்ணுக்கு கிடைத்து விட்டால் அது போதுமானது. காவியங்களை ஆண்கள் சிருஷ்டித்துக்கொள்ளட்டும். போர்களை அவர்கள் நடத்தி வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளட்டும். எங்களுக்கு அமைதியான ஒரு வாழ்க்கையை அவர்கள் தந்து விட்டால் போதுமானது. நாங்கள் 'கொழுநன் தொழுதெழுகிருேம்' அந்த நன்றிக்காக வாழ்க்கை முழுவதும் அவர்களுக்குப் பணிவிடை செய்கிருேம்.

தன் படுக்கையறையில் இருந்தபடியே நீண்டு கொண்டு சென்ற மர்லியாவின் சிந்தனையை, தபாற் சேவகனின் சைக்கிள் மணி, திசை மாற்றியது. வீட்டில் வேறு யாருமில்லை. உம்மா மட்டும்தான் குசினியில் ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிருள். மர்லியாதான் தபால் சேவகனிடம் சென்ருள்.

பதிவுத்தபால் உங்களுக்குத்தான்! இந்தாங்கோ! என்று கூறியபடி பென்சிலையும் ஒப்பமிடும் துண்டையும் கொடுத்தான் சேவகன். 'பதிவுத்தபாலா' என்றெண்ணியவாறு

துண்டில் ஒப்பமிட்டுக் கொடுத்துவிட்டு தபாலை வாங்கிக் கொண்டு அறைக்குட் புகுந்தாள் மர்லியா.

அவள் கரங்கள் நடுங்கின. நெஞ்சம் விம்மித்தாழ்ந் தது. கடிதத்தை அவசர அவசரமாக உடைத்தாள். ஷாபிதீனின் கடிதத் தலைப்பு... ஒரு பெண், மணி மணி யான எழுத்துக்களில் எழுதி இருந்தாள். அவள்நெஞ்சம் இன்னும் வேகமாக அடிக்கத் தொடங்கியது...

அன்பின் சகோதரி!

உங்களை மறக்கமுடியாமல் தவிக்கும் ஷாபிதீனின், மனைவி பரீதா எழுதுகிறேன்.

என் அன்பின் கணவர் இப்பொழுது சுகமாக வீட் டில் இருக்கிறார். உடல்நோயை டாக்டர்கள் சுகமாக்கி விட்டார்கள். மனநோய்க்குத் தான் நவீன வைத்திய சிகிச்சை தேவைப்படுகிறது. அதற்கான வைத்தியர் நான். மருந்து நீங்கள்.

சகோதரி! அவர் உங்களைப்பற்றி நிறைய எனக்குச் சொல்லி இருக்கிறார். அதனால் உங்கள் உருவப் படிவம் ஒன்று என் மனதில் நிலைத்து விட்டது என்றே கூறலாம். அதுபோல உங்கள் குண இயல்புகளும் என்னில் சங்கம மாகி, ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அன்று ஆஸ்பத்திரி யில் உங்களைக் கண்டபோது உங்களைப்பற்றிய எனது மனோ பாவங்களின் ஜோதிப் பிரகாசமான முழுவடிவையும் நான் தரிசித்து விட்டதாக உணர்கிறேன். அந்தச் சந்திப் பின் பிறகு நீங்கள் என் உள்ளக் கோயிலில் நிரந்தரமா கவே இடம் பெற்ற தேவதையாகி விட்டீர்கள் நான் அத் தேவதையை வழிபடும் சேவகியாக நிற்கிறேன்.

ஒரு பெண்ணை மற்றொரு பெண் இவ்வளவு தூரம் புகழ் வதில்லைத்தான். ஒரு ஆடவரின் காதலிக்கும் மனைவிக்கும் இடையில் இப்படி ஒரு அன்பின் இணைப்பு இருப்பதுவெகு அபூர்வமே! இந்த அபூர்வம் எனது வாழ்வில் நிகழ்வதற்கு

உரிய சூழ்நிலையும் நியாயங்களும் ஏற்பட்டுவிட்டன. இவ்வாறு உண்மைகள் நிதர்சன மாகவே தோற்றும்போது அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தான் தூய்ய காதலொழுக்கத்தின் தலையாய இலட்சணம்.

நான் என் கணவரை மனப்பூர்வமாக நேசிக்கிறேன். காதலிக்கிறேன். அவருக்கு — நிறைவான மனப்பூர்வமான ஒரு வாழ்க்கையை அளித்து அந்த மகிழ்வில் நான் இன்பம் காண வேண்டும் என்று விரும்பி நிற்கிறேன். ஒருவருக்கு மகிழ்வளிப்பது, நிறை வாழ்வளிப்பது என்பது ஒரு தியாகமே! அந்தத் தியாகத்தை என் கணவருக்காகச் செய்ய நான் துணிந்து விட்டேன்.

எங்களுடைய கடந்த ஐந்து வருட வாழ்க்கையில், எந்த விதமான மாசு மறுவும் ஏற்பட வில்லை. என் கணவர் என்னை மனதார நேசிக்கிறார். அன்பு காட்டுகிறார். இன்பம் தருகிறார். ஆனால் இந்த அன்பு மழை பெய்கையில் இடையிடையே சில மின்னற் கீற்றுகள் அவரை தாக்கி மெய் மறக்கச் செய்வதை நான் உணர்கிறேன். என்னை நேசிக்கின்ற அதே நேரத்தில் உங்களைப்பற்றி அவர் கொண்டுள்ள மனப்படிவத்தை அவரால் அகற்றிக்கொள்ள முடியாது கஷ்டப்படுகிறார்... கூட்டில் இருந்து தேன் சொட்டிக் கொண்டிருக்கிறது. அதை ஒருவன் தன் வாயால் பெற்று சுவைத்துக் கொண்டிருக்கிறான். அதே வேளை தேனீக்கள் அவனைக் கொட்டிக் கொண்டிருக்கின்றன... இந்த நிலையில் அவரது வாழ்க்கையில் என் இணைவும், உங்கள் இழப்பும் அமைந்து இருக்கிறது.

இந்த அவரது மன நிலையை இன்னும் ஸ்திரப் படுத்துவதற்கு மற்றோர் காரணமும் ஏற்பட்டு விட்டது. ஆம்! நான் குழந்தையில்லாதவளாகி விட்டேன். எவ்வளவோ முயன்றும் வைத்தியர்களெல்லாம் கை விரித்து விட்டனர். இதனால் நான் வெறுமையானவளாக, என் கணவருக்கு

இருட்டில் மட்டும் இன்பம் கொடுக்கும் ஓர் அழகுப் பொம் மையாக ஆகிவிட்டேன். என் வெறுமையை நான் அனுப விக்கிறேன். அந்த வேதனைக்கு மற்றொருவரையும் ஏன் பங் காளியாக்க வேண்டும்?... மக்கட் செல்வம் என்ற அந்த இன்பத்தை நான் இழந்து நிற்கும் அவலம் என்னை வாட்டி நிற்க, என் கணவரும் அதை இழந்து சந்ததியற்ற ஒரு நெட்டைப் பனையாக அவரை நான் காண வேண்டுமா? மாற்றார் குழந்தை யொன்றைத் தத்தெடுத்து வளர்க்கும் படி எல்லோரும் ஆலோசனை கூறுகிறார்கள். காகத்தின் கூட்டில் குயில் குஞ்சு பொரிக்கும் தந்திரம் ஒருநாள் வெளி யாகித் தானே போகிறது! அவ்வாறான யாரோ பெற்ற யாருக்கோ பிறந்த ஒரு குழந்தைக்கு என் தகப்பன் எனக் களித்த செல்வங்களையும், என் கணவர் தேடுகின்ற பணத் தையும் அளித்து போலி இன்பம் காண நான் விரும்ப வில்லை.

நான் மனம் உவர்ந்து தூக்கிக் கொஞ்சுவதற்கு என் வயிற்றில் பிறந்த ஒரு குழந்தை வேண்டும் அல்லது என் கணவருக்குப் பிறந்த ஒரு குழந்தை வேண்டும். கணவருக் காக குழந்தையைப் பெற்றெடுப்பவளும் நான் விரும்பும் ஒரு பெண்ணாக இருந்தால் அது எனக்கு மிகப் பேரின்பம் அளிப்பதாகும்.

ஆம்! என் கணவர் இரண்டாம் தாரமாக உங்களை மணம் செய்ய விரும்புகிறார். அதை நானும் மனப்பூர்வ மாக ஏற்றுக் கொண்டு இதை எழுதுகிறேன்.

இஸ்லாம் ஒவ்வொரு ஆடவருக்கும் நான்கு பெண்களை விவாகம் செய்யும் சலுகையை வழங்கியுள்ளது. அதற்கு ரிய பல்வேறு காரணங்களில் என்வாழ்வில் நிகழ்ந்த பிள் ளைப் பேறற்ற நிலையும் ஒன்று.

இன்று உலகில் பெண்கள் பிறப்பு விகிதத்தில் பெருகி வருவதை நாம் காண்கிறோம். அன்றியும் யுத்தம்—தொழிற் துறை உழைப்புக் காரணங்களால் ஆண்கள் அழிந்து போக

பெண்கள் தொகை கூடி வருவதையும் காண்கிறோம் இத ஞல் எத்தனையோ பெண்கள் இல்வாழ்வை இழந்தவர்க ளாகவும், வயது முதிர்ந்தபின் விவாகம் செய்பவர்களாக வும் இருக்கிறார்கள். அன்றியும் சீதனப் பேய் தலைவிரித்தாடி எத்தனையோ அழகிகளும், குணநலச் செல்விகளும், இந்தப் பேய்க்கு முகம் கொடுக்க முடியாமல் தனக்கு இயைபில் லாத கணவர்களோடெல்லாம் வாழ்க்கை நடத்தும் வேதனையையும் நாம் பார்க்கிறோம். உழைப்பும், பண வாய்ப்பும் உள்ள ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் களை விவாகம் செய்வதாயின் எத்தனையோ பெண்களுக்கு எளிதான — இன்பமான — வாழ்வு கிடைக்கும் அல்லவா?

இவ்வாறான காரணங்கள் நம் வாழ்வில் இல்லையாயி னும், என் கணவரை நீங்கள் விரும்பி ஏற்றுக் கொள்வது எத்தனையோ பிரச்சினைகளுக்கு அருமருந்தாக அமைந்து நம் மூவருக்குமே இன்ப வாழ்வு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

அன்பின் இனியாளே! நான் தாய்க்கொரு மகள். சகோ தர பாசம் என்றால் என்ன என்பதை அறியாத தனி மரம். நீங்கள் விரும்பினால் என் இனிய உடன் பிறப்பாக நீங்கள் மாறி விடுவீர்கள். எனக்கென்று பிள்ளைச் செல்வம் இல் லாது போனாலும் ஒரு இனிய சகோதரியும், பின்னர் அவள் மூலம் கிடைக்கும் குழந்தைகள் என் இனிய செல்வங்களாகவும் ஆகிவிடும். இந்தப் பொன் நாட்களை நான் கனவு காண்கிறேன்.

உங்கள் பொன் மடலை, என் கண் மடல் திறந்து காத் திருக்கிறேன்.

உங்கள் உயிரனைய... பரீதா

நேற்று நடை பெற்ற காணித் தகராறு காரணமாக றஹீமையும் முஸம்மிலையும் ஒரே நேரத்தில் இழந்து விட வேண்டிய நிலை ஏற்படுமோ என்று ஐயுற்ற இந் நேரத் தில் ஷாபிதீன் புனர் ஜென்மம் எடுத்து வந்து கை நீட்டு

வது போல இருந்தது. இக் டிதம் ஒரு பெண் மனம் உவந்து செய்ய முடியாத ஒரு தியாகத்தை பரீதா செய்வதற்குத் துணிந்து நிற்கும் இச் செயல் விசித்திரமான ஒருவரலாறு. அறபு நாடுகளில் பலதார மணம் சாதாரணமான ஒன்று. ஒவ்வொரு ஆணும் தன் செல்வாக்கையும் பெருமையையும் நிலைநாட்ட ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து வாழ்க்கை நடத்துவது அங்கு வழக்கம். இதனை மர்லியா கேட்டும் படித்தும் இருக்கிருள்! ஆனுல் இந்த அற்புதம் தன் வாழ்வில் நிகழப் போவதுதான் என் தலைவிதியா? என்று அவள் சிந்தித்தாள்.

கடிதத்தை மடித்து மீண்டும் என்வலப்பில் போட்டாள். நிமிர்ந்து தன்படுக்கையின் முன்னுல் கொழுவி வைக்கப்பட்டிருந்த கலண்டரின் படத்தைப் பார்த்தாள். பட்டுப்போன ஒரு மரத்தில் இரண்டு குருவிகள் இணைந்திருந்த காட்சி அக்கலண்டரில் சித்திரிக்கப்பட்டிருந்தது. அக் குருவிகள் இரண்டும் இவளையே பார்த்துக் கொண்டிருப்பது போல் இருந்தது. அதனைப்பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தாள். இதனை யெல்லாம் எண்ணிச் சிரிப்பதா? அழுவதா? என்று அவளுக்குத் தெரியவில்லை.

ஒரு பெண் ஒரு ஆணின் துணையில்லாமலே இவ்வுலகில் வாழ்ந்துவிட முடியாதா? இன்றுள்ள இந்த வாழ்க்கை அமைப்பில் ஒரு ஆணுக்கு ஒரு பெண் இவ்வளவு தூரம் அடிமைப்பட வேண்டுமா?... எந்த நிலையிலும் அவனைத் தெய்வம் என்று வழி பட வேண்டுமா? ஆதத்தைப் படைத்த ஆண்டவன் ஹவ்வாவையும் படைத்து ஏன் அவனுக்குத் துணையாக்கினுன். அதன் விளைவு நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆதத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். நல்ல உலகம்! நல்ல வாழ்க்கை... அவள் மீண்டும் சிரித்தாள். அவள் இதயம் அழுது கொண்டிருந்தது.

உம்மா குசினியில் அரிசி அரித்துக் கொண்டிருந்தாள். அடுப்பில் நெருப்பு ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்

தது. பையன் ஒருவன் பெரிய கயல் மீன் ஒன்றைக் கொண்டு வந்து திண்ணையில் வைத்து விட்டுப் போனான். மீனைக் கண்ட மர்லியா...அதனைத் தூக்கிக்கொண்டு 'உம்மா நான் மீனை அறுக்கன்' என்று அரிவாள் மனையைத் தேடிக் கொண்டு போனாள்.

மீன் பெரிசிபோல இரிக்கே... நீ அறுக்க மாட்டாய் மகள்' என்றாள் ஹாஜரு உம்மா.

அப்பொழுது மர்லியாவின் கையில் இருந்த மீன், அரிவாள் மனையில் இருபிளவாகிக் கிடந்தது. மீனின் தலைப் பக்கம் பெருக்கெடுத்தோடிய செவ்விரத்தம் அறுபட்ட இடங்களிலெல்லாம் வழிந்து சென்றது.

'படித்து விட்டால் மீன்கூட அறுக்கத் தெரியாதா உம்மா. பொம்புள எண்டா, அவளுக்குரிய வேலை எல்லாம் தெரியத்தானே வேணும். என்று கூறிக் கொண்டு, அதன் முதுகுப்பாகம் உள்ள பெரிய முள் பகுதியை தன் பலம் கொண்டமட்டும் அரிவாள் மனையில் அழுத்தி மீனைத் துண்டாடினாள்.

மர்லியாவுக்கு ஏன் இந்த வேகம்? ஏதோ உணர்ச்சி வசப்பட்டவள் போல இருக்கிறாளே! என்று அவள் முகத்தைப் பார்த்து எண்ணினாள் ஹாஜரு உம்மா!

## ( 20 )

அன்று வெள்ளிக்கிழமை ஜெமீல் மட்டக்களப்பு வங்கியிலிருந்து வீட்டுக்கு வந்து சேர மாலை ஆறு மணியாயிற்று.

வீட்டில் ஒரு பெரிய உச்சி மகாநாடு நடந்துகொண்டிருந்தது. பணியட்டுக்குடி மரைக்கார், காதர் முகையதீன் போடியார், மக்கத்துக் குல்லாத் தொப்பி அணிந்து காஷ்மீரத்து பச்சைக் கம்பளம் ஒன்றைப் போர்த்தியவராக கம்

பீரமாக வளைந்து சுருண்டிருந்த அவருடைய கொம்பு மீசையைத் தடவி விட்டுக்கொண்டு இருந்தார். ஸாஹிரு உம்மா, ஹாஜியார் இருவருக்கும் குடி மரைக்கார் இவர் தான். கல்யாணப் பேச்சுவார்த்தைகளைக் கனகச்சிதமாக முடித்து வைப்பதில் பேர்பெற்ற கபீர் லெப்பை ஆலிமும் கூட இருந்தார், ஹாஜியார் அவர்களோடு நிதானமாக உரையாடிக்கொண்டிருந்தார். ஹாஜரு உம்மா ஆலே வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து இவர்களுடைய பேச்சை அவதானித்துக்கொண்டிருந்தாள்.

ஜெமீலைக் கண்டதும் காதர் முகையதீன் போடியார் 'வா மகன்! வா' உன்னத்தான் காத்துக்கிருக்கம் நாங்க, என்று வரவேற்றார்.

'தம்பி ஜெர்மனிக்கு போகக்க நான் ஊரில இல்ல. இன்டக்கித்தான் தம்பியப் பாக்கன், ஏன் வாப்பா ஜேமனி எண்டா மக்காவிலிருந்து தூரம் போகணுமா? என்றார் கபீர் லெவ்வை ஆலிம். அவர் ஒரு மக்காப் பித்தர்.

கொண்டு வந்த கைப்பையை உம்மாவிடம் கொடுத்து விட்டு அவர்களுக்குச் சற்று தூரத்தில் ஒரு பாயை இழுத்துப் போட்டுக்கொண்டு கால்சட்டையோடு பாயில் இருக்க முடியாமல் காலைச் சற்று நீட்டிப் பூமியில் குத்தியபடி இருந்த ஜெமீல் 'மக்காவிலிருந்து ஜேமனி தூரம்தான். அது வேற வழி. இது வேற வழி' என்று கபீர் லெப்பை ஆலிமுக்கு விடை கொடுத்தான்.

'அடேயப்பா! போற வழி எண்டால் ஜன 'உம்ரு'வை முடித்துக்கொண்டு வந்திருக்கலாம் என்று தானே அங்கலாய்த்துக்கொண்டார் கபீர் லெவ்வை ஆலிம்.

'மக்காவுக்குப் போய் ஹஜ்ஜை முடித்துக்கொண்டு வாற எண்ணம் தம்பிக்கி இரிக்கி. அல்லா நாடினல் அடுத்த வருஷம் என்ர புள்ள அந்தக் கடமையையும் முடிச்சிக்கி வந்திருவான்' என்று பெருமையோடு கூறி வைத்தார் ஹாஜியார்.

'ஒலகம் பயிர் செய்ற ஒரு பூமி. விளையாடித் திரியிற ஒரு மைதானமல்ல, நாங்க ஆகிறத்துக்குத் தேவையான பயிர்கள இஞ்ச செய்து அறுவடை செய்துகொண்டு எந்த நேரமும் பயணத்துக்கு ஆயித்தமா இரிக்கணும். இக்காலத்தில எல்லாரும் ஒலகத்த ஒரு விளையாட்டு இடமாகத்தான் நெனச்சிரிக்காங்க. கபீர் லெப்பை ஆலிம் இதை மிகக் கவலையோடு உணர்ச்சி பொங்கக் கூறினர்.

காதர் முகையதீன் போடியார், கபீர் லெப்பை ஆலிமின் பேச்சை ஆதரித்துப் பேசினர். 'இஞ்சப் பாருங்க! இந்தப் பெரிய ஊரில ஐஞ்சொகுத்துத் தொழுகைக்கி ஒழுங்கா மூண்டு 'சப்பு' சேருதில்லயே! வாரத்திலயும் பாதி புள்ளக் கெளயள். மத்தவங்களெல்லாம் எங்கடா எண்டா எல்லானுக்கும் உழைப்பில 'ஹவா' வாகிற்று. மெஷின் எண்டும் எண்ணெ பயளெ எண்டும் தலையைக் குழப்பிக்கிற்றுத்திர்ரானுகள்,

'உழைக்க வேணும்தான். ஆண்டவன் அத மறுக்கல்ல! ஆனு உழைப்பிலேயே ஈடுபட்டு அல்லாவை மறந்தா இந்த உழைப்பையா எடுத்துக்கிற்று அல்லாக்கிட்டப் போகவா போறம்? அத யோசிக்கணுமே!...அது கிடக்கட்டும். வந்த விஷயத்தப் பேசுங்க!

தம்பி ஜெமீல் இந்த ஊட்டில வயது வந்த ஆம்புளப் புள்ள நீங்கதான். வாப்பாகிட்ட என்னத்தப் பேசினலும் தம்பி அறியணும். அவன் விரும்பினத்தான் அதச் செய்யணும் எங்கார்' இப்ப நீங்க என்ன சொல்றீங்க... என்று பேச்சை ஆரம்பித்தார் காதர் முகையதீன் போடியார்.

ஜெமீலுக்கு ஒன்றும் விளங்கவில்லே. 'நீங்க என்ன சொல்றீங்க' என்று திருப்பிக் கேட்டான்.

'உங்குட மாமிர மகன் இருக்காரே முஸம்மில் அவர ராத்தாவுக்கு உடனே கலியாணம் முடிக்கணும். இந்தப்

பேச்சு நீண்ட காலமாக அடிபட்டு வருகுது. அதனுல சண்டையும் சச்சரவுமாகக் கெடக்கு. இதுக்கு ஒரு முடிவு எடுத்துக்கு வரச் சொல்லி மாமிதான் எங்கள அனுப்பினு'

'மாப்பிளய நாங்கதானே கேட்டு வாறது முறை. இதென்ன தலைகீழா நடக்கிது.

'மரைக்காருக்கு முதல் பேச்சிலேயே முச்சுத் தட்டிற்று... அதுல என்ன மகன்! நீங்க எல்லாம் ஒரு கொடியில பிடிச்ச காய்கள்தானே! அவங்க கேட்டா என்ன? நீங்க கேட்டுப்போனு என்ன? ஆனுல் நீங்க ஒண்டுக்குள்ள ஒண்டு சேந்து இரிக்கணும் எண்டதுதான் என் விருப்பம்.

'நாங்க ராசம்புள்ள குடி. மாமி பணியட்டுக் குடி. இந்த ரெண்டு குடிக்கும் ஒத்து வாறதுதான் ரொம்பக் கஷ்டம்' என்ருன் ஜெமீல் சிரித்துக்கொண்டு.

'அப்போ ஒங்கு வாப்பா பணியட்டுக் குடி. ஒங்கு உம்மா ராசாம்புள்ள குடிதானே. அது எப்படி ஒத்து வந்தது...'என்று ஜெமீலை மடக்கினுர் மரைக்காயர்.

'அதில ஆம்புளயள்ள ஒண்டுமில்ல, அவங்க நல்லம் தான். பணியட்டுக் குடிப் பொம்புளயள் இரிக்காங்களே அவங்களோட காலம் கழிக்கிறதுதான் கஷ்டம்' என்று தன் கணவனைப் பார்த்துச் சிரித்தபடி கூறினுள் ஹாஜரு உம்மா.

'ஏன் ஹாஜரு...என்ர உம்மா ஒனக்கு என்ன கஷ்டம் தந்தா. என்ர தங்கச்சி ஒனக்கு என்ன அநியாயம்செஞ்சா? உன்னப் பல்லக்கிலதானே அவங்க வெச்சிக்கிருந்தாங்க...' என்ருர் ஹாஜியார்.

ஓமோம்! ரசாம்புள்ள குடியாள வேற எப்பிடியாம் வெச்சிக்கிருக்கிற? அவள் மாளிகையில பொறந்து பல்லக்குல போறவள்... உசத்தியான குடியில உள்ளவளப் பெண்ணு எடுத்தா அப்பிடித்தான் வச்சிக்கணும்...

'ராசாம்புள்ள குடியாக்கள் சோறு தின்னக் கருவாடு சுடுவாங்களாம். அந்தக் கருவாட்டு மணம் அடுத்த ஊட்டுக்குத் தெரியாம இருக்க எப்பவோ பொரிச்ச எண்ணைச் சட்டியத் தூக்கி அடுப்பில வெச்சி அது கொதிக்கக்க அதில தண்ணியத் தெளிப்பாங்களாம்... அடுத்த ஊட்டுக்கார ஆக்களுக்கு பொரியல், கரியல் நடக்குறுப்போல கேக்கும். ஆனுல் இவங்க சுட்ட கருவாட்டோட சோறு திம்பாங்க...' அப்பிடியான ஆட்கள். 'தன் குடியைத் தாழ்த்திப் பேசிய ஹாஜருவை அவளுடைய குடியின் போலித்தனத்தை எடுத்துக் காட்டி இப்படி மடக்கினுர் காதர் முகையதீன் போடியார். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர்.

கபீர் லெப்பை ஆலிம் இடைமறித்து 'சரியும்மா ஒங்கள பணியட்டுக் குடியாட்கள் ஒசத்தியா வெச்சதுபோல ஒங்குட புள்ளயையும் வெச்சிக்கு வாங்க.. இப்ப ஒங்குட மகள்ற கலியாணத்தில போட்டியாப் போச்சி. அடிபிடியும் சண்டையுமாக கெடக்கு. அதினுலதான் நாங்கவெக்கத்தையும் பாக்காம பொண் கேட்டு வந்திருக்கோம். இன்னம் 'மகரிப்' தொழல்ல. ஒங்குட முடிவச் சென்னு நாங்க ஒழும்பிருவம்'

'என்ன வாப்பா! நீங்கதான் முடிவச் சொல்லுங்களன்' என்ருன் ஜெமீல்.

'என்ர முடிவ நான் எப்பவோ சொல்லிற்றன். ஒங்க ராத்தாக் கிட்டயும் கேட்டு நீயும் உம்மாவும் சம்மதிச்சா முடிவச் சொல்லுங்க... பிறகு என்னப் புளகதக்காதங்கோ'

வாப்பாவின் பேச்சில் ஒரு தளர்ச்சி தென்படுவதை ஜெமீல் அவதானித்தான். முஸம்மில், றஹீமுடன் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட காரியங்கள் பற்றி ஊரவர்கள் அவனை மிகக் கீழ்த்தரமாக பேசிக்கொண்டது அவரின் காதில் விழுந்திருக்கலாம். மற்ருெருவனின் பூமியில் உள்ள வேளாண்மையை அபகரிக்கப் போனதும் காடைத்தனமாக நியாயமேயின்றி றஹீமை அடித்ததும் முஸம்மிலைப்பற்றி

அவர் வைத்திருந்த எண்ணத்தில் மண் விழுந்த மாதிரியாப் போயிற்று. இப்படியான ஒருவரை தன் படித்த பிள்ளைக்கு மாப்பிள்ளையாக எப்படி எடுப்பது? என்று அவர் சிந்தித்திருக்க வேண்டும். அதுதான் 'ராத்தாவிடமும் கேள்' என்று அவர் தனது நெகிழ்ச்சித் தன்மையை இன்னும் வியாபித்துக்கொண்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

இவ்வாறு யோசித்த ஜெமீல் மரைக்காரைப் பார்த்து 'சின்னப்பா! நான் பேங்கில இருந்து இப்பதான் வந்திரிக்கன். நாங்க ஆறுதலாக இன்று மோர்முறை இதைப்பற்றி யோசித்து உங்களிடம் அல்லது மாமிக்குச் சொல்றமே' என்றான்

'ஓமொம் கலியாணம் என்றது ஆயிரம் காலத்துப் பயிர். நல்லா யோசிக்க வேண்டிய விஷயம். அதுவும் போக நீங்க எல்லாரும் தாய்பிள்ளைகள்... நீங்க ஆறுதலா யோசிச்சிச் சொல்லுங்கவன்.. மகரிப் தப்பிப் போகுது... அப்ப நாங்க வரட்டா ஹாஜியார்...' என்று கூறிக்கொண்டு கபீர் ஆலிம் எழும்பினார்,

'ஓமோம் நீங்கபோய் வாங்க... நான் வீட்டிலேயே தொழுதுக்கிறன்...' என்று கூறியவராக கிணற்றடியில் ஒழுச் செய்யப்போக எழுந்தார் ஹாஜியார்.

ஹாஜறாஉம்மா வந்தவர்களுக்கு தேநீர் கொடுத்த கிளாஸ்களை குனிந்து எடுத்துக்கொண்டு குசினிப் பக்கம் போனாள்.

முஸம்மிலும், றஹீமும் தகராறுப்பட்ட செய்திகளெல்லாம் ஜெமீலுக்கு மறுநாளே மட்டக்களப்புக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது, ஊருக்கு வந்து தான் யாருக்குச் சாதகமாக அல்லது அனுதாபமாக நடந்துகொள்வது என்று தெரியாமல் ஜெமீல் தெரியாதவனைப்போல அங்கேயே நின்றுவிட்டான். எனினும் தனது நண்பனான றஹீமை காடையன்களைக்கொண்டு முஸம்மில் அடிப்பித்து

அவமானமும் செய்தது. இவனது மனதை மிக வேதனைப் படுத்திவிட்டது, இதற்கெல்லாம் காரணம் ராத்தாவுக்கு றஹீமைக் கல்யாணம் கேட்டிருந்ததே. அதனை முஸம்மில் இவ்வாறு பழிவாங்கிவிட்டான் என்பது மிக மிக அநா கரிகமாகவும் அவமானமாகவும் ஜெமீலுக்குப்பட்டது. ரூஸ்கல்கள்... வெறும் நோட்டுக் கட்டுப் பூதங்கள்...கொஞ் சங்கூடப் பண்பாடு தெரியக் கூடாது' என்று 'முஸம்மிலை மனதுள் திட்டிக்கொண்டான்.

உடையை மாற்றிக்கொண்டு றஹீமின் வீட்டை நோக் கிப் புறப்பட்டான் ஜெமீல்.

றஹீம் தலையிலும், கால், கைகளிலும் 'மருந்து பேச்' போட்டுக்கொண்டு இருந்தான். ஜெமீலைக் கண்டதும் 'வா ஜெமீல்! வா' என்று எழுந்து போய் வரவேற்றான்.

அலியாரும் மனைவியும் ஜெமீலைக் கண்டதும் ஓடி வந்து 'பார்த்தயளா வாப்பா அநியாயத்த, என்ர புள்ள யோட நீங்க இவ்வளவு நாளா பழகுறீங்கதானே! ஒரு தண்டாமுண்டாவுக்கும் போற புள்ளயா? இந்த அநியாயம் என்ர புள்ளக்கி நடந்திற்றே வாப்பா' என்று பிரலாபித் தார்கள் இருவரும்.

றஹீமின் தாயார் முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

ஜெமீல் மிக உணர்ச்சிவசப்பட்டவனாகச் சொன்னான். 'இந்த அநியாயம் இங்க மட்டுமில்லை. பெரிய அளவில் உல கம் எங்கும் நடக்குது. இதைத்தான் முதலாளித்துவ ஆண வம்' போடித் தத்துவ கர்வம் என்றெல்லாம் சொல் வாங்க. பணம் வந்து சேர்ந்தால் அவர்களை ஒரு அகங் காரமும் வந்து சேர்கிறது. இதை நாங்கள் ஒழித்துத்தான் தீருவோம். இந்தப் பணத் தலைக்கனம் பிடித்தவர்களை நோக்கி மக்கள் காறி உமிழ்வார்கள்... நீங்க ஒன்னும் கவ லைப்படாதீங்கோ, அல்லா எல்லாத்துக்கும் நீதி வழங்கு வான்...

'ஜெமீல் விஷயம் இப்போ வழக்காயிற்று. இனிக் கோர்ட்டில் நீதியைத் தேடுவோம். நீங்கள் குடும்பத்துக் குள்ளேயே பழியைத் தேடிக்கொள்ள வேண்டாம். றஹீம் அவனை சமாதானப்படுத்திப் பேசினுன்.

'றஹீம் குடும்பம் என்பது யார்? ஏழைகள்தான் நமது குடும்பம். கள்ளம் கபடமற்ற அன்பு உள்ளம் உவந்த உழைப்பு. அவர்களிடம்தான் உண்டு. ஆதலால்தான் 'நான் மறுமையில் ஏழைகளோடுதான் இருப்பேன் என்று அவர்களுக்கு சுவர்க்க நன்மாராயம் கூறினுர் நாயகம் (ஸல்) நாங்கள் இம்மையில் அந்த ஏழைகளோடு சேர்ந் திருக்கிறேம். அவர்களுடைய நீதிக்காகப் பாடுபடுகிறேம்.

றஹீமின் தாய் ஒரு ட்றேயில் பால் தேநீர் கொண்டு வந்து 'குடிங்க தம்பி' என்று மிகப் பரிவோடு நீட்டினுள். அவளுடைய கண்கள் இன்னும் கலங்கியே இருந்தன. அத னைப் பார்த்து ஜெமீல் இன்னும் மனம்நெகிழ்ந்து போனுன்.

ஜெமீல் ஒரு பணக்காரப்பிள்ளையாக இருந்தும் அவன் இப்படி ஏழைகள் பக்கமும் நீதியின் பக்கமும் நின்று பேசு வது அவளுடைய மனதில் ஒரு கசிவை ஏற்படுத்திற்று. அவ னைப் பாராட்ட வேண்டும் போல் அவளுக்குத் தோன் றிற்று. 'தம்பி நீங்க, நான் தூக்கி வளர்த்த புள்ள வாப்பா! நீங்க சின்ன புள்ளயில உம்மாவப்போட்டு செரியான கணகாட்டுப்படுத்துவீங்க. ஒங்கும்மா என்னக் கூப்பிட்டு. 'பாத்திமா! இவன ஒண்ட ஊட்டயாலும் கொண்டுபோய் கொஞ்ச நேரம் வெச்சிருந்து கொண்டா' எம்பா. நான் தூக்கினனெண்டா நீங்க பேசவே மாட் டீங்க ஊட்ட கொண்டுவந்து உட்டா. நீங்களும் றஹீமும் விளையாடிக்கொண்டிருப்பீங்க' பாருங்க அந்த உறவ அல்லா நீடிச்சிவெச்சிற்ருன். ஆனந்தக் கண்ணீர் பொங்க றஹீமின் தாய் கூறினுள்.

அதைக் கேட்கவே ஜெமீலுக்கு உள்ளமெல்லாம் புல் லரித்தது. 'பார்த்தாயா றஹீம்! ஒங்கும்மா இப்ப எங் கும்மா ஆயிற்ரு. இதெயெல்லாம் நாம் மறக்கலாமா? என்ருன். இதைக் கேட்டு றஹீமின் தாய் உள்ளம் உருகிப் போனுள்.

உம்மாவை ஒரு தரம் உற்றுப் பார்த்த றஹீம் மிகக் கவலேயோடு ஜெமீல்! நாங்கள் ஆண்கள். என்னதான் தக ராறு வந்தாலும் அதைப் பார்த்துக்கொள்வோம். எங் கும்மாவுக்கு இந்த ஐந்து நாளும் சோறும் இல்லே. தண்ணீ ரும் இல்லே. எந்த நேரமும் கண்கலங்கிக்கொண்டே இருப்பா. இதைப் பார்க்கத்தான் வேதனேயாக இருக் கிறது' என்ருன்.

ஓமோம் இதையெல்லாம் ஒரு தாய் தாங்குவாளா றஹீம்? அவங்க கண்கலங்காமல் பார்க்க வேண்டும். இது தான் இப்பொழுது நம் கடமையாக இருக்கிறது. அது இரிக்க...இந்தக் கிழமை நீ கந்தோருக்கே போகல்ல அல் லவா?

'ஓம் என்பதற்கு அறிகுறியாக றஹீம் தலேயை ஆட் டியவாறு சிரித்தான்.

'எல்லாவற்றையும் விட்டெறிந்துவிட்டு திங்கட்கிழமை கந்தோருக்குப் போ. நாம் ஆறுதலாக எல்லாவற்றையும் யோசிப்போம். என்று கூறிக்கொண்டு போக எழுந்தான் ஜெமீல்.

ஜெமீல் வீட்டை நோக்கி நடக்கும்போதுதான் அப் படியே மாமி வீட்டுக்குப் போய் முஸம்மிலேயும் விசாரித் துக்கொள்வதா? வேண்டாமா? என்று யோசித்தான். போகாவிட்டால் நிச்சயம் மாமி கோபிப்பா. றஹீம் வீட் டுக்குப்போன நான் முஸம்மிலேயும் பார்க்கவில்லே என் ருல் வாப்பாவுக்கு மனக் குறையாகப் போகும். ராத்தா வைக் கல்யாணம் முடிக்க மாமியும் முஸம்மிலும் எடுத்து

வரும் முயற்சியை முறியடிப்பதென்ருல் அவர்களோடு சேர்ந்துதான் இதைச் செய்ய வெண்டும். நானும் சேர்ந்து பகையை வளர்த்தால் அது றஹீமுக்குத்தான் இன்னும் தீமையாகவும் முடியலாம்... சரி ஒருக்காப் போய் வருவோம். என்று முடிவுசெய்தான். அவன் கால்கள் மாமி வீட்டை நோக்கி நடந்தன.

ஜெமீலைக் கண்ட ஸாஹிரு உம்மா அவளுடைய கவலையெல்லாம் மறந்தவளாக... வாங்க கிளி! வாங்க! ஆயிரம் எண்டாலும் என்ர காக்காட ஈரல் கொழுந்து இல்லையா... என்னுட இரக்கமில்லாமப் போகுமா? என்று அங்கலாய்ப்போடு அவனை வரவேற்ருள்.

முஸம்மில் நாளைக்கு வயலொன்றில் சூடு போடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தான். மெஷின் ட்றைவர், வேளாண்மைக் காரர்கள் எல்லோரும் சாக்குக் கட்டுகளையும் கைப்பெட்டி, சட்டி பானைகள் முதலியவற்றையும் மெஷினில் ஏற்றிக்கொண்டிருந்தனர்.

ஜெமீலைக் கண்ட முஸம்மில் மிக வெட்கப்பட்டவனுக அங்கும் இங்கும் ஒதுங்கத் தொடங்கினுன். மற்றொருவன் காணியில் இருந்த வேளாண்மையை வெட்டப்போன சம்பவம் அவனது கௌரவத்தை அப்படியே போக்கிவிட்டது. அதுமட்டுமின்றி ஒருநாள் முழுவதும் 'றிமாண்டில்' அடைப்பட்டிருந்ததும் அவனுக்கு மிக வெட்கமாகப் போயிற்று. ஜெமீலிடம் என்ன பேசுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை, 'இருங்க மச்சான் வாறன்' என்று அவனைத் தற்காலிகமாகத் தூரத்தில் ஆக்கினுன்.

ஜெமீல் வீட்டின் முன் மண்டபத்திற்குப் போய் அங்கே கிடந்த கதிரையில் தனியே உட்கார்ந்தான்.

'என்ன தனியே இருக்கிறீங்களா' என்று ஒரு குரல் கேட்டது, அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தான். திண்ணைக்கும் முன் மண்டபத்துக்கும் இடையில் இருந்த கத

வோரம் கதவோடு கதவாகத் தன்னை மறைத்துக்கொண்டு முகத்தை மட்டும் முன்னால் நீட்டியவாறு நின்றாள் பானு.

'மனிதன் தனியே தானே பிறந்தவன் தனியேதான் போவான். இது ஒரு தனிமையா? சிலர் இரட்டைப் பிள்ளையளாகச் சேர்ந்து பொறக்காங்களே. சில பொண்டு கள் மூண்டும் நாலும்கூடப் பெத்துர்ருங்களே... அம்மாடி...

'நீங்க ஒவ்வொண்டாகத்தான் பொறுவீங்க. பயப்பட வேணும்!

அதையா சொன்னேன்? ஆய்! இந்த ஆம்புளயளுக்கு கொஞ்சங்கூட வெக்கமில்ல.

வெக்கம் இல்லாம நான் என்ன செஞ்சிற்றன்...

'ஒங்களோட வேலைசெய்ற றஸீனாவும் நீங்களும் ஆடின கூத்த அண்டு நான் பாத்துக்குத்தானே இருந்தன். ஜேர் மனிக்குப் போனா, போன வேலையப் பாத்துக்கு வாற. பொம்புளயளோட நிண்டு படம் புடிச்சிக்கி வந்திரிக்கீங் களே வெக்கமில்லையா?

பானுவின் எண்ணங்களும் மனோநிலையும் இன்னும் வளர்ச்சி பெறாத நிலையைப் பார்த்து ஜெமீல் அவள்மீது பரிவுகொண்டான். தற்கால உலகைப்பற்றி அவள் எது வுமே அறியாதவள். இவளுக்கு இதனை எப்படி விளங்கப் படுத்துவது என்று சற்று நேரம் யோசித்தான்.

பானு பெண்களெல்லாம் இப்போ படிச்சி முன்னேறிக் கிற்று வாறாங்க. பள்ளிக்கூடங்களிலயும் கந்தோர்களிலும் உத்தியோகம் பார்க்காங்க. மந்திரிமாராக, பிரதம மந்திரி யாகக்கூட இரிக்காங்க. இவர்களோட எல்லாம் பழகாம ஆண்கள் எப்படி உத்தியோகம் பார்க்கிறது.

'அப்படியெண்டா! உத்தியோகம் பார்க்கிற எலலாப் பொம்புளயளும் விருப்பம்போல ஆம்புளயளோட நிண்டு படம் புடிச்சிக்குவாங்களா?'

ஜேமனியில் தனக்கு வழிகாட்டியாக வந்த ஜொஹரு வுடன் தான் படம் எடுத்துக்கொண்டதைத்தான் பானு குறிப்பிடுகிருள் என்பதை ஜெமீல் புரிந்துகொண்டான்.

அப்படி இல்ல பானு! இங்கிலாந்து போன்ற நாடுகளி லுள்ள வெள்ளக்காற ஆக்கள், நம்மளப் போல மொக்காடு போட்டுக்கு ஒதுங்கிக்கமாட்டாங்க! விரும்பின ஆண்களோட சினிமாவுக்குப் போவாங்க! விரும்பினவர் களோடுபடம் பிடிச்சுக்குவாங்க! அதில எல்லாம் தப் பார்த்தம் ஒண்டுமில்ல

சீச்சீ! இதென்ன சாதிப் பொம்புளயள். மானம் மரி யாதை இல்லாதவளுகள். அவளுகள் அப்பிடி வந்தாலும் இனிமேல் நீங்க அப்பிடியெல்லாம் படம்புடிச்சிக்காதங்க...

...சரி பானு . அப்பிடிப் புடிச்சாலும் உங்க கண்ணில படாம வெச்சிக்கிறேன்... இருவரும் சிரித்துக்கொண்டார் கள். பானுவுக்கு ஒருவாறு தன் மனப்பாரம் குறைந்த மாதிரி.

ஸாஹிரு உம்மா ட்றேயில் தேநீர் எடுத்துக்கொண்டு வந்தாள். முஸம்மிலும் வேலைகளை முடித்துக்கொண்டு வந்து சேர்ந்தான். இருவரும் தேநீர் அருந்தினர். சிறிது நேரம் அமைதி நிலவியது.

'மச்சான் உங்க சண்டையில வழக்குக் கணக்கென்றும் வருமல்லவா? ஜெமீல் பேச்சைத் தொடங்கினுன்.

'ஓமோம்...மனிசன் கொலை செஞ்சிற்று வழக்கு பேசித் தப்பிக்கி வாருன். இது ஒரு வழக்கா? ரெண்டு தவணையில இதப் பிச்செறிகிற அட்வகேற்மார் எனக்கிட்ட இருக் காங்க.

'அதுசரி! இதில வழக்கென்றும் கணக்கென்றும் போனு வீண் செலவும் கஷ்டமும் நமக்குத்தானே!'

'ஓம் மகன்! என்ர புள்ளய ஒரு நாள் முழுக்கப் பொலிசிலயும் அடச்சி வச்சிற்று. இப்ப வழக்கும் போட்டிருக்கானுகளாம். இத நீங்கதான் பார்த்து செரி பண்ணணும்'. ஸாஹிருஉம்மா கண்கசக்கத் தொடங்கினுள்.

ஜெமீல் ஆழமாக சிந்தனையில் மூழ்கியபடி கூறினுன். 'மச்சான் இதில சரியோ பிழையோ நடந்து போச்சு. ஆனு இதை நீட்டிக்கிப் போறது அவ்வளவு நல்லதல்ல...'

'வழக்குக்கு நான் பயப்படஇல்ல ஜெமீல். மறியல் கூடு கட்டியிருக்கிறது ஆம்புளக்கித்தான்.

'உங்களைப்போல கவுரமானவர்களுக்குமா? அது கோலாடமனுபுக்கும் கொழுக்கட்டயன் காதருக்கும்தான். நீங்க அவனுகளோட சேர்ந்துதான் இந்தப் பொளயெல்லாம் செய்திருக்கிறியள்.'

முஸம்மில் பேசிக்கொள்ள முடியாமல் தவித்தான்... ஜெமிலின் சொல்லைக் கேளாவிட்டால் மர்லியாவைத் தான் கலியாணம் செய்து றஹீமைத் தோற்கடித்து அவனை அவமானப்படுத்துகிற காரியம் கெட்டுப்போகப் போகிறதே... என்று சிந்தித்தான்.

'ஜெமீல்... நான் தெரிஞ்சோ தெரியாமலோ இப்பிடி நடந்துகிற்றன். என்ர தாய் மாமன் எண்டு ஒங்க வாப்பா தான் கடைசியில என்னப் பொணை எடுத்தார். இப்போ நீங்க சொல்ற மாதிரி நான் கேட்கன்'.

'மச்சான்! நான் எல்லாம் யோசிச்சிக்கிற்று...நாளைக்கு இரவைக்கு வாறன். பொலிசிலயும் போய் நான் பாக்கணும். றஹீமிடமும் கதைக்கணும்...மாமி நீங்க ஒண்டும் கவலப்படாம இருங்க...' என்று கூறிக்கொண்டு ஜெமீல் வீட்டுக்குப் புறப்பட இரவு மணி பதினென்றுகிவிட்டது.

பல்கலைக்கழகங்கள் விடுமுறைக்காக மூடப்பட்டன. ஷாபிதீன் ஊருக்கு வந்திருந்தான். அவன் உடல்நிலை இப்பொழுது தேறி புது உற்சாகத்தோடு இருந்தான். ஆனால் வாழ்வில் ஏற்பட்ட தோல்விகளால் விரக்தியுற்றிருந்த அவன் தன் சிந்தனைகளை மற்றோர் வழியில் திசைதிருப்பி இருந்ததை, அவனது மனைவி பரீதா கவனித்துவந்தாள். இது அவளுக்கு மற்றோர் பிரச்சினையைத் தோற்றுவித்தது.

இறைவழி அவனுக்கு இன்பமும், மனோ நிறைவும் அளித்திருந்ததை அவள் அவதானித்தாள். ஷாபிதீன் ஐந்து 'வொகுத்'தும் ஒழுங்காகத் தொழத் தொடங்கினான். நள்ளிரவில் எழுந்து 'தஹஜ்ஜத்' என்னும் விசேட தொழுகையை வெகு நேரமாகத் தொழுவான்.

இஸ்லாமியத் தத்துவஞானம் அவனுக்குப்பெரிதும் கவர்ச்சி அளித்தது. ஸூபியாக்களின் வரலாறுகளையும், தத்துவ விளக்கங்களையும் வாசிக்கத் தொடங்கினான். திருக்குர்ஆன் பற்றிய ஆங்கில, தமிழ் நூல்கள் அவனுடைய புவியியல் அறையை 'குர்ஆன்இயல்' அறையாக மாற்றி விட்டது.

புதிய நண்பர்கள் பலர் அவனைத்தேடி வந்தனர். நீண்ட உரையாடல்கள், விவாதங்கள் எல்லாம் அங்கு நிகழத்தொடங்கிற்று. ஷாபிதீன், வந்திருந்த நண்பர்களுக்கு நிகழ்த்திய விரிவுரையொன்று பரீதாவின் காதிலும் விழுந்தது.

உலகம் என்பது மாயை, இதன் கவர்ச்சிகளில் மனம் ஈடுபடுவதும், இன்பம் காணத்துடிப்பதும், இயல்புதான். இது சாதாரண மனித உணர்வலைகளின் மோதல்கள். இந்த உணர்வலை மோதல்களில் மனிதர்கள் தம் வாழ்நாட்களை வீணே கழித்துவிடுகின்றனர். இதனால் அவனு

டைய 'மானுடம்' என்பது பிரகாசித்துப் பயன் கொடுப்பதை அவன் இழந்துவிடுகிருன். மானுடம் என்பது ஆத்மா, தன் ஒளிக்கூறுகளை ஒடுக்கி நிற்கும் பண்பு ரீதியான ஒரு வடிவம். மாயை இதனைத்திரையிட்டு நிற்கிறது. இந்த மாயையைக்கிழித்து வீசிவிட்டு, மானுடம் என்னும் பண்பு வடிவம், தன்னுள் மறைந்து நிற்கும் ஆத்மாவைப் பிரகாசிக்கச்செய்ய வேண்டும். இந்தப் பிரகாசத்தில்தான் நாம் இறைவனைக்காணலாம். அங்கேதான் உண்மை நிலைபேறு அடைகிறது. வாழ்வின் தத்துவம் பிரகாசிக்கிறது. 'மானுடம்' வெற்றி பெறுகிறது. 'வாழ்வை அனுபவிப்பது எப்படி' என்பது மாயையின் விளக்கம். வாழ்வைப் பயனுறச் செய்வது எவ்வாறு என்பது ஆத்மாவின் காட்சி. — இவ்வாறு ஷாபிதீன் கொடுத்துக்கொண்டிருந்த விளக்கங்கள் பரீதாவின் தலையைக்கிறங்கச் செய்தன.

கணவனுடைய இந்தப்போக்கில் நின்றும் அவனை மாற்றுவிட்டால், இருக்கும் ஓரளவு இன்பவாழ்வையும் தான் இழக்கவேண்டி ஏற்படுமே என்பதுதான் அவளுடைய இன்றையக்கவலை. ஆதலால் அவனுடைய 'ஓரளவான' இயைபை எடுத்து அவள் மர்லியாவுக்கு ஒரு அழைப்பை விடுத்திருந்தாள். மாதம் ஒன்ருகிவிட்டது. இன்னும் பதிலே வரவில்லை.

அன்று மத்தியானம், வெளியில் போயிருந்த ஷாபிதீன், கடிதமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தான். பரீதாவைக் கண்டதும் சிரித்தபடி கடிதத்தை அவளிடம் நீட்டினுன். பரீதாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கடிதத்தைப்படிக்கத் தொடங்கினுள்.

என் அன்புள்ள தங்கைக்கு!

உங்கள் கடிதத்திற்குப் பதில்தரத் தாமதித்தமைக்கு முதலில் மன்னியுங்கள். உங்களுக்கு எவ்விதமான பதிலைத் தருவது என்பதை முடிவு செய்வதற்கே இவ்வாருன தாமதம் ஏற்பட்டது. இது வாழ்க்கைப் பிரச்சினை அல்லவா?

ஆம், இல்லை என்பதைக்குறிக்கப் புள்ளடி போட்டுவிட்டுச் செல்லும் புதியமுறைப் பரீட்சை இல்லையே!

சகோதரி! கணவன் விரும்பும் மாதிரியெல்லாம், அவருக்கு வாழ்க்கை அமைத்துக்கொடுத்து அதில் இன்பம் காணத்துடிக்கும் ஓர் உத்தமபத்தினியான உங்களை எண்ணிப்பார்க்கும்போது என் உள்ளம் அப்படியே நெகிழ்ந்து ஆனந்தமடைகிறது. இத்தகைய அன்பின் மனைவியைப் பெற்ற உங்கள் கணவர் அதிர்ஷ்டம் செய்தவர். இந்த அதிர்ஷ்டத்தை அனுபவிக்கத் தெரியாமல் மன உளைச்சல்களுக்கு இடம்கொடுத்து அலைமோதும் அவரது நிலையை எண்ணுகையில் மிக வேதனை அடைகிறேன்.

வாழ்வு என்பது எதிர்பாராத நிகழ்ச்சிகளின் கோவை. அதனை ஏற்றுக்கொண்டு திருப்திபெறுவதுதான் நிறைவு. ஒரு பேராசிரியருக்கு வாழ்வுபற்றிய தத்துவங்களையெல்லாம் எடுத்து விளக்குவதற்கு நான் தகுதியற்றவள்.

ஒருபோழ்து, உங்கள் கணவர் என்னை விரும்பி இருந்தார். நான் அவரை மனப்பூர்வமாகக் காதலித்து நின்றேன். இறைவன் எண்ணம் வேருக இருந்ததோ, அல்ல அவர் என்மீது கொண்டிருந்த காதல் மலினப்பட்டதாக இருந்ததோ! அக்காதல் நிறைவேறவில்லை. அவர் ஒரு அற்ப காரணத்திற்காக என்காதலை உதாசீனம் செய்து உங்களைக் கைப்பிடித்தார். அல்லது தான்கொண்ட காதலை இறுதிவரை நிலைநாட்டி அதனைச் சாதித்துக் கொள்ளும் திராணியற்றவராக இருந்தார்.

இன்று உங்களுக்கு பிள்ளைப்பேறில்லாத கவலை. அவருக்கு என்னை இழந்துவிட்ட தாகம். எனக்கு இன்னும் விவாகமாகவில்லை என்ற ஏக்கம். இம்மூன்றையும் சேர்த்து வர்ணக்குழம்பு செய்து, புதியதோர் ஓவியத்தைப்படைத்துப்பார்க்க அவர் விரும்புகிருர். இது வேண்டிய வேண்டிய வாறெல்லாம் வர்ணங்களை அள்ளிவீசி, விரும்பிய விரும்

பிய உருவங்களை மேலும் கீழுமாகச் சித்திரிக்கும் புதிய முறை ஓவியம்போல இது எனக்குத் தெரிகிறது. ஓவிய மேதை பிக்காசோவின் இந்த கற்பனை உருவகங்களுக்கு பிரதானமளிக்கும் இந்த ஓவியத்தைவிட, உணர்வு பாவங் களையும், அழகின் இலாவண்யங்களையும், காகிதத்தில் உயிர் பெறும்படியாகச் செய்யும் ரவிவர்மாவின் சித்திரங்களை நான் விரும்புகிறேன். எதிலும் தெளிவும் அழகும் வேண் டும் என்பது என் விருப்பம்.

காதல் என்பது மாலை நேரத்து மழை மேகங்கள் தோற்றுவிக்கும் ஒரு வானவில் போன்றது. சிறிது நேரத் தில் அது இருந்த இடமே அற்று நீலவானம் வெறுமையாகக் காட்சி தருகிறது. பருவக்காலத்து இந்த வானவில்லை லைலா மஜ்னு கதையாக்கிக்கொள்வதில் நான் நம்பிக்கை அற்றவள். ஒரு காதலை இழந்து அனுபவப்பட்டு முதிர்ச்சி யான முப்பது வயதை அடைந்துவிட்டதால்தான் எனக்கு இவ்வாறான கருத்துக்கள் தோன்றிவிட்டதோ என்னவோ! ஆனால் என் கருத்துக்களை நான் நம்புகிறேன்.

வாழ்க்கை என்பது ஒரு வீணை. அதில் வேண்டிய இரா கங்களை மீட்டி இன்புறலாம். மீட்பவரின் மனோநிலையைப் பொறுத்து இராகங்கள் அமையும். சிலர் பொதுவாக இராகமாலிகையை வாசித்து எல்லாச் சுவைகளையும் அனுபவிப்பர். நீங்கள் இருவரும் எப்பொழுதுமே துன்ப ராகமான சஹானாவை வாசிக்கிறீர்கள்! மகிழ்வைத்தரும் மோகனம், கல்யாணி என்பனவற்றை வாசிக்க ஏன் முயல் வதில்லை? இதனால்தான் நீங்கள் இருவரும் எப்பொழுதுமே சபல சுபாவத்திற்குட்பட்டு வேதனையை விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறீர்கள்.

பலதார மணத்தின் தத்துவங்களை நான் மறுக்கவில்லை. அது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. ஆனால் ஒருவர் தன் தோல்வியையும் பலஹீனத்தையும் மறைக்க அதனை ஒரு போர்வையாக்கிக் கொள்வதானால் அதை அனுவதிக்க

முடியாதல்லவா? அப்படியாயின் ஒரு ஏழைப்பிள்ளைக்கு வாழ்வளித்து அதனை இஸ்லாத்தின் பெயரால் ஏற்றுக் கொள்வதன்மூலம் ஒரு முன்மாதிரியைக் காட்டினுல், சமூகம் அதனைக்கண்டு உங்களைப்பாராட்டுமே.

என்னை உங்கள் உடன்சோதரியாக ஏற்றுக்கொள்வதன் மூலம், நீங்கள் இருவரும் மனநிறைவு பெறலாம். மற்ருெருத்தியின் வாழ்வில் பங்குகொண்டு, அவளுடைய கணவனுடைய அணைப்பில் இன்பம் கண்டு நான் திருப்தி காண முடியுமா? என்பது எனக்கு விளங்கவில்லை. அவ்வாறுன ஒரு நிறைவு எனக்கு ஏற்படாவிடில், உங்கள் கணவர் இப்பொழுது செய்ய முடிந்ததுபோல ஒரு மாற்றுமருந்து எனக்குண்டா? இதனைவிட நான் கன்னியாகவே இருப்பது எவ்வளவோமேல். மனத்தாலும் உடலாலும் மாசுபடாதவள் என்ற திருப்தி எனக்கேற்படும் அல்லவா?

உங்களுடைய அன்பை நிராகரிப்பது எனக்கு வேதனை தருகிறது. உங்களுடைய கணவரின் அபிலாஷையை நிறைவேற்ற முடியாதவளாக இருப்பது இன்னும் கவலையை அளிக்கிறது. ஆனுல் இத்தியாகத்தைச் செய்து உங்கள் இருவருக்கும் மகிழ்வு தந்து, அம்மகிழ்வில் நானும் பங்குகொள்ள இயலாதவளாக இருக்கிறேன். என்னை மன்னியுங்கள்! உங்கள் கணவரை - இதைவிட உயர் இலட்சியங்களில் ஈடுபடச்செய்யுங்கள். ஓர் அறிஞரான அவர், ஒரு பெண்ணை மறக்கமுடியாத சபலத்திற்குள்ளானுர், என்பதைவிட, ஓர் உயர் இலட்சியத்தின்பால் தன்னை ஈடுபடுத்தி சமுதாயத்துக்கு அல்லது அறிவியல் உலகுக்கு ஆக்கபூர்வமான பணியாற்றினுர் என்ருல், அது அவரது பெருமையை இவ்வுலகம் மெச்சுதற்குரியதாகும். அவ்வாருன ஓர் இலட்சியவாழ்வில் நீங்கள் இருவருமே ஈடுபட்டு வெற்றி பெறுவீர்களாயின், ஒருநாள் நான் வந்து உங்கள் இருவரையும் பாராட்டி இன்புறுவேன்.

உங்கள் இருவர்மீதும் எனக்குள்ள வாத்ஸல்யம், என்னுள் ஒரு சுடர்விளக்காக என்றும் எரிந்துகொண்டிருக்கும். அந்தச்சுடரில் நான் என்றும் உங்களைக்கண்டு கொண்டிருக்கிறேன்.

நானும் உங்கள் இதயமென்னும் மாடக்குழியில் ஒரு அகல்விளக்காக எரிந்து கொண்டிருந்தால், அச்சுடரில் நீங்கள் இருவரும் நிறைவும் மகிழ்வும் பெறமுடியாதா?

மெய்ப்பொருளான இறைவனுடன் ஞானிகள் உறவாடி இன்புறுகின்றனர். உரையாடி தெளிவுபெறுகின்றனர். ஐக்கியமாகி அமரத்துவம் பெறுகின்றனர். நாம் மனித உணர்வுகளுக்கு மகுடமிட்டு அதன் மணிஆரங்களில் மனதை பறிகொடுத்து, கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடி மகிழும் சிறுமிகளைப்போல, — வாழ்க்கையைக் கருதலாமா? அவ்வாறாயின் வாழ்வின் தத்துவம்தான் என்ன? நிறைவு என்பதன் பொருள்தானென்னே!

— அன்பின் சித்தி மர்லியா,

பரீதா கடிதத்தைப் படித்து முடித்து நிமிர்ந்தாள். அதேவேளை ஷாபிதீனும் அவளின் பின்னால் நின்றவாறு அவனும் படித்துமுடித்தான்.

பரீதாவுக்கு இது வாழ்க்கையில் மற்றுமோர் தோல்வியும் அவமானமும் ஆயிற்று... 'மெய்தான் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணின் துணைமை தேவைதான் என்பதற்காக அவள் எந்த நிலையிலும் கீழிறங்கிக்கொண்டு வந்துவிடுவாளா? அவள் அவ்வாறு விரும்பினால்கூட அவளுக்கென்று தாய், தந்தை சகோதரன் என்றெல்லாம் இருக்கிறார்களல்லவா? அவர்கள் இதனையெல்லாம் அனுமதித்து விடுவார்களா?... என்று முனகினாள்.

சாதாரணமாக பதினாறு வயதில் ஒரு பெண் வாழ்க்கைப்படுவது முஸ்லிம் சமூகத்தில் வழக்கமான

ஒன்று. மர்லியா 30 வயதாகியும் இன்னும் விவாகமே ஆகாமல் இருக்கிருள். அவளுடைய தாய், தந்தை, சகோதரன் ஆகியோருக்கும் அவள்மீது உண்மையான கரிசனை இருந்தால் இப்படி வீண் பகட்டிலும், விவாதங்களிலும் ஈடுபட்டுக்கொண்டு அவளை இன்னும் கன்னியாகவே வைத்திருப்பார்களா? — ஷாபிதீன் விட்டுக் கொடுக்காமல் பேசினுன்.

'அவ படித்தவ, உத்தியோகம் பார்ப்பவ—திடீரெனக் கழுத்தைப்பிடித்துத்தள்ளி யாரிடமாவது ஒப்படைத்து விட முடியுமா? காலம் வரும்வரை காத்திருக்கத்தானே வேண்டும்.'

ஷாபிதீன், பரீதாவின் கையிலிருந்த கடிதத்தை வாங்கி மீண்டும் ஓர் முறை அதை மேலோட்டமாக வாசித்தான், சிவப்பு நிற போல்ட்பொயின்றை எடுத்து சில வரிகளை கீழே கீறினுன்.

'என்ன மாணவர்களின்' ரியூட்ஸ்களைத் திருத்துகிற மாதிரி கீறிக்கொண்டிருக்கீங்க.'

'பரீதா! இக்கடிதம் அறிவியல் பூர்வமானது. சில வரிகள் எனக்குத்தென்பும், புத்துணர்வும் அளிக்கின்றன. புதிய நம்பிக்கையின் சுடர் இக்கடிதத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.'

பரீதா பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தாள்.

'உங்கள் கணவரை இதைவிட உயர் இலட்சியங்களில் ஈடுபடச்செய்யுங்கள். ஓர் அறிஞரான அவர் ஒரு பெண்ணை மறக்கமுடியாத சபலத்திற்குள்ளானுர் என்பதைவிட ஓர் இலட்சியத்தின்பால் தன்னை ஈடுபடுத்தி சமுதாயத்திற்கு ஆக்கபூர்வமான பணியாற்றினுர் என்ருல் அவரது பெருமை இவ்வுலகம் மெச்சுதற்குரியதாகும்' — வாய்விட்டு இவ்வரிகளைப்படித்த ஷாபிதீன், ஆழ்ந்த சிந்தனையோடு, மூச்சை வேகமாக உள்ளே இழுத்து, வெளியே விட்டபடி பரீதா

எந்த இலட்சியத்தையும் தனியே ஈடுபட்டுச் சாதிக்க நான் விரும்பவில்லை. தியாகமும் அன்பும் உருவாய் நிற்கும் நீ என்னோடு இணைந்து செயல்படவேண்டும். நீயும் ஒரு இலட்சியப்பெண்மணியாக மிளிரவேண்டும். அதுவே என் ஆசை.

உணர்ச்சி வயப்பட்ட பரீதா, கண்களில் நீர்தேங்கி நின்றவளாக, 'நீங்கள் செல்லும் பாதைதான் என் வாழ்க்கை, உங்கள் அழைப்புதான் எனது இலட்சியம், உங்கள் இன்பம்தான் எனது மகிழ்வு......'

'பரீதா! நாம் புதியதோர் வாழ்வு அமைப்போம். அது சமுதாயத்திற்கு பயன் உள்ளதாகவும் இறைவன் விரும்புகின்றதாகவும் இருக்கும். இதுபற்றி நாம் யாரிடமுமே சொல்வதில்லை... இங்கே வா அதுபற்றி நான் விளக்கமாகச் சொல்கிறேன். 'என்று பரீதாவை உள் அறைக்கு' அழைத்துச்சென்றான் ஷாபிதீன்.

## ( 22 )

இஸ்மாயில் ஹாஜியாரின் வீட்டில் சோகம் குடிகொண்டது. உற்றார், உறவினர், பள்ளிமரைக்காயர்மார், வேளாண்மைக்காரர்கள் என்று ஒவ்வொருவரும் முகத்தில் கவலை தோய்ந்தவர்களாக வருவதும் போவதுமாக இருந்தனர்.

அன்று காலையில் சுபஹு தொழுது விட்டு வயல்களைப் பார்த்துவிட்டு வரப் போன ஹாஜியார், ஒவ்வொரு வேளாண்மையையும் பார்த்துவிட்டு பகல் பதினொரு மணிக்கெல்லாம் கூளாவடிக்கு வந்து சேர்ந்தார். கூளாவடிக்கு புதிதாக பஸ் சேவிஸ் ஒன்று போட்டிருந்தனர். அது நினைத்தால் வரும் மறந்தால் விடும்' என்ற பஸ் சேர்விஸ்.

பன்னிரெண்டு மணியாகியும் பஸ்வரவில்லை. ஹாஜியாருக்கு நல்ல விடாயும் பசியுமாக இருந்தது. தேநீராவது குடிக்கலாம் என்று தேநீர்க்கடை ஒன்றிற்குப் போனார். கடையின் முன்னால் கிடந்த வாங்கு ஒன்றில் உட்கார்ந்து, கூடவந்திருந்த சேனைக்காட்டு வெள்ளாமைக்காறன் ஹனிபாவுக்கும் சேர்த்து இரண்டு தேநீர் கேட்டார்.

அவ்வளவுதான்! ஒருபக்கமாகச் சாய்ந்து வந்தவர் 'தொப்' பென்று கீழே விழுந்தார். சிறிது நேரம் மயக்கமாகக் கிடந்து கண்விழித்தார். அவரால் எழுந்திருக்க முடியவில்லை. வலப்பக்கத்துப் பாரிசத்துக் காலும் கையும் இயங்க மறுத்து விட்டன. ஹனிபா அங்கு வந்த மற்றோர் போடியாரின் காரைப் பிடித்து ஹாஜியாரை ஏற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

இரண்டு நாட்களாக வைத்தியர் ஒருவர் தீவிரமாகச் சிகிச்சை அளித்தார். அவர் ஒரு எம். பி. பி. எஸ். பட்டதாரி. நரம்பு விஷயங்களில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். ஹாஜியாரைச் சுகமாக்கி விட்டால் ஊரில் அவருக்கும் நல்லதொரு பேர் கிடைக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். முடியுமான அளவு முயன்றார். முடிவு:- பேசுவதற்கு முடியாமல் உளறுவாய்ப் பட்டுக் கொண்டிருந்த ஹாஜியார் ஒருவாறு மதலை பேசினார்.

'எனினும் இந்த வருத்தம் பூரண சுகம் காண்பது கஷ்டம். காணீ பூமி எழுத வேண்டி இருந்தால் பெருவிரல் அடையாளத் தோடு எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். வேறு ஏதும் விஷயங்கள் இருந்தால் இந்த நிலையிலேயே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். வருத்தம் மிக விரைவில் மூளையையும் தாக்கலாம் என்று கூறிவிட்டு வைத்தியர் சென்றார்.

இரட்டைப் படுக்கைக் கட்டிலொன்றில் தலையணைகளைத் தாங்கலாகப் போட்டுக்கொண்டு ஹாஜியார்

படுத்திருந்தார். கபீர் லெவ்வை ஆலிம் குர்ஆன் சூறுக்களை யும் துஆக்களையும் ஓதி ஊதிக் கொண்டிருந்தார். காதர் முஹிதீன் மரைக்காயரும் பக்கத்தில் இருந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

நொத்தாரிசு ஒருவரும் வந்திருந்தார். ஹாஜியாருடைய விருப்பப்படி, காணிகளை யெல்லாம் மக்களுக்கும் மனைவிக் கும் பிரித்து எழுதப்பட்டன. ஒப்பமிடும் இடங்களை நொத் தாரிசு காட்ட, காதர் முஹிதீன் மரைக்காயர், ஹாஜி யாருடைய இடது கைப் பெருவிரலைப் பிடித்து 'இங்க் பேட்' டில் தோய்த்து உறுதியில் பதித்துக் கொண்டிருந் தார்.

தங்கை ஸாஹிரு உம்மா, கண்ணீரை வெந்நீராக வடித்துக்கொண்டு அவருடைய கால்மாட்டில் நின்ருள். ஜெமீல், வாப்பாவின் பக்கத்திலேயே நின்று அவருடைய வருத்தத்தின் தன்மைகளை அவதானித்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தவாறு நின்ருன்.

உறுதி வேலைகள் முடிந்து நொத்தாரிசு போய்விட டார்.

கபீர் லெவ்வை ஆலிம் முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசினுர் 'ஹாஜியார், எல்லாம் சந்தோஷமாக உங்கள் விருப்பப்படியே நடக்குது. ஒங்களால ஒங்குட பிள்ளை குட்டிகளுக்கோ அல்ல வேருெரு மனுஷருக்கோ ஒரு குறையும் இல்லை. நடந்த புல் சாகாமல் வாழ்ந்தவர் நீங்கள். ஆனுல் இன்னும் இரண்டு முக்கியமான விஷயங் கள் இரிக்கி. அதப்பற்றியும் நீங்க ஒங்குட முடிவச் சொல்லிவிட்டால் எங்களுக்கு சந்தோஷமா இரிக்கும்.

'ஹாஜியார் கண்களை அகலத்திறந்து என்ன சொல் கிறீர்கள்' என்பது போலக் கேட்டார்.

கபீர் ஆலிம் தொடர்ந்து சொன்னுர். இப்போ மூத்த பொம்புளப் புள்ள இரிக்கிலுவா அதுக்குத் கலியாணம்

முடிக்கணும். தம்பி ஜெமீல் இன்னு நிக்கி, அவருக்கும் பல இடங்களிலும் கேட்டு வாருங்க. அதையும் முடிவு செய்யணும். நாங்கள் இந்த விஷயத்தில எப்படி நடந்துக்கணும் எண்டு நீங்க சொல்லிரணும்.

இதைக் கேட்டதும் ஹாஜியாருக்கு நெஞ்செல்லாம் அடைத்துக் கொண்டு வந்தது. தன்மதலை வாயால் திக்கித் திக்கிச் சொன்னார்'...நான் இன்னம் ரெண்டு நாளோ, நாலு நாளோ... மவுத்தாப் போவேன். அதுக்கெடயில என்ர ரெண்டு புள்ளயளுக்கும் கலியாணம் முடிக்கணும்... என்னப்பத்தி ஒருவரும் கவலப்பட வேணும்... கலியாணத்தப்பாத்திற்றுத்தான் நான் மகுத்தாகுவன். என்ர மகள்ற கொணத்துக்கு இவ்வளவு காலமா அது வாழாம இருந்ததுக்கு நான் தான் காரணம்...

ஒங்களால எங்களுக்கு ஒரு தீமையும் நடக்கல்ல எண்டு தானே சொன்னன்... ஒண்டயும் பத்தி நீங்க கவலப் படக் கூடாது... ஒங்குட ஹாஜத்த ஆண்டவன் நிறவேத்தி வெப்பான்... இப்ப, புள்ளக்கி எந்த மாப்புளய எடுத்து முடிக்க, தம்பிக்கு எந்தப் பொண்ண எடுத்து முடிக்க சென்னுப் போதும்...

ஹாஜியார் புன்முறுவல் ஒன்றை வரவழைக்க முயன்றவராக... கண்களைத் திருப்பி மகன் ஜெமீலைப் பார்த்தார்... என்ர புள்ள விரும்புற மாதிரி அலியார்ர மகன் றஹீமைத்தான் மர்லியாம்மாவுக்கு முடியுங்கள்... அல்லா அதுகள நல்லா வெப்பான்...

ஒரு மின்னல்... ஒரு புயல்! பேரதிர்ச்சியோடு பெரு மழையொன்று பெய்து ஓய்ந்தது போல எங்கும் ஒரு அமைதி நிலவிற்று. அங்கு இருந்தவர்களின் காதுகளை அவர்களாலேயே நம்ப முடியவில்லை.

ஜெமில் மிகுந்த நன்றியறிதலோடும், பாசவுணர்ச்சியோடும் வாப்பாவைப் பார்த்தான். உள்வீட்டு

நிலையில் சாய்ந்தபடி நின்ற மர்லியா எந்தவித உணர்வையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல், சலனப்படாமல் தன்முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். தகப்பனுடைய வருத்தம் ஒன்றே அவள் மனதைக் கவ்வி அவளை வேதனைப்படுத்தியது.

பக்கத்தில் நின்ற ஜெமீலைத் தனது இடது கையினால் பற்றிப் பிடித்துக்கொண்ட ஹாஜியார்... மகன்! நீ என்ர மரியாதையைக் காப்பாத்துறவன் எனக்கி எவ்வளவோ சந்தோசத்தத் தந்தவன் நீதான்... உனக்கிட்ட கடைசியாக ஒண்டு கேக்கன்... அத நீ கட்டாயம் நிறைவேத்தணும்... என்ற ஹாஜியார் ஆசுவாசப்பட்டுக் கொண்டு மேலும் கதைக்கமுடியாமல் சிறிது நேரம் இருந்தார்.

வாப்பா! சொல்லுங்க வாப்பா! நீங்க என்ன சொன்னாலும் நான் அதச் செய்வன் வாப்பா!... ஆத்திரப்பட்டவனாக ஜெமீல் கூறினான்.

சிறிது நேரம் தாழ்த்தி சாஹிரு உம்மாவையும் பக்கத்தில் அழைத்து... மகன் இன்னா மாமி இரிக்கா... இது என்ர ஒடல் பொறப்பு... நீ! மாமிர புள்ளயத்தான் கலியாணம் முடிக்கனும் மாமி உன்ன நல்லா வெச்சுக்குவா... ஒன்னுட இரக்கம் உள்ளவ. அவவுக்கு நான் வேறென்ன உதவியச் செய்ய... என்றார்.

வாப்பா! நீங்க ஒண்டும் கவலப்படாதங்கோ... நான் சந்தோஷமாக பானுவக் கலியாணம் முடிக்கன்... ஜெமீல் உணர்ச்சிவயப்பட்டவனாக, தந்தை சொல்லை உறுதியாக ஏற்றுக் கொண்டவனாகக் கூறினான்.

காக்காவின் அன்பினால் மனம் உருகியவளாக சாஹிரு உம்மா விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

ஹாஜியார் மனைவியை அழைத்தார். அவளுடைய கையின் மேல் தன் இடது கையை வைத்துப் பிடித்தவ

ராக... ஹாஜரு... இந்த ரெண்டு கலியாணமும் உனக்கு விருப்பம் தானே! இதில ஏதும் என்னில குற வெச்சிக் காத... இன்னம் ரெண்டு மூண்டு நாளயில கலியாணங்கள் நடக்கணும்... என்ர வாழ்க்கையில நான் நல்லா இரிக் கக்க செய்யாத இந்தச் சந்தோஷத்த நான் வருத்தத் தொடயாவது செய்றன்...

நீங்க எதச் சொன்னலும், நான் எப்பயாவது மறுத் திருக்கஞ... இந்த ரெண்டு கல்யாணத்தையும் ஒங்குட கண்ணுக்கு முன்னல் நான் செய்றன்... அல்லா ஒங்குட வருத்தத்த மட்டும் சுகமாக்கித் தந்தா போதும்! இதுக்கு அந்த குதுபு நாயகம் எனக்கி உதவி செய்யணும்... ஹாஜரு உம்மா தன் புருஷனின் முகத்தைப் பார்த்தபடியே முகத் தில் முந்தானையை அள்ளிப் போட்டுக் கொண்டு குரல் எழுப்பி அழத் தொடங்கினள்.

... அல்லா நம்முட விருப்பத்துக் கெல்லாம் செஞ்சிக் கிருக்க, அவனென்ன நம்முட வேலக்காறஞ... அவன்ர விருப்பத்துக்குத்தான் நாம பணியணும் ஹாஜரு... அவன் தான் எஜமானன்... அவன் தான் போடி... நாமெல்லாம் அவனுக்கிட்ட ஊழியம் செய்ய வந்திருக்கோம்...

காதர் முஹியிதீன் மரைக்காயர் சொன்னர்: இப்ப எல் லாம் நல்ல முடிவாக வந்திக்கிரிக்கி அதோட இன்னம் இரண்டு மூண்டு நாளயில கலியாணத்துக்கு நாள் இரிக்கா எண்டு பாத்திருவம் .. ஆலிம்சா! ஒரு ஆள் அனுப்பி நாள் பாக்கிற கிதாப எடிப்பியுங்க... இப்ப கலியாணத்துக்கு நாளத் திட்டம் கட்டினத்தான், வேல வெட்டிகள செய்ய லாம். கலியாணம் பெரிசோ சிறிசோ 'குஞ்சிக் கோழி எண்டாலும் குனிஞ்சிதான அறுக்கணும் என்ருர்.

சிறிது நேரத்துக்குள் பையனெருவன் ஆலிம் வீட்டுக் குப் போய் கிதாபைக் கொண்டு வந்தான். கபீர் லெவ்வை ஆலிம் நாள் பார்க்கத் தொடங்கினர்.

இன்று றஜப் பிறை பன்னிரெண்டு திங்கட்கிழமை இல்லயா... செவ்வா், புதன் இரண்டும் நஹ்சுடைய நாட்கள். வியாழக்கிழமை ஸூஹூல் ஸா அத் — துறவறம் போவதற்கு நல்ல நாளாம்... இதெல்லாம் கலியாணத்துக்கு ஆகாத நாட்கள்... வந்து... வெள்ளிக்கிழமை பிறை பதினறு இரவு ஒன்பது மணிக்கு கமர்ஸா அத்... சந்திர நேரம் மங்களகரமான காரியங்கள் — கலியாணம் எல்லாத்துக்கும் நல்ல நாள்... வெள்ளிக்கிழமை ஜூம் ஆவுடைய நாள் மக்காவுக்குக் கல் வெச்சநாள்... இரவு ஒன்பது மணிக்கும் பதினொரு மணிக்கும் இடையில... ரெண்டு காவினையும் முடிச்சிருங்க... நல்ல பறக்கத்தான நாள்.

'நாள் பாத்துத்தானே தாலிக்குந் தங்கம் உருக்கணும். இதுக்கெல்லாம் நாள் காணுமா? தாலி கட்டுற நேரத்தையும் பார்த்துச் சொல்லிருங்களன்,' என்ருள் ஹாஜரு உம்மா.

ஆலிமுக்கு கொஞ்சம் கோபம் வந்தாற்போல... இஞ்ச 'தங்கம் உருக்கிற, தாலி கட்டுறதெல்லாம் இஸ்லாத்தில உள்ளதில்ல. வொலிகாறன் பெண்ணை இரண்டு ஷாஹிதுகளுக்கு முன்னுல ஒப்புக் கொடுக்கணும். மாப்பிள்ளை 'மஹர்' பணத்தைக் காவின் கலரியிலயே மாமனுரிடம் கொடுத்துப் பெண்ணை ஒப்பெடுக்கணும். இதுதான் இஸ்லாம் இப்ப இஸ்லாம் எங்க நடக்குது 'மஹர் பணத்தை எந்த மாப்புள்ள குடுக்கான் காவின் புத்தகத்தில 'மஹர் ரூபா ஆயிரத்தி ஒண்டு — கொடுபடவில்லை' என்று எழுதிப் போட்டு காரியத்த முடிக்காங்க...

ஆலிமுக்கு வந்த கோபத்தைத் தணிப்பது போல, ஹாஜரு உம்மா, வட்டாவில் வெற்றிலை பாக்குப் பரப்பி, காணிக்கையும் ஐந்து ரூபாய் வைத்து வெள்ளை போட்டு மூடி ஆலிமிடம் கொண்டுபோய் வைத்தாள். சாஹிரு உம்மா தனது காணிக்கை ஐந்து ரூபாவையும் அதே வட்டாவில் வைத்தாள்.

வருத்தமும் வாதையுமான நேரம் இதெல்லாம் என்னத்துக்குச் செய்றயள்கா .. என்று கூறியவராக பத்து ரூபாவையும் எடுத்து, தனது இடுப்பில் இருந்த மெரினு பெல்ட — பக்கற்றுக்குள் வைத்து கொண்டு, இந்த வெத்தில பாக்கயும் ஒரு பேப்பரில சுத்தித்தாங்ககா ... என்ருர் கபீர் லெவ்வை ஆலிம். ஸாஹிரு உம்மா அதனைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு முன்னுல் ஒரு பேஜோ கார் கம்பீரமாக வந்து நின்றது. முஸம்மில் அதிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான். முஸம்மிலேக் கண்ட சாஹிரு உம்மா ஓடிப்போய் மகனிடம் நடந்தவற்றை யெல்லாம் கூறினுள். எல்லாவற்றையும் தலே அசைத்துக் கேட்டுச் கொண்ட முஸம்மில் எந்தச் சலனமு மற்றவனுக மாமனுரை நோக்கி வந்தான்.

முஸம்மிலேக் கண்ட ஹாஜியாருக்கு என்ன பேசுவதென்றே தெரிய வில்லே... தம்பி! வாங்க! வாங்க! என்று மதலே பேசினுர். அவருடைய கண்கள் அவனேப்பார்க்க கூசியதுபோல சிறிது நேரம் கண்களே மூடிக்கொண்டு இருந்தார்.

முஸம்மில் ஜெமீலேப் பார்த்து 'மச்சான், வாப்பாவை இங்கே வைத்துக் கொண்டிருப்பது புத்தியில்லே. நாம உடனே மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வோம்! அதற்காகத்தான் நான் காரையும் கொண்டு வந்தன். யோசிக்காம உடனே புறப்படுங்க என்று ஒரு அபிப்பிராயத்தைப் போட்டான்.

கபீர் லெவ்வை ஆலிம் அவனேப் பார்த்துத் — 'தம்பி! இப்ப நல்லொரு டாக்டர்தான் பாக்கார். நேற்று இருந்ததை விட இன்று எவ்வளவோ சுகம்! இன்னம் மூண்டு நாளேக்கு அவரே பாக்கட்டும். நீங்க போய் கலியாண விஷயங்களேப் பாருங்க! அதுக்குப் பிறகுதான் என்னமாவது செய்யலாம் என்று கூறினுர்.

ஹாஜியாரும் கண்களை விழித்து 'முஸம்மிலைப் பார்த் தவராக கையைத் தாழ்த்திக் காட்டி' பொறுங்க! என்று கூறினுர். அவர் முஸம்மிலை மிக அன்போடு பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்களிலிருந்து நீர் பொல பொலவென ஓடிக் கொண்டிருந்தது... தன் வருத்த நிலை மையை எண்ணி அழுது கொண்டிருந்தாரா? அல்ல தான் நினைத்தது போல முஸம்மிலை மர்லியாவுக்கு விவாகம் செய்ய முடியாமற் போயிற்றே என்று கவலைப்பட்டு அழு தாரா? என்பது ஒன்றும் விளங்கவில்லை. முஸம்மில் அவருடைய கையொன்றைப் பிடித்து தடவியபடி கவ லையே உருக்கொண்டவனுக நின்ருன். அவனுடைய கண்க ளும் நீரைப் பனித்தன.

ஹாஜியாருக்கு தங்கையின் குடும்பத்தோடு உள்ள அன்பு அலாதியானது. தங்கையையும் பிள்ளைகளையும் உயிரென நேசித்தவர் அவர். அந்த உறவு என்றும் நிலைக்க வேண்டும் என்றுதான் தன் மகனை மாமி வீட்டில் விவாகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஜெமீலை விவாகம் செய்ய றஸீனுபோன்ற எத்தனையோ படித்த பெண்கள் காத்திருக்க, 'அவர்கள் மனம் நோகக் கூடாதே, குடும்ப உறவு அறுந்து விடக்கூடாதே' என்று அவர் செய்த இந்த முடிவு எவ்வளவு தீர்க்கதரிசனம் பொருந்தியது.

நிமிர்ந்து பார்த்தான் முஸம்மில். திண்ணைத் தூணில் சாய்ந்தவளாக, கவலையே உருக்கொண்டு நின்ருள் மர் லியா. அவன் சிந்தனை மற்ருேர் வழியில் சென்றது.

மர்லியாவை நான் அடைய வேண்டும் என்று உண்மை யாகவே எண்ணி இருக்கவில்லை. அவள் படித்தவள். எப் படியோ ஒரு உத்தியோகஸ்தனை விவாகம் செய்து கொண்டு வாழட்டும் என்று தான் நினைத்திருந்தேன். மாமாதான் இந்த ஆசையை எனக்கு ஏற்படுத்தி விட்டார். என் நண்பர் கள் அதற்குத் தூபம் போட்டு வளர்த்தனர். அவர்கள் எனக்கு ஒருவித ஆக்ரோசத்தை ஏற்படுத்தினர். அதற்கு

மற்றொரு காரணம் றஹீம் மர்லியாவைக் கல்யாணம் செய்ய நினைத்ததுதான். அவன் புதிதாக காற்சட்டை போட்டவன். ஒரு பிச்சைக்காரன் மகன். என் மாமாட அந்தஸ்துக்கு அவன் ஏற்ற மாப்பிள்ளையில்லை. உத்தியோகஸ்தனாக இருந்தால் மட்டும் போதுமா? குடும்பக் கௌரவம் வேண்டாமா? இவன் என் மாமாட மகளை மனைவியாக்கிக் கொள்ள, நான் அதை எப்படி ஏற்றுக் கொள்வது? என் மாமாவின் கௌரவத்தைக் காப்பாற்ற எனக்கு உரிமையானவளை நான் பெற்றுக் கொள்ள, ஒரு போராட்டமே நடாத்தினேன். அதுதான் எங்களிடையே நடைபெற்ற காணித் தகராறு. அதிலும் அவனே வென்று விட்டான். இப்பொழுது பெண் எடுப்பதிலும் அவனே முந்திக் கொண்டான்.

மர்லியாவும் நானும் சின்ன வயதில் ஒன்ருக விளையாடி இருக்கிறோம். அப்பொழுது பேசியும் இருக்கிறோம். அதன் பிறகு அவளோடு பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அவள் என்னை விரும்பினுளா? என்பதும் எனக்குத் தெரியாது. மாமன் மகள் ஒருத்தியிடம் விருப்பமா? வெறுப்பா என்று குழல் வைத்துப் பார்க்கத் தேவை இல்லை. உரிமையானவள் இரத்த உறவுள்ளவள் அது ஒன்றே போதும் என்றெண்ணினேன்,

இன்று நிலைமை வேருகிவிட்டது. பிரச்சனையைக் கிளப்பினுல் பானுவுக்கு மாமா மனம் உவந்து தந்த மாப்பிளையும் சிக்கலாகிவிடும்! திருமணங்கள் சுவர்க்கத்திலேதான் நிச்சயிக்கப் படுகின்றன என்று யாரோ ஒரு நண்பன் எனக்கு விளங்கப் படுத்தினுன். அது அவ்வாறேயாகட்டும்.

மீண்டும் ஓர் முறை மர்லியாவைப் பார்த்தான் முஸம்மில். அவள் மிக்க பரிவோடு அவனைப் பார்த்தாள். தன் மீது இரக்கம் கொண்டவள் போல அவள் பார்வை இருந்தது. வேடன் வசப்பட்ட மானின் பார்வை அது. கதை முடிந்த பிறகு அதன் பொருளறிந்து என்ன செய்ய? முஸம்மில் தன் உம்மாவோடு காரை நோக்கி நடந்தான்.

வியாழக்கிழமை பின்னேரம் ஆறு மணிக்கெல்லாம் ஹாஜியார் வீட்டிலும் ஸாஹிரு உம்மா வீட்டிலும் சிறிய தொரு ஆரவாரம் கேட்டது. இந்த இரண்டு கலியாணத்தின் பேராலும் 'நிகாஹ்' வைபவம் ஒன்று மட்டுமே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஹாஜியார் வருத்தமுற்றிருப்பதால் இரண்டு வீட்டிலும் எந்த விதமான ஆர்ப்பாட்டத்திற்கும் இடம் வைக்கவில்லை. எனினும் உற்ருர் உறவினர் கேட்பார்களா? ஆறு மணிக்குப் பிறகு அவர்கள் வருவதும் போவதுமான ஆரவாரம் கேட்டுக் கொண்டிருந்தது.

வைத்தியர் மட்டும் மூன்று மணி நேரத்திற் கொரு முறை ஹாஜியாரை வந்து பார்த்து மருந்து கொடுத்து விட்டுப் போனுர். ஹாஜரு உம்மா புருஷனை ஒருக்கா வந்து பார்ப்பது, நிகாஹ் வைபவத்திற்கான ஒழுங்குகளை ஒருக்காக் கவனிப்பது; இப்படி ஒட்டமும் நடையுமாகத் திரிந்தாள்.

ஜெமீல் கூறைப் பெட்டியில் அப்பொழுதுதான் சாமான்களை வைத்துக்கொண்டிருந்தான். பானுவுக்கு 'மெச்' பண்ணக் கூடியதாக என்ன கலரில் என்ன பிடவை எடுத்தது என்பதே அவனுக்கு நினைவில்லை. ஏதோ கூட வந்த நண்பன் ஒருவனின் ரசனைப்படி கூறை தாலி எல்லாம் எடுத்தான். அவ்வளவுதான்!

மர்லியாவுக்குத் தேவையான மணப் பெண்ணுக்கான உடைகளை அவளுடைய தோழி நாதிருவே எடுத்தாள். அன்று முழுவதும் அவளுடன் இருந்து உணவு உண்ண வைப்பது. உடை மாற்றிக் கொள்ளச் செய்வது ஒருமணப் பெண் என்ருல் ஒரு குறைந்த பட்ச அலங்காரமாவது தேவை இல்லையா? அதனைக் கவனிப்பது எல்லாவற்றை

யும் நாதிருவே கவனித்து வந்தாள் ஹாஜரு உம்மா வுக்கு இது பெரும் ஆறுதல் அளித்தது. 'உனக்கும் ஆண்ட வன் நல்ல மாப்பிள்ளை ஒண்டைத் தருவானும்மா! என்ர புள்ளக்கிற்ற இருந்து எல்லாத்தையும் பாத்துக்கம்மா' என்று ஹாஜரு உம்மா நாதிருவிடம் கூறினுள்.

வாசல் கேற்றில் ஒருகார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ருஹிலா, ஜெமீலிடம் ஓடிவந்து 'காக்கா! காக்கா! யாரோ ஒங்களத்தேடி வந்திருக்காங்க...' என்ருள்.

யாராகஇருக்கலாம்? கலியாணத்திற்கு யாரும் வந் திருக்க மாட்டாங்க. சிலவேளை தெரியாத்தனமாக யாரும் கொழும்பிலிருந்து தேடிவந்திற்ருங்களோ... என்று எண் ணியவனுக எழுந்து வாசல் முன்புறமாக வந்தான் ஜெமீல்.

றஸீனுவும் அவள் வாப்பாவும் வந்து கொண்டிருந் தார்கள். என்ன செய்வதென்றே விளங்க வில்லை ஜெமீ லுக்கு. 'வாங்க! வாங்க' என்று வரவேற்ருன்.

'தம்பி! நான் வாப்பாவைப் பார்க்க வந்தன், றஸீனு உம்மா, ஓங்கு ராத்தாவையும் நீங்க பண்ற பொண்ணயும் பாக்க வந்தா... நாங்க கலியாணத்துக்கென்று வரவில்லே' என்று ஜெமீலின் மனநிலையை அறிந்தவர் போல கூறினுர் றஸீனுவின் தந்தை.

றஸீனு மர்லியாவோடு வெகுநேரமாகக் கதைத்திருந்து விட்டு, ஜெமீலின் கூறை தாலியைப் பார்க்க அவனது அறைக்கு வந்தாள் பெட்டியைத் திறந்து ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்தாள். தாலிக்காக வாங்கிய சவடியை எடுத்து தன் கழுத்தில் பிடித்தவளாக பக்கத்தில் இருந்த கண்ணுடியில் அழகு பார்த்தபடி' சவடி ரொம்ப அழகாயி ரிக்கி. நல்லடிசைன்...' என்ருள்.

அவளேயே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த ஜெமீல், உணர்ச்சி வயப்பட்டவனுக 'றஸீனு நீங்க வரவே கூடாது

என்று தானே சொல்லி இருந்தேன். அதைக் கேட்காமல் ஏன் வந்தீங்க' என்று அன்போடு கடிந்தான்.

'நான் வராமலிருந்தால் உங்களுக்குத் திருப்தி. வந்தால் தான் எனக்குத் திருப்தி. இதில் யாரை நான் கவனிப்பது?'

'என்னைத்தான் நீங்கள் கவனித்திருக்க வேண்டும்! நான் தான் நொந்து போயிருக்கிறேன்.'

'நான் வந்து உங்களையும் பார்த்து உங்கள் பெண்ணையும் மணவறையிலேயே வைத்துப் பார்க்கா விட்டால் நான் உங்களைவிட நொந்து போவேன். என்னை நானே தேற்றிக் கொள்ளத்தான் இங்கே வந்தேன்.'

'யாருக்கு யார் தேறுதல் கூறுவது? நிகழ்ச்சிகளெல்லாம் நம்மை மீறியல்லவா நடைபெறுகின்றன?'

'நிகழ்ச்சிகள் நம்மை மீறினால், அதனைத் தொடர்ந்து நாம் செல்வதுதானே. இதில் என்ன தப்பு. 'வல்லான் விதியே ஆடுமகன் வலியில் கருவி மனிதர்களாம்...'

'ஆம்! வலியில் கருவி மனிதர்களாம்...'

'சரி! நான் இப்பொழுது உங்கள் பெண்வீட்டுக்குப் போகவேண்டும். அவவையும் பார்த்து என் ஆசீர்வாதத்தைக் கூறவேண்டும்' என்று எழுந்தாள் றஸீனா.

ஜெமீல் ஒன்றும் பேசவில்லை. றஸீனாவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

றஸீனாவைக் கண்ட பானு தன்னை நெருப்பில் தூக்கி எறியப்பட்டது போல தவித்தாள். அந்த ஜரிகைக்கரைப் பிடவையை உடுத்திக் கொண்டு மச்சானோடு துள்ளித்துள்ளிக் கதைத்தவளல்லவா இவள்? இங்கே எங்கே வந்தாள்? என்று அதிசயித்தாள். அவளுக்கு முகமெல்லாம் வேர்த்துக்கொட்டியது.

ஒரு மணப்பெண்ணுக்குரிய நவீன மோஸ்தர் அலங்கார மெதுவுமின்றி சாதாரணமாக சிங்கப்பூர் நைலக்ஸ் பிடவை யொன்றை உடுத்தி அதற்கேற்ற சோழியும் போட்டிருந்தாள் பானு. அவளுடைய கள்ளமில்லா உள்ளம். மிரண்டு மிரண்டு பார்க்கும் பார்வை, இவைதான் அவளுக்கு அழகை அளித்தது.

ஒரு மணப் பெண்ணைக் கொலுப் பொம்மையைப்போல அலங்கரித்து, அவளை ஆடாமல் அசையாமல் மணவறையில் வைத்துப்பார்ப்பதைவிட இந்த இயற்கையான தோற்றத்தோடு கூடிய அலங்காரம் றஸீனுவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

'உங்களை அன்று பாவாடை சட்டையோடு பார்த்ததற்கு, இன்று சாரி உடுத்திப்பார்ப்பது எவ்வளவு அழகாயிருக்கு... அன்று ஒரு குழந்தைப்பிள்ளை போல இருந்தீர்கள். இன்று வளர்ந்து விட்ட ஒரு பருவப் பெண்ணாக மாறி விட்டீர்கள்!...' என்றாள் றஸீனு.

இந்தப் புகழை பானுவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எழுந்து கண்ணாடியின் முன்பு நின்று தன் அழகை ஒருமுறை மீண்டும் பார்த்துக் கொண்டு றஸீனுவைப் பார்த்துச் சிரித்தாள். அச்சிரிப்பில் அவள் அழகு இன்னும் குழைந்தது!

'வஞ்சகத்துக்குச் சொல்லல்ல... நிஜமாகத்தான்! இந்த சாதாரண அலங்காரமே உங்களுக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது' என்று அதிசயித்தாள் றஸீனு.

ஸாஹிறு உம்மா ஒரு ட்றேயில் இரண்டு தேநீர், கேக், பழம் எல்லாம் கொண்டு வந்து, 'பானு அசறுடைய நேரம் குடித்த தேயிலைக்கு இன்னும் ஒண்டுமே குடிக்கவுமில்ல, தின்னவுமில்லம்மா, இரண்டுபேரும் சாப்பிடுங்க ..' என்று கூறி அவர்களுக்கு மத்தியில் ட்றேயை வைத்து விட்டுப்

போனுள். இது றஸீனுவுக்கு அளித்த மிகப் பெரிய கௌரவம். இதை எண்ணி அவள் பெருமைப்பட்டாள்.

ஸாஹிருவுக்கும், பானுவுக்கும் அன்று றஸீனுவோடிருந்த கோபம் முற்றும் மாறிப்போயிற்று. தங்கள் வீட்டுக்கே வந்து உள் வீட்டுப் பிள்ளைபோல எவ்வளவு சாதாரணமாகப் பழகுகிறுள் என்பதை நேரில் கண்டபோது அவர்களுடைய வெள்ளை உள்ளங்களில் கரவு இருக்கவில்லை.

காவின் எழுத எல்லோரும் மாம்பிள்ளை வீட்டுக்குப் போய் விட்டனர். சிறிது நேரத்தில் மாப்பிள்ளை வந்து விடுவார். ஆதலால் பெண் குளித்து உடை மாற்ற வேண்டியிருந்தது. இதற்கெல்லாம் அங்கு பொருத்தமான ஆட்கள் யாரும் இருந்ததாகத் தெரிய வில்லை. ஸாஹிரு உம்மா றஸீனுவைப் பார்த்து சொல்லிக் கொள்ளமுடியாமல் விக்கினுள். இதை விளங்கிக் கொண்ட றஸீனு பானுவை அழைத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போய்விட்டாள்.

அரை மணி நேரத்தில் பெண் உடையும் மாற்றிக் கொண்டு மீண்டும் மணவறையில் உட்கார்ந்து விட்டாள். தேசிப்பழ நிறத்தில் அழகான காஞ்சிபுரப் பட்டுப் பிடவை ஒன்றை உடுத்தி பானு வீற்றிருந்த காட்சியை றஸீனு மனதார ரசித்தாள்.

'பானு! ரொம்ப அழகா இருக்கிறீங்க! உங்க மச்சான் அதிர்ஷ்டம் செஞ்சவர். நீங்ககூட அதிர்ஷ்டக்காரிதான்...'

'நீங்க அந்த அதிர்ஷ்டத்த இழந்து விட்டீங்களா?'— பானு இப்படிக் கேட்டது றஸீனுவுக்கு என்னவோ போலிருந்தது.

'நோ! நோ! பானு அப்படி யெல்லாம் தப்பார்த்தம் செஞ்சிக்காதங்கோ, மச்சான் உங்களுக்குக்குத்தான் உரிமையானவர். இந்தப் பிறப்புரிமையில் தலையிட எனக்கு

எந்தப் பாத்தியதையும் கிடையாது... அப்படி நான் நினைத்ததுமில்ல...'

பானு சிரித்தாள். 'கோவிச்சுக்காதங்கோ! நான் சும்மா சொன்னேன்...'

'உங்கள பற்றி மச்சான் நிறையச்சொல்லி இருக்கார். எந்தப்பாவமும் அறியாத புள்ளயாம்... குழந்தை சுபாவ மாம்... அது உண்மையிலும் உண்மை... என்று கூறிய வாறு, பானுவின் நெற்றியில் இரண்டு முத்தங்களைக் கொடுத்து விட்டு சரி... இது அச்சவாரம். இனி இந்த வேலையை உங்கள் மச்சான் செய்வார்' என்றாள் றஸீனா சிரித்துக்கொண்டு. பானு நாணத்தால் குனிந்தாள். அவள் முகம் சிவந்தது.

மர்லியாவின் மாப்பிள்ளை வந்து தாலி கட்டியதன் பின் ஜெமீல் புறப்பட்டுப் பெண் வீட்டுக்கு வர மணி பத்து முப்பதாயிற்று.

பைத்துச் சொல்லி மாப்பிள்ளை ஊர்வலமாக வராமல், காரிலேயே வந்திறங்கினார். குரவை, வெடி, பைத் ஒன்று மில்லாமல் மாப்பிள்ளை திடுதிப்பென்று வந்திறங்கியது பெண் வீட்டாருக்கு பெரும் மனக் குறையாகப் போயிற்று. 'சவ்வாசி' யாவது சொல்ல வேண்டும் என்று முதியவர் ஒருவர் அடம் பிடித்தார்.

வீட்டின் முன் கதிரை ஒன்றில் மாப்பிள்ளை இருந்தார். முதியவர் மணமக்களை வாழ்த்திப் பாட, சுற்றி நின்றவர் கள்' 'சவ்வாசி' கூறினர்.

இந்த மணமகனும் — சவ்வாசி
இனிய பெண்மானும் — சவ்வாசி
நந்தா விளக்குப்போல் — சவ்வாசி
நாள்தோறும் வாழ்ந்திடுக — சவ்வாசி

சவ்வாசி கூறி முடிந்ததும், மணமகனை பெண் இருக்கும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர். அங்கே அவர், இரண்டு 'றகஅத்' இஸ்திஹாரா தொழுதார். பின்னர் தாலியைக் கையில் எடுத்துக் கொண்டு பெண்ணிடம் போனார். பெண் குனிந்ததலை நிமிராமல் பூமியையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய வலப்பக்கத்தில் றஸீனாவும் தலை குனிந்தவாறு நின்றாள்.

சாதாரணமாக எந்தவொரு மாப்பிள்ளைக்கும் கை நடுங்கும் நேரம் அது. ஜெமிலுக்கு உள்ளமும் சேர்ந்து நடுங்கி உதறல் எடுத்தது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு 'சவடி' யைப் பெண்ணின் கழுத்தில் கட்டத் தொடங்கினான். பின்பக்கத்துக் 'கொக்கிள்' சரியாகப் பூட்டப்படவில்லை. றஸீனாவே அதனை வாங்கி கொக்கிளைப் பூட்டி, பெண்ணின் முக்காட்டையும் சரி செய்தாள்.

கபீர் லெவ்வை ஆலிம் நீண்ட பிரார்த்தனை — து ஆ — ஒன்றை ஓதி முடித்து 'அல்லா வெச்ச குடியா, நல்லா இருங்க மக்காள்' என்று தமிழிலும் வாழ்த்திவிட்டு அறையை விட்டு வெளியேறினார். அவரைத் தொடர்ந்து அங்கு நின்ற பெண்களும் வெளியேறினர்.

*

இரண்டு விவாகங்களும் ஒருவாறு முடிந்துவிட்டன. நோயுற்றுக்கிடந்த ஹாஜியாரும் தன் கடமையை முடித்து விட்டதில் திருப்தி கொண்டார்.

புதிய மருமகன் றஹீம், மாமனாரின் வருத்தத்தை எப்படியும் சுகமாக்கி விட வேண்டுமென்று துடித்து நின்றான். கொழும்பில் ஒரு 'ஹாமுதுரு' இருப்பதாகவும் அவர் பாரிசவாத நோயைக் கைகண்ட விதமாக சுகமாக்குவதாகவும் ஒரு செய்தி றஹீமுக்கு கிடைத்தது. மாமனாரை அந்த ஹாமுதுருவிடம் கொண்டுபோக அவன் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கையில் கதை வேறு விதமாக முடிந்துவிட்டது.

விவாகம் நடைபெற்று மூன்ரும் நாள் இஸ்மாயில் ஹாஜியார் மவுத்தாகி விட்டார்.

இந்த மரணம் எதிர்பார்த்திருந்த தென்ருலும், ஒருவரை இழப்பதென்பது தாங்கமுடியாத கவலேயும் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கும் உண்மையும் தானே!

மணவீடு பிணவீடாக மாறி, எல்லோரும் சோக சாகரத்தில் மூழ்கி நின்றனர். ஹாஜியாரின் மவுத்துக்கு ஊரே திரண்டு வந்து அனுதாபம் தெரிவித்தது. ஒரு ஆலமரம் வேரறுந்து கீழே விழுந்து கிடந்தது.

## ( 24 )

காலே பத்துமணி இருக்கும். இலங்கை வானெலி சுவையான காதல் பாடல்கள் சிலவற்றை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. ஆணும், பெண்ணும் மாறி மாறிப் படிக்கும் அப்பாடல்களிற் மனம் லயித்தவனுக, முன் மண்டபத்தில் கையில் தினசரியுடன் இருந்தான் றஹீம். இடை இடையே அவன் கண்கள் தினசரியையும் பார்த்துக்கொண்டிருந்தன.

மர்லியா இடைவேளை டையுடன் மண்டபத்திற்கு வந்தவள் தன் கணவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடி நின்ருள். அப்பொழுதுதான் குளித்துவிட்டு ஈரம் தோய்ந்த கூந்தலில் சீலேத்துண்டொன்றைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு இந்தியன்வொயிலொன்றை அனுயாசமாக உடுத்தியபடி நின்ருள். குளித்ததனுல் ஏற்பட்ட தண்ணீர்த்துளிகள் அவள் முகத்தில் சொட்டுச்சொட்டாக தேங்கி, அது முத்து முத்தாகக் காட்சி தந்தது. எந்தவித அலங்காரமுமின்றி புன்முறுவல் பூத்த அவளது முகத்தில் நீர்த்துளிகள் ஆங்காங்கே தேங்கி நின்ற அழகை றஹீம் ஆழ்ந்து அனுபவித்துத்தானும் ஒரு புன் முறுவல் பூத்தான்.

'என்ன அப்படிப் பாக்கிறீங்க? இந்தப் பத்துநாளாக என்முகத்தை இன்னம் சரியாகக் காணவில்லையா! என்ருள் மர்லியா நாணத்துடன்.

இல்லை; இந்தப் பத்து நாளாகத் காணுத ஒரு அழகை நீங்கள் குளித்துவிட்டு நிற்கும் இக்கோலத்தில் காண்கிறேன். நீங்கள் புன்முறுவல் பூத்தபோது நீர்த்துளிகள் தேங்கி நின்ற உங்கள் முகம் பனிமலராகக் காட்சி தருகிறது மர்லியா...

மர்லியாவின் கையிலிருந்த தேநீரை வாங்கி அதனைச் சுவைத்துச் சுவைத்துக் குடிக்கத் தொடங்கிய றஹீம் தனக்கு அழகிய மனைவி ஒருத்தி கிடைத்தது பற்றி உள் மனதில் பெருமை கொண்டவனுக, அவளுடைய அங்க அசைவுகளின் அழகுகளை ஒவ்வொன்ருகப் பார்த்து இரசித்தான்.

தந்தை மவுத்தாகி ஏழு நாட்களாகி விட்டன. மர்லியா இன்றுதான் ஒருவாறு அக் கவலையை மறந்து சிரித்தாள். அவளது முகம் அச் சம்பவத்தை மெள்ள மெள்ள மறந்து முன்னைய தேஜஸை மீண்டும் பெற்று வருவதை றஹீம் அவதானித்தான்.

தேநீரைக் கணவனிடம் கொடுத்த மர்லியா நீண்ட தொரு பெருமூச்சை விட்டவளாக முன்னுல் கிடந்த சோபாவில் அமர்ந்தாள். அவள் முகம் அனல் பட்ட மலர் போல மீண்டும் வாட்ட முற்றது.

'இப்பொழுதுதானே உங்கள் முகம், பனிமலர் என்றேன். அதற்கிடையில் நீங்கள் பழைய சம்பவங்களை நினைத்து விட்டீர்கள்' அல்லவா? என்ருன் றஹீம்.

இல்லை, இல்லை என்று கூறித் தன்னைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் சிரித்த மர்லியா, நாம் எப்படித்தான் நமக்கு நியாயம் கூறி மனத்தைச் சமாதானப் படுத்தினு

லும் புண் பட்ட உள்ளம் அதன் நோவை மறக்க முடியா மல்தான் இருக்கிறது...

'எல்லா நோவுக்கும் காலம் தான் மருந்து. காலம் எல்லாப் புண்ணையும் ஆற்றி விடும். கவலைகளுக்காக வருந் துவதென்றால், இந்த உலகம் முழுமையும் எப்பொழுதுமே அழுது புலம்பிக் கொண்டல்லவா இருக்கும்.

ஆமாம்; அப்படி அழுதால் மனிதனுக்குச் சிரிக்கவே நேரம் இல்லாமற் போகும். உலகம் முழுவதும் சாக்காடாகி விடுமல்லவா?

அதற்காகத்தான் ஓர் அறிஞன்!' துன்பம் வரும்போது சிரி' என்றான். துன்பத்தைப் புறக்கணித்துவிடு என்பது மட் டும் இதன் கருத்தல்ல. துன்பங்களுக்காக அழுவதென்றால் சிரிப்பதற்கே அவனுக்கு நேரம் இல்லாமல் போய்விடும். ஆதலால் தான் துன்பம் வரும்போது சிரி' என்றான். என்று விளக்கினான் றஹீம்.

மர்லியா சொன்னாள் நான் எங்கோ படித்த நினைவு. போர்க்களத்துக்குப் போன காதலன் நீண்ட காலமாக அங்கேயே நின்று விட்டான். போர் மும்முரமாக இருந்த தால் இராணுவத்தினர் அவனுக்கு லீவு அனுமதிக்கவில்லை. அவனைத்தேடி போர்க்களத்துக்கே வந்த காதலி 'இப் பொழுதே நம் விவாகம் நடைபெற வேண்டும்'. என்னை உன் மனைவியாக்கிவிடு. நான் போகிறேன். நீ எப்பொழுதா வது வந்து சேர்' என்று பிடிவாதம் செய்தாளாம். போர்க்களத்திலேயே இருவருக்கும் விவாகம் நடந்தேறி யது. மறுநாள் யுத்தத்திற்குப் போன கணவன் வரவில்லை. அவனுடைய சடலம்தான் வந்தது. இது தாங்க முடியாத துயரம்தான். ஆனால் அவனுடைய மனைவியோ 'நான் மிஸிஸ் றொபர்ட், என்பெயர் மிஸிஸ் றொபர்ட் என்று குதூ கலித்துக் கொண்டு சடலத்தைப் பார்த்துச் சிரித்தாளாம்,

இது ஒரு வெறி! தான் அவனுடைய மனைவியாக வேண்டும் என்ற நிறைவை அவள் பெற்று விட்டாள். அந்தத் திருப்தி வெறியாக மாறி விட்டது. அப்புறம் துன்பம் வந்த போதும் சிரிக்கிறாள். இதுபோல இலட்சியங்கள் நிறைவேறி விட்டால் துன்பம் வரும்போது நாமும் சிரிக்கலாம் . உங்கள் இலட்சியங்கள் ஏதாவது...

மர்லியா ஒரு சிரிப்பை வலிந்து வரவழைத்துக்கொண்டவளாக... தவருக எதையும் நினைத்து விடாதீர்கள். தப்பார்த்தங்களும், சந்தேகங்களும் எத்தனையோ பேருடைய வாழ்க்கையைப் பாலைவனமாக்கிவிட்டது. ஒருமுறை வாழ்வு பாலைவனமாகிவிட்டால் பிறகு அது பசுமை பெறவே முடியாது.

நான் அப்படியொன்றும் நினைக்கவில்லை மர்லியா... நீங்கள் உங்கள் வாப்பாவின் மவுத்தால் மிகவும் மனம் தளர்ந்து போனீர்கள்.

ஆம்! என் வாப்பா எனக்கு ஆடம்பரமாக விவாகம் செய்து பார்க்க எண்ணி இருந்தார். எனக்கு வரவேண்டிய கணவர் ஒருவரைப்பற்றி நானே எண்ணி இராத கற்பனைகளையெல்லாம் அவர் உருவகித்துக் கொண்டிருந்தார். கடைசியில் அவர் மரணப்படுக்கையில் கிடக்கும்போது நீங்கள் என் கழுத்தில் தாலி கட்டினீர்கள். நாம் தேன்மதி அனுபவிக்க வேண்டிய நேரத்தில், அவர் நம்மை ஆழாத் துயரத்தில் மூழ்கச் செய்து விட்டுப் போய் விட்டார். வாழ்க்கையின் கோலங்களை எண்ணிப் பார்க்கும்போது மனம் தளர்ந்து விடுகிறது. நம்பிக்கைகள் இழந்து போகின்றன... அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர்த்துளில் சில சொட்டி அவளுடைய மார்பகத்தில் முத்தாகத் தெறித்து விழுந்து உருண்டு எங்கோ சென்று மறைந்தன.

மர்லியா... கடலில் அலைகள் ஓய்வதில்லை. மனிதனுக்கும் கவலைகள் தீருவதில்லை. எரிமலைகளின் மத்தியில்

வண்ணப் பூக்கள் மலராது. நாம் இனி எல்லாவற்றையும் மறந்து வாழப் பழக வேண்டும்... ஒருவாரம் நுவரேலியா வுக்குப் போய் கழித்து விட்டு வருவோமா?

வாப்பாவுக்கு நாற்பது நாள் கழியட்டும். சில நாட்கள் கூமுனேக்கே போய், இன்பமும் துன்பமும் தெரியாமல் காட்டில் உல்லாசமாகத்திரியும் மிருகங்களேயும், பறவைகளே யும் மீண்டுமோர் முறை பார்த்துவிட்டு வந்தால் மனம் நிம்மதி பெறும்போல் — தெரிகிறது...

நாம் முதன் முதலில் சந்தித்துப் பேசிய இடம் கூமுனே தானே மர்லியா... நம் சந்திப்புக்கு அந்தக் கூமுனே ஆறு தான் சாட்சி! அடியில் கிடக்கும் செம்பரல் மணலேக்கூட வெளிக்காட்டிக் கொண்டு களங்கமில்லாமல் வளேந்து வளேந்தோடும் அவ்வாறு இப்பொழுது நம்மைப் பார்த்துப் பூரிப்படையுமே! என்ருலும் மர்லியா... மேலும் மேலும் விரக்தியுணர்வையே பிரதிபலித்து நிற்கும் உங்கள் பொழுது போக்கை நான் விரும்பவில்லே. முற்றும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் நமக்குத் தேவை.

சித்தார்த்தர் மகிழ்ச்சியையும் மன நிம்மதியையும் விரும்பித்தான் ஊர் உலாச் சென்ருர். அவர் செல்லும் வழியில் வயோதிபர் நோயாளர். யாரும் நிற்கக் கூடாது. இளம் வயதினர்தான் புத்தாடை புனேந்து நின்று இளவரசரை மங்கள கீதம் இசைத்து வரவேற்க வேண்டும் என்று அரசன் கட்டளே பிறப்பித்திருந்தான். அவ்வாறு எல்லாம் நடந்தது. ஆனுல் இளவரசர் திரும்பிவரும்போது மற்ருேர் பாதையால் வந்தார். அப்பொழுது மூன்று காட்சிகளேக் கண்டார். அதன் விளேவு... அவர் துறவியாகவே மாறிவிட்டார். அவ்வாறு நடந்துவிட்டால்... மர்லியா தன்னே அடக்கிக்கொள்ள முடியாமல் சிரித்தாள்.

றஹீமுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லே. ‘மர்லியா! நீங்கள் உங்கள் மன நிலேயை மாற்றிக் கொள்ளத்

தான் வேண்டும். நான் அதை மாற்றி விடுகிறேன். ஒரு மனை விக்கு மகிழ்ச்சி அளிப்பது ஒரு கணவனின் கடமை...

அப்பொழுது தபாற் சேவகன் கடிதங்கள் சிலவற்றைக் கொண்டு வந்து நீட்டினான். அவற்றுள் அனேகம் உத்தி யோக பூர்வமான கடிதங்கள். தூய வெண்மை நிற என் வலப்பில் ஒரு அழைப்பிதழ் தெரிந்தது. அதன்மீது, திரு மான் — திருவாட்டி ஏ. ஏ. றஹீம் — என்று முகவரி இடப் பட்டிருந்தது. மர்லியா! நம்மிருவரும் பேரும் இட்டு முதன் முதலாக ஒரு அழைப்பிதழ் வந்திருக்கிறது... திருமண அழைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு கடிதத்தை அவசர அவசரமாகத் திறந்தான் றஹீம்.

'மாயா' சிறுவர் அனாதை இல்லத் திறப்பு விழா... இவ்வண், உங்கள் வரவை அன்போடு எதிர்பார்த்திருக் கும் திருமான், திருமதி, எம். ஷாபிதீன்......... அத்தோடு றஹீமுக்கும் விசேஷமாக எழுதப்பட்ட கடித மொன்றும் இருந்தது. அதில் உங்கள் இருவர் வரவையும் விசேடமாக எதிர்பார்த்திருக்கிறோம். என்றிருந்தது. இருவரும் ஒரே நேரத்தில் அழைப்பிதழையும் கடிதத்தையும் வாசித்து முடித்தனர்.

மர்லியா... மறந்து விட்டேன். நேற்று ஜெமீல் இது பற்றிச் சொன்னார். ஷாபிதீனும் மனைவியும் சேர்ந்து ஒரு அனாதை இல்லத்தைத் திறக்கிறார்களாம். தங்களுடைய வரு மானத்திலேயே அதை நடாத்தப் போகிறார்களாம். ஒரு நல்ல காரியம் பாருங்கள். படித்தவர்களும் பணக்காரர்க ளும் சேர்ந்து இவ்வாறான பயனுள்ள பணிகளில் ஈடுபட் டால் இதைவிட நாம் ஒரு சமூகத்திற்குச் செய்யும் தொண்டு வேறென்ன?

'உங்கள் கணவரை இதைவிட உயர்ந்த இலட்சியங்க ளில் ஈடுபடச் செய்யுங்கள். ஓர் அறிஞரான அவர் ஓர் இலட்சியத்தின்பால் தன்னை ஈடுபடுத்தி சமுதாயத்திற்கு

ஆக்க பூர்வமான பணியாற்றினுறென்றால் அவரது பெருமை இவ்வுலகம் மெச்சுதற்குரியதாகும்...

பரீதாவுக்கு எழுதிய அக்கடிதத்திலுள்ள இவ்வரிகள், மர்லியாவுக்கு முன் ஊழிக்காலத்துச் சூறைக் காற்ருகச் சுழன்று சுழன்று வீசியது அக்காற்றின் முன் தாக்குப்பிடிக் கமுடியாமல் அவளும் ஆடிக்கொண்டிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது.

'என்ன மர்லியா! எதையாவது நினைத்துக் கொண்டீர்களா! என்று றஹீம் அவளைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தான்.

அவள் மீண்டும் ஓர் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு 'இதுவும் ஒரு விரக்தியின் முடிவுதான், என்ருள்.

'விரக்தியா? ஒருவர் பொதுத்தொண்டில் ஈடுபட்டால், அல்லது பக்தி மார்க்கத்தில் அக்கறை கொண்டால் இதெல்லாம் விரக்தியாகி விடுமா?

ஷாபிதீனுக்கும் குழந்தை இல்லை. அவர் மனைவிக்குக் குழந்தைகளே பிறக்காது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். இந்தக் குறையைத் தீர்த்துக் கொள்ள 'அனுதை இல்லம்' திறந்திருக்கிருர்கள். பாதியை மறைத்துக்கொண்டு மறுபாதியைக் கூறினுள் மர்லியா.

எதுவாக இருந்தாலும், நமக்கு முதன் முதல் வந்த அழைப்பிதழ் இது. அதுவும் ஒரு புனிதமான காரியம். இதற்கு நாமிருவரும் கட்டாயம் போக வேண்டும். நம் முதல் பிரயாணம் என்றும் ஞாபகத்திலிருக்க இது நல்ல சந்தர்ப்பம். அல்லவா?

'அப்போ! நம் தேன்மதிப் பயணம்,? நெஞ்சக்குமுறலை வலிந்து அடக்கிக் கொண்டு சிரித்தபடி கேட்டாள் மர்லியா'

'நுவரெலியா ஹக்கல பூங்காவிலும், கண்டி — பேராதனைப் பூங்காவிலும் நம் தேன்மதி கழியும்... வாப்பாவின் நாற்பதாம் கத்தம் முடிந்தபிறகு... நீங்கள் விவசாயப் போதனுசிரியர் அல்லவா? செடி கொடிகளோடு தேன்மதி கழிக்க பார்க்கிறீர்கள்!'

'அப்போ, நீங்கள் ஒரு ஆசிரியையாக இருப்பதால் குழந்தை குட்டிகளோடு தேன்மதி கழிக்கப்பார்க்கிறீர்களா? அதற்குக் காலம் ரொம்பத்தாமதமாகும் மர்லியா.'

'மர்லியாவின் முகம் நாணிச் சிவந்தது. தலையைக்குனிந்தவளாக, எனக்குத்தான் இப்போதே ஆயிரம் குழந்தைகள் இருக்கிறுர்களே! இவர்களைவிட இன்னும் குழந்தை குட்டிகள் தேவையா?'

'சரிதான் போங்க! அங்கே ஷாபிதீனும் பரீதாவும், அனுதை விடுதி நடாத்துகிறுர்கள். இங்கே நீங்கள் பள்ளிக்கூடம் நடாத்துகிறீர்கள். கர்ப்பத்தடை செய்து கொள்ளுங்கள் என்று அரசாங்கம் அவஸ்தைப்படும் இக்காலத்தில் இவை அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான முயற்சிகள்தான்! உங்களுக்கு இதனுல் ஒரு பாராட்டும் கிடைக்கலாம். ஆனுல் நான் நெல்லைப் பெருக்குகின்றவகையில்—உற்பத்தி அதிகரிப்புக்காக உழைப்பவனுயிற்றே! இந்நிலையில் கட்டுப்பாட்டுக்கு நான் எப்படி ஒத்துழைக்க முடியும்?'

'இந்நாடு உணவுப் பற்றுக்குறையில் தவிக்கிறது. இருப்பவர்களுக்கெல்லாம் உணவு கிடைக்கும் வகையில்தான் உணவு உற்பத்தியைப் பெருக்கும்படி உங்களை நியமித்திருக்கிறுர்கள்.'

'அப்படியானுல் பிள்ளைகுட்டிகளைக் குறைத்து உணவு உற்பத்தியைப் பெருக்கி இந்நாடு புதிய பாதையில் செல்லப் போகிறது?'

'இந்தப் புதிய பாதையைச் செப்பனிட எனக்கு முதலில் ஒரு ஆண்குழந்தை தேவை!'

'அதன் பிறகு எனக்கு ஒரு பெண்குழந்தை தேவை!'

இருவரும் 'கொல்' லென்று சிரித்தனர். அச் சிரிப்பு அடங்க வெகுநேரமாயிற்று.

அன்று காலை 8-30 மணிக்கு சிறுவர் அனுதை இல்லத் திறப்புவிழா இருந்தது. விழாவுக்குப் போவதற்காக றஹீமும் மர்லியாவும் புறப்பட்டனர். அவர்களது கார் நிந்த வூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது,

பிரதான வீதியில் 'மாயா சிறுவர் அனுதை இல்லம்' என்ற பெயர்ப்பலகை கம்பீரமாகக் காட்சி அளித்தது, உள் வழியால் இவர்களது கார் சென்று ஒரு மாமரத்தின் கீழ் நிறுத்தப்பட்டது, இன்னும் பலமுக்கியஸ்தர்களின் கார்களும் அங்கு காணப்பட்டன. றஹீமும் மர்லியாவும் விழாமண்டபத்தை நோக்கி நடந்தனர்.

ஷாபிதீனும் பரீதாவும் கையில் மாலைகளுடன் இவர்களை எதிர்நோக்கி வந்து, ஸாபிதீன் றஹீமுக்கும், பரீதா, மர்லியாவுக்கும் மாலைகளைச் சூடி வரவேற்றனர். 'இதென்ன இது! எங்களுக்கு இதெல்லாம் ஏன்? என்று றஹீம் வியப்புடன் கேட்டான். ஷாபிதீன் அவனைக் கட்டித் தழுவியவாறு நடந்தபடி ''உண்மையில் இன்றைய விழாவுக்கு பிரதம விருந்தினர்கள் நீங்கள் இருவரும்தான். ஆனுல் நிகழ்ச்சி நிரலில். உங்களின் பெயர்கள் அச்சிடப்படவில்லை. அவ்வளவுதான்'' என்று சிரித்துக்கொண்டு சொன்னுன். றஹீமுக்கு இதன் தாற்பரியம் ஒன்றும் விளங்கவில்லை.

பரீதா இவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு போய், இல்லத்தின் வசதிகளையெல்லாம் காட்டி விளக்கினுள். தங்களது வீட்டை மத்தியாகக் கொண்டு அரை ஏக்கர் வளவில் இல்லம் அமைக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள் தங்குவதற்கான விடுதி, படிப்பதற்கான அறைகள், விளையாட்டிடம், அதற்கான வசதிகள், சிறுவர்கள் தாமாகவே குளிப்பதற்கான பைப், நீர்த்தொடட்டிகள் எல்லாம் வெகு பிரமாதமாக அமைந்திருந்தன.

ஐந்து வயதுக்கும் பத்து வயதுக்கும் இடைப்பட்ட பதினைந்து சிறுவர்களும் பத்துச் சிறுமிகளும் கையில் சிலேற், கொப்பி, தஃலிமுல் குர் ஆன், சகிதம் இருவரிசையில் அணிவகுத்து நின்றனர். அவர்களுக்குப் பின்னால் மேற்பார்வையாளரான மத்திய வயதுப் பெண்மணி ஒருத்தி நின்றாள்.

இந்த உலகில் எந்தவிதமான பந்தமும் பாசமும் இல்லாமல் வந்து பிறந்தனர் இச் சிறுவர்கள். இன்று யாருடைய ஆதரவிலோ வாழ எதிர்நோக்கி நிற்கின்றனர். இவர்களது வாழ்வும் உறவும் எவ்வளவு புதுமையானது? பொன்னும் பொருளும் எல்லாமிருந்தும் வாழ்வில் மகிழ்ச்சியைக் காணமுடியாது மனிதர்கள் தவிக்கின்ற இவ்வுலகில் தாமே தமக்குத் துணையாக நின்று இவ்வுலகை அனுபவித்து விட்டுப்போக இச்சிறுவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்கள் காணப்போகும் இன்பம்தான் என்ன? எத்தகைய பரிதாப உலகம்! சிறிது நேரம் இவ்வாறு சிந்தனை வயப்பட்ட மர்லியா பால் வழியும் அவர்களது முகங்களைப் பார்த்தாள். ஏழ்மையின் ரேகைகள் இழையோடிநிற்கும் அம்முகங்கள் அவளது இதயத்தைத் தொட்டு விட்டன. அவளது கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன. முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சரியாக 8-30 மணிக்கு திறப்புவிழா ஆரம்பமாயிற்று. விழாவுக்கென்று வருகை தந்திருந்த காத்தான்குடி அறபுக் கல்லூரி முதல்வர், மௌலானா மௌலவி சேகு இஸ்ஸத்தீன் தங்கள் அவர்கள், பாத்திஹாவை ஓதி, வித்தியாரம்பம் செய்வதற்கான மண்டபத்தில் கட்டப்பட்டிருந்த நீல நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

முதலில் மௌலானா அவர்கள் குர் ஆனைக்கற்றுக் கொள்வதற்கான அறபு அட்சரங்களைச் சிறுவர்களுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொடுத்தார். அது முடிந்ததும், பரீதா, மர்லியாவிடம் வந்து 'தமிழ் அட்சா ஆரம்பத்தை நீங்களே

செய்ய வேண்டும் என்று கேட்டாள். மர்லியா திகைத்துப் போய் நின்ருள். 'இதற்கெல்லாம் நான் தகுதியுடைய வளல்ல. மௌலாஞ அவர்களே அதையும் செய்யட்டும் என்று மறுத்தாள்.

ஷாபிதீன், றஹீமிடம் வந்து நான் முன்சொன்னபடி நிகழ்ச்சி நிரலில் பெயர் குறிப்பிடப்படாத நிகழ்ச்சி இது தான். உங்கள் மனைவியும் ஓர் அதிபர் என்ற முறையில் அவருக்கு இந்த இடம் தகுதியானதுதான் என்று கருதுகிருேம். அவர் இதைச் செய்வதுதான் எங்களுக்கு மகிழ்ச்சி தரும்' என்ருன்.

'மர்லியா! போங்க' என்று றஹீமும் கூறிஞன்.

தலையில் போட்டிருந்த முக்காட்டை நன்கு இழுத்து உடம்பையும் சேர்த்து மூடிக்கொண்டு தமிழ் அட்சர ஆரம்பத்தைத் தொடங்கிஞள் மர்லியா. அவள் ஒரு ஆசிரியை என்பதைவிட, அவள்மீது மிளிர்ந்த தாய்மையின் அன்பு, பார்த்திருந்தோரை மெய்மறக்கச் செய்தது. 'கிளிக், கிளிக்' என்று பத்திரிகைக் காரர்கள் அந்தக் காட்சியைத் தம் கமராவுக்குள் நிலைப்படுத்திச் சிலபடங்களை யும் எடுத்துக் கொண்டனர்.

பொதுக் கூட்டம் தொடங்கிற்று. 'சேகு இஸ்ஸதீன் மௌலாஞ' அஞதைகளை ஆதரித்தல் என்பது பற்றி உருக்கமான சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்திஞர். வந்திருந்த பிரமுகர்கள் இந்த இலட்சியத் தம்பதிகளின் பெருந் தொண்டைப்பாராட்டிப் பேசினர்.

அஞதை இல்லத்துச் சிறுமி ஒருத்தி தன் மழலை மொழிகளால் பேசிஞள்... ஒரு பெருநாள் தினத்தன்று எம்பெருமாஞர் (ஸல்) அவர்கள் பாதை ஒன்றில் போய்க்கொண்டிருந்தார்கள், பாதையில் கந்தல் உடையுடன் ஒரு சிறுமி நின்று கண்கலங்கி அழுது கொண்டிருந்தாள். பெருமாஞர் அக் குழந்தையைத் தம் நெஞ்சோடு அணைத்துக் 'குழந்தாய்! ஏன் அழுகிருய் என்று கேட்டார்கள். அதற்கு

அக்குழந்தை, 'எனக்குத்தாயுமில்லை. தகப்பனும் இல்லை. இந்தப் பெருநாள் தினத்திலே எனக்குப் புது உடுப்புகள் வாங்கித்தர யாருமில்லை, பட்சணங்கள் வாங்கித் தருவாரும் இல்லை என்று சொல்லி அழுதது. இதைக் கேட்ட நாயகமவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்தவர்களாக, குழந்தாய் அழாதீர்கள் நான் எல்லாம் வாங்கித்தருகிறேன் என்று கூறி, வீட்டுக்கு அக்குழந்தையை அழைத்துச் சென்று புது ஆடைகள் புனைந்து இனிப்பு வகைகளும் வாங்கிக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்... பெருமானார் அவர்கள் அனாதைக் குழந்தைகள் மீது காட்டிய கருணைதான் என்னே! நீங்களும் எங்கள்மீது கருணை காட்டுங்கள். அல்லாஹ் உங்கள்மீது கருணை பொழிவான்'

குழந்தையின் பேச்சைக் கேட்டு, பெருமானாரின் முன் மாதிரியை உணர்ந்து கூடி இருந்த அனைவரும் உணர்ச்சி வயப்பட்டு நின்றனர். எங்கும் அமைதி நிலவிற்று. ஷாபிதீன் அறிக்கை ஒன்றை வாசித்துப் பேசினான்.

எங்களுக்குச் சொந்தமான அரை ஏக்கர் காணி, வீடு, இருபத்தைந்து ஏக்கர் நெல்வயல் முதலானவற்றை இவ்வில்லத்திற்குரிய நம்பிக்கைச் சொத்தாக எழுதி வைத்து இந்நிலையத்தைத் தொடங்கியுள்ளோம். சிறுவர்களுக்கான உணவு, உடை, கல்வி, வைத்தியம் முதலான செலவினங்களுக்காக நெல்வயலின் வருவாயை உபயோகிக்கிறோம். பெருமனம் படைத்த வள்ளல்கள், எங்களுக்கு நிதி உதவி, பொருளுதவி வழங்கும் பட்சத்தில் சிறுவர் தொகையினை இன்னும் கூட்டிக் கொள்வோம்... ஷாபிதீன் தொடர்ந்து பேசினான்.

...என்மனைவி ...பரீதா இந்தப் புனித பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இலட்சிய வாழ்வொன்றை மேற்கொண்டிருப்பது பற்றியும் நான் குறிப்பிட வேண்டும். இந்த இல்லத்தின் முழு நிர்வாகமும் அவவின் பொறுப்பி

லேயே இருக்கிறது. துணிவும், தியாகமும், கருணையும் நிறைந்த ஒரு இலட்சியப் பெண்மணியாக அவரை நான் காண்கிறேன்...

எல்லாருடைய பார்வையும் பரீதாவை நோக்கிச் சென்றது. தூய வெண்மை நிறப்பிடவை ஒன்றை உடுத்தி முக்காடு போட்டவளாக, நகை அலங்காரங்கள் எதுவும் இன்றி அவள் இருந்த எழிமையான தோற்றம் அனைவர் உள்ளங்களையும் ஈர்த்தது. சபையைப் பார்த்து சிறிய தொரு புன்முறுவலை உதிர்த்திக் கொண்டாள் பரீதா மிக அடக்கத்துடன்.

றஹீம், மர்லியாவை ஒரு முறை பார்த்தான். அவள் வேறொரு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய நிஷ்டையைக் குலைக்க அவன் விரும்பவில்லை.

'காதல் என்பதும் பக்தி என்பதும், தியாகம் என்பதும் ஒருதாய் பெற்ற மூன்று குழந்தைகள். ஒருவர்மீது ஒருவர் செலுத்துகின்ற இடையறாத அன்பு காதலாகிறது. அதே அன்பை ஆழமானதாக்கி இறைவன் மீது செலுத்தும் போது அது பக்தியாகிறது. இந்த இரண்டுமாக — அதாவது காதலனை அடைய அல்லது இறைவனோடு ஆத்மா ஒன்று கலந்துவிட எதையும் இழந்துவிடும் நிலை தியாகமாகிறது. ஒரு சாம்ராஜ்யத்தின் மன்னர் பதவியையே இழந்து அமெரிக்கப் பெண்ணொருத்தியை மணந்தார் பிரிட்டிஷ் இளவரசர் ஒருவர். பல்கு நாட்டு அரசபதவியையே துறந்து இறைவழியில் ஈடுபட்டார் இப்றுஹிம்அத்ஹம்என்றஞானி... இப்படி வரலாறுகள் எத்தனையோ கதைகளைக் கூறுகின்றன. என்னுடைய வாழ்விலும் ஒரு காதல்... அதுவும் ஒருவரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறது... இருவரைத் தியாகிகளாக்கி விடுகிறது. அதற்கு மூலகாரணமான நான் ஒரு கணவனுடன் என் வாழ்வைத் தொடங்கியுள்ளேன். இத் தியாக வாழ்வில், இலட்சியப்பாதையில் எனக்கு எவ்வித பங்குமே இல்லை! சுடர்கள் எரிகின்றன. வெளிச்சம் எங்கும்

பரவுகிறது. நான் அதன் திரியாகவோ எண்ணெயா கவோ இல்லை. அவற்றிற்கு ஆதாரமான விளக்காக நிற் கிறேன். நான் சுடராகக் காலிக்காவிட்டாலும், அதன் ஆதாரமாக நிற்பதும் ஒரு தியாகம்தானே...

இன்று திறப்புவிழாவுக்கு வந்த அனைவரும் கேட்ட ஒரு கேள்வி. இந்த அனுதை இல்லத்திற்கு 'மாயா' அனுதை இல்லம் என்று ஷாபிதீன் ஏன் பெயர் வைத்திருக்கிருர்? 'மர்யா' என்ருல் பொருள் என்ன என்பதாகும். அவரு டைய மனைவிக்குத்தான் இதில் பெரும் பங்கு உண்டு. இந்த அனுதை இல்லச் சொத்துக்களில் முக்கால் வாசியும் அவரு டைய சீதனச் சொத்துக்களாகும். தனக்குக் குழந்தை இல் லாத விரக்தியினுல் இவ்வில்லத்தை அமைத்து அவர் மன நிறைவு பெறுகிருர். ஆதலால் அவருடைய பெயரில் 'பரீதா சிறுவர் அனுதை இல்லம்' என்று பெயர் வைத்தி ருக்கலாம் என்று சிலர் பேசியது என்காதில் விழுந்தது.

என்னை மனைவியாக்கிக்கொள்ள விரும்பினுர் ஷாபிதீன். சகோதரியாக்கிக் கொள்ள எண்ணினுர் பரீதா இரண்டும் நிறைவேருமற் போகவே ஏதோ ஒருவகையில் என்னை அவர்களோடு இணைத்துக்கொண்ட பெயர்தான் 'மாயா' இவ்வில்லத்தின் முன்றிலில் எமது கார் பிரவேசிக் கும்போது அந்தப் பெரிய பெயர்ப் பலகையில் அப் பெய ரைப் பார்த்தபோதே என் மனம் 'சிலீர்' என்றது. அப் பெயரில் என்னை அவர்கள் இணைத்துக்கொண்டார்கள் என் பதை நான் இலகுவாக விளங்கிக் கொண்டேன். என் பெயரை ஆங்கிலத்தில் MARLIYA என்றெழுதி முதல் இரு எழுத்துக்களையும் கடைசி இரு எழுத்துக்களையும் சேர்த்து 'மாயா' என்ற ஒரு சொல்லாக்கிக் கொண்டனர். இந்த மர்ம மாயாவை நான் ஆதரிப்பதா? நிராகரிப்பதா?... மர்லி யாவின் சிந்தனை நீண்டு சென்றது. ஷாபிதீன் தன் பேச்சை முடித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தான்.

பெருமனம் படைத்த வள்ளல்கள் எங்களுக்கு நிதி உதவி வழங்கினால்... என்ற வேண்டுகோள் தொடர் மர்லியாவின் மனத்திரையில் கோலமிட்டு விளையாடியது... மேடையின் ஒருபக்கமாகத் தூய வெண்நிற ஆடையுடுத்தித் துல்லிய மான முகத் தெளிவோடிருந்த பரீதாவிடம் எழுந்து சென்றாள்... தன்கைகளில் கிடந்த தங்கக் காப்புகள் இரண்டையும், கழுத்தில் கிடந்த தங்கமாலையையும் வெகு நிதான மாகக் கழற்றினாள். அவற்றை பரீதாவிடம் நீட்டியவாறு 'இது என் காணிக்கை' என்றாள் மிக அடக்கத்துடன். இரு கைகளையும் நீட்டி வாங்கிய பரீதா நா தளதளக்க 'மிக நன்றி' என்றாள்.

ஷாபிதீன் மர்லியாவின் இச் செயலைக் கண்டு அப்படியே உருகிப்போய், அவளை மெய் மறந்து பார்த்துக் கொண் டிருந்தான்.

அவளது முகம் 'குப்பென்று வியர்த்துப் பனித்துப் போயிற்று. றஹீம் தன் மனைவியின் முகத்தை வியப்போடு பார்த்தான். அவளது முகம் மற்றோர் பொலிவு பெற்று' பனிமலராகப் பிரகாசித்ததைக் கண்டு மகிழ்ந்தான். அவளுடைய செயல் அவனைப் பெருமைப்படச் செய்தது. மர்லியா தன்னைச் சம நிலைப்படுத்திக் கொண்டு தன் கண வரைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்.

— முற்றும் —

125015

129

இந்த நாவலில் மட்டக்களப்புப் பண்பாடுகளையும் முஸ்லிம்களின் தனித்துவமான ஆசாரங்களையும் நம்பிக்கைகளையும் நிறையக் காணலாம். அது சில இடங்களில் நகைச்சுவையாகவும் அமைந்துள்ளது. எனவே இந்த நாவலில் மட்டக்களப்பு மணக்கிறது; இம்மண்ணின் தேன் இனிக்கிறது; மீன் பாடுகிறது; தயிர் சுவைக்கிறது என்று நீங்கள் சொன்னால் மிகையாகாது.

அ. ஸ. அப்துஸ்ஸமதுவின்

அற்புத கைவண்ணத்தில்

உருவாகிய

சமூக நாவல்

வீரகேசரி பிரசுரம் - 74

2288